இனி இரவு, எழுந்திரு

காலை நேரத்தின் மிகச் சந்தோஷமான செயல் குளியல் தான் என்று காஞ்சனாவுக்குத் தோன்றியது.

அதற்காக விடியலில் குளிக்கக் கூடாது. விடிந்து சிறிது நேரம் ஆன பிறகு குளித்தோமா என்கிற சந்தேகம் வந்து விடுகிறது. வெயில் சுள்ளென்று உரைக்கிற போதும் குளிக்கக் கூடாது. துவட்டிக் கொள்ளும் போதே வேர்க்கத் துவங்கும். நடுப்பகல் குளியல் ஞாயிறு மட்டும். குளிக்கிறபோதே பசிக்கும் மாலையில் குளிப்பது சுகம்தான். ஆனாலும் இருட்டு வரப்போகிற நேரத்தில், குளித்துவிட்டு வரும் பொலிவு யாருக்கும் தெரியாது. இரவு குளிக்கலாம். ஆனால் தூக்கம் கலைந்து போகும்.

குளியலின் மிகச் சரியான இந்திய நேரம் காலை ஆறு மணி அல்லது ஆறரை. ஆறு மணிக்கு வெளிச்சம் இருக்கும். குளிர் இருக்கும். காற்றில் ஈரம் இருக்கும். பட்டணத்துக் கூச்சல்கள் அதிகம் இருக்காது.

மொண்டு மொண்டு பச்சைத் தண்ணீர் ஊற்றிக் கொள்ளக் கூடாது. பச்சைத் தண்ணீரில் குளிப்பது வன்முறை. உடம்பை, புத்தியை அடித்து எழுப்புகிற வன்மை. ஆனால் நிறையப் பேருக்கு இந்த வன்முறை பிடிக்கிறது. மற்றவர்கள் பாராட்ட நாலு மணிக்குக் குளிர் நீரில் குளித்துவிட்டு அதுபற்றி லெக்சர் அடிக்கிறவர்களைக் காஞ்சனாவுக்குத் தெரியும். புளிய மிளாரைத் தன் முதுகில் தானே வீறிக் கொள்வது போல் ஒரு வெறியோடு சொடேர் சொடேர் என்று சில ஜனங்கள் குளிக்கும்.

கோழியைக் குளிப்பாட்டுவது போல இன்னும் சிலது கொதிக்கக் கொதிக்கக் குளிக்கும். வெளுத்துப் போய் பாத்ரூம் விட்டு வரும். உடம்பு வலி, அதனால்தான் சுடச் சுட வெந்நீர்க் குளியல் என்று பேசும். இது இன்னொரு பரிதாபம்.

குளியலுக்கு இதமான வெந்நீர்தான் சுகம்.

கெய்சர் போட்டு நீர் சூடு உச்சத்திற்கு வந்த பிறகு குளிர் நீர் குழாய் திறந்து வெந்நீர் குழாய் திறந்து சம அளவு கலந்து

ஷவர் அடியில் போய் நின்றுவிட வேண்டும். உடம்பெல்லாம் நீர் முத்தமிடுகிற சூட்டில் பரவும் சுகம் இருக்கிறதே.... அது வார்த்தையில் வர்ணிக்க இயலாது.

காஞ்சனா வெந்நீர் அளவு லேசாய்க் கூட்டினாள். முடியை தூக்கி முன்பக்கம் போட்டு, ஷவருக்கு முதுகு காட்டி நின்றாள். நீண்ட கைப்பிடி உள்ளே பிரஷ்ஷால் முதுகைத் தேய்த்துக் கொண்டாள். அப்படியே ஷவருக்கு அடியில் உட்கார்ந்து சோப்புக் குழைத்துப் புறங்காலைப் பிரஷ்ஷால் தேய்த்தாள். உள்ளங் காலைத் தகடால் சுரண்டினாள். நனைந்து கொண்டிருந்த டவல் எடுத்துக் காலிடுக்குகளைச் சுத்தம் செய்தாள்.

மறுபடி உடம்பு முழுவதும் சோப்புக் குழைத்தாள். மறுபடி தலையை ஷவர் வீச்சுக்குக் கொடுத்தாள்.

அழுக்குப் போகக் குளித்தவர்கள் இல்லையாம். குளிக்கத் தெரியவில்லை. மூன்றாம் முறை சோப்புப் போட்டு ஷவர் வேகம் அதிகப்படுத்தி மொத்த வீச்சையும் வாங்கிக் கொள்ளும் போது லேசாய் மூச்சிரைத்தது. குளியல் போதும் என்று தோன்றி யது. வெந்நீர் தாக்கத் தாக்க, சுகம் கலந்த அயர்ச்சி ஏற்பட்டது. ஆனாலும் விலக மனசில்லாது நின்றாள். அப்படியே தூங்க முடியுமா? யாராவது வெந்நீரில் குளிக்கும்போதே தூங்கியிருக் கிறார்களா? அப்படித் தூங்க வசதியான படுக்கை உண்டா? தெரியவில்லை. விசாரிக்க வேண்டும். விசாரித்தால் சிரிப்பார்கள்.

ஷவர் குமிழிகளைத் திருகி மூடினாள். நீர் நின்றது. பெரிய டர்க்கி டவலால் தலைதுவட்டிக் கொண்டாள். உடம்பு துடைத்துக் கொண்டாள். டவல் சுற்றியபடியே பாத்ரூம் விட்டு அறைக்குள் வந்தாள். அறைக் கடியாரம் ஆறு இருபது என்று காட்டியது.

இன்னும் ஐந்து அல்லது பத்து நிமிடத்தில் அண்ணனிட மிருந்து போன் வரும். இன்று புதன்கிழமை. நிச்சயம் போன் வரும்.

அவன் பனியனுக்கு மேல் புல்லட் புரூஃப் கவர் போட்டுக் கொண்டான். அதன் மீது ஓபன் கோட் அணிந்தான். கோட் ஆலிவ் பச்சையும் வெளிர் மஞ்சளுமாய் க்ரோட்டன்ஸ் போல இருந்தது. கை பட்டன்கள் போட்டு ஓவர்கோட் இடுப்புப் பெல்ட்டை இறுக்கினான். மேஜை அறையிலிருந்து விசில் எடுத்து வலது கீழ்ப்பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். ரிவால் வர் வேண்டுமா... யோசித்தான். பௌச்சோடு உள்ள ரிவால்வரை

இடுப்புப் பெல்ட்டில் மாட்டினான். தாடையைத் தடவி ஷேவ் சரியாகச் செய்திருக்கிறோமா என்று விரலால் தடவினான். குனிந்து தன் உடைகளைப் பார்த்துக் கொண்டான். சிவப்பு வட்டத் தொப்பியை நேர்க்கோடு பார்த்துத் தலையில் அணிந்து வலப்பக்கம் இழுத்துவிட்டான்.

மணி ஐந்து ஐம்பத்தைந்து.

அவன் தயார். வெளியே இருட்டு விலகவேயில்லை. சோடி யம், மத்தியப் பிரதேசப் பனியைச் சிரமப்பட்டு நகர்த்திக் கொண் டிருந்தது. தொலைவில் ஆட்கள் நடமாடும் சப்தம் கேட்டது.

இன்று புதன்கிழமை.

காஞ்சனாவுக்குப் போன் செய்ய வேண்டும்.

டெலிபோன் எடுத்தான்.

டெலிபோனில் 'குட்மார்னிங் மேஜர் சாப்', என்று ஆப ரேட்டர் குரல் கேட்டது.

''குட்மார்னிங். கனெக்ட் மி டு மெட்ராஸ்,'' போன் நம்பர் மடமடவென்று சொன்னான்.

ஐந்து ஐம்பத்தெட்டு.

எழுந்தான். சூரணாதிப் பொடி என்று தமிழில் எழுதப்பட்ட சிறிய பாட்டிலிலிருந்து கறுப்புப் பொடியெடுத்து, கடைசிக் கீழ்ப் பல்லில் அழுத்திக் கொண்டான். வலிக்கிறது. டாக்டரிடம் காட்ட வேண்டும். பாட்டிலை மூடி மேல் உள்ள கறுப்புத் துகளைத் துடைத்துவிட்டு, கைக்குட்டையில் விரல் துடைத்துக் கதவு திறந்து வாசலுக்கு வந்து நின்றான்.

ப்யூகில் ஊதியது.

கம்பெனி சாங் தான். பிளிறலாய் சார்ஜென்டிடமிருந்து கட்டளை புறப்பட்டது.

படேர் என்று வினாடி நேரம் கூடப் பிசகாது ஒரு குரலுக்குக் கட்டுப்பட்டு முப்பத்தாறு ஜோடி கால்கள் ஒன்றாகின.

''கம்பெனீய் தைனே தேக்...'' மீண்டும் குரல் பிளிறிற்று.

வலப்பக்கம் முப்பத்தாறு முகமும் திரும்பியது. வரிசையை லேசாய்ச் சரி செய்து கொண்டது.

''கம்பெனீய் சாம்னே தேக்...''

முகங்கள் நேராயின.

சார்ஜெண்ட் விறைப்பாய் இவனை நோக்கி நடந்து வந்தான். ரிப்போர்ட் செய்தான்.

''ஐயா, இன்று காலை அத்தனை சிப்பாய்களும் ஒருவர் பாக்கியில்லாது பயிற்சிக்கு வந்துவிட்டார்கள். கம்பெனி சுகுராய் நிற்கிறது,'' ஹிந்தியில் பேசினான்.

''நல்லது.''

''ஐயா, இன்று கம்ப்யூட்டர் ரூம் பயிற்சி. அனைவரிடமும் பிஸ்டல்கள் இருக்கின்றன. நமது கம்பெனி ஆயுத சோதனைக்குத் தயார்.''

''பிறகு?''

''லெப்பர்ட் கேவ்''

''பிறகு?''

''டெவில் ஜம்ப்.''

''நல்லது. முதலில் இன்ஸ்பெக்ஷன்.''

''டீக்ஹே ஸாப்.''

வந்தவன் ஸல்யூட் செய்தான். பின்னால் ஓர் அடி வைத்துத் திரும்பிக் கம்பெனி நோக்கி ஓடினான். காத்திருந்தான்.

அவன் மெல்லத் தன் படை நோக்கி நகர்ந்தான்.

முப்பத்தாறு நபர்களையும் பத்தடி தொலைவில் நின்று உற்றுப் பார்த்தான்.

காலை நேரத்தின் சந்தோஷமான நேரமே இதுதான். தனக்குக் கீழே உள்ளவர்களின் துடிப்பான முகம் கண்டு வரும் பரவசம்தான்.

இந்த முப்பத்தாறும் அவன் ஆட்கள். அவன் தயாரிப்புகள். ஆறு மாத காலம் தேசத்தின் பல்வேறு பகுதியிலிருந்து வந்திருக்கிற தேர்ந்தெடுக்கப்பட்ட ஜவான்கள். பல்வேறு மாநிலக் காவல் துறையைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர்கள், ஹெட் கான்ஸ்டபிள்கள்.

ஒவ்வொருவர் உடம்பிலும் புல்லட் புரூஃப் கோட் இருந்தது. மேலே கறுப்புக் கோட் இருந்தது. எல்லார் தலையிலும் கறுப்பு வட்டத் தொப்பி அழுந்தியிருந்தது. எல்லார் இடுப்பிலும் ரிவால்வர் இருந்தன.

முதல் ஆள் பளிச்சென்று ஓர் அடி வைத்து மின்னல் வேகத்தில் ரிவால்வர் எடுத்து உதற, ரிவால்வர் பிரித்தது போல் காட்டியது. லோடட். வாங்கி முகர வாசனை - எண்ணெய் வாசனை அடித்தது.

இரண்டாவது ஆள் விசிற, துப்பாக்கி சிறிது தயங்கிப் பிரித்தது. உதறலில் தெளிவு இல்லை.

''க்ளோஸ் இட்.''

சிப்பாய் அழுத்தி ரிவால்வரை மூடினான்.

'நௌவ்?'

மறுபடி உதறினான். சரெட்டென்று பிரிந்தது. மேகஸின் ரிலீஸ் அழுத்தின. நேரமும் உதறும் நேரமும் சரியாக இருந்தன.

'நெக்ஸ்ட்', 'நெக்ஸ்ட்', 'நெக்ஸ்ட்..' சோதனை செய்து கொண்டே வந்தான். அணி கோடியில் எவனோ அசைவது தெரிந்தது. மூன்றாவது வரிசையில் யாரோ கால் உதறினான்.

''என்ன அது...'' அவன் கர்ஜித்தான்.

அசைவு உடனே நின்றது.

''எதற்கு அசைந்தாய்?''

''மரவட்டை ஐயா.'' ஹிந்தியில் பதில் வந்தது.

''என்ன?''

''மரவட்டை.''

நாலே எட்டில் பாய்ந்து பளீரென்று அவன் முகத்தில் அடித்தான்.

அடிபட்டவன் அசையாது நின்றான்.

'பிக் இட் அப்.'

அடிபட்டவன் குனிந்து தரையில் ஊர்ந்த மரவட்டையை எடுத்தான்.

''இதற்குப் பயப்படுபவன் கமாண்டோவா?''

''ஐயா பயமில்லை, அருவருப்பு.''

''முட்டாள். அது பயத்தின் வேறுமுகம். க்ரஷ் இட்''

''ஐயா...''

''க்ரஷ் இட்.''

அவன் விரலால் மரவட்டையை நசுக்கினான். மரவட்டை பாதி நசுங்கி, பாதி துடித்தது.

''உன் தொப்பிக்குள் போடு.''

''அவன் தொப்பி தூக்கித் தலைக்குள் வைத்தான். தொப்பியை மறுபடி அணிந்தான்.''

''இப்போது மரவட்டை என்ன செய்கிறது?''

''நகர்கிறது ஐயா.''

''எந்தப் பக்கம்?''

''என் இடது தலைப்பக்கம்.''

''உன் தலையை விட்டு அந்த மரவட்டை போகக் கூடாது. இன்று மாலை வரை.''

''சரி. ஐயா.''

''கம்பெனீய் தீனே தீன்மே, தைனே சலேகா தைனே மூட்.''

முப்பத்தாறு பேரும் திரும்பினார்கள்.

''கம்ப்யூட்டர் வாசலில் நிறுத்தி டீ குடிக்க வை, விவரம் விளக்கு. அங்கு நான் வருகிறேன்.''

''டீக்ஹே ஸாப்,'' சார்ஜெண்ட் விறைப்பானார் சல்யூட் செய்தார்.

முப்பத்தாறு பேரும் அரைக் கிலோமீட்டர் தொலைவில் உள்ள பெரிய கூரை நோக்கி ஓடத் துவங்கினார்கள்.

அவன் தன் பாரக்ஸ் வாசலுக்கு வந்தான்.

மணி ஆறு முப்பது.

டெலிபோன் அடித்தது. எடுத்தான்.

''ஸாப்... மெட்ராஸ் கால்.''

''யெஸ்.''

''அண்ணே, நான் காஞ்சனா பேசறேன்.''

''என்னம்மா.... எப்படி இருக்கே...'' அவன் முகம், குரல் மாறியது.

''அண்ணே, நீங்க எப்படி இருக்கீங்க?''

''நல்லாயிருக்கேன் காஞ்சனா.''

''சாப்பிட்டீங்களா?''

காஞ்சனா இப்படித்தான் ஏதாவது சம்பந்தமில்லாது கேட்கும். பேசும்.

''ஆச்சும்மா.''

''இத்தினி சீக்கிரமா?''

''வேலைக்குப் போகணுமில்லே.''

''எப்ப வரீங்க மெட்ராஸுக்கு?''

''இப்ப இல்லை. ரெண்டு மாசம் ஆவும்.''

''எனக்கென்னமோ உங்களைப் பார்க்கணும்போல இருக்கு.''

''வரேன். அடுத்த மாசத்துக்கு அடுத்த மாசம் வரேன்.''

''நடுவுல வரமுடியாதா?''

''இல்லம்மா.''

''அங்க குளிரா?''

''லேசா.''

''இங்க வெயிலு.''

''அப்புறம்...?''

''கெய்சர் நல்லா இருக்குண்ணே. தினம் அதுல வெந்நீர் போட்டுக் குளிக்கிறேன்.''

''சரி''

''வேறொன்னும் இல்லையே.''

''இல்லை.''

''வச்சுரட்டா?''

''சரி.''

''அண்ணே... கூப்பிட்டதுக்குத் தாங்ஸ்.''

''சரிம்மா. அடுத்த புதன் கூப்பிடறேன்.''

''சரிண்ணே வச்சுடறேன்.''

துண்டிக்கப்பட்டது. மைக்ரோவேவ் சத்தங்கள் கேட்டன.

''கால் ஓவர் சார்?'' கேள்வி வந்தது.

''ஓவர்.''

அவள் ஓவர் கோட்டுடன் வராண்டாவில் நடந்து வந்தாள். உடம்பு முழுவதும் பவுடர் போட்டுக் கொண்டாள். பீரோ திறந்தாள். என்ன உடுத்திக் கொள்வது? யோசித்தாள்.

வாசல் பக்கம் நிழலாடியது.

''காஞ்சனா...'' குரல் கேட்டது. திரும்பினாள்.

''என்ன மரகதம்?''

''குளிச்சிட்டியா?''

''ஓயெஸ்... நீ குளிக்கணுமா?''

''ஒரே தலை நோவு, காஞ்சி, பச்சத் தண்ணி ஆவல.''

''சரி, குளி''

மரகதம் உடைகளோடு உள்ளே வந்தாள்.

''என்ன தேடற?''

''டிரெஸ் எது போடறது தெரியலை.'' - காஞ்சனா திரும்பாது சொன்னாள்.

''என்னுது புது ஷர்ட் ஒன்று இருக்கு, ரெட் கலர் போட றியா?''

''ஷர்ட்டா?''

''பேகி டைப்''

''என் ஜீன்ஸ் லாண்டிரில இருக்கு.''

''என்னுது போடு.''

''புதுசா...?''

''பழசு. ஆனா நல்ல துணி அழகா பட்டை பட்டையா சாயம் போயிருக்கும்.''

''எடுத்தா.''

மரகதம் ஓடிப்போய் எடுத்து வர, பேண்டுக்குள் கால் நுழைத்து, பெல்ட் போட்டு இறுக்கினாள். ''கொஞ்சம் லூஸ் பின்னால...''

''அப்படித்தான் இருக்கணுய்.''

''நல்லாருக்கா எனக்கு?''

''க்ளாஸ்.''

சிவப்பு சட்டை போட்டாள். பட்டன்கள் போட்டு உதறி விட்டுக் கொண்டாள்.

''இவ்ளோ சீக்கிரம் போகணுமா?''

''இன்னிக்குக் கொஞ்சம் துணி பர்ச்சேஸ் பண்ணப்போறம்.''

''ஸாரியா?''

''இல்லை சால்வார் கம்மீஸ் மெட்டீரியல். பண்டிகை வருதில்ல? இப்பவே வாங்கி வச்சுட்டா நல்லது.''

''பாம்பே போறதில்லையா இப்ப?''

''இங்கியே ஆளுங்க இருக்கு. சாம்பிள் காட்டிருவாங்க. பத்து பத்து ஆர்டர் போட்டா இருபது நாள்ல சரக்கு வந்துரும்.''

''நல்ல பிசினஸ் இல்ல...?''

''முதல் ஜாஸ்தி. நீ குளிச்சுட்டு ரூம் பூட்டிறியா?''

''உன் ரூம் மேட் இல்லையா?''

''எங்கேயோ மேயப் போச்சு. வரலை.''

''ஹாஸ்டல் வார்டன் கேட்கலையா?''

''திருச்சியிலேர்ந்து வந்து டெலிகிராம் காட்டினா... போயிட்டா.''

''எப்படி டெலிகிராம்?''

''எல்லாம் செட்அப்தான்'' - கண் சிமிட்டினாள். திரும்பிக் கண்ணாடி பார்த்துக் கொண்டாள். ''இது என்னா சட்டை முதுகிலே?''

''அது லேபிள் காஞ்சனா. கம்பெனி லேபிள். இப்ப லேபிளை வெளிய போடறது ஸ்டைல். பாத்ரூம் சூடா இருக்கா?''

''நான் குளிச்சேன்னு சொன்னேனில்லை?''

காஞ்சனா தோளில் பை மாட்டிச் செருப்பு அணிந்து வெளியே வந்தாள். ஹாஸ்டல் மண் சாலையில் நடந்தாள். காற்றுப்பட, சோப்பு வாசனை இன்னும் தூக்கலாய் இருந்தது.

பெரிய கம்பிக் கதவுகள் தள்ளி வாசலில் உள்ள காவல் காரன் எழுந்து நின்றான். அவள் கதவு தாண்டினாள். பூந்தமல்லி ஹைரோடில் கிழக்கு நோக்கி நடந்தாள்.

வெயில் பரவிச் சூடாய் இருந்தது. தினத்தந்தி ஆபீஸ் வாசலில் ஆட்டோ கிடைக்கும்.

நடை துரிதப்படுத்தினாள்.

''மேடம்.'' யாரோ கூப்பிட்டார்கள்.

திரும்பினாள்.

உயரமாய் ஒட்டி வெட்டிய முடியும், பூனை மீசையுமாய் ஓர் ஆள் தெரிந்தான். அவன் கையிலிருந்த பாட்டில் உயர்ந்தது. அவன் முடி தள்ள என்ன என்று வியந்தாள். பாட்டிலில் உள்ள மஞ்சள் திரவம் சட்டென்று வீச, பயத்தில் முகம் பொத்தினாள்.

சுளீரென்று நெருப்பு மாதிரி எரிந்தது. முகம் முழுவதும் எரிந்தது. விரல், புறங்கை, தோள், மார்பு எல்லாம் எரிந்தன. தோல் தாண்டி, நரம்பு தாண்டி எலும்பு தேடியது.

''ஐயோ'' என்று அலறினாள்.

அப்படியே உட்கார்ந்து மறுபடி கத்தினாள். அமிலம் எலும்பு கரைத்தது. பற்கள் ஆடின. சிலது வெளியே விழுந்தன.

கண்கள் மறைத்த புறங்கை விலக்கச் சிரமப்பட்டுப் பார்க்க...

அவன் குரல் கேட்டது.

''ஸாரி மேடம், தப்பாயிடுச்சு.'' அவன் ஓடினான்.

அவள் கத்திக் கத்தி தரையில் சாய்ந்தாள். புரண்டாள். தெருவில் போனவர்கள் அவள் சரிந்து துடிப்பதை நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

அந்தப் புதுச் சிவப்புச் சட்டை மண்ணாயிற்று.

2

இந்தியாவில் மத்தியப் பிரதேசத்தில் ஒரு கோடியில் டெக்கான்பூர் இருக்கிறது. டெக்கான்பூருக்கு வடக்கே அடர்ந்த பெரிய காடு இருக்கிறது. முல்லை நிலம் காடு என்றால் குளுமை யான காடு இல்லை. கருவேலமும், சப்பாத்திக்கள்ளியும், குளம் குட்டையோரம் நாணலும் பிரம்பும் கொண்ட இடம். இருநூற்றுத் தொண்ணூறு ஏக்கர் பரப்புக்கு நடுவே மணலும், புல்வெளியும் கலந்த திட்டு.

அங்கேதான் பாரக்ஸ். சுற்றித் தகரத் தடுப்பு மேலே ஆஸ்பெஸ்டாஸ் அடுக்கு. அந்த இடத்துக்கும் காட்டின் நுழை வாயிலுக்கும் இடையே நாலு கிலோ மீட்டர். பத்து கிலோ மீட்டர் போனால்தான் டெக்காள்பூர் வேற்று ஊர் முகம் பார்க்க

வேண்டுமெனில் பத்து கிலோமீட்டர் போனால்தான் முடியும். மற்றபடி அந்த இடத்துக்கு அனுமதிக்கப்பட்டவர்கள் தவிர வேறு யாரும் வர முடியாது. மீறி வந்தால் கைது செய்யப்படு வார்கள். முரட்டுத்தனமாய் விசாரிக்கப்படுவார்கள்.

முரட்டுத்தனம் அங்கே இயல்பு. விதி, வாழ்க்கையை மென்மையாக நினைப்பவனுக்கு அங்கே இடமில்லை. அழகுணர்ச் சியுள்ளவனுக்கு அங்கே வேலையில்லை.

பத்து மணி டி.வி.யில் ஹிந்தி கவியரங்கம், முப்பத்தாறு பேரும் உட்கார்ந்து புரிகிறதோ, புரியவில்லையோ கேட்டுக் கொண்டிருந்தார்கள். புரிந்த பஞ்சாபி பரவசப்பட்டான். ''வாரே வாஹ்'' என்றான். மொத்தக் கம்பெனியையும் எழுப்பினார்கள். வெளியே நடுங்கும் குளிரில் ஓடச் சொன்னார்கள். ஆறு கிலோ மீட்டர் சுற்றிவிட்டு, ''வாரே வாஹ் எல்லாம் வேறிடம் வைத்துக் கொள்ளுங்கள். இங்கு வேண்டாம்'' என்றார்கள். பிறகு அங்கு மறந்தும் யாரும் சிரிப்பதில்லை. அவர்கள் அங்கே சிரிக்க வர வில்லை. சிந்தனையைச் சிதற விட வரவில்லை. எப்போதும், எப்போதும் ஒருமுகப்பட்ட தீவிர சிந்தனை உள்ளவன்தான் ஜெயிக்க முடியும். ஆழ்ந்து தூங்கும்போது விரல் சொடுக்கினால் எழுந்திருக்க வேண்டும். நில் எனில் நிற்க வேண்டும். தாக்கு எனில் தாக்க வேண்டும். கட்டளை ஒரு வினாடி, செயல் மறு வினாடி.

''யூ ஆர் நாட் அண்டர் எனி ட்ரெயினிங். எந்தப் பயிற்சிக் கும் நீங்கள் இங்கு வரவில்லை. உங்களை மாற்ற வந்திருக் கிறீர்கள். உங்களை முழுமையாய் மாற்ற எங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே குழைந்த களிமண்ணாய் இருங்கள். உங்களை மாற்றி வனைவது எங்கள் பொறுப்பு. சுட்டுச் சூடேற்றிப் பாண்டமாக்குவது எங்கள் பணி. கல்லும் கட்டியும் கலந்தால் வளையாது. வளைந்தாலும் சூடேற்ற, உடையும். ஓட்டை விழும். இரண்டு நாள் பொறுத்து இது தாங்க முடியாது என்பவன் போகலாம். போய்ப் பேடிபோல பெண் டாட்டிப் புடவையைத் துவைக்கலாம்.''

''வீரனாய் இருக்க விரும்புகிறவன், இங்கே வா. இது குருகுலம். குருகுலத்தின் முதல் கொள்கை பணிவு. இரண்டாவது கொள்கை தெளிவு. மூன்றாவது கொள்கை நம்பிக்கை. நான்காவது கொள்கை உடலுரம். ஐந்தாவது கொள்கை அமைதி.

''நீங்கள் வந்தது வித்தை கற்க. எனவே பணிவு வேண்டும். இது ஏன் கற்க வேண்டும் என்கிற தெளிவு வேண்டும். கற்றுத் தர என்னால் முடியும், கற்றுக் கொள்ள உங்களால் முடியும் என்கிற நம்பிக்கை வர வேண்டும். இது கற்பதற்கு அடிப்படையாய் உடல் உரம் வேண்டும். வெறும் உடல் வீரம் கல்வியாகாது; கல்வி கற்க மன அமைதி வேண்டும்.

'இவை உள்ளன என்பவர் இருங்கள். இல்லாதவர் வெளியே றுங்கள்.

படை அமைதியாய் நிற்கும்.

''உதாரணமாய் ஏ.கே. நாப்பத்தியேழு எப்படிப் பிடிப் பாய்?'

சுற்றிக் காட்ட ஒரு பயிற்சி ஆள் பொஸிஷன் காட்டினான்.

''உன் இடது கையில் குழந்தை. நீ நிற்கும் இடம் சேறு' எதிரி மிக அருகில் எப்படிச் சுடுவாய்?''

விழித்தான்.

''இப்படி ஏ.கே. நாற்பத்தியேழு ஒரே கையில்''. ஒரே டார்ஜெட்டை இடைவிடாது பத்து முறை துளைத்து எடுத்தது. நாற்பது கஜ தூர இலக்கைச் சுக்கு சுக்காக்கியது.

ஆச்சரியப்பட்டார்கள். அக்குளில் வைத்து அல்லது இடுப்பில் வைத்து இரண்டு கையாலும் பிடித்துச் சுட வேண்டிய துப்பாக்கியைப் பிஸ்டல் போல சுட முடியுமா?

''முடியும். இது உனக்கும் முடியும். கற்றுத் தர நானிருக்கி றேன். ஆனால் உனக்குப் பணிவு, தெளிவு, நம்பிக்கை, உடலுரம், அமைதி முக்கியம். கம்பெனி டிஸ்மிஸ்.''

அந்தக் கம்பெனி பிறகு எதிர்த்து ஆசிரியனைப் பேசாது. அங்கே ஆசிரியர் துரோணாச்சாரியார். காசுக்குத்தான் துரோணர் உத்தியோகம், ஆசிரியப் பதவி என்றாலும் வித்தைக்கு அங்கே முதலிடம். அது கமாண்டோக்களைத் தயார் செய்யும் பயிற்சிக் கூடம். கமாண்டோ என்பவன் புத்திரூபன். சக்திரூபன். உள்ளே ஞானரூபன். புத்தியும், சக்தியும் சேர கொக்கரிப்பு வரும். வரக் கூடாது. அமைதி அவசியம். அமைதி தான் ஞானம். கமாண்டோ சாதாரணச் சிப்பாய் இல்லை. போலீஸ் கான்ஸ்டபிள் இல்லை. அதற்கும் மேலே, களம் பல கண்டு பழக்கப்பட்டவன். காயப் பட்டுப் பட்டுத் தழும்பேறிய அது களம். காயங்கள் நிச்சயம்.

கம்ப்யூட்டர் அறை வாசலில் டீ குடித்து முடித்துக் காத்திருந் தார்கள்.

அவன் நிதானமாய் நடந்து வந்தான். நேரானார்கள்.

தளரச் சொன்னான். நடுவே போய் நின்றான். ஹிந்தியில் பேசினான்.

''இது ஒரு அறை. இருட்டான அறை. மேலிருந்து லேசாய் வெளிச்சம் உள்ளே வரும். உள்ளே இந்த எதிரி இருக்கிறான். அவன் எதிரி முகம் வரைந்த கட் அவுட் காட்டினான். ''எதிரி மட்டுமில்லை. வேறு சிலரும் இருக்கிறார்கள். ஒரு பாதிரியார் இருக்கலாம். ஒரு குழந்தையும் இருக்கலாம். நாம் எதிரியைத் தான் சுட வேண்டும். எதிரி தலை மட்டும் எட்டிப் பார்க்கலாம் அல்லது வேறு எவரும் எட்டிப் பார்க்கலாம். அறைக்குள் பல சாமான்கள் இருக்கின்றன. எங்கிருந்தும் எதிரி வரக்கூடும். எதிரி யின் ஆட்கள் வெளியே நெருப்பு வைத்துவிட்டார்கள். எதிரி யைச் சுட்டு நெருப்புத் தாண்டி வர வேண்டும். இது முன் வழி. அது பின் வழி. ஒவ்வொருவராய்ச் சுட்டுவிட்டு வரலாம்.''

ஒற்றை லைனில் நின்றார்கள்.

''முதலில் நான் சுட்டுக் காட்டுகிறேன். நான் சுட்டது எப்படி என்று வெளியே கம்ப்யூட்டரில் மதிப்பெண் வெளிவரும். சகலமும் தானியங்கி தவறே செய்யாத இயந்திரம். நான் சுட்டு விட்டேன். மதிப்பெண் வரவில்லை என்று சொல்லக்கூடாது. எதிரி தவிர வேறு எவரைச் சுட்டாலும் மதிப்பெண் குறைவுதான். நீ போ முதலில். திட்டம் மாற்றி ஒரு சிப்பாயை உள்ளே அனுப்பி னான்.

உள்ளே சிப்பாய் பிஸ்டல் உருவிப் புகுந்து ஓட இருள் கப்பியது. கண்களில் மெல்லிய வெளிச்சம் பழகத் தவித்தது. கோணித் தடுப்பு தாண்ட நாலு பேர் - பாதிரியார் உட்பட - சட்டென்று எழுந்தார்கள். அட்டை, கட்டவுட்டுகள். அதைத் தவிர்த்துவிட்டு உள்ளே ஓட தார் டின்கள் இருந்தன. சுற்றிச் சுற்றிப் பார்க்க ஒரு கோமாளி பொம்மை துள்ளி எகிறித் தலை யாட்டியது. தடேரென்று ஒரு மரக்கதவு விழுந்து பின்னே எதிரி தோன்றி கண நேரத்தில் மறைந்தான். எதிர் கட்அவுட் ஓடியது. சிப்பாய் தொடர்ந்து ஓட, ஜன்னலில் முகம் தெரிய சுட்டான். அது பெண் முகம். வெளியே வைக்கோல் போர் எரிந்தது. சிப்பாய்

எகிறித் தாண்டினான். வந்தான். வெளியே மைனஸ் மார்க்கு எரிந்தது.

சிரித்தார்கள்.

'முட்டாள், பெண்ணை நெற்றிப் பொட்டில் அடித்துக் கொன்றுவிட்டாய். இதோ பார்... நான் போகிறேன்.'' அவன் காத்திருந்தான். 'தயார்' விளக்கெரிய உள்ளே ஓடினான். பதினாறு விநாடியில் ஒரு துப்பாக்கிச் சத்தம் கேட்டது. வெளியே அவனுக்குப் பாஸ் மார்க் எரிந்தது.

''இது பல்வேறு விதமாய் மாறும். எதிரி பாதிரியாருக்குப் பின்னாலும் இருக்கக்கூடும். கம்ப்யூட்டர் மாற்றிக் கொண்டே இருக்கும். எனவே உங்கள் அனுபவக் கலந்தாலோசிப்பு புண்ணியமில்லை. போ இடைவிடாது சுடு. நெருப்பு தாண்டி ஓடு, மறுபடி வந்து உள்ளே போய் மறுபடி சுடு.'' தலை தூக்கிய வேகத்தில் சுடாதவர்கள் இரண்டு பேர். அதில் ஓர் ஆள் கடைசி வரை யாரையும் சுடவேயில்லை.

'இது பிஸ்டலா... இல்லை பல்குச்சியா? பெட்டை நாயே! போ. போய்ச் சுடு!'' அவன் சீறினான். அவனோடு தொடர்ந்து ஓடினான். இருவரும் சேர்ந்தாற் போல் எதிரியைச் சுட்டார்கள். நெருப்புத் தாண்டினார்கள்.

இரண்டு மணி நேரப் பயிற்சிக்குப் பிறகு இரண்டு நிமிட ஓய்வு. பிறகு ஓடினார்கள். ஒரு கிலோ மீட்டர் ஓடிப் பூரிச் சாப் பிட்டார்கள். இரண்டு நிமிட ஓய்வு. ஒரு கிலோ மீட்டர் மறுபடி ஓடினார்கள்.

லெப்பர்ட் கேவ் என்கிற சிறுத்தை குகை வந்தது. படிகளில் ஏறி சிமெண்ட்டில் கட்டப்பட்ட ஒரு சிறிய சந்தில் படுத்தபடி ஊர்ந்து வெட்டவெளியில் குதித்து மறுபடி படிக்கு ஓடி வர வேண்டும். குதிக்கும் ஆழம் பத்தடி துவாரம். இரண்டரைக்கு இரண்டரையடி. உடம்பு வெளியே வந்ததும் பூமி கீழே இழுக்கும். குதிக்கும் முறையில் லாகவம் வேண்டும். பத்து முறை குதித்து விட்டு மறுபடி ஓடினார்கள்.

டெவில் ஜம்ப் அருகே நின்றார்கள். வியர்த்து வழிந்தது. மூச்சு இரைத்தது! சிலருக்குக் கணுக்காலில் அடிபட்டிருந்தது. ஒட்டப்பந்தயத் தடைகள் போல் பதினாறு தடைகள் இருந்தன. ஓடியபடி தாண்ட வேண்டும். சிலது அருகருகே இருந்தன.

தடுக்கி விழுந்தாலும் ஓடவேண்டும். அடிபட்டாலும் ஓட வேண்டும்.

''மூவ்..'' கத்தினான். ஓடினார்கள். தாண்டினார்கள். விழுந்தார்கள். அவன் சகலமும் தாண்டினான். மூச்சு இரைக்காது நின்றான்.

கம்பெனி பல இடங்களில் சுருண்டு விழுந்தது. தடுக்கி மோவாய் பெயர்த்துக் கொண்டது. நாலு பேருக்கு ரத்தம் வந்தது. தடுமாறி, தடுமாறி நகர்ந்தது.

அவன் மறுபடி தாண்டிக் காட்டினான்.

மூச்சிரைக்காது நின்றான்.

கடைசி ஆள் தாண்டிய பிறகு, ''ஐந்து நிமிட ஓய்வு,'' என்றான்.

சுருண்டு பூமியில் விழுந்தார்கள். கால் பரப்பி வானம் பார்த்தார்கள். அவன் தரையில் சம்மணமிட்டு அமர்ந்து மூச்சு இழுத்து மூச்சு விட்டான். கண் மூடினான்.

உள்ளே நீலம் தோன்றியது.

மூக்குக்கு மேலே நெற்றி நடுவே சுடர் எழுந்தது.

சுடர் நடுவே காஞ்சனா தோன்றினாள்.

அவன் அசையாது அவளையே எந்தச் சலனமும் இல்லாது பார்த்துக் கொண்டிருந்தான். அவன் புத்தி அமைதியடைந்தது. உடல் ஆழ்ந்த ஓய்வு எடுத்தது.

சரியாய் ஐந்து நிமிடம் கழித்து கண்விழித்தான். படையை நடத்திக் கொண்டு பாரக்ஸ் வந்தான்.

அவளை வாரித் தூக்கினார்கள். தூக்கியவன் ரிக்ஷாக் காரன். ''இது ஹாஸ்டல் பொண்ணுப்பா.'' எதிர் பெட்ரோல் பங்கி லிருந்து யாரோ ஓடி வந்தார்கள். தோல் கருகின நாற்றம் சகலரை யும் முகம் திருப்ப வைத்தது. பெட்ரோல் பங்க் ஆள் மறுபடி அவளைத் தாண்டி டிஸ்டிலரி வாட்டரோடு வந்தான். முகத்தில் தோளில் ஊற்றி தோள் பக்க சட்டையகற்ற, சதை பிய்த்து வழிந்தது. அவள் இடது பக்க மார்புக் காம்பு கருகியிருந்தது தெரிந்தது. அவள் நீர்பட்ட வலியில் துடித்தாள். மறுபடி மயக்க மானாள்.

ஹாஸ்டல் வாட்ச்மேன் ஓடிவந்தான். அடையாளம் சொன்னான். மறுபடி ஹாஸ்டலுக்கு ஓடினான். இருபது பெண்கள்

ஓடிவந்து அவளை அருகே இருக்கும் மருத்துவமனைக்கு தூக்கிப் போகப் பதினொரு நிமிடங்கள் ஆயின.

போலீஸ் ஒரு மணி நேரம் கழித்து வந்தது.

இடம் பார்த்தது.

சற்றுத் தொலைவில் கிடந்த பழுப்பு நிற சுண்ணாம்புக் குப்பிகளைக் கண்டுபிடித்தது. ஒரு குச்சியைத் திறந்து பாட்டிலின் உள்ளே விட்டுக் கவனமாய்த் தூக்கி முகர்ந்தது.

''அமிலம்,'' அமிலம் முகர்ந்தவர்கள் முணுமுணுத்தார்கள்.

எடுத்து கைபடாது போய் ஜீப்பில் வைத்துக் கொண்டது.

அங்கே கூடியிருந்த கூட்டத்தை விரட்டியது.

''காஞ்சனா யாருங்க...? என்ன தொழில்? அந்த அம்மாவுக்கு யாரும் விரோதி உண்டா?' வார்டனை விசாரித்தது.

காஞ்சனா யாரென்று சொல்ல வார்டன் ஃபைல் தேடினாள்.

மரகதம் அவசரமாய் உடுத்துக் கொண்டாள். காஞ்சனா அறையின் சாவியை அவள் கர்ச்சீப்பால் துடைத்து வைத்தாள். ஹாஸ்டலை விட்டு வெளியே வந்தாள். எதிர்ப்பக்க ஃபார்மஸியில் எஸ்டிடி அறை தனியே இருந்தது. நம்பர் கேட்டுச் சுழற்றி அவன் தர... காத்திருந்தாள்.

''ஹலோ சார்லஸ். நான் பொன்னி பேசறேன். அவங்க என்னை எய்ம் பண்ணாங்க. தெரிஞ்சு போச்சு. நான் அங்க வரேன். இங்க இருக்க முடியாது. டேஞ்சர்'' போன் வைத்தாள். அனிச்சையாய் அந்த எஸ்.டி.டி. ஆள் அவளைக் கவனித்தான்.

3

முப்பத்தாறு பேரும் அவனெதிரே சம்மணமிட்டு அமர்ந்திருந்தார்கள்.

இடுப்பில் லங்கோடும், லங்கோடு மீது சுற்றிய துணி மட்டுமே உடுத்தியிருந்தார்கள். மேலே தகடுக் கூரையும், கீழே கருங்கல் தளமும் உள்ள நாடகக் கொட்டகை போன்ற இடத்தில் அமர்ந்திருந்தார்கள்.

அவன் சற்று உயரமான இடத்தில் அமர்ந்திருந்தான்.

மனம் என்பது அற்புதமான விஷயம். மனதால் முடியாதது எதுவும் இல்லை. உடம்பின் அசைவுகள் எல்லாம் மனசின் கட்டளை. உடம்பின் அவஸ்தையெல்லாம் மனசின் வேகம். மனதை வயப்படுத்துவது எப்படி? அதற்கு லகான் போடுவது எப்படி? மனசை ஏன் அடக்க வேண்டும்?

மனசு அடக்க உடம்பு வயப்படும். மனசை அடக்க என்ன வழி? மூச்சை வயப்படுத்துவது. மூச்சை வயப்படுத்துவது எவ்விதம்? பிராணாயாமம்.

''இது உட்காரும் நிலை'' பத்மாசனம் போட்டான். நிமிர்ந்து அமரச் சொன்னான். இடது நாசியில் மூச்சு இழுத்து வலது நாசி வழியே இழை போல் விடச் சொன்னான். வலதில் காற்று இழுத்து, இடது நாசி வழியே வெளியிடச் சொன்னான். மூன்று முறை அவ்விதம் செய்த பிறகு இழுத்த காற்றை உள்ளேயே முடிந்தவரை நிறுத்தி வைத்து, மெல்ல விடுவிக்க வைத்தான்.

''நல்லது. இப்போது இங்கே யோசி. மூக்கு நுனியில் மனசை வை. மூக்கு நுனியை முழுவதுமாய் உணர். காதில் ரீங்காரம் வரும். வரட்டும். எண்ணங்களைக் கட்டுப்படுத்தாதே, விடு. அதன் போக்கில் விடு. தானாய் அது படியும் நேரம் மனது சிந்தனையற்று உள்ளே அடங்கும். அமைதியாய், அப்படியே இரு. அதை அனுபவி. புதிதாய் இருப்பதால் பயமாய் இருக்கும் பயப்படாதே. உன்னை மிஞ்சி எதுவும் நடக்காது. அதன் இழுப்புக்குப் போ.''

முப்பத்தாறு பேரும் மரக்கட்டைகளாய் இருந்தார்கள். ''மனசை மெல்ல இப்போது தொண்டைக் குழிக்கு மாற்று. உள் நாக்குக்குக் கீழே உணவு விழுங்கப்படும் இடத்தில் நிறுத்து. மூக்கு விளிம்பில் நிறுத்தியது போல் நிறுத்து. அந்த இடத்தைப் பூரணமாய் உணர்.''

பத்து நிமிடங்கள் அப்படியே இருந்தார்கள்.

மெல்ல கைதட்டினான். கண் விழித்தார்கள். ''இந்த வகுப்பு பிற்பகல் நடந்தாலும் இதைச் செய்ய வேண்டிய நேரம் காலையில். படுக்கை விட்டு உங்கள் உபாதைகளை முடித்த பிறகு இப்படி அமருங்கள். பதினைந்து நிமிடம் அசையாது இருங்கள். யாருக்குப் பசிக்கிறது?''

எவரும் பதில் சொல்லவில்லை.

''சிப்பாய், உனக்குப் பசிக்கிறதா?'' சுட்டிக்காட்டினான்.

''இல்லை, ஐயா.''

''வரும்போது பசியிருந்ததா?''

''அதிகம்.''

''இப்போது ஏன் இல்லை தெரியுமா? தொண்டைக் குழியில் மனசு நிறுத்த, தாகம், பசி தள்ளிப்போகும். வெவ்வேறு இடங்களில் மனசு நிறுத்துவது. சொல்லித் தருகிறேன். இரண்டு மணி நேர ஓய்வு. கம்பெனி டிஸ்மிஸ்.''

கலைந்தார்கள்.

''ஐயா.'' ஒரு சிப்பாய் முன்னால் வந்தான். ''ஓடுவது போலவே இருக்கிறதே, உட்கார்ந்தபோதும்.''

''ஓடுவதில் முழு மனசும் செலுத்தியிருக்கிறாய். இவ்வளவு ஓடுகிறோமே என்று கவலைப்பட்டிருப்பாய்.''

''அமைதி வரவில்லையே.''

''வரும். உட்காரும்போது உண்டான மனசின் தன்மை முக்கியம். நீ ஓடுபவன் இல்லை. நடப்பவன் இல்லை, சிப்பாய் இல்லை என்று சாதாரணமாய் இரு.''

''நான் சிப்பாய் இல்லையா?''

''இல்லை.''

''வேறு எதற்கு இந்தப் பயிற்சி?''

''எந்த நேரமும் சிப்பாயாய் இருந்தால் சொந்த வாழ்க்கை செத்துப் போகும். சிப்பாயாக இருக்கும் நேரம் சிப்பாயாக இரு.''

''ஒரு கமாண்டோ எப்போதும் கமாண்டோதானே?''

''தேவையில்லை.''

''கமாண்டோ என்பது வேலையா?''

''ஆமாம்.''

''என்னால் ஒரு கமாண்டோ இல்லை என்பதை மறக்க முடியவில்லை.''

''என்னை அடி.''

''ஐயா...?''

''பலம் கொண்ட மட்டும் என்னை அடி.''

சிப்பாய் கையை வீசினான். அவன் சட்டென்று பிடித்தான். ''எனக்குத் தடுக்கத் தெரிந்தது. பிடித்தேன். இந்த அறை உன் மனைவி முகத்தில், உன் பிள்ளை தலையில் விழுந்தால் என்ன ஆகும்?''

சிப்பாய் பேசாதிருந்தான்.

''மரணம்... உடனடி மரணம். ஒரு கமாண்டோ ஜெயிலில் மடிவதா? இதைவிடக் கேவலம் உண்டா?''

''ஐயா... செய் என்கிறபோது மூர்க்கம் காட்டவும். மற்ற நேரம் சாதாரணமாக இருக்கவும் பழகச் செய்கிறீர்களே?''

''மிகச் சாதாரணமாக இருக்க வேண்டும்.''

''ஐயா... உங்கள் எதிரே ஒரு சண்டை நடக்கிறது. என்ன செய்வீர்கள்?''

''எனக்குச் சம்பந்தமில்லையெனில் தலையிட மாட்டேன்.''

''புஜம் துடிக்காதா?''

''முட்டாளுக்குத் துடிக்கும்.''

''மனசில் ஆத்திரம் வராதா?''

''ஆத்திரம் அறிவிலியின் செயல்.''

''தடுக்க மாட்டீர்களா?''

''அது அவசியத்தைப் பொறுத்தது.''

''ஐயா. வேறு கேள்வி...''

''கேள்?''

''உங்களைத் தாக்க வந்தால்...?''

''அவசியமெனில் தடுப்பேன். அவசியமெனில் தாக்குவேன்.''

''அனிச்சையாய்க் கை எழாதா?''

''அது பயந்தவனுக்கு உண்டான விளைவு.''

''அடி வாங்கிப் பேசாது போக முடியுமா?''

''முடியும்.''

சந்தேகமாய்ப் பார்த்தார்கள். கேலியாய்ச் சிரித்தார்கள்.

''நாளை பிற்பகல் இதைச் சொல்லித் தருகிறேன்.''

அவன் நகர, விறைப்பானார்கள்.

அவன் லங்கோடு கழற்றி, துணிக்கூடையில் போட்டு விட்டுக் குளியல் அறைக்குப் போனான். ஷவர் திறந்து நின்றான்.

'உங்களால் அடி வாங்கிப் பேசாது போக முடியுமா?'

முடியும்.

முடிந்திருக்கிறது. அப்பா அடித்தபோது பேசாமல் நிற்க முடிந்திருக்கிறது. அப்பாவுக்கு நாற்பத்தெட்டு வயது. இவனுக்கு இருபத்தெட்டு வயது.

'யாரைக் கேட்டு வீட்டை விட்டுப் போனே?''

அவன் பேசாது இருந்தான்.

''எங்கே போனே?''

''ஜெர்மனிக்கு?''

''எங்க?''

''ஜெர்மனி.''

''என்ன புடுங்கின அங்க?'

பேசாதிருந்தான்.

''வேலைல இருக்கியா இல்லை அதையும் வுட்டுட்டியா?''

''இருக்கேன்.''

''எங்கே வேலை?''

''டெல்லி, பாம்பேல, எங்கேயாவது.''

''என்னடா கதை வுடற?''

''நிஜம்.''

''என்ன வேலை?''

''அதே வேலைதான்.''

''மிலிட்டரி வேலையை வுட்டுட்டியா?''

''அதேதான்.''

''புரியும்படியா சொல்றா.''

''உனக்கு எதுக்குப் புரியணும்?''

''நான் உனக்கு அப்பன்டா.''

''பேருக்கு அப்பன். என்ன செய்திருக்கு எனக்கு?''

''படிக்க வச்சேன்.''

''நீ படிக்க வச்சிருக்காட்டியும் நான் படிச்சிருப்பேன்.''

''எவன் படிக்க வைப்பான் உன்னை?''

''எவன் ஜெர்மனிக்கு அனுப்பினானோ, அவன் படிக்க வச்சிருப்பான்.''

அவர் புரியாது விழித்தார்.

''யாரு உன்னை ஜெர்மனிக்கு அனுப்பியது?''

''அரசு.''

''எதுக்கு?''

''ட்ரெயினிங்''

''என்ன ட்ரெயினிங்?''

''எப்படிக் கொல்றது. எப்படிக் கொலையைத் தடுக்கற துன்னு. நம்ம மிலிட்ரி அங்கே போச்சு. நாற்பது பேர் போனோம்.''

''அங்கே எதுனா யுத்தமா?''

''இல்லை. ட்ரெயினிங்.''

''ஏதோ ஒரு துடப்பக் கட்டை. அஞ்சு, பத்து வருமானம் வருதா இப்ப?''

''வருது.''

''அது என்னாலதானே?''

''இல்லை''

''பின்னே?''

''என்னால. நான் கஷ்டப்பட்டுச் சம்பாதிச்சது.'

''அப்ப நான் உனக்கு ஒரு பொருட்டே இல்லை.''

''நீ செத்துப்போனா கொள்ளி போடணும்.''

''அப்பன் எப்படா செத்துப் போவான்னு காத்திருக்கிறீங் களா? அடேய். அது இப்போதைக்கு நடக்காதுடா.''

''நீ இருக்கிறதால எனக்கு ஒரு கஷ்டமுமில்லை.''

''கஷ்டமாச்சுன்னா கொன்னுடுவீங்களா?''

''எனக்குக் கஷ்டம் தர அளவுக்கு உன்னால முடியாது.''

''ஏன் முடியாது? ஒரு பைசா சொத்து வராது. மரியாதை இல்லைன்னா.''

''உம்மேல எனக்கு எப்பவும் மரியாதை இருந்ததில்லை.''

''நாற்பத்தெட்டு வேலி நஞ்சை நிலம். உங்காத்தா மஞ்சக் காணியா கொண்டு வந்தாளாக்கும். நான் சம்பாதிச்சதுடா.''

''எனக்கு உன் நிலம் வேணாம்.''

''தோப்பு தந்துருங்கிறியா?''

''உன் சொத்து எதுவும் வேணாம்.''

''பின்ன என்ன வேணும்?''

''எங்கம்மாவ விலக்கி வச்சுடு.''

''ஏன்?''

''அவளோடு நீ குடித்தனம் பண்ணலை. அப்புறம் எதுக்கு உனக்குப் பொண்டாட்டி?''

''அவபாட்டுக்கு ஒரு ஓரமா இருந்துட்டுப் போறா.''

''முடியாது.''

''இந்த முறைப்பு, திமிரு எல்லாம் என்கிட்ட வேணாம்.''

''நான் ராத்திரி வண்டிக்குக் கூட்டிட்டுப் போறேன்.''

''நான் அனுப்பினாத்தானே?''

''அம்மா வராங்க என்கூட.''

''போயிடுவாளா?''

''யாரும் தடுக்க முடியாது.''

''கையைக் காலை வெட்டிடுவேன்.''

''உன்னால முடியாது. சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன் வரேன்.''

''டேய்... நான் தின்ன எச்சிலைத் தின்ன நாய் நீ. என் சோத்துல வளர்ந்த பண்ணி நீ. என்கிட்டயே முறைப்பு காட்றியா?'' சட்டையைப் பிடித்து முறுக்கினார்.

''கைய எடுப்பா.''

பளீரென்று அப்பா அடித்தார்.

''உன்னால என்னைத் தடுக்க முடியாது.''

மறுபடி அடித்தார். நெஞ்சில் குத்தினார். சட்டையை இழுத்து உதட்டில் குத்தினார். அவருக்குக் கை வலித்தது. அவனுக்கு உதட்டில் ரத்தம் கசிந்தது.

''மாடு மாதிரி நின்னா... உன்னை மடக்க முடியாதா? டேய், புடிச்சு சாத்துங்கடா இவனை.''

''நாலு பேர் ஓடி வந்தார்கள். முதலில் வந்தவனைச் சுழற்றி ஹால் கோடியில் வீசினான். அடுத்து வந்தவனை இடுப்பில் உதைத்துப் படுக்க வைத்தான். பிறகு வந்தவர்கள் தயங்கினார்கள்.

''எனக்கு யாரையும் அடிக்க இஷ்டமில்லை. நான் வரேன்.''

அப்பா கடந்து போகும் அம்மாவை அடிக்கக் கை ஓங்கின போது எகிறி மரசோபாவை உதைத்தான். அது இரண்டாகியது.

அம்மா தங்கையைத் தோளில் போட்டபடி வெளியே வந்தாள்.

அப்பா சொன்ன கெட்ட வார்த்தைகள் எல்லாம் கேட்டபடி வண்டி ஏறினாள்.

''தேவிடியா நாயே... புள்ளை வளர்ந்துட்டான்னு புருஷனை வுட்டு ஓடறியா... உம் மூஞ்சில ஆஸிட் ஊத்தி உன் கண்ணை அவிக்கலே.... என் பேரு மாத்திக்கிறேன்.''

வண்டி நகர்ந்தது.

அம்மா அழுதபடி வண்டியில் பயணம் செய்தாள். கிராமம் தாண்டி மாயவரம் வந்து ரயிலில் ஏறிச் சென்னை வந்து விமான மேறி டெல்லியில் கால் வைத்ததும், சிரித்தாள். அந்தச் சிறிய குவார்ட்டர்ஸில் உள்ள வீட்டு அழகில் மயங்கிப் போனாள்.

''எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா.''

அவனும் சிரித்தான்.

''இங்க என்ன வேலை செய்யற?''

''கமாண்டோ. மிலிட்ரி கமாண்டோ.''

''அப்படின்னா?''

''கறுப்புப் பூனை.'' பத்து வயது தங்கை கத்தினாள்.

''பூனை இல்லை. புலி. 'கேட்'னா இங்கே பூனைன்னும் அர்த்தம். புலின்னும் அர்த்தம். கறுப்புப் புலி. கரும் சிறுத்தைப் புலி. இதோ பார்.'' அவன் கார்டு காண்பித்தான். 'சார்ஜெண்ட் மேஜர் - ப்ளாக் கேட் - அஃபென்ஸிவ்'' என்று எழுதியிருந்தது.

4

டெல்லி ராணுவத் திடலில் வாராந்தரப் பயிற்சி தவிர, தானே தன்னைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ளும் தினசரி காலை செய்யும் பயிற்சி தவிர வேலையென்று எதுவுமில்லை.

கமாண்டோக்களுக்கான பாரக்ஸில் திடீரென்று அலெர்ட் என்று விளையாடுவார்கள். அன்று நாள் பூராவும் அலெர்ட் கேம்தான். யாராவது யாரையாவது தாக்கி மடக்குவார்கள். எங்கிருந்து யார் தாக்குவார்கள், எதற்கு என்று தெரியாது போகும்.

கேம் ஓவர் என்று பாரக்ஸ் மைக்கில் கர்னல் குரல் கேட்டது. ரம் வாங்க ஸ்டோருக்குப் போனபோது வாசலில் மடக்கிக் கைகாலைக் கட்டிக் குப்பை வண்டியில் தூக்கிப் போட்டார்கள். ஒரே சிரிப்பு.

''கேம் ஓவர்'', என்று கர்னல் சொன்ன பிறகு, ''என்ன விளையாட்டு இது?'' என்று அவன் சீறினான்.

''மைக்கில் கர்னல் பேசினார் என்று யார் உனக்குச் சொன்னது? எப்படி நிச்சயித்தாய்? சரி, ரம் வாங்குகிறபோது, நீ கமாண்டோ இல்லையா... குமாஸ்தாவா... சௌக்கிதாரா... சமையல்காரனா... முடிவெட்டுகிறவனா... முட்டாள்! இந்த பாரக்ஸில் கமாண்டோ எப்போதும் கமாண்டோதான்.''

வாயடைத்துப் போனான்.

தோற்ற ஆறு பேருக்கு - அதாவது கை, கால் கட்டப்பட்ட ஆறு பேருக்கு - தண்டனை கிடைத்தது. பாரக்ஸ் மறு தளத்தை மெழுகச் சொன்னார்கள். முணுமுணுத்தபடி செய்தான். வேறு யாரையோ பால் கேனை, கோதுமை மாவு மூட்டையை இறக்கச் சொன்னார்கள்.

இரண்டு நாளுக்குப் பிறகு அவன் அதே விளையாட்டில் கர்னல் கைகாலைக் கட்டினான். குப்பை வண்டியில் தூக்கிப் போட்டான்.

கர்னலுக்குச் சுயசவரம் செய்து கொள்ளும் தண்டனை கிடைத்தது. அக்குளும் மழித்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளை போடப்பட, கர்னல் பனியனும் பேண்ட்டுமாய் அத்தனை கமாண்டோக்களுக்கு முன் முடியை வழித்துக் கொண்டார்.

'சாலா.. உன்னைச் சாவடிக்கிறேன் பார்' என்று கறுவினார்.

மூன்றாவது முறை நெருப்பு விளையாட்டு. குடிலைச் சுற்றித் தீ வைத்துவிட்டு முப்பத்தாறு பேரையும் உள்ளே அடைத்து விட்டார்கள். ஆறு பெட்ரோல் பாம் உள்ளே இருந்தன. வெடிக்க, தீப்பிழம்பாகும். உடம்பில் பட, எலும்பு வரை தோல் உரியும். கடும் தீ வெளியே தப்பிக்க முடியாத தீ. ஏகமாய் எரிபொருளை ஊற்றியிருந்தார்கள். பெட்ரோல் பாம்களை ஓரம் அடுக்கி வைத்து விட்டு ட்ரம் தடுப்புக் கட்டினார்கள்.

அவன் தரையை உற்றுப் பார்த்தான். மண் தரை, உள்ளே கோடரி, மண்வெட்டி இருந்தன. சரசரவென்று முப்பத்தாறு பேரும் மண் தோண்டினார்கள். புதை குழி வெட்டினார்கள். குந்தி, குறுகுகிற ஆழம் வெட்டி அனைவரும் உள்ளே உட்கார, பெட்ரோல் பாம் சிதறியது. கர்னலை அவன் அழுத்திக் கொண்டான்.

வெடித்தவுடன் வெளியே இருந்து தீ அணைக்க நீர் பாய்ச்சப்பட்டது. ஒருவருக்குக்கூட காயம் இல்லை. நீர் பாய்ச்சிய பிறகும் யாரும் வெளியே வரவில்லை. கதவு திறக்க, அத்தனை பேரும் வெளியே பாய்ந்தார்கள். தீ வைத்தவர்களைத் தூக்கிப் போட்டு மிதித்தார்கள். வரிசையானார்கள்.

''சாலா மதராஸி... கைகொடு.'' கர்னல் கை குலுக்கி வாழ்த்திவிட்டுப் போனார்.

நீரும் நெருப்பும் தாக்கி உடம்பில் படிந்த கறுப்புப் போக நாளாயிற்று.

அம்மாவுக்கு இப்போதுதான் அந்த வேலையின் கடுமை புரிந்தது, பயிற்சியே இப்படியெனில் நிஜவேலை எப்படி?

வேலை என்பது மரணம் அம்மா. இதுவரை ஒருமுறை கூட என்னை வேலைக்கு அனுப்பவில்லை. பதினொரு மாத மாயிற்று. நான் முறையான கமாண்டோவாகி. விஷவாயு எங்கோ கசிய ஒரு பத்துப் பேர் கொண்ட படை சகல உபகரணங் களுடன் போய்க் கசிவைச் சுத்தமாய் நிறுத்திவிட்டு வந்தது. கண்ணெரிச்சலைத் தவிர வேறு காயமில்லை.

ஒரு பிற்பகல் உணவு முடித்து எழுந்தபோது கூப்பிட்டார் கள்.

மந்திரி மகளைக் கடத்திவிட்டதாய்ச் சொன்னார்கள், கடத்தப் பட்டவர், கடத்திய ஆட்கள் பற்றி விவரம், இடம், ஆயுதப் பின்னணி தரப்பட்டன.

புல்லட் புரூஃப் ஆடையோடும், மிஷின்கன்னோடும் ஒரு குடியிருப்புப் பகுதியைச் சூழ்ந்து கொள்ள, சூழப்பட்ட வீட்டி லிருந்து வெள்ளைக்கொடி ஆடியது.

போலீஸ் உயர் அதிகாரிகள் பரபரத்து அருகே ஓட விரும்பினார்கள். கமாண்டோக்கள் தடுத்தி நிறுத்திக் காத்திருந் தார்கள்.

வெளியே இருந்து ஒரு பெண் வந்தது. பஞ்சாபிப் பெண் போல தலை முக்காடு போட்டிருந்தது. தனியே இவர்களை நோக்கி நடந்து வந்தது.

''அந்தப் பெண் கர்ப்பிணியா?'' அவன் கேட்டான்.

''இல்லையே... கன்னிப் பெண்.''

''அவளா இவள்?''

''முகம் தெரியவில்லையே.''

''உயரம் அகலம் கூடத் தெரியாதா போலீஸுக்கு?''

''கிட்டத்தட்ட அதுபோல்.''

''நில்'' கூவினான்.

''அருகே வந்தால் சுடுவோம்.'' எச்சரித்தான்.

''அது மந்திரியின் பெண். முட்டாளே... மரியாதையாய்ப் பேசு.''

''மை ஃபுட். ஏய் நில் அங்கே.''

அந்தப் பெண் மெல்லத் தொடர்ந்து இவர்கள் இருப்பிடம் நகர்ந்தது.

''இன்னும் ஓர் அடி வைத்தால் சுடப்படுவாய்.'' அவன் கர்ஜித்தான்.

''கமாண்டோக்களுக்குப் பைத்தியமா... சுட்டுத் தொலைச்சு டப் போறாண்டா பாவி...'' இந்தியில் திட்டினார்கள்.

அந்தப் பெண் மண்டியிட்டு பிறகு குத்திட்டு, மேல் போர்வையால் மூடிக் கொண்டு உட்கார இவன் ஒரே கட்டளை யால் கமாண்டோக்களைப் பதுங்கச் சொன்னான். கீழ்ப்படிந் தார்கள். அதே நேரம் அவள் போர்வைக்குள்ளிருந்து நாலு க்ரேனட்கள் வீசப்பட்டன.

வீசியது பெண்ணில்லை. ஆண். மீசை வைத்த ஆண். போலீஸ் கமிஷனர் வலது கை கிழிந்து தொங்கியது. இரண்டே

புல்லட்டில் வெடி வீசியவனைச் சிதறடித்தான். ஒரு கமாண்டோ வின் பஸூக்கா வீட்டு வாசலைச் சிதறடித்தது. ஓடிப் போய்ச் சுவரோடு ஒட்டிக் கொண்டார்கள். மர வீடு அது. சுற்றிப் பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைத்தார்கள். நெருப்புக்கும், சுவருக் கும் இடையே ஐந்தடி இடைவெளி இருந்தது. அந்த இடைவெளி யில் ஒட்டிக் கொண்டு நின்றார்கள்.

உள்ளே உள்ளவர்களுக்கு நெருப்புத்தான் தென்பட்டது. இடைவெளி உறைக்கவில்லை. பயத்தில் வெளியே ஓடி வர அடித்து வீழ்த்தினார்கள். அப்படியே தூக்கிக்கொண்டு போய்த் தனியே படுக்க வைத்தார்கள்.

''அவனை எங்களிடம் கொடு'' என்று கேட்ட உதவிக் கமிஷனரை நெட்டித் தள்ளினார்கள்.

அங்கே அதிகம் அடிபடாதவன் சுண்டு விரலைப் படக் கென்று முறித்தார்கள். இடைவிடாது முகத்தில் குத்தினார்கள். கழுத்தெலும்பு முறிக்கத் தயாரானார்கள். அவன் வலியில் பயத்தில் கத்தினான்.

உள்ளே எந்தப் பெண்ணும் இல்லை.

''த்தூ... நாயே ஓடிப்போ.'' அவனைக் கமிஷனரிடம் தள்ளிவிட்டு இடைவிடாது சுட்டபடி வீட்டுக்குள் புகுந்தார்கள். உள்ளே உள்ள முதியவனை இழுத்து வந்தார்கள்.

''மந்திரியின் பெண் எங்கே? கண்டுபிடித்துச் சொல், வருகிறோம்.''

விடைபெற்று பாரக்ஸ் வந்தார்கள். அவர்கள் வருமுன் அவர்களுடைய அத்துமீறல்கள் என்று தொலைபேசி தகவல் கர்னலுக்கு வந்திருந்தது.

''என்ன அத்துமீறல்?''

''குடியிருப்புப் பகுதியில் தீ வைத்ததும், விரலை ஒடித் ததும், உதவிக் கமிஷனரை நெட்டித் தள்ளியதும்,'' என்று சொன் னார்கள்.

''யார் நெட்டித் தள்ளியது உதவிக் கமிஷனரை?''

''நான்'' அவன் முன் வந்து சொன்னான்.

''முட்டாள்... ஏன் நெட்டித் தள்ளினாய்?''

''ஐயா..''

''பேச முடியாதபடி வாயில் ஒரு குத்து விட்டிருக்க வேண்டியதுதானே?''

சிரித்தான்.

''ஷட் அப் உன் வேலையில் குறுக்கிடுகிற எவனையும் தூக்கியெறி. வேலை முடிந்த பிறகு பேசாதே. விலகு நான் மன்னிப்புக் கேட்கச் சொல்கிறேன்.''

''யாரை ஐயா''

''போலீஸ் உதவிக் கமிஷனரை. கமாண்டோவை அசிங்கமாய்ப் பேச எவனுக்கும் உரிமை இல்லை.''

''திமிர் பிடித்த பதவி இது என்று கமாண்டோக்கள் அத்தனை பேருக்கும் தெரிந்து போயிற்று. ஒரு விஷயம் : திமிர் வெளியே அலட்டலாகக் கூடாது வேலையோடு வேலையாய் இருக்க வேண்டும்.''

''வேலை முடிந்ததும் முடிச்சுட்டேன் பாத்தியா என்று தொடை தட்டக்கூடாது. உன்னால் என் வேலையைச் செய்ய முடியுமா என்று சவால் விடுவது தேவையற்றது. அட்டகாசமாய் வேலை செய். அடக்கமாய் இரு. தோல்விக்குக் கோபமற்று இரு.'' மறுபடி, மறுபடி சொல்லிக் கொடுத்தார்கள்.

ஆனால் அம்மா ஒரு மாலை வேளையில் தன் வாழ்க்கை பற்றி விவரித்தபோது தாறுமாறாய்க் கோபம் வந்தது.

அப்பாவை மல்லாத்தி இரு கணுக்கால் மீதும் ஏறி நின்று, மெல்லிய பிரம்பால் விளாச வேண்டும் என்கிற வெறி வந்தது. கோபத்தில் ரத்தம் தலைக்கேறி, பல் கடிக்க வைத்தது.

அப்பா அம்மாவைக் காசுக்காகக் கல்யாணம் செய்து கொண்டவர். நன்செய் நிலம் தவிர வேறு எதன் மீதும் மரியாதை இல்லாதவர்.

''நோம்பா... மழை பெய்யுது... உழறதுக்கு ஆள் இல்லையேன்னு கவலைப்பட்டுக்கிட்டிருக்கேன். அதிரசம் கொண்டாந்து வைக்கிறியே.'' எட்டித் தட்டு உதைத்தவர்.

உழுகிற ஆள் கூலி அதிகம் கேட்டதால் அவன் பிள்ளையை ஆற்றில் வீசியவர்.

மைத்துனியின் திருமணத்தின்போது மரியாதைக் குறைகிறது என்று ரகளை செய்தவர்.

மாடுகளை ஓட்டிப் பிறர் நெல் வயல் அழித்தவர். தன் வயலில் மேய்ந்த ஆடுகளை வயலிலேயே வெட்டிப் போட்டவர்.

பிள்ளை ஹாஸ்டலில் இருப்பது தன் ஆட்டத்திற்கு நல்லது என்று திருப்பராய்த்துறையில் ராமகிருஷ்ண மடத்துப் பள்ளியில் சேர்த்தார்.

அப்பா சிரிப்பது வயல்வெளியில் மட்டுமே. அடுத்தவன் பயிரில் நோய் பரவுவது பார்த்தே. அப்பா அழுவது குடிக்கும் போதுதான்.

''நான் நல்லவன்டா... சொல்லு... நான் நல்லவன்தானே? சொல்லு'' அவனையும் அடித்திருக்கிறார்.

அப்பா இதமாய் இருந்தது தன் தங்கையிடம். ஆனால் அவளையும் கிறிஸ்தவப் பள்ளிக்கு அனுப்பினார். அதே ஹாஸ்டலில் சேர்த்தார்.

'பொண்ணுங்க விஷயத்துல நான் சாமியாரைக் கூட நம்பமாட்டேன். நமக்குத் தோணுற புத்தி சாமியாருக்குத் தோணாதா? நீ கன்னிமாடத்துப் பள்ளிக்கூடத்திலேயே படி. அதுங்க பழி பாவத்துக்குப் பயந்ததுங்க' என்று உத்தரவாதம் சொல்வார்.

அவர் நினைத்ததே விதி. அவர் பேசுவதே உசத்தி. அவர் செயலே உத்தமம்.

அம்மா மட்டும் எங்கும் போகக்கூடாது. ஆக்கிப் போட வேண்டும். துணி துவைக்க வேண்டும். வீடு பெருக்க வேண்டும்.

அம்மா அன்று முழுவதும் வேலை செய்த அயர்ச்சியில் நெஞ்சு வலிக்கிறது என்று தூங்கிப் போனாள். விடிகாலை எழுந்து பல் துலக்கும்போது மயங்கி விழுந்தாள்.

ராணுவ ஆம்புலன்ஸில் போகும்போது, 'தங்கச்சிய பார்த்துக்கடா' என்று அழுதாள். ஆஸ்பத்திரியில் சேர்த்த பதினைந்தாவது நிமிடம் இறந்து போனாள்.

5

அந்த விமானம் தரை இறங்கும் என்கிற நம்பிக்கை ரோஷன்லால் சலும்பராவுக்கு அறவே இல்லை.

பம்பாயில் விமானம் கிளம்பும்போதே 'இரு இரு' என்று யாரோ அபசகுனமாய்க் கூவினார்கள். ஐந்து நிமிடம் யாருக்கோ காத்திருந்து ஒரு பழக்கூடையை விமானப் பணிப் பெண்ணிடம் கொடுத்தார்கள்.

நெற்றியில் பட்டை விபூதி தரித்துக் கொண்டிருந்த ஒரு மதராஸி வயசாளி, ''ரொம்ப சந்தோஷம்'' என்று கேலியாய் ஹிந்தியில் கூவினார்.

'இப்படி ஒரு கூடையை நான் எடுத்துப் போனால் விடு வாளா இந்தப் பெண்மணி? என்னை ஒரு ஆட்டிடையனைப் பார்ப்பது போல் பார்ப்பாள். என் பூஜைப் பெட்டியைக் கூடத் திறந்து செக்யூரிடியில் பார்க்கிறார்கள். இந்த மாம்பழக்கூடை சோதனை செய்யப்பட்டதா? இப்படி கடைசி நேரம் பழக்கூடை ஏற்றலாமா? கேட்பாரே இல்லை.'

தொடர்ந்து கத்தினார்.

ரோஷன்லால் சலும்பரா துணிச்சலை வரவழைத்துக் கொண்டு ஏர் ஹோஸ்டஸிடம் நேரடியாய் வினவினான்.

''என்ன அது?''

''தலை.'' ஏர் ஹோஸ்டஸ் பதில் சொன்னாள்.

''என்ன?''

''ஒரு பெண்ணின் தலை. ஒரு ப்ளாஸ்டிக் பெட்டியில் ஏர் டைட்டாக மூடப்பட்டு, மூடியதை அசையாது வைக்கோல் வைத்து ஒரு கூடையில் அனுப்பியிருக்கிறார்கள்.''

''என்ன விஷயம்?''

''ஜோலார்ப்பேட்டை என்ற இடத்தில் தலையற்று ஓர் உடல் இருக்கிறது. பம்பாய் தாதருக்குத் தலை மட்டும் வந்து சேர்ந்திருக்கிறது. இணைத்துப் பார்க்கப் போலீஸால் அனுப்பப் பட்டிருக்கிறது.''

''கொலையா? தற்கொலையா?''

''கடவுளுக்கே வெளிச்சம்.''

இது இன்னொரு அபசகுனம்.

உடலைப் பிரிந்த உயிர் பதின்மூன்று நாட்கள் தன் உடல் தேடி பூமியிலேயே சுற்றுமாம். இந்த உயிர் தலையைத் தேடுமா? உடம்பைத் தேடுமா? சலும்பரா கவலையானான்.

ஏற்கனவே விமானப் பயணம் என்பது பயமான விஷயம். அதில் இவ்விதமெல்லாம் நடந்தால்? விமானம் கிளம்பிய இருபது நிமிடங்களுக்குள் மேகத்திற்குள் நுழைய ஆரம்பித்துவிட்டது. திட்டுத்திட்டாய், பஞ்சுப் பொதியாய் மேகங்கள், ஜன்னல் வழியே

பூமி தெரியாது. விமானத்தின் கீழே வெயில் மேகங்கள் மின்னின.

அடுத்த ஐந்து நிமிடத்தில் பெல்ட்டுகளை இறுக்கிக் கொள்ளுங்கள் என்கிற விளக்கு எரிந்து, அறிவிப்பும் வந்தது.

''என்ன விஷயம்?'' மறுபடி கேட்டான்.

ஏர் பம்ப்ஸ். காப்பி மட்டும் தந்துவிட்டு அந்தப் பெண்களும் பின் பக்கம் போய்விட்டார்கள்.

'சென்னையில் கடும் மழை பெய்து கொண்டிருக்கிறது. விமானம் சென்னையில் இறங்க முழு முயற்சி செய்கிறோம்', என்கிற அறிவிப்பும் தொடர்ந்தது.

இடைவிடாது விமானம் குலுங்கியது. பாதையே இல்லாத இடத்தில் சைக்கிள் ரிக்ஷா போவது போல் தடக் தடக் என்று முட்டி முட்டித் தூக்கிப்போட்டது.

ச்சே! எதற்கு இந்தக் கண்டுபிடிப்புகள்! விமானம்! ரயில், மோட்டார் கார் எல்லாம் எவ்வளவு தேவையற்றது.

பூமியில் உள்ள சுகம் போல் வருமா? பூமி உறுதியானது மனிதன் எவ்வளவு ஆடினாலும் தாங்கக் கூடியது! இப்படி அந்தரத்தில் உண்டானது போல் வேதனை தேவைதானா?

இப்போது என்ன செய்வது? கிருஷ்ண கிருஷ்ண என்று சொல்லலாமா? சொன்னால் குலுக்கல் நிற்குமா?

மரணம் எவ்வளவு பயம்!

விமானத்தில் ஜன்னல் வழியே வெள்ளையைத் தவிர எதுவும் தெரியவில்லை. மழைக் கோடுகள் ஜன்னல் கண்ணாடியில் மேலிருந்து கீழாய் இறங்கவில்லை. குறுக்குக் கோடாய்ப் போகின்றன. மழைநீர் அப்படிப் போக வேண்டுமானால் விமானத்தின் வேகம் என்ன என்று உணர முடிகிறது.

இந்த வேகத்தில் 'உம்'மென்று எதிரே உள்ள மலையில் விமானம் முட்டினால் என்ன ஆகும்?

சிதறும். சகலமும் சிதறும்.

மைனர் செயின், மோதிரம், ஸ்விஸ் வாட்ச், பீடா பெட்டி, பத்து லட்சம் ப்ரீப் கேஸ் எல்லாம் சிதறும். ஏதாவது ஒரு கிளையைப் பிடித்துத் தொங்கி உயிர் தப்ப முடியுமா?

வழியே என்ன மலை இருக்கிறது?

விந்திய மலை. மலை இடிக்கிற உயரத்துக்கா விமானம் பறக்கும்? ச்சே. நான் ஏன் இப்படிக் கற்பனை செய்து பயப்படுகிறேன்? எப்போது இந்தக் குலுக்கல் நிற்கும்?

சென்னையில் மழை என்கிறார்களே, பார்ட்டி விமான நிலையத்துக்கு வருமா?

''பார்ட்டியிடம் பத்து லட்சத்தையும் ஏர் போர்ட்டிலேயே தந்துவிடு. நீ வைத்துக் கொள்ளாதே.''

''ஸாம்பிளைத் தின்று பார். சரக்கு சுத்தமெனில், பாக்கெட்டைச் சரியாய்ப் பேக் செய்து, அன்னாசிப்பழ ரசத்தில் போட்டு மேலே 'ரிஜெக்டட்' என்று எழுதி நம்முடைய கம்பெனிக்கு அனுப்பு. ரயிலில் அனுப்பு. குட்ஸில் போடாதே. பாஸஞ்சர் வண்டியில் போடு.

''இது அன்னாசிப் பழரசம் தயாரிக்கும் கெட்டித் திரவம், கெட்டுவிட்டது என்று சொல்.''

''சரக்கு சரியில்லையெனில்...?''

''மறுத்துவிட்டு வா...''

''அப்போது பத்து லட்சம்...?''

''முட்டாள். அது என் கவலை தகப்பனுக்கு அடங்கிய பிள்ளையாய் நட, உன் புத்தி தேவையில்லை இங்கே.'' அப்பா பளிச்சென்ற சீறலில் அவனை அடக்கினார்.

''இந்த ரதன் சாந்தாவத் சலும்பராவை இதுவரை யாரும் ஏமாற்றியதில்லை. ஏமாற்றியவன் உயிரோடில்லை. எனவே பேசாதே, போய் வா.''

அப்பா மேல் துண்டு போர்த்திப் பூஜையறைக்குப் போய் விட்டார். அவருக்கு முன்னமே அம்மா பூஜை அறையில் பாடிக் கொண்டிருந்தாள்.

''ராஜாபுதனத்துப் பாலைவனங்களில் ஹே கிருஷ்ணா, நான் உன்னைத் தேடி அலைகிறேன்.''

''முள் செடிகளை ஒட்டகம் கடித்துத் தின்னுகிறது. அதன் கடைவாயில் ரத்தம் வழிகிறது. ஆயினும் உண்பதை நிறுத்தவில்லை. அதுபோல் கிருஷ்ணா, வாழ்க்கைத் துன்பங்கள் என்னை வருத்தினாலும் நான் உன்னைப் பூஜிப்பது விட மாட்டேன்.''

ஒட்டகம் முள் செடி தின்னுமாம். ஒருமுறை கூடப் பார்த்ததில்லை. கடைவாயில் ரத்தம் ஒழுகத் தின்னுமாம். கவனித்ததேயில்லை.

ராஜஸ்தானம் தான் சொந்த இடம். போனதேயில்லை. பம்பாய்தான் பிறந்த ஊர். பம்பாய்தான் வளர்ந்த ஊர். படித்த ஊர். விளையாடிய இடம். அங்குதான் இனி தொழில் துவங்கிக் கொடி நாட்ட வேண்டும்.

''கடைவாயில் ரத்தம் ஒழுக...'' வரிகள் அடிக்கடி மனசில் மோதின.

''ஒட்டகத்தை அவ்வாறு பார்த்ததில்லையே தவிர மனிதர்களைப் பார்த்திருக்கிறேன். ஒரே அறையில் பற்கள் தெறிக்கச் சுவரில் முகம்பட்டு சுருண்டு விழுந்தவனைப் பார்த்திருக்கிறேன். இரட்டைக்குழல் துப்பாக்கி மட்டையால் உச்சியில் ஒரு அடி... மண்டை பிளந்து மூளை வெளிவந்து பார்த்திருக்கிறேன். மூளை திடப்பொருள் அல்ல திரவமும் அல்ல என்பது அப்போது தான் புரிந்தது.

அடித்தது அப்பா இல்லை. ராம்பாபு. சென்னா, கண்ணபிரான் இவர்கள்தான் அடிப்பார்கள். மல்லிக்கிஷோரை மண்டையில் அடித்தார்கள். ரெட்டியைக் கன்னத்தில் அறைந்தார்கள்.

''ஹா'' என்று வாயைப் பொத்திக் கொண்டபோது அப்பா இவனைத் திரும்பிக் கடுமையாய்ப் பார்த்தார். பேசவில்லை.

திரும்பி வீட்டிற்கு வரும்போது பேசினார்.

''உன்னால் முடியவில்லை என்றால் சொல். சென்னையில், பெங்களூரில், சிவகாசியில் கடை போட்டுத் தருகிறேன். வட்டிக்குக் காசு விட்டு பிழைத்துக் கொள்.

''உலகம் கடுமையானது மகனே. உன் காலில் முள் தைக்க நீ இன்னொரு முள் உபயோகப்படுத்த வேண்டும். வலிக்குமே என்று பயந்தால் குத்திய முள் அங்கேயே தங்கி, கால் துண்டிக்கப்படும். ராஜ்புத் வீரன் நொண்டி நடப்பதை விடத் தற்கொலை செய்து கொள்ளலாம்.

''உனக்குத் தெரியும். பதினேழு முறை என்னைக் கொலை செய்ய முயன்றிருக்கிறார்கள். பத்து ரூபாய் கடனுக்குக் கத்தியால் கீறியிருக்கிறார்கள். தோளிலிருந்து வயிறு வரை கோடு போட்டார்கள். அன்று ரத்தம் பார்த்துப் பயந்திருந்தால் நான்

பிச்சைக்காரனாய் இருந்திருப்பேன். பத்து ரூபாய் கடனை உண்டியலை உடைத்து அடைத்தேன். பதிலுக்கு இரண்டு கோடு போட்டேன்.''

''மகனே, உலகில் மனிதர்களுக்கு மூன்று குணங்கள் உள்ளன. சிலருக்கு சத்வ குணம். சிலருக்கு ரஜோ குணம். சிலருக்குத் தாமச குணம்.

''சத்வகுணம் உள்ளவன் கடன் வாங்க மாட்டான். தாமச குணம் உள்ளவன் கடன் திருப்ப முடியாது போனால் கால் பிடித்து அழுவான். ரஜோ குணம் உள்ளவன் கடன் வாங்குவான். கடன் திருப்புவான். அது காசானாலும் சரி கத்திக்குத்தானாலும் சரி வட்டியோடு திருப்புவான். நீ தாமச குணம். எருமைப்பால் புத்தி என்னோடு சிறிது நாள் வேலை செய் என் குணம். உனக்குப் புரியும்.''

நாலு வருடங்களாயிற்று. அப்பாவின் குணம் புரியவே இல்லை.

''நமக்கு என்ன வியாபாரம்? உனக்குத் தெரியுமா?'' ஒரு நாள் அப்பா கேட்டார்.

''ரசாயனப் பொருள், அமிலம், கான்ஸன்ட்ரேட்டட் பழச்சாறு. துணி, நெருப்புப் பெட்டி. பிறகு...''

''முட்டாள். நூறு சதவிகிதம் லாபம் தருவது எல்லாம் நமக்கு வியாபாரம்தான். இவை எதுவும் நாம் தயாரிக்கவில்லை. வாங்கி விற்கிறோம். எதுவும் வாங்கலாம். எதுவும் விற்கலாம். லாபம் நூறு சதவிகிதம்.

''ஒரு நெருப்புப் பெட்டி பத்து பைசா விலை. விற்பது முப்பது பைசா.''

''இருநூறு சதவிகிதம் லாபமா?''

''முட்டாள் வண்டிச் சத்தம் உன் மாமனாரா தருவான்? ஏறிக் கிடக்கும் கூலி, கோடௌன் வாடகை, கணக்குப்பிள்ளை சம்பளம் யார் தருவது?''

''மன்னித்துக் கொள்ளுங்கள் பாபாஜி''

''ஒரு நெருப்புப் பெட்டிக்கு வண்டிக்கூலி எவ்வளவு ஆகும், சிவகாசியிலிருந்து பம்பாய்க்கு?''

''ஐந்து பைசா.''

''சரி. நமக்கு இரண்டு பைசாதான் ஆகிறது. எப்படி?''

''சொந்த லாரி.''

''இல்லை முட்டாளே. அன்னாச்சிப் பழச்சாறு. சென்னை போகும். அங்கிருந்து ஏதும் லோடு ஏற்றிச் சிவகாசி போகும். சிவகாசியிலிருந்து நெருப்புப் பெட்டியோடு சென்னை வரும். பழச்சாறு நெருப்புப் பெட்டியோடு சென்னை வரும். பழச்சாறு வாங்குகிறவனிடம் லாரி கூலியாக நெருப்புப் பெட்டி கூலியில் பாதி வாங்கி விடுவேன்.''

''சென்னை சிவகாசி லோடு காசு...''

''அது டிரைவருக்கு?''

''ஆயிரம் ரூபாய் போகுமே?''

''போகட்டும். கன்றுக்குட்டிக்குக் கைப்பிடி புல் போட்டால் தான் கிட்டவரும்.''

''ரெட்டி, லாரி டிரைவர் தானே.''

''ஏன் அடித்தாய் என்று கேட்கிறாயா? இரண்டு லட்ச ரூபாய் சரக்கு நர்மதையில் விழுந்துவிட்டது என்று பொய் சொன்னான்.''

''என்ன சரக்கு?''

''அன்னாச்சிப் பழச்சாறு.''

''லாரி மொத்தமும் சாய்ந்துவிட்டதா?''

''ஒரே ஒரு ஜார். ரிஜெக்டட் ஜார்.''

''ஒரு ரிஜெக்டட் ஜார் சாறு இரண்டு லட்சமா?''

''தாமசம்... தாமசம்டா நீ.''

''மன்னித்து...''

''முட்டாள். பேசும் முன் யோசி. பேசிவிட்டு யோசிக்காதே.''

''மன்னிக்...''

''ஒரே அறையில் உன்னைக் கொன்றுவிடுவேன், யோசி.''

''ஜாரில் என்ன சரக்கு பாபாஜி?'' வெட்கத்துடன் ரோஷன் லால் சலும்பரா அப்பாவைக் கேட்டான்.

''இது.'' பீரோவைத் திறந்து ஒரு சிறிய பிளாஸ்டிக் பொட்டலம் போட்டார்.

''என்ன இது?''

''மருந்து எனக்கும் உனக்கும் தேவையில்லாத மருந்து அமெரிக்கனுக்குத் தேவைப்படுகிறது. ஐரோப்பா முழுவதும் அலைகிறது.''

''போதையா?''

''நமக்குப் போதை கிருஷ்ணன், அவர்களுக்குப் போதை இது, கடவுளை நம்பாத கலாசாரம் இதில் தான் முடியும்.''

''எங்கே வாங்குகிறீர்கள்?''

''சென்னையில்.''

''விற்பது?''

''நடுக்கடலில்.''

''யார் வாங்குகிறார்கள்?''

''தேவைப்பட்டவர்கள்.''

''ஆபத்தில்லையா?''

''நெருப்புப் பெட்டிகூட ஆபத்துதான்.''

''என்ன லாபம்?''

''முதலில் இதைக் கேட்டிருக்க வேண்டும். தாமசம். இப்போது கேட்கிறாய். இருநூற்று ஐம்பது சதவிகிதம். இந்தச் சிறிய பாக்கெட்டின் விலை பத்தாயிரம்.''

ரோஷன்லால் சலும்பரா யோசித்தான்.

''மாட்டினால் கம்பி எண்ண வேண்டி வரும்.''

''கோயம்புத்தூரிலிருந்து சலைன் பாட்டில் லட்சம் கொண்டு வந்தேன். விற்றேன். உள்ளே தூசு என்று என்னைக் கைது செய்தார்கள். அரைமணியில் வெளியே வந்தேன். அந்த மதராஸி குழாய்த் தண்ணீரை என்னிடம் விற்றான். சுத்தமாய்த் நேரே போய் மாட்டிவிட்டேன். அவன் கம்பி எண்ணுகிறான்.''

விமானம் சென்னையை நெருங்கிவிட்டது. பலத்த மழை.

விமானம் தடாலென்று தரை தொட்டது, சக்கரம் நீர் கிழித்து ஓடியது. உள்ளே காற்று நிறுத்தப்பட்டது. காது அடைத்தது.

விமானம் திரும்பி, ஏர்போர்ட் நெருங்கியது.

விமான தளத்தை ரோஷன்லால் உற்றுப் பார்த்தான். வெல்கம் என்கிற போர்ட் யாரோ திறந்தவெளி மாடியில் தூக்கிப்

பிடித்திருந்தார்கள். அது சிவப்பில் எழுதப்பட்டிருந்தது. ரோஷன்லால் நகம் கடித்தான்.

விமானத்தின் மேல்பகுதி அறை திறந்து தன் பெட்டி எடுத்தான். பத்து ஸீட் தள்ளி வேறு ஒரு மேலறை திறந்து உள்ளே வைத்தான். வெறுமே கைவீசி இறங்கினான்.

''ஆவோ சோடா சோப்'' அவனுக்குத் தெரிந்த பம்பாய் இன்ஸ்பெக்டர் அவன் தோளில் கை வைத்தார்.

6

அந்த அம்மாவுக்கு ஐம்பத்தைந்து வயது இருக்கும். பஞ்சாபி போல சல்வார் கம்மீஸும், மேல் துணியைத் தலையைச் சுற்றியும் போட்டுக் கொண்டிருந்தாள். விமானத்தில் உள்ளவர்கள் வெளியே இறங்க, மெல்ல நகர்ந்தாள். ரோஷன்லால் வைத்த பெட்டியை எடுத்துக் கொண்டாள்.

விமானத்துக்கும் விமான நிலையத்துக்கும் உள்ள பாதையில் நடந்தாள். கடைசி ஆளுக்கு முதல் ஆளாய் நகர்ந்தாள். லௌஞ்சில் இறங்கினாள். பெட்டியைக் காப்பி ஸ்டாலுக்கு அருகே வைத்துவிட்டுக் காப்பி குடித்தாள்.

லௌஞ்சில் இறங்கிய பம்பாய்ப் பயணிகள் கலையும் வரை காத்திருந்தாள். சிறிய ஏர்போர்ட் பஸ்ஸில் பெட்டியுடன் ஏறிப் பத்து ரூபாய் டிக்கெட் வாங்கினாள்.

அந்த பம்பாய் இன்ஸ்பெக்டர் தாவித் தாவிப் படியேறினான். நீண்ட வராண்டாக்களில் விரைவாய் நகர்ந்து ஏர்போர்ட் செக்யூரிட்டி அறைக்கு போனான். டெலிபோன் சுழற்றினான்.

''நரேக்கர் பேசுகிறேன் ஐயா.''

''பேசு.''

''ரோஷன்லால் வந்துவிட்டான்.''

''வராது என்ன செய்ய முடியும்? மேற்கொண்டு...?''

''விசாரித்தேன். ஏதோ பிஸனஸாம். நாளை திரும்புவானாம்.''

''யார் வரவேற்றது?''

''யாருமில்லை. தானாய் டாக்ஸி ஏறிப்போனான்.''

''பெட்டி?''

''என்ன... பெட்டி?''

''ப்ரௌன் கலர் ப்ரீஃப் கேஸ்.''

''இல்லையே.''

''என்னது?''

''எதுவும் கொண்டு வரவில்லை.''

''தவறு. அவனிடம் பெட்டி இருக்கிறது. வி.ஐ.பி. ப்ரௌன் கலர்.''

''நிச்சயம் இல்லை ஐயா''

''பிடி. பிடி.''

''யாரை?''

''அவனை... பெட்டியை. இரு, இரு பெரிய முட்டாள்தனம் நடந்துவிட்டது.''

''நான் எதுவும் தவறு செய்யவில்லை.''

''இரு முட்டாளே. தவறு இந்தப் பக்கம் இரு.'' போனில் இரைச்சல், அதட்டல், சீறல் கேட்டன.

''நரேக்கர்...''

''ஐயா.''

'நீ குவார்ட்டர்ஸுக்குப் போ. உன் வேலை முடிந்து விட்டது.''

''ஏதும் தவறு நடந்துவிட்டதா?''

''தெரியவில்லை இரு... இரு...'' மறுபடி உரையாடல்கள் கேட்டன.

''சந்தேகப்படும்படியாய் யாராவது ப்ரௌன் சூட்கேஸுடன் இருக்கிறார்களா என்று பார். தன்னம்பிக்கையாய்ப் பேசு முரட்டுத் தனம் செய்யாதே.''

''கட்டளை தெளிவாய் இல்லையே.''

''நரேக்கர். இப்போது உன் முட்டாள்தனம் அதிகம் பிரகாசிக் கிறது. லட்சம் பேர் கலந்து வேலை செய்யும் ஒரு போலீஸ் டிபார்ட்மெண்டில் சாக்லெட் வாங்கிவா, பாவ் பாஜி தின்னு என்று தெளிவாய்க் கட்டளை வராது. இது இருட்டில் கறுப்புப் பூனை தேடும் வேலை.''

''புரிகிறது ஐயா, ஒரு விஷயம்.''

''என்ன?''

''நான் வர நாளாகும் என்று என் வீட்டிற்குச் சொல்ல வேண்டும். இங்கு வந்து பத்து நாளாயிற்று.''

''சொல்கிறேன்.''

துண்டிக்கப்பட்டது. நரேக்கர் வெளியேறினான். ப்ரௌன் சூட்கேஸ், ப்ரௌன் சூட்கேஸ் என்று மூளை பாட்டுப் பாடியது. லௌஞ்ச் சுற்றிப் பார்த்தான். பம்பாய்ப் பயணிகள் நகர்ந்து வேறு பயணிகள் வந்து விட்டார்கள். நாற்பத்து மூன்று ப்ரௌன் சூட்கேஸ் இருந்தன.

நகரத் துவங்கிய ஏர்போர்ட் பஸ்ஸில் ஓடிப்போய் உட்கார்ந் தான். ''எங்கிருந்து வருகிறீர்கள்?'' அருகே உள்ளவரைக் கேட் டான். கொச்சின் என்று அவர் சொல்ல, சாய்ந்து கொண்டான்.

அவனுக்குப் பின் ஸீட்டில் ப்ரௌன் சூட்கேஸ் இருந்தது.

கொடைக்கானல் தள்ளி, திபேத்தியக் குடியிருப்புகள் இருந்தன. சீனப் படையெடுப்பின்போது அகதிகளாய் வந்த பல ஆயிரம் பேர்களை இந்திய அரசு பல குழுக்களாகப் பிரித்து மலைவாச ஸ்தலங்களுக்கு அனுப்பி வீடுகட்டிக் கொடுத்து உதவிப் பணம் வருடா வருடம் தந்து கொண்டிருந்தது. வருடம் முழுவதும் ஆண்களும் பெண்களும் ஆயிரக்கணக்கான ஸ்வெட் டர்கள் பின்னுவார்கள். மரப் பொம்மை செய்வார்கள். குளிர் நாட்களில் தரைப் பக்கம் போய் விற்பார்கள்.

தமிழ்நாட்டில் ஸ்வெட்டர் போடுகிற குளிர் பத்து நாட் களுக்கு மேல் இருக்காது. அப்படிக் குளிர்ந்தாலும் வேட்டியை அவிழ்த்து மேலே போர்த்திக் கொள்கிறார்களே தவிர ஸ்வெட்டர் வாங்குவதில்லை.

''நீங்க நேபாளியா?'' ஸ்வெட்டர் வாங்கும்போது கேட் கிறார்கள்.

''இல்லை. திபேத்'', என்றால் புரியாது விழிக்கிறார்கள். தலாய்லாமா என்னும் பெயரை மறந்துவிட்டார்கள். சில வயசாளிக்கு மட்டும் தெரிகிறது. பலருக்குத் தெரிவதில்லை.

ஸ்வெட்டர் மூட்டையை முதுகில் தூக்கிப் போவது வேறு பெரிய வேடிக்கை. 'தலைல பாரம் போட்டு சரசரன்னு நடக்கிறத வுட்டுட்டு... ஏண்டா இப்படிப் போறீங்க?' கேட்கிறார்கள்.

பாரம் தலையில் தூக்கவே கூடாது. மூளை இறுகி மந்த மாகும். கழுத்து நரம்பு வளைந்து இடுப்பு பலவீனமாகும். தமிழர் களுக்குத் தெரிவதில்லை. தலையை வேதனைப்படுத்துகிறார் கள். காது, மூக்கு, கண் எல்லாம் பாதிக்கும் என்பது புரியாது இருக்கிறார்கள்.

அந்தப் பாதிப்பிலோ என்னவோ காடுகளை நாசமாக்கு கிறார்கள். பச்சைமரம் வெட்டுகிறார்கள்.

வனம் தேவதை. அவளைத் தமிழர்கள் ஈவிரக்கமின்றிச் சிரைக்கிறார்கள். ஆண்களும், பெண்களும் மரம் வெட்டித் தலையில் தூக்கிப் போகிறார்கள்.

தமிழர்களுக்கு காட்டின் அமைதி புரியவில்லை. தமிழர்களை இத்தனை வருடமாகியும் திபேத்தியர்களுக்குப் புரியவில்லை.

உதவித் தொகை குறைகிறது. ஸ்வெட்டர் நூல் விலை யேறுகிறது. சோள மாவுகூட இனி கிடைக்காது என்று தோன்று கிறது. இனி வேறு எங்கும் குடிபெயர முடியாது. சொந்த நிலம், வீடு எல்லாம் இப்போது சீனாவின் வசம் இருக்கிறது. இங்கு வந்தது தவறோ என்று தோன்றுகிறது.

ஆனால் இதற்கு ஒரு விடிவு வந்தது. அஸ்ஸாமிலிருந்து ஆட்கள் வந்தார்கள். நிறைய இளைஞர்கள் வந்தார்கள். புரட்சிப் படையாம். தனி மாநிலம் கேட்கும் முயற்சியாம்.

அவர்களுக்கும் மலையின் அழகு, மரத்தின் அருமை புரிந்திருந்தது. கொச்சையாய் இந்தி பேசினார்கள்.

புரட்சிப் படைக்குச் சாமான்கள் வாங்க வேண்டுமென்றார் கள். ஏகப்பட்ட காசு கொடுத்து ஆட்டா மாவு வாங்கச் சொல்லிக் கல்கத்தாவுக்குச் சரக்கேற்றினார்கள். நெய், வனஸ்பதி, நெருப்புப் பெட்டி, துணி, மருந்து எல்லாம் வாங்கினார்கள். கொஞ்சம் திபேத்தியர்களுக்குக் கொடுத்தார்கள்.

கொஞ்சம் என்பதே ஆறு மாத சரக்காய் இருந்தது. உணவு உடை எளிதாயிற்று.

ஆனால் அவர்களைத் தேடி வரும் வியாபாரிகள்தான் மோச மானவர்கள். பெண்களை உரித்து விடுவதுபோல் பார்க்கிறார்கள்.

யாரோ கல்லு என்கிற பனியா வந்திருக்கிறான். நேற்றிரவு வந்து இறங்கினான். வெளியே போகாது குடியிருப்பிலேயே அடைந்து இருக்கிறான். போலீஸ் தேடும் ஆள் மாதிரி அவன் முகத்தில் ஒரு பயம் இருக்கிறது.

இதுவரை இந்தக் குடியிருப்புக்குப் போலீஸ் வந்ததில்லை. வரும் அவசியமில்லை. போகிற போக்கு பார்த்தால் நிறைய கஷ்டங்கள் வரும்போல் இருக்கிறது. ஆனால் கஷ்டம் பார்த் தால் ஆட்டா மாவு கிடைக்காது. ஸ்வெட்டர் விற்று வாழ முடியாது.

அஸ்ஸாமிய இளைஞர்கள் கல்லுவைக் காசு கேட்டார்கள். கல்லு ''வரும்'' என்றான். உயரமாய் வழுக்கைத் தலையாய்த் தாடியோடு குறுக்கும் நெடுக்கும் நடக்கிறான்.

மழை பெய்து குளிர்க் காற்று வீசும் மாலைப் பொழுதில், கணப்புக்கு அருகே உட்கார்ந்து ரம் குடித்தான்.

''என்ன செய்தாய், இப்படி ஒரு பதற்றம் உன்னிடம்?' அஸ்ஸாமிய இளைஞர்கள் கேட்டார்கள்.

''ஒரு தவறு செய்துவிட்டேன்.''

''என்ன தவறு?''

''எனக்கொரு வேலை தரப்பட்டது. தவறாய் முடிந்து விட்டது.''

''என்ன வேலை?''

''ஆஸிட் ஊற்றச் சொன்னார்கள்.''

''ஆஸிட்டா? யார் மீது?''

''ஒரு நாய் காட்டிக் கொடுத்தது. அதன் மீது.''

''பிறகு?''

''நான் அந்த நாயைக் குறி வைத்தேன். அப்பாவிப் பூனை மீது ஊற்றிவிட்டேன்.''

''ஓவ் ஓவ்.''

''தவறுதான்.''

''யார் அது?''

''ஒரு பெண்... இருபது வயதிருக்கும்.''

''உன்னைப் பார்த்துவிட்டாளா?''

''இல்லை என்று நினைக்கிறேன்.''

''நினைக்கிறாயா?''

''கண்கள் என்னைப் பார்த்தன. பிறகு ஆஸிட் அதில் பட்டிருக்கும்.''

''இது முட்டாள்தனம்.''

''தவறு நேர்ந்துவிட்டது.''

''உன் தவறு பற்றிச் சொல்லவில்லை. நீ இங்கே வந்தது முட்டாள்தனம்.''

''வேறு எங்கே போக முடியும்?''

''நீ ஏதாவது ரௌடித்தனம் செய்துவிட்டு எங்கள் இடத்துக்கு வருவதா?''

''ரௌடித்தனம்தான். நீ என்ன ஒழுங்கு?'' நீயும் பதுங்கத் தானே வந்திருக்கிறாய்?''

''இது போராட்டம். மக்கள் போர், புனிதப் பணி.''

கல்லு குடிபோதையில் கைதட்டி நடு வலக்கை விரல் நீட்ட அஸ்ஸாமிய இளைஞர்கள் விருட்டென்று எழுந்தார்கள். அது பழக்கப்பட்ட குழு. ஒரே சிந்தனையுள்ள கூட்டம். ஒன்றே குறியாய் இயங்கும் படை.

கல்லு கைகளைத் தூக்கினான். மன்னிப்புக் கேட்டான்.

''நீ வியாபாரி. காசு தவிர வேறு எந்த உணர்வுக்கும் மரியாதை தராத ஆள்.''

''இனியொரு முறை மரியாதை குறைந்தால் விரல்கள் சீவப்படும். நினைவில் கொள். நீ இடம் மாறுவது நல்லது.''

''எங்கே?''

அவர்கள் தங்கள் மொழியில் விரைவாய்ப் பேசினார்கள்.

ஒரு பை நிறைய உணவுப் பண்டங்கள், மதுவகைகள் போட்டு ஒரு திபேத்திய இளைஞனோடு அனுப்பினார்கள்.

ஒரு மலைச்சரிவில் நெஞ்சுயரம் வளர்ந்த செடிகளை விலக்கியபடி திபேத்தியன் நடந்தான். சட்டென்று ஒரு திடல் தெரிந்தது. திடலுக்கு நடுவே தோப்பு இருந்தது. தோப்பு இருந்த இடத்தில் மலை பிளந்து உள்பக்கம் பாதை போயிற்று. ஐந்நூறு அடி மலைப் பிளவுகளூடே நடந்தார்கள்.

மலை உள்பக்கம் வாங்கி, குகை போல தோற்றமுள்ள இடத்தில் திபேத்தியன் மூட்டை இறக்கினான்.

திரும்பி நடந்தான்.

அந்தக் குகையையும் தாண்டி பாதை போயிற்று. சிறிது தூரம் போய்ப் பாதை நெட்டுக் குத்தாய் இறங்கியது. அருகே போய் மெல்ல கவனமாய் எட்டிப் பார்க்க, பெரிய நூலேணி அங்கே கட்டப்பட்டிருப்பது தெரிந்தது.

கல்லு குப்புறப்படுத்து, தலை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்தான். அங்கே நெருப்பு மூட்டி, பேண்ட், சட்டை அணிந்த இளைஞர்கள் பாட்டுப் பாடிக் கொண்டிருந்தார்கள். சிலர் கை கால்களில் பேண்டேஜ் போடப்பட்டிருந்தது.

கல்லு காது கொடுத்துப் பாட்டுச் சத்தம் கேட்டான். அது தமிழ்ப் பாட்டு.

இது வேறு புரட்சியா? இன்னொரு படையா? கீழே போனால் எதாவது வியாபாரம் தகையுமா?

தம்பி, பவுடர் கொடு துப்பாக்கி தருகிறேன். நவீன வயர்லெஸ் தருகிறேன். போய்ப் பேசலாமா?

'பொறு பொறு வந்து உட்கார்ந்து கொண்டான். ஓசைகளைக் கவனித்தான். அவன் இருப்பது முந்நூறு அடிப்பள்ளம். அவர்கள் இன்னும் ஐந்நூறு அடி கீழே இருக்கிறார்கள். மேலே ஆள் உண்டா? நிமிர்ந்து பார்த்தான். மரங்கள் தெரிந்தன.

மரத்தின் உச்சியில் பரண் அமைத்து ஆள் இருப்பது தெரிய வில்லை. அவனைக் கண்காணத்துக் கொண்டிருப்பது தெரிய வில்லை.

கல்லு என்ன செய்தான் என்பதை விசாரிக்கச் சென்னைக் குத் தகவல் போயிற்று.

தலையை மழுங்க மொட்டையடித்து மேலே காவி போர்த்தி இளம் பௌத்த துறவி காலில் ரப்பர் செருப்பும் போட்டு, காவி ஜோல்னா பை தோளில் மாட்டி, குடையுடன் பெண்கள் ஹாஸ்டல் பக்கம் நடந்து போனான்.

எதிர்ப்பக்கம் நடந்து சோடா குடித்தான்.

''எந்த ஊரு உனக்கு? வாட் கண்ட்ரி?''

''டிபெத்'' சிரித்தான்.

''சாமியாரா?''

சிரித்தான். குடையைப் பூமியில் ஊன்றி அருகே களைப் புற்றவன் போல் அமர்ந்தான். ஒரு போலீஸ் வேன் கடைக்கு வந்து நின்றது.

* * *

7

நுங்கம்பாக்கத்தில் ஆறு தளம் கொண்ட கட்டடத்தின் மேல் மாடியிலிருந்து தான் வந்த டாக்ஸி வெளியேறுவதை ரோஷன்லால் அலும்பரா கவனித்தான். தெருவின் நடமாட்டத்தைக் கூர்மையாய் நோட்டமிட்டான்.

திரும்பி, ''கல்லு எங்கே?'' என்று கேட்டான், அறையில் ஆறு நபர்கள் இருந்தார்கள். எல்லோர் முகத்திலும் வட இந்தியர்கள் என்று எழுதி ஒட்டப்பட்டிருந்தது. சிவப்பும், மெல்லிய மீசையும், பீடா குதப்பிக் கறுத்த பற்களும், உணவு ஊட்டமும் அவர்களைத் தமிழர்களிடமிருந்து சுலபமாய் இனம் பிரித்துக் காட்டின.

''டீ சாப்பிடுகிறீர்களா?''

''கல்லு எங்கே?''

''வெளியேறி விட்டான்.''

''எதற்கு?''

''தலைமறைவாய் இருக்கும்படி ஆயிற்று.''

''போலீஸ் தேடியதா?''

''இல்லை. ஒரு தவறு நடந்துவிட்டது.''

''என்ன?''

''ஆள் தெரியாமல் தவறாக யார் மீதோ திராவகம் ஊற்றி விட்டான்.''

''அரே பாப்ரே!''

''ஹாஸ்டல் பெண். நாம் குறி வைத்த பெண் போலவே இருந்தாளாம். அது தவிர, சட்டென்று தமிழர் முகங்களை வித்தியாசப்படுத்திப் பார்க்கக் கல்லுவுக்குத் தெரியவில்லை.''

''என்ன ஆயிற்று?''

''நல்ல திராவகம். நேர் வீச்சு. முகம் முழுவதும் வழண்டு கருகி....''

''கல்லுவை அடையாளம் தெரிந்து கொண்டு விட்டாளா?''

''இருக்காது. கல்லு விக் வைத்து வேறு மீசை பொருத்திப் போனான்.''

''நாம் குறி வைத்த பெண் எங்கே?''

''காணோம்.''

''இப்போது என்ன ஆகும்?''

''போலீஸ் விசாரிக்கிறது.''

''நம்மீது சந்தேகம் வருமா?''

''வாய்ப்பே இல்லை.''

ரோஷன்லால் யோசித்தான். கவலையானான். அப்பாவுக்கு இதைச் சொல்வதா வேண்டாமா என்று எண்ணத் துவங்கினான். சொல்லித்தான் ஆக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

''பெரியவருக்கு இது தெரிய வேண்டும். போன் போடு.'' கட்டளையிட்டான்.

உள்ளிருந்த ஓர் ஆள் போனுக்குப் போக, வராண்டாவிலிருந்து வந்து ஹால் சோபாவில் அமர்ந்து கொண்டான். சுற்றியிருந்த ஆட்களை உற்றுப் பார்த்தான்.

இவர்கள் எல்லாரும் அப்பாவின் ஆட்கள் தமிழ் நாட்டில் வெவ்வேறு தொழில் செய்பவர்கள். தங்கம், வனஸ்பதி, எவர் சில்வர், லாரி டிரான்ஸ்போர்ட், ட்ராவல் ஏஜென்ஸி, பழத்தோட்டம் என்று பலவகை தொழில் செய்பவர்கள்.

ரோஷன்லாலோ அப்பாவோ சென்னை வந்தால் ஒன்றாய் கூடுவார்கள்.

அப்பாவின் கட்டளைகளை நேரடியாய்க் கேட்டு விவரம் தெரிந்து நிதானமாய்ச் செய்வார்கள். இவர்கள் அனைவரும் அப்பாவின் ஒரு குடைக்குக் கீழ் வந்தவர்கள்.

அந்தக் குடைக்குக் கீழ் வந்தவனுக்கு எந்தவித வறுமையும் இல்லை. எந்தவிதக் குறையும் இல்லை. பதிலுக்கு ஒரே ஒரு கட்டளை. 'உண்மையாய் இரு' என்பது மட்டும்தான். பாபாஜி தெய்வம் என்கிற எண்ணத்துடன் இருப்பதுதான்.

தவறுக்கு அப்பா திட்டுவார் சில சமயம் தண்டிப்பார். சில சமயம், 'விடு, அவனிடம் அந்த வேலை கொடுத்தது என் தப்பு' என்பார். எந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றுவார்.

ஆனால் இந்தத் தவறுக்கு என்ன செய்வார் என்று தெரியவில்லை.

சம்பந்தமில்லாத மனிதர்களைத் துன்புறுத்துவது பாபாஜிக்குப் பிடிக்காது. பழத்தோட்ட முதலாளி கூலிப் பெண்ணைப் பலாத்காரம் செய்தது கேள்விப்பட்டு அவனை பெல்ட்டால் அடிக்க ஆள் அனுப்பினார். அடி வாங்கினானா என்று தெரிந்து கொள்ள வேறு ஆளை அனுப்பினார். அந்தப் பெண்ணைச் சென்னைக்கு வரவழைத்து லாரி டிரான்ஸ்போர்ட்டில் பெருக்குகிற வேலை தந்து நல்ல சம்பளம் போடச் சொன்னார். அவனுக்கு இப்போது பல புருஷர்கள். அது முக்கியமில்லை. நம்மால், நம் ஆட்களால் இப்படிப்பட்ட குற்றங்கள் நிகழக்கூடாது!

இதற்கு மனித தர்மம் மட்டும் காரணமில்லை. இப்படித் தேவையில்லாது பகைத்துக் கொள்ள, பெரிய வேலைகளில் சிக்கல் நேரிடும். அதில் சிக்கல் நேர இவ்விதம் பாதிக்கப்பட்டவர்கள் காரணமாகலாம்.

சுறா வேட்டைக்காரன் தவளைகள் மீது கவனம் கொள்வது தவறு. ஆனால் கல்லு விஷயம் அவ்விதம் இல்லை. இது விபத்து. ஆனால் கோரமான விபத்து. இதைப் போலீஸ் தோண்ட, ஏடாகூடமாகலாம். நிறுத்த வேண்டும். யார் பாதிக்கப்பட்டது என்று தெரிய வேண்டும். பாதிக்கப்பட்டவர் ஆக்ரோஷம் அடையாமல் தவிர்க்கப்பட வேண்டும்.

பவுடர் வியாபாரத்தில் ஒரு மலேசியத் தமிழ்ப் பெண் தகராறு செய்தாள். கல்லுவை அடையாளம் காட்டுவேன் என்று எச்சரிக்கை செய்தாள்.

தகராறு வந்தது அவளால் ஏழு பெட்டி பவுடர். அதில் இரண்டு பெட்டி சரக்கு பொய். மாக்கல் பவுடர். இருபது ரூபாய் பெறாத மாக்கல் பவுடர் கொடுத்து இரண்டு லட்சம் எடுத்துக் கொண்டுவிட்டாள். பம்பாயில் அது கண்டுபிடிக்கப்பட்டு இரவோடு இரவாய் மடக்கப்பட்டாள். அவள் பயப்படவே இல்லை. நாற்பது ஐம்பது போட்டோக்கள் காட்டினாள். கல்லு நிற்பது, மோட்டார் சைக்கிளில் போவது, வீட்டு வாசலில் உட்கார்ந்திருப்பது, பவுடர் கேஸோடு ரயிலில் நிற்பது.

கல்லு மிரண்டு போய் வந்துவிட்டான். அவளுக்குப் பின்னால் பெரிய குரூப்பே இருந்தது புரிந்து போயிற்று. யார், என்ன எங்கே எதுவும் தெரியவில்லை.

தெரிய வரும் அந்தப் பெண் நான்காவது கை பம்பாய்

போகவும் சில சமயம் உதவியிருக்கிறாள். இரண்டு வருட பிஸினஸ் இப்போது ஏனோ தகராறு ஆகிறது.

''சாகேப்... பாபாஜி''

அவன் போன் நீட்டினான்.

ரோஷன்லால் அப்பாவிடம் சுருக்கமாய் விவரம் சொன்னான்.

''அந்தப் பெண்ணைத் தேடு மகனே, நீ போகாதே... இரு... டிரான்ஸ்போர்ட் பீஹாரியை அனுப்பு. வெந்து போன பெண்ணைப் பற்றி விவரம் சேகரி. நம் டாக்டர் உக்கம்சந்தை அவளிடம் அனுப்பு. வலிய உதவி செய்யச் சொல்.''

''சரி.''

''மலேசியத் தொடர்பு வேண்டாம்.''

''சரி.''

''சரக்கு மறுத்துவிடு.''

''சரி. வந்து கேட்பார்களே?''

''இனி வியாபாரம் செய்வதாய் இல்லை என்று சொல்.''

''பாம்பே போலீஸ் என்னை விசாரித்தால்?''

''நரேக்கரா? நான் அவன் மனைவியிடம் பேசுகிறேன் சரியாகி விடுவான்.''

''கல்லு...?''

''அவனை என்னிடம் விடு. நான் கணக்குத் தீர்த்துக் கொள்கிறேன்.''

''பாபாஜி...!''

''அவனுக்குத் தாமரைப்பூ தந்துவிட வேண்டும்.''

''சரி பாபாஜி.''

மரண நேரத்தில் எவனுக்குத் தாமரைப்பூ நெற்றி மத்தியில் தோன்றுகிறதோ, அவன் சொர்க்க பதவியை அடைவான் என்பது சித்தர்களின் நம்பிக்கை.

கல்லுவுக்குத் தாமரைப்பூ என்பது மரணம்.

கல்லு ஆபத்து என்று பாபாஜி தீர்மானித்து விட்டார். இந்தவித முடிவுகளும் பாபாஜி எடுப்பதுண்டு. 'வேறு வழி

யில்லையப்பா' என்று சொல்லிவிட்டுக் கதை முடித்துவிடுவது உண்டு.

கல்லு நல்லவன். கல்லு ரோஷன்லால் அலும்பராவுக்கு இந்த உலகத்தைக் காட்டிக் கொடுத்தவன். இங்கே உள்ள நெளிவு சுளிவுகளைச் சொல்லித் தந்தவன்.

''சோட்டா சாப். தினம் காலையில் வெறும் வயிற்றில் நெல்லி ரசம் சாப்பிடுங்கள். பத்து கிலோ மீட்டர் ஓடுங்கள். உடம்பு கல்போல ஆகும். குடிக்கலாம் சோட்டா சாப். சிகரெட் தவறு. மறந்தும் பவுடர் தொடாதீர்கள். அது ஆலகால விஷம். இன்னும் பத்து வருடத்தில் மொத்த அமெரிக்காவையும் இந்த விஷம் கொன்று போடும்.''

''அந்தக் கல்லுவின் கதை முடியப்போகிறது.''

''சரி, அது தனி விஷயம்.''

வியாபாரம் கூடாது என்கிறார் பாபாஜி.

அப்படியானால் துரிதமாய்ச் சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இந்த ஜங்க், அந்த மலேசியா ஆட்களுக்குத் தெரியும்.

போன் பேசுவார்கள். நேரே வருவார்கள். வியாபாரம் வேண்டாம் என்றால் வெறுமனே போவார்களா?

என்ன செய்துவிட முடியும்? இருப்பினும் தயாராய் இருக்க வேண்டும். கல்லு உடனே தயார் செய்வான். இவர்களில் யாரை எப்படித் தேர்ந்தெடுப்பது? தெரியவில்லை.

இன்னும் காசு வரவில்லை.

வந்துவிடும். கிழவி எடுத்து வந்துவிடுவாள். நரேக்கர் அவளை மடக்காது இருக்க வேண்டும்.

வாசல் அழைப்பு மணி அடித்தது.

பஞ்சாபிக் கிழவி நின்றிருந்தாள். கையில் சூட்கேஸ் இருந்தது.

''நமஸ்த்தே சாப்.''

''வா.''

''பெட்டி எடுத்து வந்தேன். இருக்கவா? போகவா?''

''போய் விடு.''

''என் பஸ்ஸில் நரேக்கர் வந்தான். அவனுக்குத் தெரிய வில்லை. எதற்கும் நான் பின் வாசல் வழியே போய்விடுகிறேன். பெட்டி சரிபார்த்துக் கொள்ளுங்கள்.''

''சரி, போகலாம்.''

அவள் வெளியேறிக் கதவு அடைக்கப்பட்டது.

பெட்டியுடன் உள்ளே ரோஷன்லால் வந்தான்.

மறுபடி அழைப்பு மணி.

கதவு ஓட்டை வழியே பார்த்தான். கிழவி தலை தெரிந்தது.

கதவு திறந்தான்.

சடேரென்று நான்கு ஆட்கள் உள்ளே நுழைந்தார்கள். கிழவியை உள்ளே தள்ளினார்கள். கதவு சாத்தினார்கள்.

உள்ளே உள்ள எல்லாரையும் கவனமாய்ப் பார்த்தார்கள்.

''சரக்கு வந்திருக்கிறது'' என்று முதலில் வந்தவன் சொன்னான்.

ரோஷன்லாலுக்கு உள்ளே கொதித்தது. சிரித்தான்.

''சாம்பிள் வேண்டும்.''

''இருக்கிறது.''

''பிரி.''

கடைசியாய் வந்தவன் தோள் பையிலிருந்து வெற்றிலைப் பெட்டி போல உள்ள எவர்சில்வர் டப்பாவை எடுத்தான். திறந்து மேலே உள்ள சுருள் பீடாக்கள் எடுத்துவிட்டு அடியிலிருந்து வெள்ளை பாக்கெட் எடுத்தான்.

''எவ்வளவு?''

''கால் கிலோ.''

ரோஷன்லால் முகர்ந்தான்.

''நல்ல சரக்கு இதுபோல் அதிகம் வேண்டுமே.''

''தருகிறோம். காசு?''

''பத்து லட்சம் எடுத்து வந்திருக்கிறேன்.''

''தா.''

நிதானமாய்ப் பெட்டி திறந்து காசு எடுத்து டப்பாயில் வைத்தான்.

வாரிக் கொண்டார்கள்.

''சரக்கு எங்கே வர வேண்டும்?''

''சால்ட்டு காட்டார்ஸுக்கு.''

''என்ன பேக்கிங்?''

''உப்பு மூட்டைகள்.''

''நாளைக் காலை வரும்.''

''நன்றி.''

அவர்கள் பணத்துடன் வெளியேறினார்கள். வராண்டா விற்கு போய் ரோஷன்லால் நின்றான்.

கீழே இறங்கின ஆட்கள் ஒருவர் கூட வாசல் பக்கம் வர வில்லை. பையை எடுத்துப் பிரித்தான். கைபடாது அப்படியே டாய்லெட்டுக்குப் போனான். கக்கூஸில் போட்டான். ப்ளஷ் திறந்துவிட்டான். வாளிவாளியாய் ஜலம் ஊற்றினான்.

பத்து நிமிடத்தில் அனைவரையும் தனித்தனியே வெளியே றச் சொன்னான்.

கிழவியை மட்டும் நிறுத்தி டீ போடச் சொன்னான். டீ குடித்தான்.

வாசலில் ஜீப் நின்றது. தமிழ்நாடு போலீஸ் போதை மருந்து தடைப் பிரிவு ஏ.ஸி. அவன் பெயர் சொல்லித் தேடினார். அவன் ப்ளாட்டின் வாசல் குமிழை அழுத்தினார்.

8

ஒரு பெண் முகத்தில் திராவகம் ஊற்றப்பட்டது எனில், ஊற்றியது ஆணாகத்தான் இருக்க வேண்டும். அப்படி ஓர் ஆண், பெண் முகத்தில் திராவகம் ஊற்றக் காரணமாய்க் காதல் தோல்வி அல்லது காதல் புறக்கணிப்பு போன்றவைதான் இருக்க வேண்டும்.

வெந்துபோன முகத்தைப் புறக்கணித்துவிட்டு ஆஸ்பத் திரியில் கிடக்கும் அந்தப் பெண்ணின் உடல் அமைப்பை மட்டும் பார்க்க, டக்கர் குட்டி என்றுதான் தோன்றுகிறது. இம் மாதிரி அழகுள்ள பெண்களுக்கு மிக நல்லவன் கூடக் கெடுதல் செய்துவிட முடியும்.

அந்த அஸிஸ்டெண்ட் கமிஷனர் அலுப்பாய் ஹாஸ்ட லுக்குள் நுழைந்தார். இந்த மாதிரி ஹாஸ்டலில் உள்ள பெண் களுக்குத் திமிர் அதிகமாய் இருக்கிறது. பொய்யாய் ஓர் ஆணவம் வந்துவிடுகிறது. கொஞ்சம் காசு சம்பாதிக்கிற கர்வம், யாரும் தட்டிக் கேட்க முடியாத சூழல், எல்லாம் தனக்குத் தெரியும் என்கிற அகம்பாவம், ஏடாகூடமாய் எதுவும் செய்து விட்டு ஹாஸ்டலுக்குள் ஒடுங்கிக் கொள்ளும் தந்திரம்.

ஒரு போலீஸ் ஆபீஸர் வருகிறார் என்று தெரிந்ததும் பார்த்ததும் பாராததுமாய் ஓர் அலட்சியம் வராண்டாவில் உள்ள பெண்களிடம் காணப்படுகிறது. பயப்படுகிறவர்களை அதட்டி விசாரிக்கலாம். பயப்படாதவர்களை மிரட்டி விசாரிக்கலாம். எனக்கு எந்தப் பயமுமில்லை என்று நடிப்பவர்களை விசாரிப்பது கடினம்.

ஐ டோன்ட் நோ, ஐ டோன்ட் நோ என்று எல்லாவற்றுக் கும் அச்சடித்த பதில் வரும். ஆட்களை விசாரிப்பதை விட அறையை சோதனையிடுவது மேல்.

புகார் செய்தது ஹாஸ்டல் வார்டன். புகார் செய்ததைத் தவிர தனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லத் தயாராய் அந்த அம்மையார் இருந்தார்.

காஞ்சனாவின் அறை திறக்கப்பட்டது.

''எப்போது இந்த அறையைப் பூட்டினீர்கள்?''

''நான் பூட்டவில்லை. காஞ்சனா பூட்டி, சாவியைப் பலகை யில் மாட்டிவிட்டுப் போயிருக்கிறாள்.''

''நடுவே திறக்கவில்லையா?''

''இல்லை. சாவியை எடுத்து என் மேசை டிராயருக்குள் போட்டுவிட்டேன். போலீஸ் வரும் என்று தெரியும்.''

''நீங்கள் வெளியே இருங்கள்.''

ஏ.ஸி. உள்ளே போனார். ஜன்னல் கொக்கிகள் இழுத்து மாட்டப்பட்டிருந்தன. படுக்கை சுத்தமாய் இருந்தது. தலை யணைக்குக் கீழ் ஏதோ தனியார் கம்பெனி வரவு செலவு ஃபைல் இருந்தது.

''என்ன வேலை இந்தப் பொண்ணுக்கு?''

''டெக்ஸ்டைல் பிஸினஸ்.''

''யாரும் பார்ப்பதற்கு வருவதுண்டா? குறிப்பாய் ஆண்கள்...?''

''அப்படிப்பட்ட பெண்ணில்லை காஞ்சனா,''

''எப்படிப்பட்ட...''

''நான் என்ன சொல்வது... தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கும் பெண்''

''வேறு மாதிரிப் பெண்களும் உண்டா இங்கே?''

''இது நல்ல ஹாஸ்டல்; கட்டுப்பாடு அதிகம். ஆனால் கட்டுப்பாடு ஹாஸ்டல் வரைதான். எல்லாப் பெண்களுக்கும் பின்னால் போய்த் துப்பறிவது கடினம்.''

''இந்தப் பெண்ணுக்கு கார்டியன் யார்?''

''டெல்லி விலாசம் மாயவரம் விலாசம் இரண்டும் தந்திருக்கிறாள். இது தவிர டெக்ஸ்டைல் பார்ட்னர் விலாசம் உண்டு.''

''இவளைத் தவிர, வேறு யார் அறையில் தங்குவது?''

''வேறு ஒரு பெண் அவளுக்குத் திருமண ஏற்பாடுகள் நடக்கின்றன என்று சொன்னாள். ஊருக்குப் போயிருக்கிறாள்.''

பாத்ரூம் கதவு திறந்தார். பெண்களின் உள்ளாடைகள் இருந்தன. தரை காய்ந்து இருந்தது. ஜலதாரையின் விளிம்பில் ஒரு சிவப்பு நிறச் சோப்புத் துண்டு கிடந்தது. திரும்பி, சோப்பு வைக்கும் பிறையைப் பார்த்தார். வேறு ஒரு வாசனை சோப் சற்றுத் தேய்ந்த கட்டியாய் இருந்தது.

சிவப்பு நிற சோப், லைப்பாய் நெடி அடித்தது. காஞ்சனா லைப்பாய் உபயோகிப்பாளா என்ன? கண்ணாடி மேஜையில் உள்ள வாசனைத் திரவியங்களுக்கும் லைப்பாய் சோப்பு கட்டிக்கும் சம்பந்தமில்லையே!

வேறு யார் குளியல் அறையில் இருக்க முடியும்? லைப்பாய், பெண்கள் உபயோகப்படுத்துவார்களா? ஆண்கள் இங்கே குளிக்க முடியுமா? முடியாது. பிறகு வேறு யார்? காஞ்சனாவின் சோப்பாக இருக்கலாமோ? ஒரு முறை ஆரோக்கிய சோப், பிறகு வாசனை சோப் என்று இருக்கலாமோ?

சுற்றிப் பார்த்தார். கெய்சர் விளக்குப் பளிச்சென்று வேலை துவங்குகிறேன் என்று எரிந்தது. தர்மோஸ்டட் தானே சூடு படுத்தும்; சூடு உச்சநிலை அடைய, அணையும், மெயின் எங்கே?

தேடினார் பாத்ரூம் கதவுக்குப் பின்னே இருந்தது. இதைக்கூட அணைக்காமல் காஞ்சனா அவசரமாய்க் கிளம்பியிருக்கிறாள் என்று எண்ணலாமா?

''எல்லா அறைகளிலும் கெய்சர் உண்டா?''

''இல்லை. காஞ்சனா தனியே பொருத்திக் கொண்டாள். மீட்டர் சார்ஜ் வசூலித்து விடுவோம்.''

''ஓ... வசதி உள்ள பெண்.''

''ஆமாம்.''

''எத்தனை கெய்சர்கள் இருக்கும் ஹாஸ்டலில்?''

''என் அறையில் ஒன்று, இவளுடையது மற்றொன்று.''

''ஓ...''

''வேறு யாரும் வெந்நீருக்கு வருவார்களா?''

''வரலாம்.''

''யார், யார்?''

''தெரியாது. இந்தப் பெண்கள் சகலமும் பரிமாறிக் கொள்வார்கள். டேபிள் ஃபேன், வாட்டர் ஹீட்டர், சில சமயம் மேஜை நாற்காலிகள் கூட மாற்றிக் கொள்வார்கள்.

''அடுத்த அறையில் யார்?''

''இரண்டு பெண்கள். பெயர் மரகதம், அன்னபூரணி படிக்கும் பெண்கள். மரகதம் கடற்பாசி பற்றி ஏதோ ஆராய்ச்சி செய்கிறாள். அன்னபூரணி காமர்ஸ். அந்த அறையைத் திறக்க வேண்டுமா?''

ஏ.ஸி. அடுத்த அறை ஜன்னல் தள்ளினார். திறந்து கொண்டது. உள்ளே எட்டிப் பார்த்தார். உள்ளேயிருந்து வெப்பக் காற்று முகம் தாக்கியது. துணிகள், கண்ணாடி மேஜை, பவுடர், ஷாம்பு வகையறாக்கள்.

தலை குனிந்து மெல்ல யோசித்தபடி வாசல் கதவு பார்த்தார். கதவுக்குக் கீழே நிலைப்படி. நிலைப்படி விளிம்பில் அரிசி மாவுக் கோலம்.

''என்ன கோலம். விசேஷமா?''

சில பெண்கள் மத சம்பிரதாயம் உள்ளவர்கள். தினசரி வாசற்படியில் கோலம் போடுவார்கள். வீடுபோல் நினைத்துக் கொள்வார்கள்.''

நிலைப்படிக்கு நடுவே நீர் வெளியே போகும் ஓட்டை இருந்தது. ஓட்டை, காகிதத்தால் அடைக்கப்பட்டிருந்தது. சிவப்புக் காகிதம். இழுத்துப் பார்த்தார்.

லைப்பாய் சோப் உறை.

''அன்னபூரணி எங்கே?''

''காலேஜ் போயிருக்கிறாள்.''

''மரகதம்?''

''காலி செய்துவிட்டாள்.''

''என்று?''

''நேற்று?''

''ஏன்?''

''மலேயா திரும்பிப் போகிறாளாம்.''

''கடற்பாசி ஆராய்ச்சி?''

''முடிந்துவிட்டதாம்.''

''நேற்று எப்போது காலி செய்தார் மரகதம் என்கிற பெண்?''

''பகல் ஒரு மணிக்கு.''

''மலேயா போய் விட்டார்களா?''

''சென்னையில் உறவினர் வீட்டிற்குக் குடிபெயர்ந்து இரண்டொரு நாளில் போய் விடுவேன் என்று சொன்னாள்.''

''சென்னை உறவினர் வீடு எது?''

''விலாசம் இருக்கிறது.''

''உங்கள் அறைக்குப் போவோம். எனக்குக் காஞ்சனாவின் வீட்டு விலாசம், மலேசியப் பெண்ணின் விலாசம் தேவை. காஞ்சனா வீட்டிற்குத் தகவல் போய் விட்டதா?''

''நேற்று தந்தி கொடுத்தேன். பதில் தகவல் இல்லை.''

''என்ன விலாசம்?''

''டெல்லி. ஏதோ கோட் நெம்பர் எல்லாம் உண்டு.''

லெட்ஜர் புரட்டி அந்த வார்டன் அம்மாள் விலாசம் காட்டினார்.

அது ராணுவ விலாசம்.

டெல்லியில் உள்ள ராணுவ ஆபீஸ் விலாசம். ராணுவத்தினர் எங்கே வேலை செய்கிறார் என்பது ரகசியம். டெல்லி விலாசம் எழுத, உடனே சம்பந்தப்பட்ட ஆட்களுக்குச் சம்பந்தப்பட்ட இடத்தில் தகவல் போகும். மற்றக் கடிதங்களை விடத் தாமதமாகும்.

மலேசியப் பெண் மரகதத்தின் சென்னை விலாசம் குறித்துக் கொண்டார். அன்னபூரணியின் காலேஜ் குறித்துக் கொண்டார்.

''உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் உண்டா?'' வார்டனைக் கேட்டார்.

''இல்லை.''

''நல்லது.''

வாசலுக்கு வந்தார். எதிரே அவருடைய டிரைவர் டீக்கடையில் இருந்தான். அவரைக் கண்டதும் பாதி டீயை வைத்துவிட்டு வந்தான்.

கார் திறந்தான். அமர்ந்தான்.

''என்னய்யா சொல்றாங்க?''

''மட்டமான ஹாஸ்டல் சார்.''

''ம்ம்..''

''சாயந்திரம் ஆனா ஸ்கூட்டர்ல, கார்ல யார் கூடயோ பொண்ணுங்க வந்து இறங்குமாம். காலைல யார் கூடயோ போவுமாம்.''

''ம்ம்...''

''சாமியாருக்கு நூறு ரூவா தரேன்னு ஒரு பொண்ணு சொல்லியிருக்கு. உள்ளே போவாத உட்கார்ந்திருக்காரு.''

''யார் அது?''

''புத்த சாமியார். பாஷை புரியலை. பினாங்குன்னாரு.''

''என்ன?''

திரும்பினார். அந்த இளம் துறவி குடை பிரித்து எதிர்ப் பக்கம் நடந்து கொண்டிருந்தாள்.

''கிளம்பிட்டான்?''

''தெரியலையே.''

''சரி, ஆபீஸ் போ.''

''எதுனா பட்டுதுங்களா?''

''இல்லை.''

காருக்குள் ஒயர்லெஸ் அவரைக் கூப்பிட்டது.

''யெஸ்...''

''சார் சி.பி.ஐ.லேர்ந்து உங்களைக் கூப்பிடறாங்க சார்.''

''கொடு.''

''ஏ.ஸி. கிரைம் ஸௌத்?''

''யெஸ்.''

''காண்டாக்ட் இன் பர்ஸன் அவர் ஹெட் ஆபீஸ் ரைட் நௌ.''

''யாருங்க கூப்பிடறது?''

''நேர வாங்க. ஒயர்லெஸ் வேணாம்.''

''சாந்தோம் ஆபீஸா?''

''யெஸ்.''

''கண்ணா, பாலஸ் ரோடு போ''

வண்டித் திரும்பியது.

உள்ளே நுழைந்து ஏ.ஸி. காலை வணக்கம் சொன்னார்.

பதில் சொல்லாமல் உள்ளே அழைத்துப் போனார்கள்.

''ஒரு போன் கால் வெளியிடத்திலிருந்து உங்களுக்கு வந்திருக்கிறது. பேசுங்கள்.''

''யார்? எங்கிருந்து?''

''அது அவசியமில்லை. அவர் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்.''

''என் மேலதிகாரிகள் உத்தரவின்றி...''

''நண்பா, இது உன் மேலதிகாரிக்கு மேலதிகாரி. பேசு நேரில்.''

''ஹலோ, ஏ.ஸி. கிரைம் ஸௌத் ஓவர்.''

எதிர்ப்பக்கம் மௌனம்.

நிதானமாய் ஓர் ஆண் குரல் தமிழில் பேசிற்று.

''என் பெயர் வடிவேல் பிள்ளை. கமாண்டோ ட்ரெயினர். ராங்க் மேஜர் தரைப்படை. என்னுடைய எண்.. லேடி ஹாஸ்டல் காஞ்சனா பற்றி விசாரிக்கும் போலீஸ் அதிகாரியோடு பேச விரும்புகிறேன்.''

''நான்தாங்க விசாரிக்கிறேன்.''

''ராஜர்... காஞ்சனா உயிருக்கு ஆபத்துண்டா? ஓவர்.''

''உசிருக்கு ஆபத்தில்லைங்க. முகம் வெந்துருச்சு. ஓவர்.''

''ராஜர்... யார் காரணம்? ஓவர்.''

''தெரியலைங்க. ஓவர்.''

''ராஜர்.... இன்று இரவு உங்களைச் சந்திக்க விரும்புகிறேன். ஓவர்.''

தொடர்பு துண்டிக்கப்பட்டது.

9

ஏர்போர்ட்டில் வடிவேல் காத்திருந்தான். அந்தக் கடற்படை விமானம் இருட்டிலும் மின்னிற்று.

''கிளம்ப நாற்பது நிமிடங்கள் ஆகும் சாஹேப்... தேநீர் வேண்டுமா?''

''வேண்டாம் இளைஞனே... நன்றி.'' வெட்டவெளியை அமைதியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். இன்றைய காலைக்கும், இப்போதைய மாலைக்கும் எவ்வளவு வித்தியாசம்! எங்கேயோ ஏதோ தவறு என்பது அந்தப் பகலில் எவ்விதம் தெரிந்தது? தூக்கத்தில் எப்படி ஓர் இடம் தவித்தது?

பகல் நேரத் தூக்கம் என்பது அவனுக்குப் பிடித்தமான ஒன்று.

ஆனால் அது தூக்கமில்லை. தூக்கம் போன்ற அமைதியான நிலை. தலைக்கு ஒரு மர ஸ்டூல், காலுக்கு ஒரு மர ஸ்டூல் வைத்துக் கொண்டு படுப்பது வழக்கம். கழுத்து விளிம்பு வரை ஒரு ஸ்டூலில் அழுத்தமாய் இருக்க, பாதங்களின் அடிப்பகுதியும், கால் ஆடுதசையின் கீழ்ப்பகுதியும் மறு ஸ்டூலில் பதிந்து இழுக்க, உடம்பு இரண்டு ஸ்டூல்களுக்கு இடையே பாலம்

போல விறைப்பாய் இருக்கும். இந்த விறைப்பு வெளிப்பகுதி யில் மட்டும்தான். உடம்பின் உட்பகுதியில் வேறுவித நிலை தான் இருக்கும். மனசால் கால் விரல்களுக்குள் புகுந்து அதை வருடி ஆடு தசைக்குள் மனசைச் செலுத்தி, தொடை, வயிறு, மார்பு, தொண்டை, புஜம், முழங்கை, விரல்கள் என்று பரவி தொண்டையிலிருந்து உள் பக்கமாய் முகவாய்க்கு ஏறியபோது, மனசு ஏனோ முகவாயைத் தொட மறுத்தது. கன்னங்களுக்குப் பரவத் தயங்கியது. மூக்கின் உட்புறம், நாக்கு, பற்களை மனசால் ஸ்பரிசிக்க முடியாமல் தவிப்பு ஏற்பட்டது. 'என்ன ... என்ன இது?' என்று யோசித்து முகம் தடவினான். வழட்டிக் கொண்டு போவதுபோல் ஓர் உணர்வு. திடுக்கிட்டான்.

போன் அடித்தது.

''மேஜர் ஸாப்... டெல்லி கால்.'' தொடர்ந்து ஒயர்லெஸ் சப் தம் கேட்டது. பெயரும் பதவியும் கேட்டு விசாரித்தார்கள்.

''ஒரு மோசமான செய்தி. காஞ்சனா என்பவர் மீது திராவகம் ஊற்றப்பட்டது. உடனே உங்களை வரச் சொன்னார்கள்.''

''என்ன... என்ன?'' பதறினான். ''மறுபடி சொல்,'' கட்டளை யிட்டான்.

''காஞ்சனா திராவகம் ஊற்றப்பட்டு கவலைக்கிடமாய்க் கிடக்கிறார். உடனே வரவும். அன்னம்மா ஜோஸப் சென்னை.''

''யார்... யார் ஊற்றியிருப்பார்கள்? அப்பாவின் நினைவு வந்தது. 'நாயே!' என்று பல் கடித்தான். மனசுக்குள் அவர் குரல்வளையை ஒரே கையால் நெரித்தான். தந்தியின் தேதி, நேரம் கேட்டுக் கொண்டான். துண்டித்தான். ''சென்னைக்குத் தொடர்பு கொடு...'' என்று கத்தினான்.

''நீங்கள் கேட்கும் டெலிபோன் நம்பர் வேலை செய்ய வில்லை. மேஜர் ஸாப்.''

''இரு, இரு. சென்னை ராணுவ ஹெட் குவார்ட்டர்ஸ் கொடு. மிலிட்டரி போலீஸ் அதிகாரியைப் பிடி.''

''பெரிய அதிகாரி இல்லை. தென்கோடி போயிருக்காராம். ஆர்டர்லி பேசுகிறான்.''

''விடு. ராணுவ கமாண்டோ உண்டா?''

''உண்டு. ஆனால் இந்த வேலைக்கு அவர்கள் டெல்லி உத் தரவு வேண்டும் என்பார்கள் மேஜர் ஸாப்.''

''உண்மை.''

''மேஜர் ஸாப்...''

''என்ன...?''

''காஞ்சனா யார்...?''

அழுகை மாதிரி மனசு கலங்கியது. அப்போதுதான், 'ஐயோ... அது துடிச்சிருக்குமே?' என்று நெஞ்சு கேவியது. இந்தக் கேள்வியில் தான். துக்கம் கோபம் தந்தது.

''ச்சுப் ரஹோ!'' கத்தினான். டைரியை ஒரு கையால் புரட்டி நம்பர் தேடினான். ஆவடி போலீஸ் ட்ரெயினிங் சென்டர் தொடர்பு கொள்ளச் சொன்னான்.

அங்கே மணி அடித்தது.

''பகல் நேரம்... யார் இருப்பார்கள்?'' பயந்தான். மனசு முகவாய்க்குள்ளேயே நாக்கு அடியிலேயே நின்றுவிட்டது. தொந்தரவு கொடுத்தது. குழறியது. இப்படி நிறுத்தக்கூடாது. தலைக்கு உணர்வு ஏற்றி, மறுபடி பாதங்களுக்குக் கொண்டு வர வேண்டும்.

''வணக்கம், ஐயா... போலீஸ் தனிப் பயிற்சிப்படை, யார் பேசுவது?''

''நான் மேஜர். ப்ரம் கமாண்டோ டிரெயினிங் சென்டர். மத்திய ப்ரதேஷ். மணிவண்ணன், டேவிட் செல்வராஜ் யாரும் உண்டா?''

''மணி உனக்கு..... போன்.''

மணி... மணிவண்ணன்... கறுப்பாய், உயரமாய் அடர்த்தி மீசையாய், சிறிய அகல மூக்காய், 'அடி என்னடி முனியம்மா கண்ணுல மையி' பாடியவன் நினைவுக்கு வந்தான். தமிழ்நாட் டிலிருந்து கமாண்டோ பயிற்சிக்கு வந்த பத்துப் போலீஸ் இன்ஸ்பெக்டர்களில் ஒருவன். சொல்லிக் கொடுத்தவன் குரு. குருவே தெய்வம் என்கிற விசுவாசம் மணிவண்ணனின் கண் களில் எப்போதும் தெரியும்.

''இன்ஸ்பெக்டர் மணி.''

''மணி, நான் மேஜர் வடிவேல் பிள்ளை, கமாண்டோ ட்ரெயினிங்.''

''யாரு வாத்தியாருங்களா?''

''ஆமா. நான் ட்ரெயினிங் சென்டரிலேருந்து பேசறேன் மணி.''

''வணக்கம் சார். நல்லாருக்கீங்களா?'' குரலில் பரவசம் தெரிந்தது. அப்பாடா. உதவி கிடைத்தது.

''மணி, ஒரு பிரச்சினை?''

''சொல்லுங்க சார்?''

''உனக்கு லீவு கிடைக்குமா?''

''போட்டா போச்சு. என்ன வேணும், சொல்லுங்க சார்.''

''என் தங்கச்சி முகத்துல யாரோ திராவகம் ஊத்திட்டானாம்.''

''ஐயோ...''

''பூந்தமல்லி லேடீஸ் ஹாஸ்டல்ல இருந்துச்சு. தயவு செய்து போய்ப் பார். இரண்டு மணி நேரத்துல விஷயம் சொல். உன் போன் பார்த்துட்டு நான் உடனே கிளம்புவேன். தங்கச்சி பேரு காஞ்சனா. ரூம் நம்பர் நூத்தி பதினேழு பி. பிளாக்.''

''உடனே போறேன் சார்.''

''வேற யார் கமாண்டோ அங்கே?''

''டேவிட், பரந்தாமன் எல்லோரும் இருக்காங்க சார்.''

''டேவிட் கூப்பிட்டுக்க... அவசியமானா... மணி, அது எனக்கு ஒரே தங்கச்சி. நான் கொஞ்சம் அப்ஸெட் ஆயிட்டேன். உனக்குப் புரியுதா?''

''புரியுது சார். அவங்க... எனக்கும் தங்கச்சி சார். உங்களை ஒயர்லெஸ்ஸல புடிக்கிறேன். அதே கோட்தானே? அதுல சொல்லி வைங்க ஆப்பரேட்டர்க்கிட்ட. நாலு மணிக்குள்ள காண்டாக்ட் பண்றேன்.

''செலவு பத்திப் பயப்படாதே மணி.''

''சார், நீங்க எனக்கு வாத்தியார். குரு இன்னிக்குக் காலைல கூடப் பேசிக்கிட்டிருந்தோம். மேட்டர் நான் பார்த்துக்கறேன் சார்... ஓவர்.''

''ஓவர் மணி.''

பதற்றம் மிகக் கொஞ்சமாய்க் குறைந்தது.

'இனி என்ன செய்ய வேண்டும்?' யோசனை வந்தது. விரல்களில் வயிற்றுக்கு உள்புறத்தில், கால், தொடைகளில்

பதற்றம் இன்னுமிருந்தது. மறுபடி ஸ்டூலில் தலை வைத்து மறு ஸ்டூலில் பாதம் வைத்துப் படுத்தான். முகத்தில் தேங்கி நின்ற தொடுதல் உணர்ச்சியைத் தலைக்கு ஏற்றி மூளையை வருடிக் கொடுத்தான். மெல்ல வந்தது போலவே கீழே இறங்கினான். கால் விரல்கள் தொட்டதும் உடம்பு லேசாயிற்று.

எழுந்து நின்றான்.

''அப்பா, இதற்குக் காரணம் நீயாக இருந்தால் என் கையில் உனக்கு மரணம் நிச்சயம், அந்த மரணம் மிக மோசமானதாய் இருக்கும். பிள்ளைவாள்.' உள்ளே சிரித்தபடி ஒரு வெஞ்சினம் வந்தது. முழுவதுமாய் உடுத்திக் கொண்டு வெளியேறினான்.

உயர் அதிகாரிகளிடம் விஷயம் சொன்னான். விடுமுறை கேட்டான். பதினோரு இடங்களுக்கு அவன் விடுமுறை கோரல் ஒயர்லெஸ் செய்தியாய்ப் போயிற்று. ஒன்றரை மணி நேரத்தில் விடுமுறை தரப்பட்டது.

''பம்பாய்க்குக் கடற்கரை விமானம் ஒன்று இரவு போகும். அங்கிருந்து நடுநிசி ஏர்இந்தியா விமானம் சென்னை தொடும். வசதிகள் தரப்பட்டன. பம்பாய் விமானம் ஒன்பது நாற்பதுக்கு. ஒன்பதுக்குக் கிளம்பினால் போதும். விமானம் உன்னை ஏற்றிக் கொண்டு தான் போகும். கவலை வேண்டாம்.

மூன்று ஐம்பது.

''இன்ஸ்பெக்டர் மணிவண்ணன் காலிங் ஃபரம் மெட்ராஸ்.'' ஒயர்லெஸ் அறிவித்தது.

''தொடர்பு கொடு.''

''வாத்தியாருங்களா?''

''ஆமா மணி.''

''உசிரோட இருக்காங்க சார். உசிருக்கு ஆபத்தில்லை.''

''கடவுளே... நல்ல கமாண்டோ பேசவும் தெரிந்தவன். 'கண்டேன் சீதையை' என்கிற அனுமன்.

''மேலே பேசு மணி.''

''டேமேஜ் நிறைய சார். முன் பக்கப் பல்லு உதிர்ந்திருச்சு. கண்ணு பத்தித் தெரியலை. தோள்... இடது புஜம், காது... அப்புறம் ப்ரஸ்ட் கூட டேமேஜ் ஆயிடுச்சு சார். மயக்க ஊசி போட்டிருக்காங்க.''

''யார் செய்தது?''

''தெரியலை சார். ஸவுத் கிரைம் ஏ.ஸி. கிட்ட மேட்டர் இருக்கு.''

''மணி, நான் விடியற்காலை மூன்றரை மணிக்கு மெட்ராஸ் வரேன். ஏர் இண்டியா விமானம்.''

''நான் வண்டி எடுத்தாறேன் சார். டேவிட்ட அங்க இருக்க வச்சிருக்கேன். நைட் பரந்தாமன் போறாரு.''

''மணி... தொந்தரவில்லையே?''

''தொந்தரவா...' நீங்க வாங்க சார். ஊத்தின... யாப் பையனை நரம்பு நரம்பா அறுப்போம். வாங்க.''

''போலீஸ் என்ன சொல்லுது?''

''பல்லு குத்திக்கிட்டு இருக்காங்க. நான் என்னைக் காட்டிக்கலை. உங்ககிட்ட தகவல் சொல்லிட்டு... மறுபடி போலாம்னு.''

''வேணாம், நான் வரேன். மணி, உயிர் இருக்குல்ல...?''

''உயிர் இருக்கு சார். பயமே இல்லை. ஆனா... தப்பா நினைச்சுக்காதீங்க சார்.''

''சொல்லு.''

''செத்துட்டிருக்கலாம்.''

''மணி...''

''ரொம்ப டேமேஜ் சார். டேவிட் தடுமாறிட்டான். நான் சாப்பிடவேயில்லை. சாப்பிட முடியலை சார். நீங்க வந்து பார்த்து அதிர்ச்சியாயிடக் கூடாதுன்னு முன்கூட்டியே சொல்றேன்.

பற்கள் கடித்தான். ''புரியுது மணி. வரேன் மணி.''

''சார்...''

''நன்றி, ரொம்ப நன்றி.''

''ஏர்போர்ட்ல பார்க்கறேன் சார்.''

ஜன்னல் வழியே வெளியே பார்த்தான்.

பைனட்டால் குத்தி, கோணி பொம்மையை எட்டி உதைத்துக் கொண்டிருந்தார்கள்.

துப்பாக்கிக் கட்டையால் முகத்தில் இடித்து பொம்மையைச் சரித்துத் தொடையில் மிதித்து நெஞ்சுக்கு நடுவே பைனட் சொருகி இழுத்து முகத்தை மிதித்து எட்டி உதைத்தார்கள்.

வெளியே வந்தான். த்ரீ ஓ த்ரீ ரைஃபிளில் பைனட் சொருகினான். தொலைவில் இருந்தபடி பொம்மையைப் பார்த்துப் பேய் மாதிரி அலறினான். நாலே எட்டில் பொம்மையை நெருங்கினான். அடித்து, தாக்கி, சொருகி இழுத்துக் காலால் முகம் மிதித்தான். பலம் கொண்ட மட்டும் எட்டி உதைத்தான். பொம்மை தலை பிய்த்துத் தனியே ஓடியது.

''மேஜர்...'' உயர் அதிகாரி அதட்டல் கேட்டது.

''மேஜர், யூ ஆர் ஆன் லீவ். கோ பேக் டு யுவர் டென்ட் ரிலாக்ஸ் ப்ளீஸ்...''

முப்பத்தியாறு கமாண்டோக்களும் மேஜர் தளர்ந்து தன் இடம் நோக்கி நடப்பதைப் பார்த்தார்கள். அவன் இரவு ஜீப்பில் போவதைக் கவனித்தார்கள்.

வெட்டவெளியைப் பார்த்து அமைதியாய் உட்கார்ந்திருந்தவனைப் பார்த்துக் கடற்படை விமானம் கூப்பிட்டது. அவனை ஏற்றி பம்பாய் பறந்தது.

பம்பாய் ஏர்போர்ட்டுக்குள் போகவில்லை. ஓடுதளத்தில் இறங்கி ராணுவ விமானம் விட்டு, பெரிய கிட்டோடு பம்பாய் விமானம் நோக்கி நடந்தான். பம்பாய் கடற்படை ஆள், டிக்கெட்டைத் தந்து விமானம் வரை வந்தான்.

''எனி ஹெல்ப்.. மேஜர் ஸாப்?''

''நத்திங், தேங்க்யூ.''

''விடை பெறுகிறேன் மேஜர். ஹாப்பி லேண்டிங்.

''நல்லது இளைஞனே.''

கறுப்பு உடையில் கறுப்புத் தொப்பியில் புஷ்டியாய் ஒருவன் ஏறுவது பார்த்து உள்ளே உள்ள தொலைதூரப் பயணிகள் புருவம் தூக்கினார்கள்.

ஏர்ஹோஸ்டஸ் அருகே கடைசிப் பகுதியில் இடம் ஒதுக்கப் பட்டிருந்தது.

''காஃபி, டீ...?'' ஏர்ஹோஸ்டஸ் கேட்டாள்.

''நஹி''

''ஸ்நாக்ஸ்?''

''நஹி.''

''ஏதும் பிரச்சினையா?''

''ஏன்?''

''கமாண்டோதானே நீங்கள்?''

''ஆமாம், சொந்தப் பயணம்.''

''ஓ'' சிரித்தாள்.

விமானம் உயரம் கிளம்பி ஒரே சீராய் சென்னை நோக்கிப் பறந்தது.

ஏர்ஹோஸ்டஸ் வேலை முடித்துவிட்டாள் போலும்.

''உண்மையில் ஒரு கமாண்டோவின் வேலை என்ன மேஜர்?''

தலை நிமிர்த்தி அவளைப் பார்த்தான். அரட்டை அடிக்க விரும்புகிறாள்.

''சொன்ன வேலையைச் செய்து முடிப்பது,''

''யந்திரமா?''

''கிட்டத்தட்ட.''

''மனித உணர்ச்சிகள் மழுங்கடிக்கப்பட்ட ஆளா?''

''உள்ளுக்குள்... வெகு ஆழத்தில் பொதித்து வைக்கப்பட்ட ஆள்.''

''உணர்ச்சிகள் உண்டா?''

''உன் வேலையைக் கவனி பெண்ணே,'' சிரிக்க முயன்றான்.

''எல்லாவித பலசாலிகளுக்கும் ஈகோ வந்துவிடுகிறது, இல்லை?'' கவலைப்பட்டவள் போல் முகம் வைத்துக் கொண்டாள்.

இதற்கும் பதில் சொல்லலாம். எதற்கு...? வேண்டாம் ஏர் ஹோஸ்டஸ் முகத்தை மெல்லிய துணியால் துடைத்து சிறிய கண்ணாடியில் முகம் பார்த்தபடி ஏதோ க்ரீம் தடவிக் கொண்டாள்.

காஞ்சனா ஞாபகம் வந்தது.

'அம்மாடி... அண்ணன் வந்துட்டேன்... இதோ வந்துட்டேன். என் தங்கமே... என் பட்டுச் செல்லம்... இதோ வந்துட்டேன்.' உள்ளே குரல் முனகிற்று. முகம் இறுக்கமாய் இருந்தது.

ஒரு குடம் தண்ணி ஊத்தி
ஒரே பூ பூத்தது...
ரெண்டு குடம் தண்ணி ஊத்தி
ரெண்டே பூ பூத்தது..
மூணு குடம் தண்ணி ஊத்தி
மூணே பூ பூத்தது...

அதற்கு மேல் ஊற்ற முடியவில்லை.

மௌனமாய்ச் சப்தமின்றி அழுகை வந்தது. அது கண்ணீர் இல்லாத அழுகை. ஓசையற்ற அலறல். விமானம் தரை தொட்டது. வேகமாய் நடந்து கதவருகே தயாராய் நின்றான். கதவு திறந்தது. படிகள் நிதானமாய் அருகே வந்தன. படி அருகே வர அதில் தாவி மணிவண்ணன் மேலேறி வந்தான். இன்ஸ் பெக்டர் உடை. சரிவுத் தொப்பி. புஜத்தில் கமாண்டோ வட்டம் முதுகில் ஏ.கே. நாற்பத்தியேழு.

படிகள் பொருந்தின.

மணிவண்ணன் சல்யூட் அடித்தான்.

10

மணிவண்ணன் சல்யூட் செய்தது முறை. சாதாரணமான விஷயம். பதிலுக்குக் கையசைப்பு போதும்.

அதற்குப் பிறகு செய்ததுதான் அசாதாரணம். நெருங்கிய பந்தம். ஏ.கே. நாற்பத்தியேழு விழுந்து விடாதிருக்க இடக் கையால் அதைத் தோளோடு அழுத்திக் குனிந்து வடிவேலின் முழங்கால் தொட்டு நெற்றி வழியே தலையில் தடவிக் கொண்டான்.

இது கூடாது. கண்டிப்பாய்த் தவறு. அனுமதிக்கப்படாத விஷயம். தண்டிக்கக் கூடச் செய்யலாம். சில சமயம் சில அத்து மீறல்கள் அழகாய் இருக்கும்.

வார்த்தையில் சொல்ல முடியாத அன்பை, சல்யூட்டில் காட்ட முடியாத மரியாதையை இந்தக்கால் தொடல் காட்டிவிடும்.

''வாங்க சார், வணக்கம்.''

''நல்லா இருக்கியா, மணி?'' வடிவேல் உள்ளங்கை அகல விரித்து நீட்டினான். இதுவும் அசாதாரணம். வலிய ட்ரெயினர் கை நீட்டிக் குலுக்குவது முறைமையில்லை. பரிசு பெற்றால் பாராட்டாக, பயிற்சி முடிந்து வெளியேறும் போது ஊக்கத்திற் காகக் கைகுலுக்குவது உண்டு. மற்றபடி நாலடி விலகல்தான் இயல்பு.

க்யா, வாட் என்ற ஒற்றை வார்த்தை சிடுசிடுப்பு தான் வழக்கம். வாத்தியார் எப்பவும் வாத்தியார்தான். விலகல் எப்போதும் விலகல்தான்.

மிக மரியாதையாய் மணிவண்ணன் அந்தக் கைக்குலுக் கலை எடுத்துக் கொண்டான். அவன் முகத்தில் கணநேர மகிழ்ச்சி, நிறைவு பளிச்சிட்டு மறைந்தது.

''சார் வெப்பன் கொண்டாந்திருக்கீங்களா?'' இறங்கி ஏர்போர்ட் கட்டடம் நோக்கி நடந்தார்கள்.

''உண்டு. ரிவால்வர்.''

''வரப்ப டிக்ளேர் பண்ணிங்களா?''

''இல்லை. ஏன்?''

''வி.ஐ.பி. வழில போயிடலாம்னு பார்த்தேன். ஏர்போர்ட் செக்யூரிட்டி நிறுத்திக் கேட்டாலும் கேட்பாங்க. ஜெனரல் வழில போய்டலாமா?''

''யூனிபார்ம் போட்டு ஜெனரல் வழில போற அப்பவும் சந்தேகப்பட மாட்டாங்களா?''

''படலாம்.''

''வி.ஐ.பி. வழில போ.''

''அந்த ஏ.ஸி. காத்துட்டு இருக்காரு. க்ரைம் ஸவுத்.''

''பேசினாயா?''

''என்னைத் தெரியாது. ஆனா நான் பார்த்துட்டேன். ஐயா வரச் சொன்னீங்களா?''

''ஆமாம்.''

''நான் வண்டி கொண்டாந்திருக்கேன், ஜீப். அவரும் அம்பாஸிடர் கார்.''

''உன் வண்டில வரேன்.''

''அவர்கிட்டப் பேச வேணாங்களா?''

''பேசணும். அதேசமயம் எனக்கு இங்க எல்லா வசதியும் உண்டுன்னு தெரிய வைக்கணும்.''

''தன்மையான ஆள்தாங்க. வெளிய கேள்விப்பட்டேன். நேரா எங்க போறேம், ஐயா?''

''ஹாஸ்பிடல்''

''யூனிபார்ம்ல இருக்கீங்களே!''

''ம்ம்ம்''

''தங்கச்சியைப் பார்க்கவே கஷ்டமா இருக்கு.''

''ம்ம்.''

''யூனிபார்ம்ல நீங்க அலைமோதிட்டீங்கன்னா...''

நிமிர்ந்து மணிவண்ணனை வடிவேல் பார்த்தான்.

''ஐயா சொல்லியிருக்கீங்க... உடுப்பு போட்டாச்சுன்னா நீ வேறேன்னு.''

''யூ ஆர் கரெக்ட்.''

வி.ஐ.பி. வாசலில் நாலு போலீஸ்காரர்களும், ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், இன்ஸ்பெக்டரும் இருந்தார்கள்.

கிட்டோடு மணிவண்ணன் தொடரப் படியேறினர். போலீஸ்காரனுக்கு வடிவேலுவை என்ன விசாரிப்பதென்று தெரியவில்லை.

''ஐயம் மேஜர் வடிவேல் பிள்ளை. வேர் ஈஸ் ஏ.ஸி. ஸவுத்?'' இன்ஸ்பெக்டர் அருகே கிட் வைத்துவிட்டு விறைப்பாய்க் கைகுலுக்கினான்.

''வந்துருக்காரா? தெரியலைங்களே?''

''லவுஞ்சுல இருக்காருங்க.'' மணிவண்ணன் பதில் சொன்னான்.

இதற்குள் அவன் கமாண்டோ சின்னங்களை இன்ஸ்பெக்டர் படித்துவிட்டார்.

''ப்ளீஸ் கால் ஹிம். ஐ லைக் டு ரிப்போர்ட் அட் ஏர்போர்ட்.''

மணிவண்ணன் ஓடினான். வடிவேல் சிநேகமாய் இன்ஸ்பெக்டரிடம் புன்னகைத்துவிட்டு பின் கைகட்டிக் காத்திருந்தார்.

''யாரும் விஐபி வராங்களா? செக்யூரிட்டியா நீங்க.''

''நோ. ப்ரைவேட் மிஷன்.''

''சார், ஏ.ஸி.' மணிவண்ணன் அருகில் வந்தபடி குரல் கொடுத்தான். ஏ.ஸி. சாதாரண உடையில் நடந்து வந்தார்.

'மேஜர் வடிவேல் பிள்ளை, ஆர்மி கமாண்டோ ரிப்போர்டிங் யூ சார்'' பளிச்சென்று வடிவேல் அவருக்கு சல்யூட் அடித்தான். ஏ.ஸி.க்குப் பின்னால் டேவிட்டும் ஜீப் டிரைவரும் வந்தார்கள்.

ஏ.ஸி.யிடம் வடிவேல் கை குலுக்கினவுடன் டேவிட்டும் ஜீப் டிரைவரும் சல்யூட் அடித்தார்கள்.

'கிட் எடுத்துக்கலாமா சார்?'

''எடுக்கலாம். தேங்க்யூ இன்ஸ்பெக்டர்.''

ஜீப் டிரைவர் கிட் எடுத்துக் கொள்ள, மூவரும் வெளியே நடந்தார்கள்.

''சார், ஏ.ஸி. பேரு வாசுதேவன். நல்ல நேம் அவருக்கு.''

''அப்படியா? எனி டெவலப்மெண்ட் மிஸ்டர் வாசுதேவன்?''

''இல்லீங்க. ஸிஸ்டர் அன்கான்ஷியஸா இருக்காங்க. விவரம் தெரியலை. ஜெனரலா அவங்க ஹாஸ்டலை சாயந்தரம் செக் பண்ணேன். க்ளுவா எதுவும் கிடைக்கலை. உங்ககிட்டப் பேசலாம்னு வந்தேன்.

''ஹாஸ்பிடல் போயிடலாமா?''

''வாங்க.''

''நான் ஜீப்ல வரேன், மிஸ்டர் வாசுதேவன்.''

''எங்கூட கார்ல வரலாமே.''

''எங்க டிபார்ட்மெண்ட் ஏற்பாடு பண்ண ஜீப் இது.''

''போலீஸ் ஜீப்தானே?''

''எஸ் கமாண்டோ விங். உங்க காருக்கு அதுல வரது பெட்டர்.''

''ஏன்?''

''நாங்க வேற டிபார்ட்மெண்டோட க்ளோசா இருக்கிறது சரியில்லை. மெட்ராஸ் ஆர்மில பேசிட்டு உங்ககிட்ட வரேன். உங்க கார்ல, உங்க ரூம்ல அப்ப நான் இருக்கலாம்.''

''புரியுது ஹாஸ்பிடல்ல பேசலாங்களா?''

''பேசலாம்.''

''அப்ப நான் பின்னாலேயே வரேன்.''

''தேங்க்யூ.''

''விமானத்தின் முதல் பயணி படியேறும் முன் ஜீப் சீறிப் புறப்பட்டது. கார் தொடர்ந்தது.

''அண்ணனா சார்?'' ஏ.ஸி. டிரைவர் கேட்டான்.

''ஆமாம். கமாண்டோவாம்.''

''ஜீப்புல போறாரு?''

''பந்தா.''

''நம்மகிட்டதானே வந்தாகணும்.''

''அப்படித்தான்.''

''ஆர்மியே விசாரிக்குமா?''

''முடியாது.''

''பறக்கறானுங்க சார்.''

''நீ மொள்ள போ. அவன் அழுது ஓயட்டும்.''

அழுகை வருமா? மணிவண்ணன் யூனிபார்ம் கோடிக் காட்டிப் பேசினான். ஜீப்பிலேயே அவிழ்த்து சிலாக் போட்டுக் கொள்ளலாமா? வேண்டாம் அழுவதற்காகவே சிலாக் போட்டுக் கொண்டது போல் ஆகும்.

''நான் பார்க்காத கோரமா? நான் பார்க்காத சிதைவா? ஆனால் இது என் சிதைவு. என் கோரம்.''

''அண்ணே, ஹீட்டர் நல்லாருக்கண்ணே. தேங்க்ஸ்.' குழந்தைக் குரல் மாதிரி காதோரம் கேட்டது.

''எனக்கு டெல்லி புடிக்கலை.''

''ஏன்?''

''பசங்க மோசம்.''

''எவன் அது?''

''தப்பா எதுவுமில்லை. இங்கித்துப் பழக்கம் அது எனக்குச் சரிப்பட்டு வரலை. என்னை அழுமூஞ்சின்ற மாதிரிப் பேசறாங்க. ஐயோ உன் பின்னல் என் மேல பட்டுருச்சு. பரவாயில்லையா. கற்பு கெட்டுடலையேன்னு கேலி பண்ணாங்க. இங்க பொண்ணுங்களும் மோசம். அவனுங்க மடில உட்கார்ந்து ஐஸ்கிரிம் சாப்பிடறாங்க, நான் மெட்ராஸ் போயிடட்டமா?''

''எங்க இருப்ப?''

''எதுனா லேடீஸ் ஹாஸ்டல்ல.''

''அங்க போய்?''

''ஆந்திரா பொண்ணு ஒருத்தி சிநேகிதம். அங்க போய் துணிக்கடை போடலாம்னு.''

''துணிக்கடையா?''

''லேடீஸ் சமாசாரம் மட்டும். ரெடிமேட் ஷாப்.''

''முதல் போடணுமா?''

''கொஞ்சம். நான் வொர்க்கிங் பார்ட்னர்.''

''காசு வருமா?''

''நாப்பதாயிரம். வருஷம் ஷேர் வரும், பின்னால ஜாஸ்தி வரும்.''

''தனியா இருப்பியா?''

''மெட்ராஸ் பயமில்லை. டெல்லிதான்.''

''அம்மாவக் கூட்டிட்டுப் போறியா?''

''அது வரலைன்னுது. வீட்டோட இருந்தா டெல்லி நல்லாருக்கும். அது தவிர...''

அம்மா எதிர்வீட்டு ஐயர் குடும்பத்தோட காசி போகலாம்னு யோசிக்குது.

''அவரும் மில்ட்ரிதானடா?''

''மில்ட்ரிதான். ஆனா கணக்கு வழக்கு பார்க்கிற வேலை. அவரு வர வருஷம் ரிடையராராராம். ஆறு மாசம் லீவு போட்டுட்டு காசில தங்கி சாமிகும்புடப் போறாராம். அம்மா, பெண் டாட்டி அக்கான்னு மூணு லேடீஸு.''

''நீ காசிக்கு போறதால அவ மெட்ராஸ் போறாளா?''

''அப்படி ஒண்ணுமில்லை. அவ இருந்தா நா போவலை. வீடு எடுத்து தங்கேன்னாரு ஐயர். அதான் போகலாமான்னு யோசனை.''

சட்டென்று நூலறுந்த பலூன்களாய் மூன்று பேரும் பிரிந்தார்கள்.

அம்மா காசிக்கு ரயிலேறின பிறகு ஒரு வாரம் கழித்து காஞ்சனா சென்னைக்குக் கிளம்பினாள்.

''அப்பாவோட நாம யாரும் ஒட்டலை. அப்பாவாலயே நாம ஒருத்தருக்கொருத்தர் ஒட்டலைன்னு தோணுது. அம்மா டக்குன்னு யாரையோ பிடிச்சுக்கிட்டுப் போயிடுச்சு பார் அண்ணே.''

''நான் பெத்துப் போட்டதோட சரி. உங்களுக்கு நான் ஒண்ணும் செய்யலைன்னு பேசுது. நான் கூட உனக்கு ஒண்ணும் செய்யலை. இல்லே அண்ணே?''

''நான் கூட காஞ்சனா.''

''ரொம்ப அசிங்கமில்லை நம்ம ஃபேமிலி?''

''ஆமா.''

''கல்யாணம் பண்ணாக்கூட என் புருஷனோட என்னால ஒட்ட முடியாது. ஹாஸ்டல்ல இருந்து இருந்து ஒரு மாதிரி உலர்ந்து போய்ட்டோம்.''

''ம்ம்.''

''மாசம் ஒரு தடவை பேசறியா?''

''வாரா வாரம் பேசறேன். போய் டெலிபோன் நெம்பர் எழுது.''

''நானும் தோணினப்ப போன் பண்றேன். புதன்கிழமைன்னு வச்சுக்கலாமா போன்ல பேசறது?''

''சரி.''

''எனக்கு அழுகை வரலை. ஆனா என்னமோ ஒரு துக்கம் பர்மனென்ட்டா. தட்டவும் முடியலை. தனிச்சும் முடியலை. முதல்லேர்ந்து எல்லாம் உடைச்சு சரி பண்ணி நல்ல அப்பாவா கிடைச்சு...''

"ஆம்பர் போட்டுட்டான்."

"நீ கல்யாணம் செய்துக்க மாட்டியா?"

"உனக்கு அப்புறம்."

"உனக்கும் என்னை மாதிரி இரண்டும் கெட்டானா இருக்கோமான்னு தோணுதா?"

"எப்பவாவது

வண்டி நகர்ந்தது.

"கல்யாணம் கட்டிக்க அண்ணே."

"உனக்கு அப்புறம்."

"அதைப் பார்க்காதே நல்ல பொண்ணாக் கிடைச்சா..."

"உனக்கு அப்புறம்."

"ஹாஸ்பிடல் வந்துருச்சு சார்." மணிவண்ணன் இது கால் பக்கம் கைட்டினான். வண்டி திரும்பியது. உள்ளே போயிற்று.

இறங்கினார்கள். விரைவு நடையில் நடந்தார்கள். படியேறி னார்கள். வராண்டாவில் நடந்தார்கள். மாடிக்குப் போனார்கள். வராண்டாவில் நடந்தார்கள். இதுவும் இந்த அறையா? இந்த அறையா? மனம் முன்னே ஓடியது. கண்கள் மனசைத் தொடர்ந் தன. உடம்பு பின்னே விரைந்தது.

மனம் முந்தியதோ, விழி முந்தியதோ, கரம் முந்தியதோ. எனவே... அம்மாவைப் பந்தாட்டப் பாடல் மனசுள் வந்தது.

மணிவண்ணன் ஓர் அறையின் திரைச்சீலைக்குப் பின் நின்றான். வடிவேல் மெல்லத் திரை விலக்கினான். கட்டில் சுற்றி இரும்புச் சட்டம் வைத்துக் கொண்டு வெள்ளைத் திரை இருந்தது.

மணிவண்ணன் பின்னே நகர்ந்து கொண்டான். நாலடி நடந்து வெள்ளைத் திரை அருகே வடிவேலு போனான். சட்டத் திற்கு மேலே சலைன் பாட்டில் தெரிந்தது.

வடிவேல்.. வடிவேல் பிள்ளை... மேஜர் வடிவேல் பிள்ளை அமைதி அமைதி.

நகர்ந்து சட்டென்று கட்டில் பார்த்தான்.

முகம் முழுவதும் பேண்டேஜ் சுற்றப்பட்டு நெஞ்சு வரை வெள்ளைத் துணியில் மூடப்பட்டு ஓர் உருவம் கிடந்தது.

இதுதான்... இதுதான் காஞ்சனாவா?

"அண்ணே, கல்யாணம் கட்டிக்கங்க அண்ணே."

"உனக்கு அப்புறம்."

"அதைப் பார்க்காதீங்க. நல்ல பொண்ணு கிடைச்சா."

"உனக்கு அப்புறம்."

இதுதான் கல்யாணமா?

உடம்பு ஆடியது. மெல்லப் போய் அருகே நின்றான். நெஞ்சுவரை மூடியிருந்த துணியை லேசாய் விலக்கினான். அங்கே பேண்டேஜ் இல்லை. பஞ்சு பொதி.

சலைன் வாட்டர் இறங்கிய இடது கை விரல்களில் பிளாஸ்டர்; முழங்கையின் உள்பக்கம் வெள்ளை வெளேர் என்று தெரிந்தது. அதையே உற்றுப் பார்த்தான். மெல்லத் தடவிக் கொடுத்தான். கால்பக்கப் போர்வையைச் சற்று விலக்கினான்.

கணுக்கால் தெரிந்தது. கால் நகங்களில் க்யூடெக்ஸ் இருந்தது. சற்று நகர்த்த, கொலுசு தெரிந்தது. அது அவன் வாங்கித் தந்த கொலுசு.

11

ஜீப்புக்குப் பின்னால் காரில் வந்த அஸிஸ்டெண்ட் கமிஷனர் டாக்டரை அழைத்து வந்திருக்க வேண்டும். அழைத்து வரும்போதே டாக்டரிடம் வடிவேலு யார் என்றும் சொல்லி யிருக்க வேண்டும்.

கமாண்டோ என்றால் அடிதடி ஆள், அவன் எப்போது வேண்டுமானாலும், யாரை வேண்டுமானாலும் அடிப்பான். கேள்வி முறை கிடையாது என்றுதான் தமிழர்களுக்குத் தெரிந் திருக்கிறது. இந்த டாக்டரும் அதற்கு விதிவிலக்கில்லை என்பது அவர் கண்களில் தெரிந்தது. நைட் ட்யூட்டிக்கு வந்த உதவி டாக்டர் கை மெத்து மெத்தென்று இருந்தது. குனிந்து கை குலுக்கு கையில் மிகுந்த மரியாதை தெரிந்தது.

"இவள் உயிர் பிழைப்பாளா டாக்டர்?" வடிவேல் சாதாரண மாய்க் கேட்டான்.

"நிச்சயம், வெகுநிச்சயம். இருபத்து ஐந்து சதவிகிதம் தோல் சேதம் உயிருக்கு ஆபத்தில்லை. ஆனால் குறைந்தபட்சம்

ஆறு மாதம் மிக மிகக் கவனமாய்ப் பாதுகாக்கப்பட வேண்டும். புறக் கிருமிகள் தாக்காது இருத்தல் முக்கியம்.''

''எப்போது பேசுவாள்.''

''உயிர் துடிக்கிற வலி இழுக்கும். அதனால் ஸெடடிவிட் போட்டிருக்கிறது. அதுவும் தவிர உதடும் பற்களும் சேதமாயிருக்கிறது. பேசுவது அவர்களுக்கு வலி தரலாம்.'

''எழுத முடியும் இல்லையா?''

''விசாரணைக்குக் கவலைப்படுகிறீர்களா? பேஷண்டுக்கு விசாரணை அதிக பயமும் கலவரமும் தரலாம். மெமரிகாலிங்கில் மறுபடி கத்திக் கூச்சல் போடலாம். எனவே ஒரு வாரம் - குறைந்தபட்சம் ஒரு வாரம் - எவரும் அருகே வராது இருப்பது நல்லது. ஒரு வாரத்தில் மேல் தோல் மறுபடி வளரும். அப்போது பார்க்கலாம்.''

''ஆசிட் நேரடியாய்த் தாக்கின இடம் எது?''

''மூக்கு, முகவாய், நெற்றி, கன்னம், ஸ்ட்ரெயிட் த்ரோ அடித்து ஆஸிட் எதிரே சிதறியிருக்கிறது. நடக்கும்போது நிற்கும்போது ஊற்றப்பட்டதால் தாக்கம் குறைவு. உட்கார்ந்தபடியோ படுத்தபடியோ இருப்பின் மரணம் சம்பவித்திருக்கும். மேலும் தாக்கப்பட்டவுடன் குனிந்துவிட்டார்கள். மார்புக்குக் கீழே காயமில்லை மிகப் பெரிய அதிர்ஷ்டம். கண்களை இடது கையால் மறைத்துக் கொண்டிருக்க வேண்டும். கண்களில் துளிகூட ஆஸிட் படவில்லை.

''நான் வந்திருப்பதைத் தங்கையிடம் தெரிவிப்பது நல்லதா?''

''பேஷண்ட் உணர்ச்சி வசப்படுவார்கள். அழுவது சுற்றியுள்ள தோலுக்குக் கெடுதல். கண்ணீர் வழிவது கெடுதல்.''

''நான் வந்துவிட்டேன் என்பது அவளுக்குத் தன்னம்பிக்கை ஊட்டும்.''

''அப்படியானால் சரி. நீங்கள் தள்ளி நில்லுங்கள்.'' டாக்டர் காஞ்சனாவின் அருகில் போனார்.

''காஞ்சனா கண் திறந்து பாருங்க.'' அவளது இமைகள் சுருங்கிப் படபடத்தன.

''உங்க ப்ரதர் வந்திருக்காரு. பேரு என்ன சார்?''

''வடிவேல்.''

''வடிவேல் ப்ரதர் வந்திருக்காரு. கண்ணைத் திறங்க.''

''அண்ணே அண்ணே'' அரை உணர்வில் உடம்பு ஆடியது. துள்ளியது.

''மெள்ள மெள்ள, காஞ்சனா, எக்ஸைட் ஆவாதீங்க. காலாண்ட நிக்கறார் பாருங்க.''

கண் திறந்து அண்ணனைப் பார்த்த காஞ்சனா, 'அண்ணே...'' என்று கைதூக்கிக் கத்தினாள். முகம் வழண்டிருப்பது மறந்து போய், தழுவிக் கொள்ளப் பறந்தாள்.''

''அண்ணே'' உடம்பு வலுவணைத்தும் எடுத்து எழுந்தாள்.

மேல் போர்வை நகர்ந்தது சரிந்தது. உடம்பில் துணியே இல்லை. மாறாய் வழண்டு போன பகுதியில் காஸ் துணி படிய வைத்திருந்தது. உட்கால் இடப்பக்க காஸ் துணி உலர்ந்து தோல் காட்டியது. சீழ் கோத்திருக்க வேண்டும் அல்லது சீழ் போன்ற திரவம் பரவியிருக்க வேண்டும். சிவப்பும் வெளுப்புமாய் இடது மார்பகம் இல்லாது பட்டையாய்...

வடிவேலு வேகமாய்ச் சுவாசித்தான். உதடு கடித்தான். பற்கள் இறுக்கினான். முஷ்டி மடக்கினான்.

அவள் மூக்கு சிறிதாகி விட்டது. உதடுகள் செதுக்கப்பட்டு விட்டன. கீழ்ப் பற்களில் ஐந்து காணோம். எழுந்திருக்கும் போதுதான் தலையில் முடியே இல்லாத வெறுமை தெரிந்தது.

கண்ணாடி முன்பு கை அசைத்து திரும்பித் திரும்பித் தன்னைப் பார்த்துக் கொள்ளும் காஞ்சனா ஞாபகம் வந்தது.

''அண்ணே, ரூம்ல இருக்கீங்களா?'' பாத்ரூமிலிருந்து குரல் வரும்.

''ஆமாம்மா. என்ன வேணும்?''

''வெளிப் போங்க. நான் ரூமுக்கு வரணும்.'' அவன் சேர் விட்டு எழும் சப்தம் கேட்டு பாத்ரூம் கதவு திறக்கும். முகமும் தோள்பட்டையும் தெரியும்.

பேப்பர் பேனா எடுப்பதற்குள் மறுபடி கூச்சல் வரும்.

''அட, சீக்கிரம் போங்களேன். குளிருது. உகூக்குக்கு...'' சரக்கென்று அவன் வெளியேற, டமால் என்று அறைக்கதவு சாத்தப்படும்.

'கதவு திறவேம்மா பேப்பர் இருக்கு உள்ளே.''

சுத்தமாய் உடுத்திக்கொண்டு காதோ கழுத்தோ மாட்டிய படி நிற்பாள்.

''ட்ரஸ் பண்ணிட்டே. கதவு திறக்கக் கூடாதா?''

''மறந்து போச்சு. என்ன இப்ப?''

''ஒண்ணுமில்லை.''

உட்கார்ந்து பேப்பர் படிக்க முடியாது. ரேடியோ ஒரு பக்கமும் அவள் ஒரு பக்கமும் பாட்டு. ச்சே, ஒன்றுகூடச் சரியாக இல்லை. என்கிற கூச்சல் டப்பாவில் இருக்கிறதோடு மொத்தமும் தரையில் சிதறும்.

''என்னம்மா இது?'' அலுப்போடு திரும்ப, தேவதை மாதிரி நிற்கும். என்ன கோபித்துக் கொள்வது?

அந்த டாக்டர் அவளைக் கவனமாய் அழுத்திப் படுக்க வைத்தார். அவள் வலியில் கதறத் துவங்கினான்.

''மறுபடி ஸெடடிவ் தரப் போகிறேன். அதற்குள் பேச முயற்சி செய்யுங்கள். ஏதாவது பேசுங்கள்.'' கத்தினான்.

''என்ன பேசுவது?''

''சரியாய்டும் காஞ்சனா. சரியாய்டும். அண்ணன் வந்துட்டேன். நான் கவனிச்சுக்கறேன். காஞ்சனா, நீ நல்லாகற வரைக்கும் அண்ணன் போமாட்டேன். அம்மாடி, தூங்கு முகம் தேச்சுக்காத காஞ்சனா. அப்படியே தூங்கிரு...'

''சார் யாருன்னு கேளுங்க?'' பின்னால ஏ.ஸி.யின் குரல் கேட்டது. அலறல் கேட்டு உள்ளே வந்திருக்க வேண்டும். கவனிக்க விட்டுப் போயிற்று. புத்தி கலங்கிப் போயிருக்கிறது. ஆனால் ஏ.ஸி. கேட்டதும் சரி யாரென்று தெரிய வேண்டும்.

'யார் காஞ்சனா? யார்?' கேட்கலாமா? அலறுகிறாளே.

டாக்டர் ஊசியோடு தயாரானார். வடிவேலுவைப் பார்த்தார்.

''போட்டுருங்க டாக்டர்,'' வடிவேல் அடிக்குரலில் பேசினான்.

''சார், யாருன்னு கேட்டுருங்க நான் கேட்கட்டா?'' நடந்து நாலடி முன்னே போனார்.

''காஞ்சனா, நான் போலீஸ். யாருங்க ஆஸிட் ஊத்தினது?''

''தெல்லியே...'' ர் விகுதி உச்சரிக்க முடியவில்லை போலும்.

''ஏன் ஊற்றினான்?''

''ல்லியே...'' தெ கூட முடியவில்லை போலும்.

''அடையாளம் காட்டுவீங்களா?''

''இல்லியே. நோவுதே... அண்ணே, ரொம்ப எரியுதே.''

''தெரிஞ்சவனா காஞ்சனா?'' ஏ.ஸி. விடாது கேட்டார்.

''இல்லியே...'' ஊசி சொருகப்பட்டது.

''காஞ்சனா, ப்ளீஸ், ஹெல்ப் பண்ணுங்க. யாருன்னு சொல்லுங்க.''

''தெல்லியே.''

''தெரியாத ஆளா உங்க மேல ஆஸிட் ஊத்தினான்?'' மருந்து நகர்ந்தது.

''ஸாரி.''

''பரவாயில்லை. சொல்லுங்க.''

''யேய்... ஸாரி.. ஸாரி.''

''எதுக்கு ஸாரி?''

ஸாரி சொல்லி.. ஸாரி மேடம் சொல்லி, ஊத்திட்டான்.''

''ஸாரி மேடமா?''

ஹூம் ஹூம். ஸாரி சொல்லி ஓடிட்டான்.''

''என்ன?''

''ஸாரி மேடம் தப்பாயிடுச்சு...'' சொல்லிச் சொல்லி நினைவு புரண்டது.

'ஸாரி, மேடம் என்று சொல்லி, ஸாரி மேடம் தப்பாயிற்று என்று சொல்லி ஊற்றினான். ஓடி விட்டானா உண்மையா இது. சரியாய் பேசுகிறாளா காஞ்சனா.''

மூளைக்குள் கிர்ரென்று எண்ண அலைகள் குவிந்தன.

'ஸாரி மேடம்' என்று சொல்வதில் வேறு அர்த்தம் வரும். நான் இல்லை எவனோ ஊற்றச் சொல்லி ஊற்றுகிறேன் என்ற அர்த்தம் வரும்.

'ஸாரி மேடம் தப்பாயிருச்சி', எப்போது? ஊற்றிய பிறகா? ஊற்றும் முன்பா? காஞ்சனா தப்பாகச் சொல்கிறாள். நினைவு பிழறிப் பேசுகிறாளா?

கழுத்துவரை துணி மூடப்பட்டது.

''ஸாரி இன்னும் எட்டு மணி நேரத்திற்கு அவர்கள்! பேச முடியாது இது தவறு.'' அந்த டாக்டர் தவறு செய்த குரலில் பேசினார்.

''மிக்க நன்றி இளைஞனே!'' கை குலுக்கினான்.

''உங்க கிட்ட பேசணும் மேஜர் வடிவேல்.'' ஏ.ஸி. அருகே வந்தார்.

''பேசுங்க சார்.''

''யார்ன்னு உங்களுக்குத் தோணுது?''

''தெரியலை.''

''உங்க எதிரிங்க யாராவது இவங்களுக்கு, செய்திருக்கலாமா?''

''இல்லை. எனக்கு எதிரி யாருமில்லை.''

''எப்படிங்க? கமாண்டோ நீங்க எங்கேயாவது பூந்து புறப்பட்டிருப்பீங்க. அவங்க உங்களை அடிக்க முடியாம இவளைத் தாக்கியிருக்கலாம்.''

''பூந்து புறப்பட்ட இடங்களில் எனக்கு முகமே இல்லை சார், அடையாளமே இல்லை.''

''இவங்க தப்பான மேட்டர்ல சிக்கியிருக்கிற மாதிரி எண்ணம் உண்டா?''

''நிச்சயம் இல்லை.''

''எப்படிச் சொல்றீங்க நிச்சயமான்னு?''

''சந்தோஷமா பேசினா, போன புதன்கிழமை. அதாவது நேத்திக்கு முந்தின நாள். அத்தினி சந்தோஷம் தப்பான மேட்டர்ல இருக்கிறவங்களுக்கு வராது.''

''சரி இருக்கலாம். கூட வேலை செய்யறவங்க யாரும்?''

''தெரியாது. விசாரிக்கணும். நீங்க விசாரிச்சீங்களா?''

''அடுத்த ரூம் லேடி இவங்க அஸால்ட் ஆன அன்னிக்குக் காலி செய்துட்டாங்க. அதான் இப்போதைக்கு சந்தேகமான

மேட்டர். அவங்க ரூம் சோப்பு உங்க ஸிஸ்டர் ரூம்ல இருக்கு. இதெல்லாம் க்ளூவா இல்லையா'' தெரியலை.

''அந்தப் பொண்ணு ரூம் திறந்திங்களா?''

''இல்லை.''

''ஏன்?''

''அந்தப் பெண்ணோடு வேற லேடி தங்கியிருக்கு. அவங்க வரட்டும் திறக்கலாம்னு நினைச்சேன்.''

''ஸ்பாட்ல ஏதும் கிடைச்சதா?''

''உங்க ஸிஸ்டர் பை, உங்க ஸிஸ்டர் ஹீல் ஷூ, ஒரு பாட்டில். ஆஸிட் பாட்டில் கிடைச்சுது.''

''என்னவிதமான பாட்டில் அது?''

''லேபுக்குக் கொடுத்துருக்கேன். என் கவலை வேற. இது சம்பந்தப்பட்டு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் சம்பந்தப்பட்ட மேட்டரோன்னு தயக்கம்.''

இரண்டு பேரும் நான்காவது மாடியிலிருந்த வராண்டாவில் வந்து தெருவைப் பார்த்தார்கள். தெருவில் வாகன ஓட்டம் குறைந்திருந்தது.

''டேவிட்.''

''சார்''

''யார் அது?''

கை நீட்டாமல் முகம் மட்டும் திசை காட்ட, வடிவேல் காட்டிய திக்கில் எதிர்ப்பக்க நடைபாதையில் ஒரு புத்த பிட்சு குடையோடு நின்றிருந்தான்.

''பஸ்ஸுக்கு நிக்கறா போல...''

''அது பஸ் ஸ்டாண்ட் இல்லை. நோ, நோ. இந்த ஆளை நேத்து சாயந்தரம் ஹாஸ்டல் வாசல்ல பார்த்தேன்.''

''சார், அவன் நம்மைப் பார்க்கறான்.''

சட்டென்று வடிவேல் முகத்தில் அடித்துக் கொண்டு அழுதான்.

''அம்மா அம்மா'', என்று நெஞ்சு பிடித்து வாய்விட்டுத் தலைதூக்கிக் கதறினான்.

''சார்,'' டேவிட் பதற, நெய்ல் ஹிம்...யம்மா'' வடிவேல் அடிக்குரலில் கர்ஜித்தான்.

''சார். நானும் போறேன்.''

''நோ. நோ. நீங்க போவாதீங்க. நான் போறேன். இது என் ஜூரிஸ்டிக்ஷன் நீங்க போவாதீங்க. பிரச்சினை வரும்.''

''சார்.''

''அவரை விடு.''

''ஏ.ஸி. தாவி இறங்கினார். டேவிட் தோளில் சாய்ந்து உடம்பு குலுக்கியபடி பிட்சுவையே வடிவேல் உற்றுப் பார்த்தான். பிட்சு வியப்பு குறைந்து நகரத் துவங்குவது தெரிந்தது.

''எங்கியா இவரு?''

''ஆடி அசைஞ்சு போவாரு சார். நான் சர்ன்னு பைப்பு வழியா இறங்கட்டுமா?''

''வீடு பார்ப்போம்.''

''என்னங்க ஆச்சு?'' டாக்டர் பையன் ஓடிவர, ''தள்ளிப் போ. இது வேற பிரச்சினை.'' வடிவேல் ஆங்கிலத்தில் கத்தினான்.

''நோ. உள்ள போயிருங்க சார்.''

''ஏன்?''

''போங்க.'' வடிவேலை அணைத்தபடி டேவிட் பிட்சுவைப் பார்த்தான்.

பிட்சுவுக்குப் புரிந்துவிட்டது போலும். தங்களைக் கவனிப்பது தெரிந்துவிட்டது போலும்.

தடதடவென்று எதிரே ஆள் ஓடிவருவது தெரிந்ததும் மின்னல் மாதிரி எதிர்ப்பக்க நடைபாதையில் ஓடினான்.

ஏ.ஸி. வாகனங்கள் போகட்டும் என்று நிற்க, அவன் சந்துக்குள் மறைந்தான்.

''முட்டாள் சார் இவரு... பொம்பளை மாதிரி ரோட் கிராஸ் பண்றாரு.''

''மணி ஜீப்புக்குப் போ. லெட் அஸ் ட்ரை.''

மூவரும் ஓடினார்கள். படியிறங்கினார்கள். சரியாய் அவரவர் இடம் பார்த்துத் தாவி ஏறினார்கள்.

''ஹீ ரேனவே.'' ஏ.ஆ. பேசியது ஜீப் உறுமலில் கலைந்தது. ஜீப் சந்துக்குள் ஒரு லாரியை ஓவர்டேக் செய்து போயிற்று. அது ஒரு முட்டுச் சந்து.

12

அவன் ஓடுகிறதை வடிவேலுவின் மனசு துல்லியமாய்ப் படம் பிடித்துவிட்டது. அது புத்தபிட்சுவின் ஓட்டம் அல்ல. குடையின் பிடியில் கையூன்றி நின்றவன் நகர்ந்து நடந்து ஓடத் துவங்கியபோது, ஓடியபடியே குடையின் நடுப்பகுதிக்குக் கைமாற்றிக் கொண்டான். முழு வேகத்தில் சந்து முனையை அடைந்தான். சிறிய உருவம். ஆனால் கால்கள் முழு பலத்துடன் தாவின. தரை தொட்டன. எகிறின. எகிறி மீண்டும் தாவின. ஓடப்பயிற்சி பெற்றவன் என்பது தெளிவாய்த் தெரிந்தது.

சந்து முனையில் ஒரு விநாடி நின்று நாலாபக்கமும் பார்த்துச் சந்துக்குள் பின்பக்கமாகவே நகர்ந்து மறுபடி திரும்பி வேகமாய் ஓடியதுதான் - அவன் பிட்சுவே அல்ல என்பதற்கு ஆதாரம்.

படைக்கலப் பயிற்சி பெற்றவன்தான் அப்படி ஓட முடியும்.

ஜீப்பின் ஆக்ஸிலேட்டர் மிதிப்பதற்குள் அவன் ஓட்டம் பிசாசு வேகத்தை அடைந்துவிட்டது.

ஜீப் முட்டுச் சந்தில் நுழைந்து நின்றபோது என்ன செய்வது என்று கேள்வி எழுந்தது.

''வண்டியைத் திருப்பி வெளிய ஓட்டு மணிவண்ணா?''

''இறங்க வேணாமா சார்?''

''வேணாம்.''

''மெயின் ரோட்டுக்குப் போ.''

சரேலென்று பின்வாங்கி யூ டேர்ன் எடுத்து ஜீப் சீறி வெளியே வந்தது.

''இடது பக்கம் திரும்பு.''

சர்ர்... திரும்பியது.

''சென்ட்ரல் பக்கம் போ, வேகமாப் போ.''

சர்ர்... ஜீப் ஏறியது.

தினத்தந்தி ஆபீஸ் தாண்டியது.

''போலீஸ் கமிஷனர் ஆபீஸ்தானே இது?''

''ட்ராபிக் கமிஷனர்.''

''உள்ளே சொல்லிவிட்டு வா. வண்டி உள்ள இருக்கட்டும்.'' வடிவேலு வெளியே குதித்தான்.

''ஆட்டோ பிடி டேவிட்.''

''ஆட்டோ.''

சாவதானமாய் ஓடிக் கொண்டிருந்த ஆட்டோ அவர்கள் உடைகளைப் பார்த்துவிட்டு, மெல்ல ஊர்ந்தது.

''ஷெட்டு சார்.'' ஆட்டோ பையன் விலகி ஓட்டினான்.

''நில்லுறா'' டேவிட்டின் அதட்டல் இருளான வீதியை இரண்டாகப் பிளப்பது போல் இருந்தது.

''உன் பேர் என்னப்பா?''

''தமிழ்... தமிழ்ச்செல்வன் சார்.''

''தமிழ்ச்செல்வன் அழகான பேர். ஒரு முக்கியமான வேலை. நாங்க சொல்கிறபடி செய்.''

''நான் வூட்டுக்குப் போணம் சார்.''

''ஒரே அறை. மூளை கலங்கிரும். ஐயா சொல்றதைச் செய்.''

ஆட்டோ பையன் உடம்பில் வறுமையும் கண்களில் பயமும் தெரிந்தன.

''அப்படியே மேற்க போ. நிதானமாப் போ.''

வடிவேலு கட்டளையிட, வண்டி சில கடைகள் தாண்டி மறுபடி புத்தபிட்சு ஓடிய சந்தின் முனையில் நின்றது. நின்ற இடம் இருட்டாய் இருந்தது.

''என்ன ஐடியா சார்?''

''அவன் இப்படித்தான் வரணும்.''

''மொட்டையா?''

''ஆமாம்.''

''எங்கனா வீட்ல பூந்து இரண்டு தெரு தாண்டிப் போயிருப்பான் சார்.''

''இல்லை.''

''எப்படிச் சொல்றீங்க?''

''அந்தச் சந்து அவனுக்குத் தெரியாது.''

''எப்படிச் சொல்றீங்க?''

''அவன் ஓடின விதம். இங்க எங்கியோ பதுங்கியிருக்கணும். அவன் குறி வைச்சா மாதிரி சத்துக்குள்ள ஓடலை. தப்பிச்சுக்க ஓடினான். அவன் நம்மூர் மூஞ்சி இல்லை. வேற இடம். யாருன்னு நிறுத்திக் கேட்பாங்க. அவன் தாண்ட இரண்டு பர்ஸன்ட் சான்ஸ். இப்படி வர மீதி சான்ஸ்.''

''எப்ப வருவான்?''

''அரைமணி, ஒரு மணி.''

''நான் தனியா போய்ப் பார்க்கட்டுமா?''

''தப்பு.''

டேவிட் அமைதியாக இருந்தான்.

''லுங்கி இருந்தா சட்டுன்னு எல்லாம் அவுத்துட்டு மாத்திக்குவேன்.''

''வேணாம். அமைதியா இரு.''

''ஓடினதுல மாட்டிக்கிட்டான் சார்.''

''சாதாரணமா அவன் நிக்கலை. அவன் பார்வை நம்ம வண்டி மேலேயும் நாம் நின்ன இடத்துலயும் இருந்தது.''

''பாப்பாக்கு நடந்ததுக்கும் இந்தாளுக்கும் சம்பந்தம் உண்டுன்னு தோணுதா சார்?''

''தெரியலை.''

''பாப்பாவப் பார்க்கும் போது நடுங்கிட்டேன் சார். பாப்பாக்கு லவ் உண்டா சார்?''

''தெரியலை டேவிட்.''

''ஏ.ஸி. கார் வேற எதிர்க்க இல்லை. எங்க போயிருப்பாரு?''

''மெள்ள வருவாங்க இங்க.''

''வந்தா கெட்டுரும் சார்.''

''அதான் கவலை.''

''சார்.' டேவிட் கூவலாய் அழைத்தான்.

''என்ன?''

''அடுத்த தெரு வழியாய் வெளிய வரான். அந்தப் பக்கம் போறான் சார். நீங்க சொன்னது கரெக்ட்.''

''தெரியுது.''

''தமிழ் பையா, மொள்ள வண்டிய ஸ்டார்ட் பண்ணு சாதாரணமாப் போ.''

ஆட்டோ மறைவில் தங்களை மறைத்துக் கொண்டு பார்த்தார்கள்.

''நொண்டறான் சார்.''

''செருப்பு அறுந்துட்டிருக்கு.''

''கிட்ட போகச் சொல்லவா.''

''வேணாம். காண்டாக்ட் எதுனா அவனுக்கு உண்டா தெரியணும்.''

எதிரே பிரகாசமாய் வெளிச்சம் தெரிந்ததும். வெளியூர் பஸ் - ஸ்டாண்டில் நின்று கிளம்பியது.

பிட்சு கை நீட்டினான். சடன் பிரேக் போட்டது. பிட்சு ஓடும் பஸ்ஸில் தாவினான். பஸ் வேகம் எடுத்தது.

''தமிழ் வண்டியத் திருப்பு.'' வடிவேலு கத்தினான்.

திரும்பத் தாமதமாயிற்று. சிக்னல் திறந்து வண்டி வரிசைகள் வர, பஸ் முதுகு சிவப்பு வெளிச்சம் காட்டியது.

''ஓட்டு, வண்டிய. வேகமாகப் போ.''

தமிழ், வண்டி திருப்பினான், பஸ் தொடர்ந்தான். ஹோ என்று கிடந்த வீதியில் டீசல் பஸ்ஸின் வேகத்தின் பின்னே ஆட்டோ தொடர முடியவில்லை. பதற்றமாய் ஆட்டோ தினத்தந்தி தாண்டியது. ட்ராபிக் கமிஷனர் கட்டடம் தாண்டியது. உள்ளே ஜீப் தெரிந்தது. டேவிட் இரண்டு முறை வாயில் விரல் வைத்துச் சீழ்க்கை அடித்தான். மணிவண்ணன் விளக்குப் போட்டு அணைத்தான்.

''தமிழ், ஓட்டுய்யா வண்டிய, சீக்கிரம் போ.''

அரசு மருந்து கோடவுன்.

ஏதோ மிலிட்டரி ஹோட்டல்.

நாடார் லாட்ஜ்

கடைகள்.

பஸ்ஸும் ஆட்டோவும் இடைவெளி அதிகரித்தது.

''இவன் சோம்பேறி சார். வுட்டுறுவான்.''

''வேகமாப் போ தமிழ்.''

''பஸ் ரிப்பன் பில்டிங் எதிரே தயங்கி இரண்டு பேரை உமிழ்ந்தது. அதில் பிட்சு இல்லை. புறப்பட்டது. சென்ட்ரல் சிக்னல் தாண்டியது. மணிவண்ணன் ஆட்டோ உரசி ஜீப் ஒட்டி வந்தான்.

''டேவிட், ஜீப்புக்கு வா.'' ஆட்டோவில் வெளிப்பக்கம் கால் வைத்து உதைத்து ஜீப் பின்பக்கம் வடிவேலு தாவினான். முன்னே தாண்டிப் போய் நின்றான்.

பஸ் சிக்னல் தாண்டியது.

டேவிட், ஓடுகிற ஆட்டோவிலிருந்து இடப்பக்கமாய்க் குதித்தான். அசுர வேகத்தில் ஜீப் நோக்கி ஓடினான். தாவி ஏறினான்.

''அந்த பஸ்ஸு மணி. அந்த பஸ்ஸு'' கத்தினான்.

ஜீப் சிவப்பு சிக்னலை அலட்சியம் செய்து சென்ட்ரலுக்குள் திரும்பிய மோட்டார் சைக்கிளை உரசி பஸ்ஸை பின் தொடர்ந்தது.

''வேலூர் வண்டி டேவிட். நிக்கமாட்டான், எங்கேயும். ஐக்கோர்ட் எதிர்ல திரும்புவான்.''

''அதுக்குள்ள புடிச்சுற மாட்டே மணி?''

''சொதப்பல் இடம்சார் இது.''

மெடிக்கல் காலேஜ் ஹாஸ்டல் - பஸ் தாண்ட, ஜீப் பஸ் கடந்தது. இடப்பக்கம் ஒதுங்கி பஸ் மறித்தது. டேவிட்டும் வடிவேலுவும் தாவி இறங்கி ஆளுக்கொரு வாசலை அடைத்துக் கொண்டு ஏறினார்கள்.

நடு சீட்டில் உட்கார்ந்திருந்த பிட்சு விலுக்கென்று எழுந்தான்.

ஜன்னலுக்கு உடம்பு திணித்துத் தாவ முற்பட, டேவிட் சட்டென்று இறங்கி ஜன்னல் அருகே நின்று கொண்டான்.

ஒரு தாவலில் வடிவேலு அந்தப் பிட்சுவைத் தொட்டான். பிட்சு அவனை உதறிக் குனிய குடை சரிந்தது.

பிட்சுவின் கழுத்தில் வடிவேலு வலது உள்ளங்கை பதிக்க, இரும்புப் பிடியாய் இறுகியது.

''யாரு... யாரு? என்னா?'' கண்டக்டர் எழுந்து வந்தான்.

பிட்சு ஸீட்டோடு முகம் அழுந்த வைக்கப்பட்டான்.

திமிறி நிமிர வடிவேலு பளீரென்று பிட்சுவை அடித்தான் திருப்பினான்.

இந்த முறை முகத்தைக் கொத்தாய் ஒரு தேங்காய் பிடிப்பது போல பிடித்தான். பிட்சுவின் மூக்கு, வாய் அணைத்தும் மூடி பிராணவாயு உள்ளே போகாமல் நிறுத்தினான்.

டேவிட் தாவியேறி விரியத் துவங்கிய பிட்சுவின் இடது கையைப் பற்றி முறுக்கிக் கொண்டான்.

சிங்கங்களிடம் அகப்பட்ட மான்போல பிட்சு திணறல் இருந்தது.

''யாருப்பா நீங்க, போலீஸா?''

''இறங்குடா கீழ.''

பிட்சுவை நெட்டிக் கீழே தள்ளி இறங்க, மணிவண்ணன் அவனை வாங்கிக் கொண்டான். உதறி ஓடுவதற்காகப் பிட்சு கால்கள் நீட்ட, செருப்பு அறுந்த காலை மணிவண்ணன் ஓங்கி மிதித்தான். அவன் கால் கட்டை விரலை பலங்கொண்ட மட்டும் நசுக்கினான்.

வலி அலறல் கூட்டம் ஈர்த்தது.

வடிவேலுவின் இன்னோர் அறை பிட்சுவைத் தாக்கியது. அடித்த வேகத்தில் பிட்சுவின் தலை பஸ்ஸில் மோதியது.

நச்சென்று மணிவண்ணன் பிட்சுவின் இரைப்பைக்குக் கீழே குத்தினான்.

துவண்ட பிட்சுவைத் தரதரவென்று பஸ்ஸுக்கு முன்னே இருந்த ஜீப்பின் பின்பக்கம் போட்டார்கள்.

மணிவண்ணன் ஜீப் இயக்க, வடிவேலு பிட்சுவின் தலையில் ஒரு காலும், இடுப்பில் ஒரு காலும் அழுந்த வைத்து உட்கார்ந்து கொண்டான்.

வண்டி கிளம்பியது.

''த்தா... டேய், யார்ரா நீங்க?'' பஸ்ஸிலிருந்து பதற்றமாய் ஒரு குரல் கேட்டது.

மணி ஆத்திரத்துடன் பிரேக் அழுத்த, ஜீப் குலுங்கியது.

''பப்ளிக் அப்படித்தான் கத்தும். நீ போ மணி.''

வண்டி கியர் மாற்றிக் கிளம்ப, டேவிட் சரசரவென்று பிட்சுவின் இடுப்பு வேட்டி அவிழ்த்தான். சோதனையிட்டான்.

''எதுவுமில்லை.''

''கோன் ஹை தும்...'' வடிவேலு கத்தினான்.

ஏதோ பாஷை காதில் விழுந்தது.

''யார் நீ...?'' ஆங்கில வினா.

முனகல் கேட்டது.

''சொல், யார் நீ?''

முகம் மூடியிருந்த காலை மெல்ல வடிவேலு விலக்கினான்.

''போலோ கோன் ஹ தும்?''

பிட்சு அசையவில்லை.

''சொல்றா சோம்பேறி.'' பளீரென்று டேவிட் முதுகில் அடித்தான்.

அசைவு இல்லை.

''மயங்கிட்டானா?'' டேவிட் குனிய, பகீரென்று பிட்சு எழுந்தான்.

வண்டி ஓட்டிய மணிவண்ணன் தலையை உள்ளங்கையால் வெட்டினான். வடிவேலு காலை தட்டி விட்டான். அதே வேகத்தில் டேவிட் முகம் உதைத்தான்.

மூன்று செகண்ட் வேலை. மூன்று தாக்குதல். சுத்தமான பாடம்.

வடிவேலுவின் பேய்க் குத்து, பிட்சுவின் முகம் தாக்கியது.

மணிவண்ணன் தடுமாறி, ஜீப் வலப்பக்கம் ஒடிந்து, பாலம் கலைந்து, எதிர் பஸ் அலற, சடேரென்று விலகி இடதுபக்கம் நடைபாதையில் ஏற்றி மறுபடி இறங்கித் தள்ளாட, டேவிட் வண்டி ஸ்டியரிங்குக்குக்கை கொடுத்து ஏறும் சமயத்தில் பிட்சு மூச்சுப் பிடித்து வண்டி விட்டு எகிறினான்.

டேவிட் தொடர்ந்து எகிற பிட்சு நொண்டிக் கொண்டு பாலம் ஏறி, சிமெண்ட் வேலி தாண்டினான். ரிவில் உருண்டான்.

தாம்பரம் எலக்ட்ரிக் ட்ரெயின் ஒளியோடு அந்த வளைவு திரும்பியது.

வடிவேலு பின்னே குதித்து அலறி உருண்டு பிட்சுவைத் தொட, கோவணம் மட்டும் கட்டியிருந்த அந்த பிட்சு கை உதறி மின்வண்டிக்கு குறுக்கே பாய...

தடக் என்று ஒரு சத்தம். பிட்சுவின் உடல் எகிறி எதிர்பக்க மின் கம்பம் பட்டு அடித்த தண்டவாளம் விழுந்தது.

உடம்பு துவண்டு, வலியில் துடித்து ஆடியது. தாம்பரம் டு பீச் வண்டி அடித்துப் போட்டவனை, பீச் டு தாம்பரம் வண்டி துண்டு துண்டாக்கியது. ரத்தம் கருங்கற்களை நனைத்தது. சதை கள் தண்டவாளம் தேய்த்தன.

''சார்.''

''நோ யூஸ். போலாம் வா.''

பீச் டு தாம்பரம் வண்டி கிறீச்சிட்டு நிற்கத் துவங்கியது.

''வா டேவிட்.'' வடிவேலு சரிவு ஏறினான்.

''சார்...''

''இடத்தை விட்டுப் போயிடலாம், வா.''

''ஏன் சார்?''

''இது போலீஸ் கேஸ். வண்டில ஏறு.''

மணிவண்ணன் தலை பிடித்து உட்கார்ந்திருந்தான்.

''டேவிட், நீ வண்டி ஓட்டு. மணி பின்னால போ.''

மறுநிமிடம் வண்டி கடற்கரை நோக்கி ஓடியது.

''எவனோ ஒருத்தனை மிலிட்ரிகாரன் அடிச்சுப் போட்டுப் போறாம்பா.''

ஜனங்கள் கூடினார்கள்.

அந்த பஸ் விட்டு இறங்கும்போது கண்டக்டர், அனாதை யாய் கிடந்த குடையைப் பார்த்தான்.

''வாத்யாரே, எவனோ குடை வுட்டுட்டுப் போட்டான்.''

''எனக்குக் கொடு.''

''ஏன் உனக்கு?''

''போன தாட்டி பர்ஸு நீ எடுத்துக்கின இல்ல? எனக்குக் கொடை கொடு.'' சீட்டு விட்டு டிரைவர் வெளியே வந்தான்.

''சிங்கப்பூர் குடையா?''

''தெரியலை. டைட்டா இருக்குது.''

''கொண்டா.''

''எனக்கு இருக்கட்டும்பா.''

''கொண்டாடா.''

டிரைவர் உலுக்கிக் குடை பிரிக்க, படேரென்று குடை வெடித்தது.

பயணிகள் எல்லாம் இறக்கிவிட்டுப் பூக்கடை டெர்மினஸில் நின்ற பஸ்ஸின் கண்டக்டர், டிரைவர் இரண்டு பேரும் அங்கேயே இறந்து போனார்கள்.

குடை சுக்கல் சுக்கலாய்க் கிழிந்து போயிற்று தமிழ்ச் செல்வன் அந்த பஸ்ஸைப் பின்தொடர்ந்து திட்டிக் கொண்டே வந்து... உள்ளே வெடித்ததும் அவசரமாய் ஆட்டோவில் ஏறிக் காணாமல் போனான்.

'இந்த வெடி வம்பில் மாட்டி எவன்னா, பிழைப்பைக் கெடுத்துக்குவானா?' என்பது தமிழ்ச் செல்வனின் எண்ணம்.

ஆனால் அவனை விசாரிக்கவும் ஆள் இருந்தது.

13

அந்த இளைஞர்கள் மிகத் திறமையானவர்கள். கல்லூரிப் படிப்பு, வயல் வேலை, ஓவியம், வரைதல், மண்பாண்டம் செய்தல், கோயிலுக்குப் போதல், தாய் தந்தையை நேசித்தல் எல்லாம் விட்டு விட்டுப் புரட்சியின் பொருட்டு அவர்கள் சென்னைக்கு வந்திருக்கிறார்கள்.

சென்னை ஒரு பெரிய காடு. கான்கிரீட் காடு. பெரிய காண்டாமிருகங்கள் அதிகம் இல்லை. இருக்கிற சில மிருகங்களுக்கு இரைபோட்டு மயக்க முடியும். மற்றபடி உல்லாசமான பறவைகள் போல அமைதியான மனிதர்கள் அதிகம்.

தகவல் தொடர்பு போக்குவரத்து வசதிகள் உன்னதம்.

பம்பாய் போல தாதாக்கள் இடமில்லை. டெல்லியைப் போல சதிகாரத் திருடர்கள் இல்லை. கல்கத்தா போல முரட்டு மனிதர்கள் இல்லை. சென்னை நல்லதொரு கான்க்ரீட் காடு.

கொடைக்கானலிலிருந்து அந்தப் பெண்ணைத் தகவல் தொடர்புக்கு அழைத்து வைத்திருந்தார்கள். அவள் திபேத்திய அகதி. தமிழ் தெரியும். கொஞ்சம் கொஞ்சம்.

''எங்களுதுல ஒரு ஆட்டோ காணம்.''

''உங்களதுல ஆட்டோ காணமா?''

''நிறைய ஆட்டோ இருக்கும். அதுல ஒண்ணு காணம்ன்னு சொல்றா போல.''

அவனை நிற்க வைத்த இடத்தைச் சுற்றிச் சுற்றிக் கவனமாய் அலைந்தார்கள். தடம் தேடிப் போனார்கள்.

ஆட்டோவைப் போலீஸ் மடக்கிப் பிடித்தது தெரிந்தது. தொடர்ந்து விசாரித்தார்கள்.

''என்ன நெம்பர். உங்களுதுல ஆட்டோ?''

''டி.எம்.ஏ. பதினெட்டு பதினேழு.''

''தெரிலையே. கந்தசாமி கோயில்கிட்ட, அதான். பாய் தலைகாணி விக்குமே அந்த ஸ்டாண்ட் வண்டிய, போலீஸ் ராத்திரி மடக்கிச்சு. வந்த பையன் தெரியும். பேர் தெரியாது.''

''அது எங்க வண்டி இல்லை.'' அவள் நகர்ந்தாள். இடைவெளி விட்டு நாலு பேர் தொடர்ந்தார்கள்.

''பர்மாக்காரி மாதிரி இருக்குது. இங்க வண்டி ஓட்டறாளா! தமிழன்தாம்பா புழைக்க முடியலை தமிழ்நாட்ல. என்ன சொல்றது நானு.

கந்தசாமி கோயில் பக்கம் அலைந்தார்கள்.

''நேத்து போலீஸ்ல வண்டி மாட்டுச்சாமே, யாருது?''

''தினம்தான் எதுனா வண்டி மாட்டுது. நேத்து யார் மாட்டினதுப்பா.''

''தெரிலையே. தமிழ்தான். ஏதோ திட்டிக்கினு இருந்தான். என்னடான்னு கேட்டேன். வெடி வெடிச்சது பத்தி பேசினான். மாட்டினானாத் தெரிலையே.''

தமிழ் யார் என்று தேடினார்கள்.

''தமிழ்ச்செல்வனா? ஊதுவத்தி ஆள் ஆட்டோ உள்ள போ.''

ஆட்டோ ஓட்டும் ஊதுவத்தி ஆள் தேடினார்கள்.

''என்னங்க வோணும்?''

''பை வைச்சுட்டு மறந்துபோச்சு.''

''தமிழ் ஒண்ணும் சொல்லலையே. என்ன இருக்கு பைல.''

''சர்ட்டிபிகேட்ஸ்.''

''எந்தூர் உனக்கு.''

''சிங்கப்பூர்.''

''அடட. எங்கினா லைன்ல இருப்பான். தமிழ்ச்செல்வன் வண்டின்னு எப்படித் தெரியும் உனக்கு. பேர் சொன்னாரா பேசறப்போ.''

''வாயாடி முண்டம் அது. பேர் சொன்னானா உன்கிட்ட. அவனுக்கு உன் சர்ட்டிபிகேட் எதுக்கு? டி.எம்.வி. எழுவத்தியெட்டு நாப்பது. பாய்கடை ஓரம் நிற்கும். வந்தா சொல்றேன்.''

காத்திருந்தார்கள். டெலிபோன் செய்து தகவல் சொன்னார்கள். அவர்கள் தங்கியுள்ள இடத்திலிருந்து பத்துப்பேர் தேடப் போனார்கள்.

பசி, தாகம் உடல் அவஸ்தை எதுவுமில்லை. யார் அது? தொடர்ந்தது ஏன்? பதில் வேண்டும். விஞ்ஞானப் பாடத்தில் முதலாய் வந்தவன். கறுப்பு பெஸ்ட் ஆள். கட்டளை எதுவாயினும் தலைவணங்கி ஏற்பவன், அவன் சாவு கேட்கப்படாமல் போகக்கூடாது. யார் துரத்தியது? எந்தப் போலீஸ்? எதற்கு? தெரிய வேண்டும்.

மில்ட்ரி என்கிறார்கள். போலீஸ் என்கிறார்கள். எதிரி யார் தெரிய வேண்டும்.

பத்திரிகையில் அவன் தலை மட்டும் துண்டாய்க் கிடந்ததை போட்டிருந்தார்கள். பிட்சு என்று குறிப்பிடவில்லை. குடை வெடித்தது. வேறு இடத்தில் போட்டிருந்தார்கள். காரணம் போடவில்லை.

அவன் குடையை அவனிடமிருந்து பிரிக்கவே முடியாது. எப்படிப் பிரிந்தது? இன்று மாலைக்குள் கண்டுபிடிக்க வேண்டும். இல்லாதுபோனால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொள் என்று தலைமையிடம் கட்டளையிட்டிருந்தது.

சாவை விடப் பசி மோசமானதில்லை. தமிழ்ச் செல்வன் வேண்டும்.

மந்தைவெளியில் ஆட்டோ கண்டுபிடிக்கப்பட்டது. இருவர் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்தார்கள். அவன் சவாரி இறக்கிவிட்டதும் மோட்டார் சைக்கிள் பின் சீட் ஆள் ஆட்டோ வில் ஏறிக்கொண்டான்.

''கந்தசாமி கோயில் போ என்றான். அங்கே அவனை ஏற்றிக் கொண்டான். அடையாறு போகச் சொன்னான். கஸ்தூரி பாய் நகருக்குள் ஆட்டோ நுழைந்தது. ஒரு பங்களாவுக்குள் போகச் சொன்னார்.

''உள்ள எதுக்குப் போகணும்? இங்கியே செட்டில் பண்ணு.'' தமிழ்ச் செல்வன் கத்தினான்.

அள்ளிக்கொண்டு உள்ளே போனார்கள். மாடி ஏறினார்கள். தமிழ்ச்செல்வன் அழுதான்.

''வுட்டுறுய்யா யோவ்... வுட்டுருய்யா யோவ்.'' கெஞ்சி னான். வலையாய் அத்தனைபேரும் கூடினார்கள்.

''தம்பி, பயப்படாதே. யாரு நேத்தி உன் வண்டில ஏறி கலாட்டா பண்ணது.'' அவள் விசாரித்தாள்.

''நீ யாரு?''

''நான் சி.ஐ.டி. சி.பி.ஐ. சி.ஐ.டி. சி.பி.ஐனா தெரியுமா?''

''ரகசிய போலீஸ்.''

''கரெக்ட்.''

''தமிழ்நாடு போலீஸை விசாரிக்கப் போறோம். என்ன ஆச்சு நேத்து?''

''அவனுங்க மிலிட்டரி போலீஸ்ம்மா.''

''மிலிட்ரி போலீஸா?''

''பச்ச வண்டி. பச்சைக் கூட இல்லே. ஒரு மாதிரி சாம்பல்.''

''சாம்பலா, பச்சையா?''

''சாம்பல்.''

''என்ன நம்பர்?''

''பார்க்கலை.''

''வேற என்ன பார்த்த?''

''ஆவடின்னு இங்கிலீஷ்ல எழுதியிருந்தது. பைலட் ஜீப்பு மாதிரி.''

''என்ன பண்ணாங்க?''

''யாரையோ ஒரு மொட்டை ஆளைத் துரத்தினாங்க. பஸ்ல ஏறி மடக்கிப் பிடிச்சு பேய் அடி. நாய் அடி. வண்டில போட்டு மெறி மெறின்னு மெறிச்சாங்க.''

''இன்ஸ்பெக்டரா?''

''இன்ஸ்பெக்டருன்னா காக்கிச்சட்டை தானே?''

''ஆமா.''

''அவருது கறுப்பு சட்டை.''

''என்னா?''

''கறுப்பு சட்டை. சரிஞ்சாப்ல கறுப்புத் தொப்பி.''

''கன் இருந்துதா?''

''டுப்பாக்கியா... இல்லை. எனக்கு துட்டே தரலை. பேசாமல் போய்ட்டான். பெட்ரோல் விக்கிற விலைல ஆட்டோ ஓட்டறது கஷ்டங்க.'' அழுதான்.

நூறு ரூபாய் தந்தார்கள்.

வாங்கிக் கொண்டான்.

''நீங்க யாரு?'' மறுபடி கேட்டான்.

''ஏன்?''

''கூர்க்கா ஜாதியா? அதுமாதிரி தெரியுதே.''

''ஆமா, மிலிட்ரி கூர்க் ரெஜிமென்ட்.''

''ரகசிய போலீஸ்னே.''

''மிலிட்ரி ரகசிய போலீஸ்.''

''அங்க தமிழன் சாவறான். இங்க வந்து சதாய்க்கிறீங்களே.''

''டீ சாப்பிடு.''

''வேணாம்.''

''அட. சாப்ட்டுபோ தம்பி.''

டீ குடித்தான். எழுந்தான். தள்ளாடினான். பொத்தென்று விழுந்தான். மயங்கிச் சரிந்தான்.''

''இவனை என்ன செய்வது? கொன்றுவிடலாமா.''

''வேண்டாம்.''

''பிறகு? கஞ்சா டப்பா இருக்கிறதல்லவா? அந்தப் பையில் போட்டு ஆந்திரா பார்டரில் இவனைப் போட்டு விடு. போலீஸ் பிடித்து உள்ள போட்டு வெளியே வர நாளாகும். டெம்போவில் போ.''

ஷெட்டின் உள்ளே டெம்போவில் தமிழ்ச் செல்வனின் தூக்கம் கலைக்காமல் ஆந்திரா கிளம்பியது.

''என்ன ஆவடி?'' தொடர்ந்து யோசித்தார்கள்.

''ஆவடி போலீஸ் ட்ரெயினிங் சென்டர்.''

''என்ன ட்ரெயினிங்?''

''கமாண்டோ ட்ரெயினிங்.''

''கமாண்டோ எப்படி இதில் இறங்கியிருக்கிறான்?''

''நம்மைத் தடம் தெரிந்து கொண்டார்கள்.''

''அப்படி தகவல் இல்லை.''

''நமக்கு நிச்சயம் தகவல் வருமா? நமது உளவாளிகளை நம்ப முடியாது.''

''ஆமெனில் அடித்துவிட்டு போய்விடுவானேன்...''

''பூஜோ தப்பிக்கும் முயற்சியில் செத்திருக்க வேண்டும்.''

''சரி, அவர்கள் ஏன் காணாது போனார்கள்.''

எங்கோ சங்கிலி இடறுகிறது. இணைப்பு காணோம். மறுபடி ஆலோசித்தார்கள்.

''ஆவடிக்குப் போகலாமா?''

''முட்டாள்தனம்.''

''இது நடந்தது பூஜோ உளவு பார்த்த ஆஸ்பத்திரி அருகே.''

''ம்ம்.''

''அந்தப் பெண்ணை மறுபடி உளவு பார்க்க வேண்டும்.''

''யார்?''

''ஆஸிட் ஊற்றப்பட்ட பெண். பூஜோ காஞ்சனா என்று பெயர் மட்டும் தெரிந்து சொன்னான். ஹாஸ்டலில் இதை விசாரித்திருக்க வேண்டும்''?

''அது ஏன் பத்திரிகையில் வரவில்லை?''

''லேடீஸ் ஹாஸ்டல் தவிர்த்திருக்க வேண்டும்.''

''நமது முகம் தமிழ்நாட்டில் பெரிய இடைஞ்சல்.''

''வேறு ஆள் அமர்த்தலாமா?''

''யாரை?''

''பம்பாய் பார்ட்டி?''

''அவனுக்கும் நமக்கும் உறவு மோசம்.''

''குடை வெடித்த விவகாரம் பெரிசாகும் என்று தோன்றுகிறது.''

''நம் மீது விழாது. வேறு குழுவைச் சந்தேகப்படுவார்கள்.''

''புரிகிறது.''

''ஒரு யோசனை.''

''என்ன?''

''அந்த ஆஸ்பத்திரி எதிரே ஒரு பிரைவேட் நர்ஸிங் ஹோம் அதில் சேர்ந்து கவனிக்கலாம். நடமாட்டம் பார்க்கலாம்.''

''நடமாட்டம் கவனிக்கிற அறை கிடைக்குமா?''

''அது கூட்டமில்லாத நர்ஸிங் ஹோம். முயற்சி செய்ய வேண்டும். அதிர்ஷ்டம் வேண்டும்.''

''இது சுமாரான திட்டம். வேறு...''

''நான் கூர்க்கா வேஷம் போடலாம். அந்தப் பெண் இருக்கும் ஆஸ்பத்திரியில் வயிற்று வலிக்குச் சேரலாம்.''

''வாசல் ஒட்டி ஆண்கள் வார்டு.''

''இதுவும் சுமாரான திட்டம்.''

''அந்தப் பெண்ணுக்கும் பூஜோ செத்ததற்கும் சம்பந்தம் இல்லையெனில்...?'' கேள்வி எழுந்தது.

''ஆவடி பக்கம் கூர்க்கா போகலாகாதா?''

''வேண்டாம்.''

''இன்னொரு யோசனை?''

''என்ன?''

''குடை வெடித்தது கமாண்டோக்களுக்குத் தெரியாது என்று தோன்றுகிறது. அங்கே அவர்கள் வரலாம். இப்போதைக்குப் போலீஸ் காவல்தான் அங்கே.''

''பூஜோவிடம் துணிகளே இல்லை அது எங்கே?''

''ஜீப்பில் இருக்கலாம்.''

''பூஜோ குடையை எப்படி விட்டான்?''

''அழுத்திப் பிரித்திருக்கலாம். குடையை அலட்சியப் படுத்தி அவனை மட்டும் இழுத்துப் போயிருக்கலாம்.''

''பூஜோ நல்லவன்.''

''மாபெரும் வீரன்.''

''வேசி மகன்கள் நாயடி அடித்திருக்கிறார்கள்.''

''மரணமும் மரண வலியும் புரட்சியின் பதக்கங்கள்.''

''பூஜோவை எங்கிருந்து துரத்தி, எங்கிருந்து தொடர்ந்து, அதுவும் கவனிக்கப்பட வேண்டும்.''

''பூஜோவின் செருப்பு இல்லை.''

''பஸ்ஸில் பார்க்க வேண்டும்.''

''சரி. இந்த இடம் இனி கூடும் இடம் இல்லை. எதிர் மருத்துவமனை அந்தப் பெண் இருக்கும் மருத்துவமனை. பஸ்ஸில் பூஜோ செருப்பு அவன் ஓடிய இடத்தில் சோதனை. சகலமும் நடக்க வேண்டும்.''

''பாம்பே பார்ட்டி?''

''இப்போதைக்கு வேண்டாம்.''

''கொடைக்கானல் கேம்புக்கு பூஜோ மறைவு சொல்ல வேண்டும்.''

''நடக்கும். உங்கள் வேலைகளைக் கவனியுங்கள்.''

''இவளை என்ன செய்வது?''

''கொடைக்கானலுக்கு அனுப்பு. வேறு தகவல் ஆளை வரச் சொல்.''

''சரி.''

''இருக்கிற உணவைப் பகிர்ந்து கொள்ளுங்கள். காலையிலிருந்து யாரும் சாப்பிடவில்லையே?''

ஆளுக்கு நாலு துண்டு ரொட்டியும், அரை ஆப்பிளும் சிறிது வெண்ணெயும் கிடைத்தன.

அமைதியாய்ச் சாப்பிட்டார்கள். மிகக் கவனமாய்க் கலைந்தார்கள்.

ஓயாத முதுகுவலி என்று எதிர் மருத்துவமனையில் சேர்ந்தவனுக்கு வசதியான அறை கூடுதல் காசுக்குக் கிடைத்தது.

வயிற்றுவலி என்று காஞ்சனா இருக்கும் ஆஸ்பத்திரியில் சேர்ந்தவனுக்குக் கட்டில் கிடைக்கவில்லை. தரையில் படுத்துக் கொள்கிறேன் என்று முதல் இரண்டு கட்டிலுக்குக் கீழே படுத்து வாசல் பார்த்தபடி கிடந்தான்.

பஸ்ஸை சோதனையிட்டவனுக்கு பூஜோவின் அறுந்த செருப்பு ஒன்று கிடைத்தது.

செருப்பு அறுந்தது எங்கே என்று தேடப்பட்டது. தடம் தெரியவில்லை.

அவர்கள் காத்திருந்தார்கள்.

யார் பூஜோவைத் துரத்தியது? எதற்கு? ஏன் அடித்துக் கொன்று விட்டு காணாமல் போனார்கள். காஞ்சனாவுக்குக் கமாண்டோவிடம் சம்பந்தம் உண்டா என்று கண்டுபிடிக்கும் வேலையில் இறங்கினார்கள்.

மறுநாள் வடிவேலு ஹாஸ்பிடலுக்கு ஆட்டோவில் வந்த போது அவனும், மணிவண்ணனும் சாதாரண உடையில் இருந்தார்கள். அவர்களைக் கமாண்டோ என்று எவருக்கும் தெரியநியாயமில்லை.

மெல்ல காஞ்சனாவைத் தடவிக் கொடுத்துவிட்டு அந்த அறையை வடிவேலு சுற்றிப் பார்த்தான்.

''தரைல உட்கார்ந்து இந்த வளைவு சந்து வழியா பார்க்கட்டுமா?'' என்றான் மணிவண்ணன்.

''அதவிட பெட்டர் வழி இருக்கு. லெட்ரின்ல ஏறிப் பார்க்கலாம்.''

முதலில் வடிவேலு ஏறிப் பார்த்தான். தெரு சாதாரணமாய் இருந்தது.

பிறகு மணிவண்ணன் ஏறினான். அப்போது சாதாரணமாய் இருந்தது.

டாக்டர் இளைஞன் உள்ளே வர, காஞ்சனாவை மில்டரி ஆஸ்பத்திரிக்கு மாற்றலாமா என்று கேட்டார்கள்.

இப்போதைக்கு வெளிக்காற்று பட வேண்டாம் என்று டாக்டர் இளைஞன் அபிப்பிராயம் தெரிவித்தான்.

''நேற்று எங்கே ஓடினீர்கள்?'' ஆவலாய்க் கேட்டான்.

''ஒரு புத்த பிட்சு திபேத்திய அகதி அல்லது நேப்பாளி. எங்களைக் கண்டதும் ஓடினான்.''

''நேப்பாளி என்றால் கூர்க்கா தானே. எவ்வளவு நம்பிக்கை யானவர்கள். அவர்களைக் கூட நம்ப முடியவில்லை. இப்போது வயிற்றுவலி என்று ஒரு கூர்க்கா இன்று அழுது அடம்பிடித்து அட்மிட் ஆகியிருக்கிறான். ஆள் பார்த்தால் முனகல். பார்க்காது போனால் பேசாதிருக்கிறான்.''

''எங்கே?''

''கீழ்வார்டில். தரையில் இருக்கிறான்.''

''மணி கீழே போக அந்தக் கூர்க்காவானவன் எதிர் ஆஸ்பிடல் பார்க்க எதிர் ஆஸ்பிடலில் இன்னொரு கூர்க்கா முகம் தெரிந்தது.

மணி மேலே ஓடி வந்தான். பாத்ரூம் போனான். ஏறி நின்றான்.

''சார்,'' என்று கூவினான்.

வடிவேலு கக்கூஸில் ஏறிப் பார்க்க எதிரே பைனாக்குலர் இங்கே பார்த்துக் கொண்டிருந்தது.

''டாக்டர், ஸ்டெத் வேண்டும்.'' வடிவேலு கேட்டான்.

''எதற்கு?''

''ப்ளீஸ்''

ஸ்டெதாஸ்கோப் பிடுங்கி வடிவேலு மூன்றாவது மாடி யிலிருந்து பைப் வழியே இறங்கினான்.

சகல வேலையும் கெடுக்கும் வண்ணமாய் ஸ்டான்டர்ட். போலீஸ் வேன் ஆஸ்பத்திரி நுழைந்தது. ஆறு போலீஸ்காரர் கள் உள்ளே வந்தார்கள். ''அஸிஸ்டன்ட் கமிஷனர் பாராவுக்கு அனுப்பினார் சார்'', ஆஸ்பத்திரி டீனிடம் சல்யூட் அடித்தார்கள்.

14

அரசாங்க ஆஸ்பத்திரி ஜலதாரைக் குழாய்க்கு ஒரு கமாண்டோவைத் தாங்கும் வலிவு இல்லை. ஆடியது. பாதி உடல் கனத்தைச் சுவருக்கு அனுப்பி மீதி கனத்தைக் குழாயில் மாட்டினதும் குழாய் இணைப்பு நகர்ந்தது.

இணைப்பு முற்றிலும் விடுபட்டு ஜலதாரைக் குழாய் கையோடு வருமோ என்கிற பயம் வந்தது. வடிவேலு சட்டென்று முதல் மாடி வராண்டா விளிம்புக்கு மாறினான். பழைய கட்டடம், பதினாறு அடி உயரத் தளம். விளிம்பில் உட்கார்ந்து வலது கையை வராண்டா கம்பிகளுக்கு இடையே கொடுத்து வடிவேலு தொங்கினான். பதினாறில் ஏழரையடி, போக மீதி உயரத்திலிருந்து குதித்தான்.

''யாரு நீ?'' நர்ஸ் கத்தினாள்.

''போலீஸ்'' பதில் சொல்லி விட்டுக் கட்டடம் சுற்றி ஓடினான். வாயில் கவ்விக் கொண்டிருந்த ஸ்டெதாஸ்கோப்பைக் கைக்கு மாற்றினான்.

போலீஸ் வேன் உள்ளே நுழைய பைனாக்குலர் பின் வாங்கிக் கொண்டது. வயிற்று வலி கூர்க்கா பின்னடைந்து படுக்கைக்குப் போனான்.

பைனாக்குலர் ஆள் திரைச்சீலையை தொங்கவிட்டு எதிர்ப்பட்ட ஆஸ்பத்திரியை உற்றுப் பார்த்தான்.

என்னவித பாரா வேலை, யாருக்குப் பாரா என்று தெரியாத போலீஸ்காரர்கள், விட்டேற்றியாய்ப் பூட்ஸ் காலில் லட்டியைத் தட்டிக் கொண்டு நின்றார்கள்.

ஒரு கமாண்டோவின் தங்கைக்குப் பாதுகாப்புத் தர என்று ஏட்டு டாக்டரிடம் விளக்கியதும் டாக்டர் வழிகாட்ட மாடிப்படி களில் ஏறினார்கள். அலுப்பாய்ப் பேசினார்கள்.

''பாரா படி இங்கன கொண்டாந்து தருவாங்களாண்ணே?''

''முதல்ல சோத்துக்கு வழி பார்க்கணும்டா.''

''ஆஸ்பத்திரியில இருக்காது?''

''இதை யார் சாப்பிடறது? எதிர்ப்பக்கம் பரோட்டா போட றான்.'

''மினிஸ்டர் பொண்ணா ஆஸ்பத்திரில இருக்கிறது?''

''எவளோ ஒருத்தி.''

வடிவேலு ஆஸ்பத்திரி விக்கட்டே வழியே வந்தான். மின்னல் வேகத்தில் தார்ச் சாலை கடந்தான். முன்பக்கம் மனைவியை ஏற்றியபடி சிரமப்பட்டு சைக்கிள் மிதித்தவன் வடிவேலுவுக்குப் பயந்து சைக்கிளை நச்சென்று நடைபாதையில் முட்டினான்.

''இது மூணாம் தடவை. நான் பஸ்ஸுல போறம் போ...'' அந்த மனைவி அவனை உதறி இறங்கினான்.

''ஏய் சோம்பேறி,'' வடிவேலுவைப் பார்த்து சைக்கிள்காரன் கத்தினான்.

அந்தக் கூச்சல் பைனாக்குலர் ஆளைத் திருப்பியது.

வடிவேலு கை உயர்த்தி மன்னிப்பு கேட்கிற பாவனை பைனாக்குலரில் தெரிந்தது. இந்த ஆள் எதிர் ஆஸ்பத்திரி பக்கம் உள்ளவன் இல்லையா? சந்தேகம் வந்தது? டாக்டரா ஸ்டெத்தாஸ்கோப் கேள்வி தொடுத்தது.

எதிர்ப்பக்கம் அதே இடத்தில் ஓர் ஓட்ட வெட்டி கிராப் ஆள் இவனையே பார்த்துக் கொண்டிருக்கிறான். இவனுடைய கிராப் ஓட்ட வெட்டியிருக்கிறது. இந்த ஆஸ்பத்திரி கதவு தாண்டுகிறான். உள்ளே வருகிறான், டாக்டரா? டாக்டர் கிராப்பா அது?

எதிர் ஆள் படியில் தாவி இறங்குவது தெரிகிறது. இல்லை, டாக்டர் இல்லை. சட்டென்று அறைவிட்டு வெளியே வந்தான். மாடிப்படி வழியே கீழே கவனித்தான். அவன் ரிசப்ஷனிஸ்டிடம் ஏதோ பேசுவது தெரிந்தது. அவள் மறுக்க ஒரு நிமிடம் என்று சொல்லிவிட்டுப் படிகளில் ஏற மின்னல் வேகத்தில் பைனாக்குலர் ஆள் வராண்டாவின் கோடிக்குப் போனான். எதிர்ப்பக்கக் கடைசி அறைக் கதவு திறந்தான். உள்ளே ஒரு கிழவர் மல்லாக்கக் கிடந்தார். இரண்டு பெண்கள் தரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''ஹாட் வாட்டர் பைப் ரிப்பேர்.''

அறையின் ஜன்னல் வழியே ஆஸ்பத்திரி பின்பக்கம் பார்த்தான். கம்பியில்லாத ஜன்னல் வெளியே எகிறிக் கீழ்ப் பக்க சிமெண்ட் சன்ஷேடில் குதித்தான். அதில் தொற்றி உடம்பி றக்கித் தரைக்குத் தாவினான். பின் பக்கக் காம்பவுண்ட் சுவர் எகிறினான்.

வடிவேலு அறைக் கதவு தட்ட பைனாக்குலர் ஆசாமி ஆஸ்பத்திரி சுற்றி ஓடினான்.

கதவு தள்ள, திறந்தது. உள்ளே ஆள் இல்லை. ஓடி ஜன்னல் வழியே பார்த்தபோது டேவிட் தெருவைக் கடந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''டேவிட்.''

''சார்.''

வடிவேலுவின் இடது கை கட்டைவிரல் தலைகீழாய் நெகடிவ் என்று சைகை செய்தது. 'அங்கேயே இரு' என்று சைகை செய்தது.

டேவிட் அந்த ஆஸ்பத்திரியின் தெருவோரச் சுவரும் உள் பக்கச் சுவரும் கூடும் இடத்தில் நின்றான். காஞ்சனாவின் அறையை அங்கிருந்து பார்த்தான். இரண்டு போலீஸ்காரர்கள் நிற்பது தெரிந்தது.

ஆஸ்பத்திரி பின்பக்கச் சுவரின் அந்தப் பக்கம் யாருடைய தலையோ எகிறி எகிறி ஓடுவது தெரிந்தது. எதிர் கொண்டு ஓடலாமா, நிற்கலாமா? நேர் எதிரே அந்த ஆள் நிமிர்வது தெரிந்தது. பைனாக்குலர் ஆள், சட்டென்று வடிவேலு சுவரோரம் குந்திக்கொண்டான்.

''என்னாங்க வோணும்?'' இளநீர் விற்பவன் இடுப்பில் கை வைத்துக் கேட்க, டேவிட் பல் கடித்தான்.

''உதை படுவே, பேசாத உட்கார்.''

''என்னா?''

''உட்கார் அப்படி.''

''போலீஸா?''

''வேட்டி அவரு.''

''என்னது?''

''வேட்டி அவரு. உள்ள நிக்கர் போட்டுருக்க இல்ல...'' டேவிட் அவன் சிவப்புச் சாய வேட்டியைப் பற்றி இழுத்தான். பீடி கட்டும் சில ரூபாய் நோட்டுகளும் விழுந்தன. உருவின வேட்டியைத் தலையில் போர்த்தியது போல் போட்டுக் கொண்டு எழுந்து நின்றான்.

உள்ளே அறை அறையாக வடிவேலு நுழைய, கடைசி அறை பெண்கள் இந்த முறை பயந்து எழுந்தார்கள்.

''என்ன இது இவ்வளோ கலாட்டா?''

''என்ன கலாட்டா?''

''ஒரு ஆளு ஜன்னல்?'' எட்டிப் பார்க்க, ஒரு ஆள் பின்பக்கச் சுவரின் மறுபுறம் எட்டிப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. வலது கோடி முனையில் நின்று தெருவைப் பார்ப்பது புரிந்தது. ''பாஸ்டர்ட்.''

''வெந்நீர் பைப்பு ரிப்பேருன்னாரு. நீங்க யாரு?''

வடிவேலு கீழே ஓடினான். படியில் வயதான அம்மா ஏறி வர, ஒதுங்கிக் கொண்டான்.

சிவப்புச் சாய வேட்டியில் நிற்கும் டேவிட்டை அவன் கவனிக்கவில்லை. நேர் ஓட்டமாய் வந்து சுவர் தாண்டினான். டேவிட்டைக் கடந்தான்.

இவன் மட்டும்தானா? வேறு ஆட்கள் உண்டா? டேவிட் கண்கள் சகல பக்கமும் அலைந்தன. தெரு சாதாரண இயக்கத்தில் இருந்தது.

'அடித்து போடலாமா? கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாமா?'

பைனாக்குலர் நடக்கத் துவங்க, டேவிட் பின்தொடர...

''ஏங்க, வேட்டி... என் வேட்டி...'' இளநீர் கடைக்காரன் வேட்டிக்குப் பின் தொடர்ந்து கை நீட்ட, வேட்டியை விலக்கி அவனிடம் தூக்கிப் போட்ட சமயத்தில் பைனாகுலருக்கும் டேவிட்டுக்கும் இடைவெளி இருபதடி.

பைனாக்குலர் ஆசாமி புரிந்து கொண்டு ஓட, டேவிட் துரத்த, வடிவேலு ஆஸ்பத்திரி வாசலுக்கு வந்தான். ஓட்டப் பந்தயம் பார்த்தான்.

சிக்னல் தாண்டிச் சீறிவரும் பஸ்ஸின் அருகே அதன் வேகத்தோடு ஓடித் தொற்றிக்கொள்ள, டேவிட்டும் பைனாக்குலரும் ஓடுவதைத் தெரு கவனிக்கத் தொடங்கிவிட்டது.

பஸ் டேவிட்டைத் தாண்டியது. பைனாகுலரைத் தாண்டியது. பின்பக்கம் ஆட்டோவும் ஸ்கூட்டரும் முழு வேகத்தில் வந்து கொண்டிருந்தன. அவற்றை நிறுத்தச் சொல்லி சைகை காட்டி பஸ்ஸிலிருந்து கீழே குதித்தான். ஸ்கூட்டர் வேகம்

மட்டுப்படுத்தி அலைய தாண்டி நடைபாதைக்கு ஓடினான். இரும்பு வளையம் மீறிப் புன்னை மரம் வளர்ந்திருந்தது. ஒண்டிக் கொண்டு பார்க்க பைனாக்குலர் ஓடி வருவது தெரிந்தது. டேவிட் வேகத்தை மட்டுப்படுத்தாது இருப்பது நல்லது என்று தோன்றியது.

ஓடி வருபவனைத் தாண்ட விடுவதா? எதிர் கொண்டு தாக்குவதா? இரண்டுமில்லை. மிகச் சரியாய் அவனைப் பக்க வாட்டில் தாக்க வேண்டும். தெருவில் போய் விழுவானே. ஒண்டிக் கொண்டான்.

தடதடப்புச் சப்தம் அருகே கேட்டது மனசு கணக்குச் சொல்ல, புன்னை மரம் விட்டு வெளியே வந்தான். பைனாக்குலர் ஆசாமி அவன் வெளியேறும் விதம் கண்டு மிரண்டு நிற்க -

சட்டென்று அவன் முகத்தில் வடிவேலு முதல் குத்து இறக்கினான். அவன் தடுமாறிக் கைகள் உயர்த்த, உயர்த்திய வலக்கையைப் பிடித்து மணிக்கட்டை நெறித்தான். பைனாக்குலர் கால் துழாவி வடிவேலு புஜத்துக்கு வர முழங்கையால் அதைத் தடுத்து வலக்கையை முறுக்கித் திருப்பினான். பின் முழங்காலில் எட்டி உதைத்தான். கால் வளைய இடக்கையால் அவன் தலை அழுத்தித் தரையில் சரிய வைத்தான். பைனாக்குலர் வலது கை முற்றிலும் மடிந்து அவன் முதுகோடு இருந்தது.

டேவிட் ஓடிவந்த வேகத்தில் அவன் இடுப்பில் உதைத்தான்.

''சாப், இன்னொரு ஆள் ஆஸ்பத்திரியில் இருக்கிறானே'' டேவிட்டுக்கு மூச்சிரைத்தது.

''கீழ்வார்ட் கூர்க்காதானே, நான் போகிறேன். இவனைப் பிடி.'' வடிவேலு எழுந்து ஓடினான்.

டேவிட் அவன் முடியைக் கொத்தாய் இடக்கையில் பிடித்து வலக்கை அவன் பிடரியில் வைத்துத் தரையோடு அழுத்திக் கொண்டான்.

பைனாக்குலர் திமிறியது. அங்கே வந்து எட்டிப் பார்த்தவன் காலைப் பிடித்து இழுக்க, அந்த ஆள் சொத்தென்று தரையில் விழுந்தான். அலுமினிய டிபன் பாக்ஸ் தரையில் உருண்டது. தக்காளி சாதம் தரை சிந்தியது.

ஆட்கள் அதிகமாய் ஓடிவந்தார்கள். பாரிமுனை பஸ் நிதானமாய்ப் பார்த்தபடி கடந்தது. பஸ் மொத்தமும் முகங்கள். அத்தனை முகங்களும் விசாரித்தன.

''சோத்தத் தட்டிவுட்ட பேமானி'' தரையில் விழுந்தவன் கை மண்ணெடுத்து பைனாக்குலர் முகத்தில் அடித்தான், பாதி மண் டேவிட் முகத்துக்கு வந்தது.

''யேய்...'' டேவிட் முகத்தால் புறம் துடைக்கப் பிடரியில் அழுந்திய கை வலுத் தளர அது பைனாக்குலருக்குப் போதுமாய் இருந்தது. உதறினான்.

டேவிட் பிடி தளர்ந்தது. மண் முகத்தோடு டேவிட் மீது பாய்ந்தான். மல்லாக்கத் தள்ளினான். இடது கை கட்டை விரலால் டேவிட்டின் வலது கண்ணை அழுத்தினான். டேவிட் எட்டி உதைக்க முழங்காலால் தடுத்தான்.

டேவிட் எட்டி அவன் இடுப்பு தட்டி கீழே சரிக்க, யாரோ கை குடையால் பைனாக்குலர் தலையில் அடித்தார்கள். பைனாக்குலர் எகிறித் திரும்பி குடை பிடுங்கியது. அடித்தவனைத் தள்ளி நச்சென்று நெஞ்சில் குடையால் குத்தியது.

குடையைக் கத்தி மாதிரி வைத்துக் கொண்டு பைனாக்குலர் சுழற்றினான். டேவிட் சுதாரித்து எழுந்து அவனிடம் நெருங்கக் குடை வீச்சு டேவிட்டின் இடது கையில் விழுந்தது. கூட்டம் விலகி ஓட, பைனாக்குலர் பின்னடைந்தான். 'ணங்' கென்று மின்கம்பத்தில் முட்டிக் கொண்டான். கூட்டம் தொலைவாய் வளைத்துக் கொண்டு அவன் மீது கல் எறிந்தது.

''யோவ், சும்மா இருங்கய்யா ட்ராப் இட். ட்ராப் இட்.'' டேவிட், நெருங்க பைனாக்குலர் மின் கம்பத்தில் தாவி ஏறினான். ஆறு எம்புதலில் உயரே போய் நின்றான்.

போக்குவரத்து ஸ்தம்பித்தது. கற்கள் பறந்தன. ஓர கடையில் கோணிப் படுதா கட்டியிருந்த கம்பு உருவி யாரோ அவன் காலில் அடித்தார்கள். பைனாக்குலர் இன்னும் மேலே ஏறினான்.

''உன் மிலிட்டரி வேலை இங்கே நடக்காதுடா நாயே'' ஹிந்தியில் கத்தினான்.

நாலாபுறமும் சுற்றிப் பார்த்தான்.

''ஐயம் எ ரிபல் ஃப்ரம் அஸாம். வி வில் வின்... வி வில் வின்.''

கம்பி தொட்டான்.

கோரமாய்ச் சத்தம் கிளம்பி நெருப்புப் பொறி தெறித்தது.

அருகே உள்ள ட்ரான்ஸ்பார்மர் 'டொப்' என்று வெடித்தது. அலறல் நீடித்துத் தேய்ந்தது.

தொப்பென்று தரையில் விழுந்துச் சுருண்டான். டேவிட். அவனைப் புரட்டிப் போட, பைனாக்குலர் ஆளின் அடிப்பட்ட நாக்கிலிருந்து ரத்தம் பொங்கியது.

அவன் வேண்டிய விடுதலை வெகுதொலைவில் இருப்பது போல் அவன் கண்கள் எங்கோ உயிரற்றும் பார்த்துக் கொண்டிருந்தன.

15

ஒரு மனிதனின் மரணம் அவன் சக மனிதனைக் கடுமையாய்ப் பாதிக்கும். காரணம், ஒருநாள் இது தனக்கும் நேரும் என்கிற தீர்மானம். விடுதலை புரட்சிக் குடும்பம், மனைவி, பணம், தாய், மகள், மகன், மண், மதம், கடவுள், உணவு, உறைவிடம், ராணுவம் எல்லாம் உதவி இவையெதுவுமே எனக்குச் சம்பந்தமில்லை என்று உதறி, எங்கோ எங்கோ போகப் போகிறோம் என்று அறிந்திருத்தலே காரணம்.

ஆனால் ஓர் ஆச்சரியம், இது உறுதியாய், மிக வலிமையாய் மனிதனுக்குத் தெரிந்தபோதும் அவன் தன் மரணத்தைத் தனக்கு மரணம் நிகழும் என்பதை ஏற்றுக்கொள்வதில்லை, ஏற்றுக்கொண்டால் புரட்சி இல்லை விடுதலை இல்லை. குடும்பம் இல்லை. மதம் இல்லை. கடவுள் இல்லை.

எல்லாம் எல்லாம் உடைக்கப்படும் என்று தெரியவில்லை.

டேவிட், ஒரு கணம் தனது நெஞ்சில் கை வைத்து அந்த பிணத்தின் முன்பு நின்றான். திருப்பி ஆஸ்பத்திரி நோக்கி வடிவேலு போன வழி போனான்.

அவனுக்கு மத்தேயுவின் சுவிசேஷம் நினைவுக்கு வந்தது.

யேசு கோயிலை விட்டுப் போய்க் கொண்டிருந்தார். அவருடைய சீடர்கள் அவரிடம் வந்து கோயில் கட்டடங்களை அவருக்குக் காட்டினார்கள்.

அவர், அவர்களுக்கு ''இவையெல்லாம் பார்க்கிறீர்களே.. உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இங்கே கல்லின் மேல் கல் இராதபடி எல்லாம் இடிபடும்.''

கோயிலைக் குறித்து மட்டும் யேசு அப்படிச் சொல்ல வில்லை என்று டேவிட்டுக்குத் தோன்றியது.

'வீ வில் வின்... வீ வில் வின்... எது வெற்றி? இப்போது வெற்றி என்பது உனக்கு என்ன? நீ யாரை ஆதரித்துக் கூச்சல் போட்டாய்? நீ இன்று ஆதரித்தவரை எதிர்த்து இன்னும் சில வருடத்தில் வேறு கூச்சல் வராதா? அப்போது உன் இடம் எது? என்ன கூச்சல் உன்னுடையது? எதிர்ப்பே வாழ்க்கையா? வீ வில் வின் என்பதே எப்போதும் உன் கோஷமா? வெற்றி... எதை நோக்கி வெற்றி?

டேவிட் திரும்பிப் பார்த்தான். கூட்டம் அந்த பைனாக் குலர் ஆள் சுற்றி அதிகம் கூடியது. வடிவேலு சார் சொன்ன வேலையைத்தான் சரியாய்ச் செய்யவில்லையோ என்கிற பயம் வந்தது. அவனை அடித்து மயக்கமுறச் செய்திருக்க வேண்டும். அல்லது கைஎலும்பை உடைத்திருக்க வேண்டும். தவறு நடந்து விட்டது. இன்னொரு ஆள் அகப்படுவானா?

நடையை ஓட்டமாய் மாற்றினான்.

வடிவேலு வார்டின் கோடியிலிருந்து அந்த ஆளைக் கவனித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அந்தப் பார்வை மறு முனையில் பதிந்திருப்பது அறிய முடிந்தது. வடிவேலு நகர, டேவிட் வடிவேலு பார்த்த முனைக்கு வேகமாய்ப் போனான். இப்போது வடிவேலு நடந்து வருவது நேர் எதிரே தெரிந்தது. 'ஆள் எங்கே?' டேவிட் தேடினான். வடிவேலு சட்டென்று ஒரு கட்டிலுக்கு அருகே நின்று உள்ளே படுத்திருப்பவனை இழுத்து வெளியே போட அந்த அஸாமி இளைஞன் பதற் றத்துடன் எழுந்திருந்தான். வடிவேலுவை விட்டு நகர முற்பட் டான். வடிவேலுவும், டேவிட்டும் ஒன்றாய் அந்த ஆளின் தோளில் கை வைத்தார்கள். அழுத்தினார்கள். நிமிட நேரத்தில் வெளியே அவனைக் கொண்டு வந்து போலீஸ்காரர்கள் வந்த வேனில் ஏற்றினார்கள்.

அவன் எதிர்ப்புக் காட்டவில்லை.

''என் நண்பன் எங்கே?'' என்று மட்டும் கேட்டான்.

டேவிட் பதில் சொல்லவில்லை. வடிவேலு நிமிர்ந்து பார்த்தபோது, ''கம்பத்துல ஏறி மெயின் லைன்ல கை வச்சுட் டான் சார். அஸ்ஸாம் புரட்சி படையின்னு சொன்னான். புரட்சி வாழ்கன்னுட்டு கை வச்சுட்டான். வச்சதும் உயிர் போயிடுச்சி.''

''மறுபடி அதே மாதிரி மாட்டிக்கிட்டோம் டேவிட்.''

''நம்ம ஜீப் இருக்கு சார். இவனை அதில தூக்கிப் போட்டுக் கிட்டு சட்டுன்னு போயிடலாம்.''

''வேணாம். நிறைய பேர் பார்த்துட்டாங்க. அங்க பார்... டிராஃபிக் ஜாம் ஆயிடுச்சு.''

''இங்க ஒருத்தனை புடிச்சிருக்காங்கப்பா... 'வெளியே வேனை உரசிக்கொண்டு யாரோ கூவினார்கள். அதிகம் அங்கே யும் ஆட்கள் சேர்ந்தார்கள்.

''எதற்கு இந்த ஆஸ்பத்திரியில் தங்கி இருக்கிறாய் தோழா?'' அந்த அஸ்ஸாமியின் முகம் நிமிர்த்தி ஹிந்தியில் வடிவேலு கேள்வி கேட்டான்.

''நீ யார் என்று அறிவதற்கு.''

''நான் யாம் என்றா... ஏன்?''

''எங்களை நீ வேவு பார்க்க வந்திருக்கிறாயா என்கிற சந்தேகம்...''

''நீங்கள் யார்?''

''புரட்சிப்படை. தனி மாநிலம் அஸ்ஸாமியர்களுக்கு வேண்டும். இந்தியாவின் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை.''

''சமு. அது உன் பிரச்சினை. என் தங்கை மீது ஏன் திராவகம் ஊற்றினாய்? அவளை எதற்கு நாசமாக்கினாய்?''

''பொதுமக்களைத் துன்புறுத்துவது எங்கள் படையின் நோக்கமல்ல.''

''தவறுதலாய் ஊற்றிவிட்டார்களா?''

''இல்லை. அதை நாங்கள் செய்யவில்லை.''

''பிறகு ஏன் இங்கு...?''

''மிக மோசமான கூட்டம் ஒன்று தமிழ்நாட்டில் இருக்கிறது.''

''தமிழ்ப் போராளிகள் செயலா?''

''அவர்களும் இல்லை.''

''பிறகு...''

''இதற்கு மேல் சொல்ல எனக்கு அதிகாரம் இல்லை.''

''உன்னைச் சொல்ல வைக்க என்னால் முடியும்.''

''முடியாது நண்பனே. நாங்கள் வலியோடு பழக்கப்பட்டவர்கள்.''

''எத்தனை பேர் இருக்கிறீர்கள் இங்கு?''

''உனக்குத் தேவையில்லாத கேள்வி.''

''எனக்குத் தேவையானதற்குப் பதில் சொல். யார் செய்தது இந்தக் கொடுமையை?''

''எங்கள் புரட்சிப் படையோ, போராளியோ இல்லை. இந்தியாவை நாசமாக்குவது இந்தியன்தான்.''

''போலீஸா?'' டேவிட் கேட்டதுக்கு அவன், 'முட்டாளே' என்பது போல் சிரித்தான்.

''பின் நீ எதற்கு இங்கே மறைந்திருக்கிறாய்... அந்த பைனாக்குலர் ஆசாமியின் வேலை என்ன?''

''உன் வருகை எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.''

''பயந்து விட்டீர்கள்.''

''பயமில்லை. பாதுகாப்பாய் இருக்க நினைத்தோம்.''

''யார் செய்தது?''

''எனக்கு அதிகாரமில்லை.''

வடிவேலு தன் வலது காலை உயர்த்தி அவனைத் தாக்கத் தயாரானான். அவன் சிரித்தான். கால் மெல்ல கீழிறங்கியது.

''வா என்னோடு...'' வடிவேலு. கீழிறங்கினான்.

''சார்... ஓடிடுவான்.'' டேவிட் கத்தினான்.

''ஓடட்டும்...'' அவனைக் கைப்பிடியாய் கீழிறக்கினான். தள்ளிக் கொண்டு படியேறினான்.

தொலைவில் கூட்டம் கூடிய இடத்தில் இப்போது போலீஸ் வந்து இறங்கியது. போலீஸ் பார்த்ததும் அந்த இளைஞன் கவலையானான்.

''பயப்படாதே உன்னோடு எனக்குச் சண்டையில்லை. தேவையில்லாது மரணமடையாதே. வா என்னோடு.''

பத்து தாவலில் மேல் பகுதி அடைந்தார்கள்.

''சார்... உள்ளே போகக்கூடாது'' போலீஸ் தடுக்க தன் அடையாள அட்டை காட்டினான். அந்தப் பொண்ணுக்கு அண்ணன் என்றார். டாக்டர் இளைஞன் சைகை செய்ய, உள்ளே போனார்கள்.

''உன் பெயர் என்ன?''

''தேரோ..... தேரோ பட்நாயக்.''

''நல்லது தேரோ. உனக்கு வலி தாங்க முடியும். எனக்கும் முடியும். ஆனால் இவளுக்கு முடியாது. எந்தப் பாவமும் அறியாத சாதாரண இந்தியச் சிறுமி இவள். என் தங்கை. இது ஏன் செய்தீர்கள்? பார்... பார்த்து விட்டுச் சொல்.... ஏன் இந்தக் கொடுமை செய்தீர்கள்?''

''மறந்தும் இந்த மாதிரிக் கொடுமைகளை நாங்கள் செய்வதில்லை, மேஜர்.''

''பிறகு யார் தேரோ?''

''நான் வெறும் மேஜரில்லை, தேரோ. கமாண்டோ.''

''தெரியும்.''

''இதைக் கண்டுபிடிக்காமல் சாகமாட்டேன்.''

தேரோ அசையாது நின்றான்.

''சொல்''

தேரோ பேசாது காஞ்சனாவையே பார்த்தான்.

''சொல்... ஏன் இது?''

''எனக்கு அதிகாரமில்லை மேஜர்.''

''உன்னை விடுவிக்கிறேன் தேரோ. போலீஸ் வரும் முன் ஓடிப் போ.''

''சார்.....'' டேவிட் பதறினான்.

''இது நம்ம வேலையில்லை, டேவிட். நீ போகலாம் தேரோ.''

''தேரோ நம்பிக்கையில்லாமல் நின்றான்.''

''நீ போகலாம். வா... நான் வாசல் வரை வருகிறேன். உன் உடைமை ஏதேனும் உண்டா?''

''உண்டு?''

''என்ன?''

''ஒரு பிஸ்டல்.''

''அஸாமிலிருந்து கொண்டு வந்தாயா?''

''இல்லை இங்கேயே கிடைக்கிறது.''

''உன் புரட்சிப் படை முட்டாள்தனமாய்ச் செயல்படுகிறது. தேவையில்லாமல் உங்கள் ஆட்கள் இருவரைப் பலிகொடுத்து விட்டீர்கள். இனி இது பெரிதாகும். உடனே ஊருக்குப் போ. இங்கே தற்கொலை செய்து சாவதை விட அங்கு துப்பாக்கி ஏந்தி மடிந்து போ.''

''நான் போகலாமா?''

''போகலாம்.''

உடனடியாய் அவர்கள் வாசலுக்கு வந்தார்கள். தொலைவில் கூட்டத்திலிருந்து ஜீப் கிளம்பி ஆஸ்பத்திரி நோக்கி வந்து கொண்டிருந்தது. அவன் தன் படுக்கைக்குப் போய்த் துணிச் சுருளிலிருந்து சட்டென்று பிஸ்டல் எடுத்து போட்டுக் கொண்டான்.

''நான் போகலாமா?''

''போ. ஜீப் வருகிறது. சீக்கிரம் போ.''

''மேஜர்.''

''சொல்.''

''நன்றி.''

வடிவேலு பேசாதிருந்தான்.

''அதிகாரப்பட்டவர்கள் உங்களுக்குத் தகவல் தரக்கூடும். நன்றி, மேஜர்.'' விறைப்பாய் நின்றான். போலீஸ் ஜீப் பக்கம் திரும்பினான். சரசரவென்று நகர்ந்தான். ஓடினான். காணாது போனான்.

தேடி வருகிறவர்கள் எதிர் நோக்கி ஓடி மறைவது துப்பறிகிறவர்களுக்கே உண்டான கெட்டிக்காரத்தனம். பாகிஸ்தானில் ஒரு இந்திய ஸ்பை துரத்தப்பட்டபோது இந்திய எல்லை வரை வந்துவிட்டு உடனே எல்லை தாண்டாது. மறுபடி எதிர்திசை நோக்கி ஓடித் துரத்தியவர்களைக் கடந்து பாகிஸ்தானின் மறு எல்லைக்குப் போய் அங்கிருந்து ஸ்பீட் போட் திருடி, பம்பாய் அடைந்த கதை. உண்டு. நூறு சதவிகித ரிஸ்க் ஆனால் வெற்றிக்குப் பலத்த வாய்ப்பு உண்டு.

இந்த அஸ்ஸாமி பயமே இல்லாது தாண்டுகிறான். வடிவேலுவைக் கவலை கப்பிக் கொண்டது.

என்ன நடக்கிறது. தமிழ்நாட்டில் என்று வேதனை வந்தது.

ஜீப் அருகில் வந்தது.

இன்ஸ்பெக்டர் கீழிறங்கினார். வடிவேலு அவரைப் பார்த்துச் சிநேகமாய் சிரித்தான்.

அந்தச் சிரிப்பு இன்ஸ்பெக்டருக்குப் பிடிக்கவில்லை.

''யாருங்க?''

''மேஜர் வடிவேலு. கமாண்டோ.''

''நீங்கதானா? ஏன் துரத்தினீங்க....?''

''எதிர் ஆஸ்பத்திரிலேருந்து பைனாக்குலர்ல பார்த்தான். சந்தேகப்பட்டுப் போனேன். எகிறி ஓடி எலக்ரிக் லைன்ல கை வச்சுட்டார்.''

''யாரு?''

''தெரியலை.''

''பேர் என்ன?''

''புடிக்கிறதுக்குள்ள கை வச்சிட்டான்.''

''ஒரு மொட்டைத் தலை ஆளைத் துரத்தினீங்களே நேத்து?''

''இல்லை. இவன்தான் எங்க வார்டையே பார்த்துக்கிட்டிருந்தான்.''

''நேத்து ஒரு ஆள் ரயில்ல அடிபட்டுப் போயிட்டான்.''

''அப்படியா?''

''எங்க தெரியுமா?''

''சொல்லுங்க...''

''உங்களுக்குத் தெரியுமான்னு கேட்கறேன்.''

''பேப்பர்ல எதோ போட்டிருந்தது. எனக்குத் தெரியலை.''

''எந்த பேப்பர்ல அஸ்ஸாம்னு போட்டிருந்தது.''

''மொட்டைத் தலை ஆளு ரயில் மோதி செத்தது போட்டிருந்தது. அடையாளம் தெரியலையாமே?''

''குடைல குண்டு வச்சு கொடுத்திருக்காங்க சார்.''

''குடைல குண்டு வைக்க முடியுமா?''

''இரண்டு ஜெலடின் குச்சி. குடைக்கம்பி சைஸ்ல வச்சிருக்கான். திறந்த நேரம் கண்டக்டர் டிரைவர் காலி. ஏஸி உங்களை காண்டாக்ட் பண்ணி விசாரிக்கச் சொன்னாரு. இவரு யாரு?''

''ஆவடி போலீஸ் கமாண்டோ இன்ஸ்பெக்டர் டேவிட். ஆபத்சகாயம்.''

''குட்மார்னிங், சார்.'' டேவிட் சல்யூட் அடித்தான்.

''நீயேன்யா இதுல மாட்ற?''

''இவர் எங்க வாத்தியார். இவர்கிட்ட தான் டிரெயினிங் எடுத்தேன். சும்மா சார் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்.''

''பாதுகாப்புப் போட்ட பிறகு நீங்க ஓடியாடித் துரத்துனா எங்களுக்குக் கஷ்டம். இப்ப நான் என்னன்னு எப்ஐஆர் போடறது?''

''எதுனா போடுங்க.''

''உங்க பேர் போட்டுட்டா?''

''தாராளமா... கேஸ் பெரிசாவும்.''

''எப்படி?''

''அந்தாள் பின்னாடி பல விஷயம் இருக்கு.''

''எங்களுக்குத் தெரியும் சார். நாங்க பார்த்துக்கிட்டு தான் இருக்கோம்.''

''நிதானமா பாருங்க. நான் வரேன். டேவிட் ஜீப் எடு. செக்ரடேரியட் போ.''

கோட்டை நோக்கி ஜீப் போயிற்று.

தென் மாநில தலைமை ராணுவ அதிகாரியின் அலுவலக வாசலில் வடிவேலு இறங்கினான். தன் வருகை சொன்னான். அவசரம் என்றான்.

இரண்டாவது நிமிடம் சட்டசபை வளாகத்துக்கு எதிர்ப்புறம் தனியே தோப்புக்குள்ளே உள்ள கட்டடத்தில் தன் தங்கைக்கு நேர்ந்ததும், தான் செய்ததும் சொன்னான். டெல்லியில் கமாண்டோ பிரிவு அதிகாரியிடம் பேச விருப்பம் தெரிவித்தான்.

இந்திய ராணுவத்தில் உளவாளிக் குழு ஒன்று உண்டு. அந்தக் குழுவில் யார் யார் இருக்கிறார்கள் என்பது இந்தியாவில் பத்துப் பேருக்குத்தான் தெரியும். அந்தக் குழு டெல்லியில்

கூடிப் பேசியது. சென்ட்ரல் பீரோ ஆஃப் இன்டலிஜென்ஸ் என்கிற இன்னொரு அரசு நிறுவனத்துக்குத் தகவல் சொன்னது.

சென்னையில் பலர் தட்டி எழுப்பப்பட்டார்கள். சாடிலைட்டோடு தொடர்பு கொண்டு பல சங்கேத மொழிகள் சென்னைக்கு வந்தன. இடைவிடாது பேசின. மெரினாவுக்கு அருகே உள்ள போலீஸ் தகவல் தொடர்பு மையம் விழித்தது.

வடிவேலுவுக்கு நாலு மணி நேரம் கழித்துப் பதில் வந்தது. ''அரசு நிறுவனங்களைப் பகைத்துக் கொள்ளாது தொடர்ந்து வேலை செய். உன்னைச் சுற்றி பலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உன் தங்கையை மிலிட்ரி ஆஸ்பத்திரியில் சேர்த்து விடு. தற்காப்பு தவிர வன்முறை வேண்டாம். உன்னுடைய கோட் நேம், துரோணன். உன்னைத் தொடர்பு கொள்பவரின் சங்கேத வார்த்தை 'இனி இரவு' பதில் வார்த்தை 'எழுந்திரு.'

16

இனி இது ஒருபோதும் தனிப்பட்ட வேலை இல்லை. அரசு வேலை.

இத்தனை துரிதமாய் அரசு செயல்பட்டதில்லை. எப்போதாவது செயல்படும். உன் வேகத்துக்கு என்னை இழுக்காதே என்று ராணுவத்தை முறைக்கும். யுத்தமா நடக்கிறது இப்போது? எமர்ஜென்சியா நாட்டில் என்று அலுப்போடு பேசும். நாலு மணி நேரத்தில் இந்தத் தகவல் பழமாக மடியில் விழுந்ததென்றால், அரசு இதை வெகுநாளாய்க் கவனிக்க, வளரட்டும் பார்ப்போம் எனக் காத்திருந்து வெட்ட இப்போது கத்தி தீட்டுகிறது.

இல்லை, வேறு ஏதாவது காரணம் இருக்குமா? எதிர்க்கட்சி அரசாளும் இடத்தில் ஆளும் மத்திய அரசுக் கவனமாய் இருப்பது போலவா? குற்றம் கண்டுபிடிக்கிற முயற்சியா? சடசடவென்று ஊடுருவிய தீவிரவாதிகள் வளைத்துப் போட்டுவிட்டுச் சட்டம் ஒழுங்கு சரியில்லை என்கிற பிரசாரம் துவங்குமா?

தலைக்கு மேல் ஏதோ நடக்கிறது. தெரியவில்லை. தெரிந்து கொள்ள நியமித்திருக்கிறார்கள். ''இனி இரவு, எழுந்திரு'' என்று கோர்ட் வேர்ட் கூறினார்கள்.

சரி. இனி என்ன வேலை? யார் உத்தரவு? என்ன இயக்கம்? எவ்விதம்? தனியாகவா? குழுவுடனா? தனியாகச் சென்னையில் இயங்க முடியுமா? இனி டேவிட்டை மற்றவர்களைத் துணைக்குச் சேர்க்க முடியுமா? அவர்கள் செய்த உதவி என் சொந்த நலனுக்கு... இனி இது அரசு வேலை. டேவிட், மணி எப்படி வர முடியும்? பிழைப்புப் போகுமே, கேள்வி வருமே.

''யெஸ் மேஜர்'' எதிரே உள்ள ராணுவ அதிகாரி மெல்ல எழுந்தார்.

''ஒரு விண்ணப்பம் ஐயா ஆன் டெபுடேஷன் என்று லோக்கல் போலீஸை நாம் எடுக்க முடியுமா?''

''பெரிய அதிகாரிகள் லெவலில் முடியும். ஏன்?''

''சப்-இன்ஸ்பெக்டர் லெவலில்?''

''முடியும். முடியாதது ஏதுமில்லை. உனக்கு, கூட ஆட்கள் வேண்டுமா?''

''ஆம். வெறும் ஆட்கள் அல்ல பயிற்சி பெற்றவர்கள். என் ஓட்டம் அணுகுமுறை புரிந்து செயல்படுபவர்கள்.''

''மெட்ராஸ் ரிஜிமெண்ட் உண்டு மேஜர்.''

''லோக்கல் ஆட்கள் வேண்டும் சாகேப்.''

''ஆட்களைத் தேர்ந்தெடுத்து விட்டாயா?''

''ஆம் சாகேப் ஆவடி கமாண்டோ ட்ரெயினிங் சென்டர்.''

''விவரம் கொடு. அவர்கள் மீது பாரம் சுமத்தாதே. துணையாய் உனக்குப் பாதுகாப்பாய் வைத்துக் கொள். மற்றபடிக்கு நீ இறங்கியிருப்பது நெட்டி வேலை. ஜாக்கிரதையாய்க் கைவை.''

வடிவேலு விடை பெறுமுன் விறைப்பானான். வெளியே போக உத்தரவு கேட்டான்.

''மேஜர், ஒரு விஷயம் கவனம். உங்களையும் ஆட்கள் கண்காணிப்பார்கள். ராணுவத்துக்கு இழுக்குக் கொண்டு வந்து விடாதே.''

''புரிகிறது சாகேப்.''

''டிஸ்மிஸ்.''

மறுபடி விறைப்பாகி வெளியேறினான். டேவிட்டுக்கு விஷயம் தெரிவித்து அவன் ஆபீஸில் உத்தரவுக்குக் காத்திருக்கச் சொன்னான்.

ஆட்டோ பிடித்து ஆஸ்பத்திரிக்கு வந்தான். காஞ்சனாவை வேறு இடம் மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்தான்.

மாலை ஆறு மணிக்கு ராணுவ ஆம்புலன்ஸ் வந்தது. கூடவே வந்த டாக்டர்கள் காஞ்சனாவைப் பரிசோதித்து அப்புறப் படுத்திவிடலாம் என்றார்கள்.

மேலே வலைத் துணியால் மூடிப் பூமாதிரி ஸ்ட்ரெச்சரில் அவளை எடுத்துப் போனார்கள். ராணுவ ஆஸ்பத்திரி கோட்டை மாதிரி. அங்கு யாரும் எளிதில் நுழைய முடியாது. மேலும் இது தனிப்பட்ட அனுமதி தனிப்பட்ட கவனம் கொண்ட சிகிச்சை. காஞ்சனா கவலை இனி இல்லை.

சென்ட்ரல் ஸ்டேஷன் அருகே உள்ள மிலிட்டரி பாரக்ஸில் இடம் கிடைத்தது. ஒரு கிச்சன், ஒரு ஹால். ஓர் அறை கொண்ட பழைய வீடு. இதுவும் பாதுகாப்பான இடம். எவ்வளவு பாதுகாப்பு என்பது போகப் போகப் புரியும்.

வீடு இறங்கி, குளித்து உடுத்திக் கொண்டு உணவுக்கு வெளியே போன போது, பேரக்ஸ் உள்ளே நிறுத்தி வைக்கப் பட்டிருந்த அம்பாஸடர் கார் மெல்ல நகர்ந்தது. எல்லாக் கறுப்புக் கண்ணாடிகளும் ஏற்றப்பட்டிருந்தன.

பாதுகாப்பாக வேவு பார்க்கப்படுகிறதா? ஆட்டோவில் ஏறி, ''கமிஷனர் ஆபீஸ்'' என்று கூவினான்.

ஆட்டோ எக்மோர் நோக்கி ஓட ஆட்டோவிலிருந்து திரும்பிப் பார்த்தான்.

''தம்பி... எக்மோருக்கு எவ்வளவு ஆகும்.''

''பதினைஞ்சு ஆவும் சார். கூட இரண்டு ரூவா போட்டுத் தா சார்.''

''இருபது தரேன்.''

ஆட்டோ பையன் சிரித்தான்.

''அதான் சில ஆளாண்ட நான் ஏறும்போது கேட்கறதில்லை. இறங்கினப்ப கேட்கறது.''

''இந்தா இருபது.''

''பரவாயில்லை சார். இறக்கிட்டு வாங்கிக்கறேன்.''

வடிவேலு காசை ஆட்டோக்காரன் பையில் செருகினான்.

''கமிஷனர் ஆபீஸ் வரை அலுங்காத ஓட்டணும். எங்கியாவது வழில இறங்கிடுவேன். நிறுத்தக்கூடாது.''

''யாருன்னா ஃபாலோ பண்றானா உன்னை?''

''எப்படித் தெரியும்?''

''சினிமால இதே மாறி காட்டறாங்க.''

''நேர ஓட்டு.''

மின்னல் வேகத்தில் இறங்கி ஒரு வெற்றிலைப்பாக்குக் கடைத் தடுப்புக்குள் நுழைந்தான்.

''வாழைப்பழம் இருக்கா?''

''இல்லீங்க.''

''பன்னு ரொட்டி இருக்கா?''

''பிஸ்கட்டு இருக்கு.''

''வேர்க்கடலை உருண்டை ரெண்டு கொடு.''

அம்பாஸடர் தாண்டியது. எதிர் வெயிலில் உள்ளே ஓட்டுபவர் உட்பட நான்கு ஆட்கள் இருப்பது தெரிந்தது. நாலும் ஆண்கள். வேர்க்கடலை உருண்டை தரப்பட்டது. ஒரு ரூபாய் காசு தந்தான்.

அம்பாஸடர் கார் போன திக்கில் நடந்தான். கெய்னடிக் ஹோண்டா பிலியனர் இல்லாமல் வந்தது; கை காட்டி வண்டியை நகர ஓட்டாது மடக்கினான்.

''என்ன? என்ன?''

''போலீஸ். அர்ஜெண்ட் ஒர்க்.''

''எப்படிப் போலீஸ்ன்னு நம்பறது?''

பேண்ட் பாக்கெட்டில் விரல் விட்டு கமாண்டோ என்கிற அடையாள அட்டை அட்டை நாலு விநாடி காட்டினான்;

''உட்காருங்க.'' வண்டி வேகம் எடுத்தது.

''ஸ்பீட் வேணாம். எங்க போறீங்க?''

''பூந்தமல்லி. நமக்குச் செங்கல் சூளை இருக்கு.''

''இருக்கட்டும். அப்படியே கமிஷனர் ஆபீஸ் பக்கமாக கொஞ்சம் திரும்பிக்கணும்.''

அம்பாஸடர் வேகமெடுத்தது. எக்மோர் பக்கம் போயிற்று. கெயினடிக் ஹோண்டா திரும்ப, பால நடுவில் அம்பாஸடர் நிற்பது தெரிந்தது. சட்டென்று கைநீட்டி இடது பக்க பிரேக்கை வடிவேலு அழுத்தினான். வண்டி திண்டாட, ''என்னாங்க என்னாங்க?'' செங்கல் சூளை கத்த, எகிறி இறங்கினான். வண்டி ஓடிற்று.

''அப்படியே போ. திரும்பாதே!'' எதிர் நடைபாதைக்கு விரைந்தான். கவனித்தான்.

உயரமாய் இரண்டு ஆட்கள் அம்பாஸடரிலிருந்து இறங்கினார்கள். முன்பக்க ஸீட் ஆளும் பின்பக்க ஸீட் ஆளும் இறங்கிக் கதவு மூடினார்கள். நாலாபுறமும் பார்த்தார்கள். வலது பக்க ஸீட் ஆட்கள் கண்ணாடிக் கதவு இறக்கி நோட்டம் பார்ப்பது புரிந்தது.

போலீஸா, சி.பி.ஐ.ஆ? தப்பான ஆட்கள் இல்லை. எதிரிகள் இல்லை. பிறகு எதற்குப் பின் தொடரல்?

ஒயர்லெஸ் கார்தான். பின் ஸீட்டு ஆள் பேசுவது நிழலாய்த் தெரிகிறது.

போய் தொடரும் வேலை வேண்டாம் என்று மிரட்டுவோமா?

சட்டென்று காரில் இருவரும் பாய்ந்து ஏறினார்கள். கார் வட்டமடித்துத் திரும்பியது. வடிவேலுவை நோக்கித் திரும்பியது.

பாலத்துக் கடைசியில் நின்ற வடிவேலு சட்டென்று பின்னடைந்தான். நகர்ந்தான். ஜனங்கள் தெருவில் அதிகமில்லை. இடதுபுறம் சர்ச் இடுப்புயரச் சுவர் எகிறிவிடலாமா? எதிர்ச் சந்துக்கு ஓடலாமா?. தினத்தந்தியில் புகுந்து விடலாமா?

''யூ ஆர் அண்டர் அரஸ்ட் மேஜர்.'' ரொம்ப வாலிபமாய் இருபத்து நாலு இருபத்து ஐந்து வயதுப் பையன் மடக்கினான்.

கார் திரும்பியது. தாண்டி நின்றது.

தபதபவென்று மூன்று ஆட்கள் இறக்கினார்கள். அருகே வந்தார்கள், பேசாது நின்று கொண்டார்கள்.''

செருப்புத் தைக்கிறவன் பயத்தோடு பார்த்தான்.

பின் ஸீட் கதவு திறந்தது. பெரிய கூலிங்கிளாஸ் போட்டு முக அடையாளம் மறைத்த ஆள் சபாரிசூட்டில் இறங்கினார்.

''மேஜர் வடிவேல்?''

''யெஸ்.''

''ஐயம் ராஜ்கோபால்.''

''ஸோ வாட்?''

''நத்திங். கம், லெட்ஸ் கோ.''

''வேர்? ஹூ ஆர் யூ?''

''கம், லெட்ஸ் கோ.''

''யோவ், அரஸ்ட்ன்றான் இந்தாளு. யார் நீ?''

அவர்கள் நாலாபுறம் கவனிப்பதிலேயே கண்ணாய் இருந்தார்கள்.

''சந்திரநாத், ப்ளீஸ் ஹேண்டல் ஹிம்.''

பின் ஸீட் ஆள் கார் அருகே போனார். கை உள்ளே விட்டு ஒயர்லெஸ் எடுத்தார்.

சந்திரநாத், வடிவேலுவை விட வயசாளி. காது பக்கம் நல்ல நரை, தொந்தி. வட இந்தியர் சிவப்பு.

''ஹே சிப்பாய்'' ஹிந்தியில் அழைத்தார். எல்லா ராணுவத் தினரும் வடக்கே பேசும்போது, சிப்பாய்தான்.

''ஒழுங்கு மரியாதையா வண்டில ஏறு. எனக்கும் அடிக்கத் தெரியும்.''

''இல்லையெனில்...?'' வடிவேலு சீறினான்.

''சார், எம்பேர் சுப்ரமணியம். எனக்கும் மாயவரம். உங்க அப்பாவ எனக்குத் தெரியும். போய்கிட்டே பேசுவோமே'' இடது பக்க ஆள் பேசினான்.

''ஏன்....?''

''சும்மா நிக்க வைக்கச் சொன்னது.''

''எதுக்கு ஃபாலோ பண்றீங்க?''

''தொழில்.''

''எனக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?''

''இருக்கு. இங்கு ரப்ச்சர் பண்ணாக் கஷ்டம். நிறையப் பேர் கவனிக்கறாங்க.''

''யார் யார்?''

''இப்ப ஒண்ணும் சொல்ல முடியலை.''

''ட்ராபிக் ஆபீஸ்ல இப்ப ஒரு கார் திரும்பிச்சு. தாண்டி இரண்டு கார் போச்சு. லோக்கல் கவர்மெண்ட்.''

''நான் இன்டிபெண்டன்ட்.''

''அரசாங்கத்துல ஒரு வாய் உப்புத் தின்னுட்டம். இன்டி பெண்டன்ட்டே இல்லை. கடன் எழவுதான்.

''அரஸ்டா?''

''இல்லை சார்.''

''எதுக்கு மடக்கறீங்க?''

''கமிஷனர் ஆபீஸ் போக வேண்டாம்.''

''நான் அங்க போலையே!''

''வாசலிலேயே மடக்கியிருக்கணும். வேற எங்கியோ போறீங்கன்னு விட்டோம். கமிஷனர் ஆபீஸ் திரும்பிட்டீங்க.''

''கெயினடிக் ஹோண்டா கெயினடிக் ஹோண்டா...' மோட்டார் சைக்கிள் பையன் பேசினான்.

''அப்படி பப்ளிக் யூஸ் பண்ணாதீங்க சார். பயந்து சொரு விட்டா பிரச்சினை பெரிசாயிடும் வாங்க.''

''ராஜகோபால் யாரு?''

''வாங்க சொல்றோம்.''

''வர முடியாது.''

''ஏன்?''

''விவரம் சொல்.''

சட்டென்று ராஜகோபால் முன்னே வந்தார். மலையாளம் கலந்த ஆங்கிலம் பேசினார்.

''உன்னைப் பெரிய பிஸ்தா என்று நினைக்கிறாயா? உன் கமாண்டோ வேலை தெருவில் காட்டவா ஜெர்மனி போய் படித்தாய்? உன்னை அடித்து ஏற்றிப் போக முடியாதா?''

''முயற்சி செய்.''

''ஜஸ்ட்... ஐ வில் ஷுட் யூ பாயிண்ட் ப்ளாங்க்.''

''ட்ரை இட்.''

''சுப்ரமணியம் எதும் பறா. ஈ சழக்கன் மாரேட... ச்சைய்.''

''போடா சோம்பேறி.''

''சார், ப்ளீஸ் பெரிசு பண்ணாதீங்க.''

''யார் நீங்க?''

''பறைஞ்ஞால் வருமோ?''

''வரும்.''

''சி.பி.ஐ.''

ஒரு கெட்ட வார்த்தை சொல்லி, ''முதல்லியே சொல்றதுக்கு என்னா?'' என்றான்.

''எந்த, எந்தா பறைஞ்சுது?'' சட்டென்று நெருங்கிக் கொண்டார்கள்.

செருப்பு தைக்கிறவன் பயந்து எழுந்தான். அப்படியா அணைத்து வண்டியில் ஏற்றினார்கள். பின் ஸீட் சந்திரநாத் முன் பக்கம் போனார்.

''ஐயம் மேஜர் வடிவேல். கமாண்டோ ட்ரெயினர். அஃபென்ஸிவ்.''

''ராஜ்கோபால் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஹெட் ஆப் சௌத் விங் சென்ட்ரல் பேரு ஆப் இன்வெஸ்டிகேஷன்.''

''அஃபென்ஸிவ் விங்கில் ஆட்டோவிட்டு ஜம்ப் செய்யுமோ? தேர்ட் ரேட் ஸ்டாண்ட் பார்ட்டி. ஃபிலிம் கிக் உண்டாயிருன்னது ஈ சழக்கன்மாருக்கு.''

''நாங்க ஸ்டண்ட் பார்ட்டியா? தேர்ட் ரேட்டா? உதை வாங்கினதில்லை. எங்கக்கிட்ட.''

''போடா.... நாயிண்ட...'' வடிவேலு எகிறச் சட்டை பிடித்தான். அவர் கை அவன் முகம் பொத்தியது.

''சார், திரும்பிட்டாங்க. போறும்.''

''கரெக்டா பார்'' அவர் தளர்ந்தார்.

''திரும்பிட்டாங்க சார்.''

''சாரி மேஜர். இவ்வளவும் ட்ராமா.''

''என்ன?''

''போலீஸ் பார்ட்டி தேடுது சார் உங்களை. அதுக்கு முன்னாடி நாங்க கூட்டிக்கிட்டு போயிறணும்னு நினைச்சோம். அவங்க எதிர்க்கக் கை குலுக்க வேணாம் முறைப்பா வெறுப்பா இருக்கலாம்ன்னாரு சார்.''

''ஏன்?''

''அவங்களுக்குக் கொஞ்சம் எங்க மேல கடுப்பு. அது தவிர லோக்கல் பாலிடிக்ஸ். சமாச்சாரம். அரசியல் எதிரி மாதிரி நடக்கறாங்க. சென்ட்ரல் ஸ்டேட் பிராப்ளம்?''

''போதும்.'' சந்திரநாத் பதில் சொன்னார்.

''யாரு. நோட் பண்ணீங்களா?''

''மாணிக்கம் ஏ.ஸி. ஸ்டேட் ரகசிய போலீஸ்.''

''சி.எம். கிட்ட ரிப்போர்ட் ஆவுமா.''

''ஆகும்.''

''சாரி மேஜர். ரியலி சாரி.''

''பிரச்சினை நிறையவா இங்க?''

''ஏகப்பட்ட பிரச்சினை. நாம ஆபீஸ் போக வேணாம் சார்.''

''மாறு மாறு.''

கார் திரும்பிக் கடற்கரைச் சாலையில் ஓடியது. நகரம் தாண்டியது.

17

தொலைவில் கடல் உருண்டு கொண்டிருந்தது. ஆர்ப்பரிக்கும் அலையில்லை. அசையாத ஏரி குளம் போல் இங்கு அமைதியில்லை. சின்னத் துள்ளல். சோம்பலாய் ஒரு புரளல். கரையைத் தொட்டுப் புரண்டு படர்ந்து வழிந்து விளையாடிக் கொண்டிருந்தது.

திருவான்மியூர் கடற்கரை ஓரமாய் அந்த ஹோட்டல் இருந்தது. இந்தக் குழு இங்கு அடிக்கடி வருவார்கள் போலிருக்கிறது. ஹோட்டல் ஆட்களுக்கு இவர்களைக் கண்டதும் சிறிய பீதியும், லேசான வரவேற்புச் சிரிப்பும் தெரிந்தன.

''பியர் சார்...?'' பேரர் பணிவன்போடு கேட்டான்.

''மேஜர்... பியர்...?'' கேள்வியாய் ராஜகோபாலன் கேட்டார்.

''இல்லை நண்பரே. நான் மது அருந்துவதில்லை.'' ஹிந்தியில் பேசினான்.

''பியர் கூடவா?''

''ஆமாம்.''

''மூன்று பியர். உங்களுக்கு மேஜர்?''

''மினரல் வாட்டர்.''

மினரல் வாட்டர் வந்ததும் சர்க்கரை கேட்டான். சர்க்கரையை முகர்ந்துச் சோதித்துவிட்டு ஒரு துளி நுனி நாக்கில் ருசித்து விட்டுக் கலந்து கொண்டான்.

''என்னவித பானம் இது. மேஜர்?''

''சர்க்கரைத் தண்ணி சார்,'' தமிழில் சொன்னார்.

''எதுக்கு?''

''சுறுசுறுப்புக்குத்தான்.''

சர்க்கரைத் தண்ணீர் தம்ளருடன் எழுந்து, நடந்து கடல் பார்த்துக் கொண்டே நின்றான்.

பின்னே காலடித் தடம் கேட்டது.

''என்ன சுப்ரமணியன்?''

''கடல் ஆணா பெண்ணா சார்?''

''தெரியலை சாமி.''

''கமாண்டோ ட்ரெயினிங்கில இதெல்லாம் கத்துத் தர மாட்டாங்களா?''

வடிவேலு சட்டென்று திரும்பினான்.

''ஐயரே, உங்களுக்கும் அந்த மலையாளத்தானுக்கும் கமாண்டோன்னா கிண்டலா இருக்கா?''

''இல்லை, நிச்சயமா இல்லை. உத்து கடலையே பார்க்க றீங்களே, கடல் ஆணாத் தெரியுதா, பெண்ணாத் தெரியுதான்னு கேட்டேன்.''

''கடல் கடலாத்தான் தெரியுது.''

''கம்பனுக்குப் பெண் மாதிரி தெரியுது. கம்பராமாயணம் கேள்விப்பட்டிருக்கீங்களா? மிதிலைல மறுநாள் காலைல கல்யாணம். சீதைக்கு ராமர் நினைப்பு. தூக்கமே வரலை. புரண்டு புரண்டு படுக்கிறாள். தான் புரள்றது பார்த்ததும் கடல் புரள்கிற மாதிரி ஒரு நினைப்பு. ''அடட, நீயும் என்னை மாதிரி கன்னிப் பொண்ணா உன்னையும் மன்மதன் அம்பால அடிச்சுட்டானா? ஒரு நாள்கூடத் தூங்கலையே இப்படி புரண்டு புரண்டு... தவிக்கிறியேன்னா சீதை...''

வடிவேலு அவரை வியப்புடன் பார்த்தான்.

''என் வொய்ப் கதை, கவிதை எழுதுவாங்க. நேத்து தூக்கம் வராதப்ப அவங்க மேஜைல இருந்த புஸ்தகம் பிரிச்சேன். அதுல போட்டுருந்தது. இரண்டு தடவ படிச்சேன். மனசுல தங்கிருச்சு.''

''இடையே வளை சோர; எழுந்து விழுந்து
கடல் ஏய் மதனன் சரம் அஞ்சினையோ
உடல் ஓய்வு உற நாளும் உறங்கலையால்
கடலே உரை, நீயும் ஒரு கன்னிகொலாம்''

''எப்படி இருக்கு பாட்டு?''

''நல்லாருக்கு. சுப்ரமண்யம். நீங்களும் எழுதுவீங்களா?''

''ரிப்போர்ட் எழுதுவேன், ஒண்ணு பார்த்துட்டு வாடான்னா... இதுக்கெல்லாம் எங்க சார் நேரம்? இருட்டறது பத்திக்கூட அதுல ஏதோ கவிதை இருந்தது. கடல் மாதிரி இருட்டு வந்ததுன்னு என்னவோ போட்டிருந்தாங்க. மையிருட்டுன்னு சாதாரணமாச் சொல்லாமல் கடல் மாதிரி இருட்டுன்னு சொன்னது நல்லா இருந்தது. கோடிக் கரைல ஒரு தடவ போஸ்டிங் போட்டிருந் தாங்க. தொலைவுல கடல் இருட்டிடும். கரையில் லேசா வெளிச்சமா இருக்கும். இப்பகூட அங்க தொலைவுல இருட்டிக் கிட்டு வருது. இங்க வெளிச்சம். இரண்டு மூணு நிமிஷத்துல இங்கேயும் இருட்டிடும். இங்கேயும் இருட்டு நகர்ந்து வருது வேகமா. இனி இரவு...''

தலைகுனிந்து சர்க்கரைத் தண்ணீரைப் பார்த்துக் கொண் டிருந்த வடிவேலு நிமிர்ந்தான்.

''எழுந்திரு'' என்றான்.

சுப்பிரமணியனும் வடிவேலுவும் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டார்கள். சுப்பிரமணி பியர் கோப்பையை உயர்த்தி,

'சியர்ஸ்' என்றார். வடிவேலு தன் கண்ணாடித் தம்ளரை உயர்த்தி வாழ்த்து சொன்னான்.

அந்தச் சியர்ஸ் ஒரு சிக்னல் என்பது வடிவேலுவுக்குப் புரிந்தது.''

அவர்கள் வாழ்த்திக் கொண்டதைத் தொலைவிலிருந்து ராஜகோபாலன் பார்த்தார். சிரித்தார்.

''கோட் வேர்ட் சொல்றதுக்கா அப்படிக் கம்பனோட சுத்தி னீங்க?''

''இந்தக் கோட் வேர்டுக்குக் கன்னா பின்னான்னு கத்தினாரு ராஜகோபாலன் சார்.''

''ஏன்?''

''தமிழ்ல கோட் வேர்ட் தராங்க. செய்யட்டும் தமிழ்நாட்ல ஹிந்தி சட்டுன்னு பேச முடியாது. எதோ... என்ன மச்சான், சௌக்கியமா... சோடா போட்டு விஸ்கின்னா பரவாயில்லை. இனி இரவு எழுந்திருன்னா எங்க சொல்றது... எப்படிச் சொல்றது? கோட் வேர்ட், கோட் வேர்ட் மாதிரி இருக்கக்கூடாது, பேச்சு பாஷையா இருக்கணும்றாரு. விட்டுருங்க, எனக்குக் கொஞ்சம் இலக்கியம் தெரியும்னு சமாதானப்படுத்தினேன்.''

''யார்?''

மத்திய அமைச்சரின் பெயரைச் சுப்ரமணியம் சொல்ல வடிவேலு திகைத்தான். ''அவர் துறையா இது?''

''துறை வேறே எதுவோ பாதுகாப்பு ஏற்பாடு இப்ப அவரு தான் முக்கியமாக் கவனிக்கிறாரு. தமிழ் நல்லா படிச்ச மனுஷன்.

அவர்கள் ராஜகோபாலனை நெருங்கினார்கள்.

''சரி... எனக்கு இன்னும் புரியாத விஷயம், வொய் மை ஸிஸ்டர்...''

''எங்களுக்கு லேசா புரியுது மேஜர் வடிவேலு.'' ராஜ கோபாலன் பேசினார்.

''என்ன?''

''அது ஆக்ஸிடெண்ட்.''

''வேற யாரையும் எய்ம் பண்ணலை சார். கூட்டத்துல குறி பார்த்து என் தங்கை மேல ஊத்திடலை.''

''தப்பா ஊத்திட்டான்.'' ராஜகோபாலன் இன்னுமொரு வாய் உறிஞ்சினார்.

''என்ன?''

''உங்க தங்கச்சியை அவன் எதிரின்னு நினைச்சு ஊத்திட் டான்.''

''எப்படிச் சொல்றீங்க?''

''பல்வேறு விதமா யோசனை பண்ணோம். உங்க ஸிஸ்டர் ட்ரீட் பண்ற டாக்டர்கிட்ட கேட்டோம். எப்ப கண் முழிச்சாலும் 'ஊத்திட்டு ஸாரின்னு சொன்னான்'னே பேசறாங்க.''

''என்கிட்டயும்.''

''அது, தேர்ட் டைம்.''

''யார் எதிரி?''

''அது பறந்திடுச்சு.''

''ஊத்தினது யார்?''

''ஆள் தெரியலை கூட்டம் தெரியுது.''

''ஏன் ஊத்தினான்?''

''மேஜர் வடிவேல், துப்பாக்கில சுடறது, சுத்தில குத்தறது, கட்டையால அடிச்சுக் கை கால் உடைக்கறது. சாதாரண ஜனங்களுக்குப் பயம் தரும். இதே பொழப்பா இருக்கிறவனை உக்கிரமாக்கும். அந்த மாதிரி தடாலடி ஆளுங்களைக் கலவரப் படுத்தணும்னா, இந்த மாதிரிக் கூட்டத்து மொரேல் சிதைக்க ணும்னா, இன்னும் கோரமான சாவு காட்டணும். எங்கிட்ட வாலாட்டாதேன்னு காட்டக் கடுமையாத் தண்டிக்கணும்.''

மேஜர் வடிவேலு அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஸெகண்ட் வேர்ல்ட் வார்ல ஜப்பான்காரன் புதுசு புதுசாத் தண்டிப்பான். இரண்டு உள்ளங்கைத் தோலையும் கதறக் கதறச் சுத்தமா விரல் வரைக்கும் சீவிடுவான். நடுவில் ஆண்டிபயாடிக் மருந்து போட்டு இரண்டு உள்ளங்கையையும் சேர்த்து வச்சுக் கட்டிடுவான். கும்பிடற மாதிரி கட்டுப் போடுவான். ஒரு மாசம் கழிச்சுப் பிரிப்பான். இரண்டு உள்ளங்கை தோலும் ஒன்னோட ஒண்ணு ஒட்டி வளர்ந்திருக்கும். கைகள் பிரிக்கவே முடியாது. எப்பவும் கை கூப்பின மாதிரியே இருக்கணும். சாவற மட்டும். அப்படி தோல் வளர்த்து கைகூப்பினவன் ஜென்மத்துக்கும்

துப்பாக்கி தூக்க மாட்டான். அவனைப் பார்த்தவன் மிலிட்ரில சேரவே மாட்டான். இதுதான் நோக்கம்.

''பாஸ்டர்ட்ஸ்.''

''முகத்துல அடிபட்டுச் சதை கிழிஞ்சா தொடைல சதை யெடுத்து ஒட்டுவாங்க சர்ஜரில... கேள்விப்பட்டுருக்கீங்களா? மூக்கு சீவிட்டுத் தொடை தசையை உருளையா ஒட்ட வச்சுரு வான். காயம் படாத மூக்கு பெருங்காய உருண்டை மாதிரி ஆய் டும். அங்கே முடி வளரும்.''

''என்ன சொல்ல வர்றிங்க?''

''ஒரு குரூப்போட டெர்ரர் ஆக்டிவிடி இது.''

''என்ன குரூப்?'' ஹிந்தியில் கேட்டான்.

''வியாபாரிகள்.'' ஹிந்தியில் பதில் வந்தது.

''என்ன வியாபாரம்?''

''கள்ளக் கடத்தல்.''

''போதைப் பொருளா?''

''ஆமாம்.''

''யார் அவர்கள்?''

''கடத்தல் பண்ணுவது வியாபாரியில்லை.''

''டெररிஸ்ட்?''

''ஆமாம்.''

''யார்?''

''எல்லாருந்தான். மடக்கி அடித்தால் நான் எந்தக் குரூப்பும் இல்லை, தனியா செய்யறேன். பரம்பரையா இதுதான் தொழில்னு சொல்றான்.''

''தென்?''

''ஐந்து கிலோ பவுடர் நாலரை கோடி ரூபாய். இங்கேயே நாலரைக் கோடி ரூபாய். பாம்பே தாண்டியதும் மூணு மடங்காய் விலையேறும்.''

''ப்ரவுன் ஷுகரா?''

''அதெல்லாம் குப்பை. சுத்தமான வெள்ளைச் சரக்கு. ஹிராயின்.''

''எனக்குப் புரியலை. புரியும்படி சொல்லுங்கள்.''

''டெररிஸ்ட் இதைத் தொடறதில்லை. ஆனா அவனுக்குப் பணம் வேணும். துப்பாக்கி வாங்க, பீரங்கி வாங்க, கண்ணி வெடி வாங்க, பணம் வேணும். சுலபமாய் பணம் பண்ண வழி தங்க பிஸ்கெட் இல்லை. வீடியோ டெக் இல்லை. அஞ்சு கிலோ வொயிட் பவுடர். புறா.''

''கோர்ட் வேர்டா புறா?''

''ஆயிரம் கோர்ட் வேர்ட் ஆயிரம் மெத்தட். பாப்பா வந்துருச் சான்னு கேட்கறான். வந்துருச்சுன்றான். ஆசன வாய்ல செருகிக் கிட்டு வரான். பால் பவுடர் டின்ல கொண்டு வரான். ஸீல் பண்ணின பால் பவுடர்.'

''நம்ம வேலை என்ன இப்போ?''

''டெररிஸ்டை மடக்கணும்.''

''எங்க இருக்காங்க?''

''தமிழ்நாடு முழுவதும்.''

''எத்தனை பேர்?''

''என் கணக்குல பத்தாயிரம் பதினோராயிரம்.''

''நம்ம வேலை என்ன? டெररிஸ்டை அடக்கறதா? ட்ரக் ட்ராபிக் உடைக்கறதா?''

''டெररிஸ்ட் அரசியல். ட்ரக் ட்ராபிக் பிஸினஸ். வாங்கற வனை அழிச்சுட்டா. விக்கிறவன் என்ன செய்ய முடியும்?''

''யாரு வியாபாரி?'' வடிவேலு கேட்டான்.

ராஜகோபாலன் அவர் பெயர் சொன்னார்.

''சரி, இதில் என் வேலை என்ன?''

''வியாபாரியை மடக்கிக் கையும் களவுமாய்ப் பிடித்தல்.''

''இதற்குக் கமாண்டோ எதற்கு?''

''வியாபாரிக்குத் துணை டெररிஸ்ட். அவர்களிடம் ஆயுதம் உண்டு. பயிற்சி பெற்றவர்கள்.''

''சி.பி.ஐ. வேலை என்ன?''

''உங்களுக்குக் ஆள் காட்டுதல்.''

''சி.பி.ஐ. அதிகாரிகள் தமாஷுக்கு மீசை வளர்க்கிறார்களா?''

மீசை பௌருஷம் அல்ல. நண்பனே. புத்தியே பௌருஷம்
சி.பி.ஐ.யில் அரசியல் பிரிவு என்று உண்டு. அது முழு வேகத்
தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. வியாபாரியை நீ மடக்கி
அடிக்கிற அடியில் டெரரிஸ்ட் கலங்க வேண்டும். டெரரிஸ்ட்
கலங்க அவர்களுக்குத் துணை போகும் லோக்கல் அரசியல்
வாதிகள் அலற வேண்டும். அவர்கள் அலற, இன்னின்னார்
இன்னின்ன விதத்தில் இவ்வித உறவு என லோக்கல் அரசுக்குத்
தகவல் போகும். லோக்கல் அரசு மிரட்டப்படும். மிரட்டலை
மீறி எகிறினால் கலைக்கப்படும்.''

''பிரச்சினையின் ஆணிவேர்... அரசு கலைத்தலா, போதைப்
பொருள் கடத்தலை நிறுத்தலா?''

''உன் தங்கையின் மீது ஆஸிட் ஊற்றியவன் பெயர்
சொல்லவா, வேண்டாமா?''

வடிவேலு ஆத்திரமாய் நிமிர்ந்தான்.

''நீ ஒரு கருவி, மேஜர் வடிவேல். நான் ஒரு கருவி.
நீயாய் ஒன்றும் கிழிக்க முடியாது. உன் சொந்தக் கோபத்தை
இந்த அரசு பயன்படுத்துகிறது. இது விதி மேஜர், விதி.''

அந்தக் கடற்கரை இருட்டாயிற்று.

அவர்கள் எழுந்தார்கள்.

18

அவர்களுக்கு என்று ஊர் எதுவும் இல்லை. அதுதான்
பிரச்சினை. ஆனால் ஹாங்காங்கை அவர்கள் ஊர்போல
நினைத்துப் புழங்கினார்கள்.

வியட்நாம் போரில் அடிப்பட்டு சொஸ்தப்படுத்திக்
கொள்ளப் படகு ஏறி ஹாங்காங் அகதிகளாய் நுழைந்தவர்களில்
சிலர் அங்கே நிலைமை வேறு மாதிரியானவுடன், தாங்கள்
சண்டையிட்ட குழு தோல்வி அடைந்த உடன், திரும்ப ஊர்
போனால் மரணம் என்பதால் வேறு பெயர் எடுத்து ஹாங்காங்
ஜனக்கூட்டத்துக்குள்ளே கலந்துவிட்டார்கள். கூலி வேலை
செய்தார்கள். மார்க்கெட்டில் வண்டியிழுத்தார்கள். சிறிய
கைச்சண்டைகளில் ஈடுபட்டு தாதா மாதிரி ஆனார்கள்.

பவுடர் வியாபாரத்துக்கு ஆட்கள் தேவைப்பட்டபோது
அங்கே போய்ச் சேர்ந்தார்கள். வேறு வழியில்லாது உணவுக்காக
வும் தங்களைக் குடியுரிமை இல்லாதவர்கள் என்று யாரும்
காட்டி விடக் கூடாதென்றும், வேறு பல சௌகரியங்களுக்காக
வும் தங்களை ஒரு குழுவுடன் பிணைத்துக் கொண்டார்கள்.
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தைந்தில் செய்குவாரா
வுடன் இருந்த படை வீரனும் அவர்கள் குழுவில் இருந்தான்.
க்யூபாவை வசப்படுத்தும். மிகப் பெரிய போரில் அவன்
ரேடியோ ஆப்பரேட்டர். அவன் படை சிக்னல்கள் மறித்துக்
கேட்கப்படுவதை அவன் தலைமைக்குச் சொல்லவில்லை.
சொல்லாமல் இருக்க அவனுக்குக் காசு தரப்பட்டது. அவன் படை
யில் உள்ள கமாண்டோ காட்டிக் கொடுப்பவனாக இருந்தான்.
காசு கொடுத்தான். அவன் சதி தெரிந்து செய்குவாரா அவனை
விசாரிக்கிறார் என்று கேள்விப்பட்டதும் ரேடியோவைப் போட்டு
விட்டுக் காடுகளுக்குப் போய், மரங்களை வெட்டித் தனி
யொருவனாய்க் கடல் தாண்டி, அராபியக் கப்பலில் தஞ்சம்
அடைந்து, அவர்களைக் கெஞ்சி, சரக்கு மூட்டைக்கு நடுவே
ஹாங்காங்கில் இறங்கி, தன்னை இஸ்ரேலியன் என்று சொல்லிக்
கொண்டு வளைய வந்தான். க்யூபாவில் அவனது படை ஜெயித்து
ஃபெடல் காஸ்ட்ரோ தலைமை ஏற்றது. நம்ப முடியாததாய்
அவனுக்கு இருந்தது. எப்போது வேண்டுமானாலும் வல்லமை
பொருந்திய அமெரிக்க அரசால் சிதறடிக்கப்படும் என்று தோன்
றியது. இல்லை. அவ்விதம் நடக்கவில்லை. அவனால் அங்கு
போகவும் முடியவில்லை. க்யூபாவில் அவனது படை பெற்ற
வெற்றியைச் சிறிய தவறால் சிறிதளவு கிடைத்த காசால்
அனுபவிக்க முடியவில்லை.

அவனும் பவுடர் வியாபாரத்தில் சேர்ந்தான். வேறு வழி
யில்லை. மேலும் பவுடர் வியாபாரம் போர் மாதிரி இருந்தது.
சகல சந்தோஷத்துடனும் குறைவின்றிக் காசு கிடைத்தது.
மரணம் எப்போது வேண்டுமானாலும் நேரும். அதனால் என்ன,
அவன் மரணமடைந்தால் அழ யாரும் இல்லை. வாழும் வரையில்
அனுபவித்துவிட்டு வாழ்தல் நலம். ஹாங்காங் வாழ்வதற்கு
ஏற்ற இடம். அவனைச் சில்லறைப் போலீஸ் தொந்தரவிலிருந்து
காப்பாற்ற நல்ல தலைமை அங்கே இருந்தது.

படகு தருவார்கள். பணம் தருவார்கள். குடிக்க, கூத்தடிக்க
அவகாசம் தருவார்கள். ஏதேனும் சரக்கு ஏற்றி இங்கே இறக்கு

என்பார்கள். இவனை அடி என்பார்கள். இந்தக் கோடௌனைத் தகர்த்தெறி என்பார்கள். வேலை முடிக்க, பாராட்டி மேலும் பணம் தருவார்கள். குடிக்க, கூத்தடிக்க அவகாசம் தருவார்கள். ஒவ்வொரு சரக்கும் பயணமும் மரணம் நோக்கிய பயணம் தான். ஒவ்வொரு பயணம் முடித்த பிறகு வாழ்க்கை சொர்க்க லோகம்தான்.

ஒரே ஒரு முறை அவனை வயலுக்கு அழைத்துப் போனார்கள். எந்த இடம், எந்தத் தேசம் என்று தெரியவில்லை. கம்போடியாவாக இருக்கலாம் என்று தோன்றியது.

பாப்பி என்கிற கசகசா செடி கண் தெரியும் வரை வளர்ந்திருந்தது. உருண்டையாய் மேலே சற்று இதழ்கள் விட்டுப் பூ. பூ கூட இல்லை மொக்கு. அதிலிருந்து திரவம் எடுத்தார்கள். ஒரு பூவுக்குப் பத்து சொட்டு திரவம் வரும். அன்று பத்து கேன் திரவம் வந்தது. எப்படியாவது அதைக் குறிப்பிட்ட இடம் சேர்த்து விட வேண்டும் என்கிற கட்டளை வந்தது. பதினாறு பேர் கொண்ட படையோடு அவர்கள் லாரியில் கிளம்ப ஹெலிகாப்டர் வழிமறித்து அடிக்க, பெரிய சண்டை.

அதுவரை பஸூக்கா இயக்கியதேயில்லை. உள்ளே குண்டு திணித்துத் தோளில் தூக்கி ஹெலிகாப்டரை நோக்கிச் சுட்டான். எறிகுண்டு ஹெலிகாப்டரைத் தூள் தூளாக்கியது. அவர்களின் லாரி டயர், எஞ்சின் சண்டையில் சேதமாகி விட்டது. வேறு வழியில்லாது கிழக்கு நோக்கி அறுபது மைல் கேனோடு காடுகள் வழியே நடந்தார்கள். குண்டு காயத்தில் இரத்தம் இழந்து வழியிலேயே இரண்டு பேர் மரணம். பதினாலு பேரில் நாலு பேர் மட்டும் சரக்கோடு குறிப்பிட்ட இடம் அடைந்தார்கள். இரண்டு நாள் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. உணவு அறவே இல்லை.

மிகப் பெரிய சன்மானம் கிட்டியது. உடல் சரியாக ஒரு மாதம், சும்மா பொழுதுபோக்க இரண்டு மாதங்கள் விடுமுறை தரப்பட்டது.

இதுதான் வாழ்க்கை. உலகத்தின் எந்தப் பகுதியோடும் அவனுக்குச் சம்பந்தமில்லை. சரக்கு எடுத்துப் போ, சண்டையிடு. காசு வாங்கு, உல்லாசமாய் இரு. இவ்வளவுதான்.

அவன் சென்னையிலிருந்தான். ஃபொரோடோ கார்மஸே என்று அவனுக்குப் பாஸ்போர்ட் தரப்பட்டிருந்தது. வசிப்பிடம்

ஹாங்காங் மாலுமி நடுக்கடலில் மாங்கனீசு ஏற்றிக்கொண்டு வந்த கப்பலில் அவனை ஏற்றிக் கொண்டார்கள். மோட்டார் போட்டிலிருந்த சரக்கும் மாறியது. சென்னையிலிருந்து இன்னொரு மோட்டார்ப் படகு வந்து சரக்கு மட்டும் வாங்கிக் கொண்டது. இரண்டு நாட்கள் பிறகு துறைமுகத்தில் இறங்கி ஊர் சுற்றிப் பார்க்கும் தற்காலிக விசாவுடன் தரை இறங்கினான். அவனுடன் இரண்டு வியட்நாமியர்களும், ஒரு கம்போடியனும் இருந்தார்கள்.

'இங்கு என்ன வேலை?' அவன் கேட்பதேயில்லை. வேலையில்லாமலா இறக்குவார்கள்? சுமாரான ஹோட்டலில் தங்கினார்கள். அந்த இடத்துக்கு ஜார்ஜ் டவுன் என்று பெயராம். 'இரவு விடுதி' சென்னையில் கிடையாதாம். அதிகம் ஆட வேண்டாம் என்று இறங்கும் போதே கட்டளை கிடைத்தது.

''துரை, துரை'', என்று சட்டையில்லாத சிறுவர்கள் பின்னால் தொடர்ந்து காசு கேட்ட வண்ணம் வந்தார்கள், அவனுக்கு வறுமை புதிதில்லை. 'ச்சீசீ போ' என்று துரத்தினாலும் பின்னால் தொடர்ந்து வருகிற வெட்கமின்மைதான் புரியவில்லை. சண்டையிடத் துணிச்சல் இல்லாது வெறுமே கத்துகிறார்கள் என்று அந்த மக்களைப் பற்றி எண்ணம் வந்தது. ஹோட்டல் மாடியிலிருந்து பார்க்கத் தெருவில் இரண்டு பெண்கள் நல்ல இடைவெளி விட்டு ஒரு மணி நேரத்துக்கு மேல் திட்டிக் கொண்டிருந்தார்கள்.

இன்று காலை பெரிய பல்லக்கு. பூ வாசனை தூக்கியது. எதிரே நிறைய இளைஞர்கள் நடனமாடினார்கள். ''என்ன அது?'' என்று கேட்டான்.

''மரணம்'', என்று பதில் வந்தது.

''ஏன் நடனமாடுகிறார்கள்?'' என்று கேட்டான்.

''மரணம் மகிழ்ச்சியான விஷயம். அது விடுதலை. இனி அந்த ஆன்மாவுக்கு வலி, வேதனை, உழைப்பு, உயர்வு, நல்லது கெட்டது, எதுவுமில்லை. அது கடவுள் தன்மை அடைந்து விட்டது'' என்றார்கள்.

மரணம் துக்கமேயில்லையா இந்தியாவில்?

துக்கம்தான். ஆனால் ஆழ்ந்து யோசிக்க அது மிகப் பெரிய விடுதலை என்பது தெரியும்.

ஆழ்ந்து யோசித்து நடனமாடுவதாய்த் தெரியவில்லை. நடனம் ஒரு சடங்காய் இருந்தது.

'கிளம்பு கிளம்பு' என்று தகவல் வந்தது. கார் நெம்பர் சொல்லப்பட்டது. நாலு பேரும் காரில் ஏறினார்கள். அகலமான கார். காண்டசா என்று போட்டிருந்தது.

வண்டி ஓட்டி வந்தவன் தன் அடையாளம் சொன்னான். சமிக்ஞை சரியாய் இருந்தது.

''நம்மிடம் பவுடர் வாங்கியவர்கள் இந்திய வியாபாரிகளுக்குச் சரக்குத் தருகிறார்கள்.''

''நல்லது.''

''வியாபாரியிடமிருந்து பணம் நமக்குத் தரப்படும்.''

''என்ன வேலை என்ன? பணத்தை எடுத்து வருவதா?''

''இல்லை.''

''பிறகு?''

''சென்னையில் வியாபாரிகளுக்கு நமது சரக்கை விநியோகம் செய்கிறவர்கள் புரட்சிப் படையினர்.''

''என்ன?''

''புரட்சிப் படையினர்.''

''புரட்சி நடக்கும் தேசமாகவே தெரியவில்லையே?''

''புரட்சி இங்கேயில்லை. வெகுதொலைவில் வடகிழக்குப் பாகத்தில்.''

''அஸ்ஸாம்.''

''உனக்குத் தெரியுமா?''

''ஹோட்டலில் பேப்பர் பார்த்தேன்.''

''அவர்கள் அடுத்தபடி சரக்கு எடுக்க வேண்டுமானால் ஒரு நிபந்தனை போடுகிறார்கள். அவர்களுக்கு ஆயுதம் வேண்டுமாம்.''

''என்ன ஆயுதம்?''

''எனக்குத் தெரியவில்லை. நிறைய பெயர் சொல்கிறார்கள். அதனால்தான் உங்களை அழைத்துப் பேச ஏற்பாடாகியிருக்கிறது.''

''நான் என்ன செய்ய வேண்டும். அதைச் சொல்லித் தொலை.''

''ஆறுவிதமான கண்ணி வெடிகள் கேட்கிறான். தோட்டாவேலே பதினாறு கேட்கிறான். பஸுக்கா நெம்பர் சொல்கிறான். பஸுக்கா என்பது என்ன? துப்பாக்கியா?''

''இல்லை, அதன் மாமியார்.''

சிரித்தார்கள்.

''மார்டர் என்றால்...?''

''பீரங்கிக்கும் பஸுக்காவுக்கும் பிறந்த கள்ளக்குழந்தை.''

''தற்கொலை நீர்மூழ்கிக் கப்பல் உண்டா?''

''உண்டு. சமீபத்திய கண்டுபிடிப்பு.''

''ஜாக்கெட் பாம்.''

''உண்டு.''

''இவையெல்லாம் என்ன விலை?''

''வாங்குபவனின் ஆத்திரம் பொறுத்தது.''

''நண்பர்களே...'' கார் தெற்கு நோக்கிச் சீறலாய்ச் சீராய் ஓடிக் கொண்டிருந்தது.

''நண்பர்களே, கிட்டத்தட்ட இரண்டு அல்ல மூன்று கோடி ரூபாய் அன்னிய கரன்சி இப்போது வாங்கப் போகிறோம். நமது ஸீல் அந்தப் பெட்டிகளில் போடப்படும். அதை மாங்கனீஸுக் கப்பலுக்கு அனுப்ப அவர்கள் உதவி செய்வார்கள். நடுக்கடலில் பெட்டி தரப்படும். இப்போதைய வேலை அவர்களிடம் உண்மையாய்க் கரன்சி உண்டா என்று பார்ப்பதும், கொடுத்த சரக்குக்கு காசு வாங்குவதும், நாம் போக வேண்டிய தூரம் இன்னும் ஒன்பது மணி நேரப் பயணம். நீங்கள் தூங்கலாம். பின்னே ஸூட்டின் உட்புறம் பியர் பாட்டில்கள் இருக்கின்றன. குடிக்கலாம்.''

வழியே ஒரு செக் போஸ்ட் போல ஓர் இடம் வந்தது.

''யாருங்க உள்ளாற...?''

''துரைமாருங்க. கொடைக்கானல் போறம்.''

''எதுக்கு?''

''ரெஸ்ட்டுக்கு''

''வண்டி யாருதுங்க?''

வண்டியோட்டி சிறிய நோட்டு புத்தகம் காட்டினான். அதைப் பார்த்து சல்யூட் அடித்தார்கள். ''அவருதா.. சொல்லக்கூடாதா? நல்லா போய் வாங்க. துரை இள நீ சாப்டறாரா? வெட்டச் சொல்லட்டா?''

''வேணாம். பீர் சாப்பிட்டோம்.''

''பீரா, நான் பீர் வாங்கப் பத்து கிலோமீட்டர் போவணும். சுத்தி முத்தி கடையே கிடையாது.''

''பாதி இருக்கு சாப்பிடறியா?''

ஃபெரோ கையில் உள்ள பீர் பறித்து அவனிடம் நீட்ட, அந்த ஆள் சந்தோஷமாய் வாங்கிக் கொண்டான். அது டின் பீர். ஹாங்காங் சரக்கு.

''காண்டசா கார். மூன்று மலேசிய முகங்கள். ஒரு ஐரோப்பிய முகம். கொடைக்கானல் போகிறது. டின் பீர் தூக்கி எறிந்தார்கள். ஹாங்காங் தயாரிப்பு.'' சென்னைக்குத் தகவல் போயிற்று.

''மடக்கி அடிக்கிறதுதானய்யா,'' சென்னை உயர் போலீஸ் சீறியது.

''போனவாட்டி பலராமன் இன்ஸ்பெக்டர் அடிச்சாரு. ஏன் துப்பாக்கின்னு சுவத்தோட வச்சு அளுத்தினாரு. மடக்கின பசங்களுக்கு டிபன் வாங்கி அனுப்பச் சொன்னீங்க. பலராமனை சேத்தியா தோப்புல கொண்டு போட்டிங்க. பாவம், சேத்தியா தோப்புல வாழைப்பழ லாரிதான். துட்டு கேட்டா பழம் கொடுக்கறான்.''

''சரி வுடு. பேசச் சொல்றபோது பேசு. சும்மா யார் கிட்டயும் பேசாதே,'' போன் துண்டித்து விட்டது.

''என்னங்க இது ஹாங்காங் பார்ட்டி ஏது நம்மூர்ல.''

''உடனே ஒண்ணு செய்யலாம். பேசாத லோக்கல் சி.பி.ஐ.க்கு லெட்டர் மெஸஞ்சர் மூலமா அனுப்பிடுங்க. தனியா இரண்டு பேர் போட்டு தோண்டச் சொல்லுங்க.''

''என்னவா இருக்கும்?''

''எதுனா இருக்கவும் இருக்கலாம். இல்லாதயும் போவலாம். நம்ம டிபார்ட்மெண்ட்ல பந்தோபஸ்துனு பத்து பெரிய ஆளுங்க டி ஷர்ட்டோட சுத்தறான். அவங்கள்ல இரண்டு பேரைக்

கொடைக்கானலுக்கு அனுப்பினா எதுனா கிடைக்கும். ரொம்ப பெரிசா இருந்தது. சி.பி.ஐ. - சிறிசா இருந்தது. நாம நுழைவோம்.''

ஹாங்காங் என்றதும் ராஜகோபாலன் துள்ளினார். கொடைக்கானலா? அஸ்ஸாம் பசங்க கேம்ப்யா அது. கை கழுவுனா மாதிரி லெட்டர் தராங்க.''

''எப்படி உள்ள வந்திருப்பாங்க சார்?''

''ஏர்போர்ட் செக் பண்ணு.''

''தினம் ரிசல்ட் வருது சார் நமக்கு. ரஷ்யன் டூரிஸ்ட்தான் திறைய.'' சுப்ரமண்யம் கடிதம் படித்தபடி பேசினார்.

''டெல்லி பாம்பே வழியா வந்திருந்தா...''

''நம்ம டிபார்ட்மெண்ட் அலெர்ட் பண்ணியிருக்கும். ஆனா மாங்கனீஸ் கப்பல் மெட்ராஸ் வந்துருக்கு. கொரியன். ஹாங்காங் கப்பல் இல்லை. ஹாங்காங் போர்ட் தொட்டிருக்கு.''

''கேளு. கஸ்டம்ஸக் கேளு. நேத்து முந்தாநாள் எவனா இறங்கினானா கேளு. அந்த ஆளு கமாண்டோ என்ன செய்ய றான்?''

''தூங்கறார் சார், என் ரூம்ல இருக்காரு.''

''எழுப்பு மத்த விஷயம் புடி. டின் பீர். டின் பீர் நாலு பேர் விழுப்புரம் தாண்டி டின் பீர் போட்டா நாலு பேருக்கு எத்தனை டின் பீர். பதினாறு எனக் கொள்வோமா?

பதினேழு நிமிடத்தில் கொரியன் கப்பலிலிருந்து நாலு பேர் தற்காலிக விசாவில் ஊர் இறங்கியிருப்பதாய், தங்கியிருக்கும் ஹோட்டல் இதுவென்பதாய்த் தெரிந்தது. வடிவேலு முகம் கழுவி அவருக்கு அருகே வந்தான்.

''ஒரு ஹோட்டலுக்குப் போய்க் காப்பி சாப்பிடலாமா?''

''இருங்க. கன் எடுத்துகிட்டு வரேன்.''

''வெறும் காப்பி வடிவேலு.''

''என்னிக்கு நாம வெறும் காப்பி சாப்பிட்டோம்.''

அரை மணியில் ஹோட்டல் வந்தடைந்தார்கள். அவர்கள் அறையில் இல்லை என்று சொன்னதும், தங்கள் அடையாள அட்டை காட்டினார்கள். மாஸ்டர் கீ உதவியால் அறை திறக்கப்பட்டது.

கப்பலிலிருந்து இறங்கியவர்கள் உடைமை சோதிக்கப் பட்டது. கழிவறையில் ஷவரப் பை இருந்தது. உள்ளே நாலு பாட்டில்கள் இருந்தன. நாலும் திராவகம். அக்னித் திராவகம். காஞ்சனா முகத்தைக் கருக்கியதே, அதே சமாசாரம்.

19

சென்னையில் பல நட்சத்திர ஹோட்டல்களில் சீனத்து உணவு பிரசித்தம். இது ஒரு சின்ன அலட்டல். காரமே இல்லாத பச்சை முள்ளங்கி இலையும் நூடுல்ஸில் நறுக்கிப் போட்ட கோழி சதையும் மிளகுப் பொடியும் தனிச்சுவை. தாய்ப்பால் மாதிரி சத்து என்கிற நம்பிக்கை. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழனின் உணவு இப்படித்தான் இருந்தது என்றால் யாரும் நம்ப மாட்டார்கள். புளி, மிளகாய் அவன் உணவில் இல்லை என்பது அறிய மாட்டார்கள். ஆனால் உணவு, பக்குவம் மட்டு மில்லை. பரிமாறல் கலையும் கொண்டது என்பது உண்மை. வண்ண ஓவியம் மாதிரி தட்டில் சீன உணவு பரிமாற எல்லா ஹோட்டல்களும் போட்டி போட்டன. ஹாங்காங் பக்கத்துப் பையன்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்து நடமாடவிட்டன. அதே ஹோட்டலில் அடைவார்த்துப் போடுகிற நம்ம ஊர்க் காரங்களுக்கு சீன உணவு செய்யத் தெரிந்தாலும் மூக்குச் சப்பை யான பையன்களை நடமாட விட, ஹோட்டலில் சீன மதிப்பு பெருகிற்று.

''கிச்சன்ல யாரும்மா வேலை செய்யறது?'' ராஜகோபாலன் வரவேற்புப் பெண்மணியைக் கேட்டார்.

''நிறையப் பேர். யார் வேண்டும்?''

''ஒரு ரவுண்ட் நானா பார்த்துடறேன். மானேஜரைக் கூட அனுப்பு.''

''என்ன தேடறீங்க ராஜகோபால்?''

''ஹாங்காங் பசங்க உண்டு, வடிவேலு. வந்தவனுங்களைப் பத்தி உள்ள இருக்கறவன் எவனுக்காவது தெரியதான்னு பார்க்க றேன்.''

''இன்று காலையிலிருந்து தெரியும். கொச்சையாய்ச் சீன மொழி பேசினார்கள். கோழி தனிப் பக்குவம் கேட்டார்கள்.

''வேறு?''

''வழக்கம்போல் விசாரித்தார்கள்.''

''என்ன?''

''பெண்கள் உண்டா என்று?''

''உண்டா?''

''உண்டு. ஆள் காட்டினோம். ஆனால் அவசரமாய்ப் போய் விட்டார்கள்.

''மிக்க நன்றி.'' ராஜகோபாலன் வெளியே வந்தார். காரில் அமர்ந்தார். யோசித்தார்.

''மேஜர் வடிவேல்.''

''யெஸ் சார்.''

''நாம் பிரிகிறோம்.''

''தனித்தனியே செயல்படப் போகிறோம்.''

''எதனால்?''

''நாம் நகர, சகலருக்கும் தெரியும்.''

''புரிகிறது.''

''உங்கள் உடைகளை எடுத்துக் கொண்டு பேரக்ஸில் காத்திருங்கள். அவர்கள் கொடைக்கானல் போவதற்குள் உங்களை அங்கே அனுப்ப முயற்சி செய்கிறேன்.''

''ஒரே வழி விமானம் இந்தியன் ஏர்லைன்ஸ்.''

''நேரம் தாண்டிவிட்டது.''

''இறக்கை உள்ள குதிரை அல்லது ரத்தினக் கம்பளம் சி.பி.ஐ.யில் உண்டா?''

''இது ஒரு ஜாயிண்ட் அஸைன்மென்ட் என்பதனால் உங்களைப் பல சமயம் பொறுத்துக் கொள்கிறேன். விரலிடுக் கில் கொட்டைப் பாக்கு வெட்டுகிற ஒரே சூரத்தனம் உங்கள் தகுதி. மற்றபடி மண்டை காலி.''

''நான் ராணுவ கமாண்டோ. எட்டுக்கு வெட்டு. வெட்டாட் டத்துக்கு மறு ஆட்டம். மறுபடி வெட்டு என்பது என் வேலை யல்ல.''

''என் வேலை. எனவே அதிகப்பிரசங்கித்தனம் காட்டாதே.''

''மன்னிப்புக் கேட்கச் சொல்கிறீர்களா?''

''இந்தச் சென்னையை விட்டு உன் ஊருக்குப் போகும் முன் மன்னிப்புக் கேட்கப் போகிறாய். நீயாக.''

''எனக்கு அதில் கௌரவக் குறைவு இல்லை.''

''கௌரவமாகவே இரு. கிளம்பு.''

''எப்படி?''

''ரத்தினக் கம்பளம், இறக்கைக் குதிரை கிடைக்கும். தேடிப் பார். சீதா ஜாவ்.'' காருக்குக் கட்டளையிட்டார்.

வடிவேலு ஹோட்டல் வாசலில் தனியே நின்றான். ஆட்டோ கூவினான்.

''செக்ரடேரியட் போ தம்பி.'' அன்பொழுகப் பேசினான்.

'இந்தச் சென்னையை விட்டு உன் ஊருக்குப் போகும் முன் நீயாக மன்னிப்புக் கேட்கப் போகிறாய்.' ராஜகோபாலன் குரல் காதில் ஒலித்தது.

உயர் அதிகாரி அறை நோக்கி நடந்தான்.

''டேவிட் என்கிற சப்-இன்ஸ்பெக்டரை மட்டும் தர ஒப்புக் கொண்டார்கள்.''

''என் பெயர் சொல்லிவிட்டீர்களா...?''

'இல்லை ஹார்பரில் உள்ள ராணுவ சாமான் இறக்குமதிக் குக் காவல்' என்றேன்.

'நல்லது டேவிட் எப்போது எப்படி இங்கு ரிப்போர்ட் செய்வார்?'

''நான் கொடைக்கானல் போகிறேன், என்னிடம் சிலர் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல தொடர்புகள் வர லாம்.''

''மறுபடி சொல்கிறேன். இது நெட்டி வேலை.''

''எனக்கு ஆயுதம் வேண்டும். கள்ளக்கடத்தல் கோஷ்டியை நான் சந்திக்க நேரிடலாம். ஸ்டென் கன் தேவைப்படும். நாலு முழு மேக்ஸின்.''

''கொடைக்கானல் டூரிஸ்ட் ஸ்பாட். அங்கு வாணவேடிக்கை விபரீதம் தரும்.''

''கவனமாய் இருக்கிறேன். ரோப் ஹமர் ஜம்பர் ஒர்க் மெட்டி ரியல்ஸ் ஒயர்லஸ் செட்.''

''எப்போது. எப்படிப் போகிறாய்?''

''ரத்தினக் கம்பளம் அல்லது இறக்கை உள்ள குதிரையில். தொடர்பு கொண்டவர்கள் சொன்னார்கள்.''

''ஸ்டென் எடுத்துப் போ. மற்றவை திருச்சிராப்பள்ளி லிருந்து வரும். இந்த ஷார்ட் லேவ் பாக்ஸ் எடுத்துக் கொள். இதன் ஜோடி டேவிட்டிடம் தருகிறேன். டேவிட் திருச்சியி லிருந்து உன்னை நோக்கி வருவார். ஒயர்லெஸ் பதினைந்து கிலோமீட்டர் ரேடியன் தொடர்பு கொள்வார்.''

ஸ்டன்கன் பழசு, ஆனால் சுத்தமாய் இருந்தது. ஏ.கே. நாற்பத்தியேழு முன்னால் எடுபடாது. ஆனால் வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். ஒரே மூட்டையில் சகலமும் திணித்துக் காத்திருந்தான்.

கார் வந்தது. உள்ளே சுப்பிரமண்யன்.

''மேஜர், வாங்க போகலாம்.'

''அட கார்லியா. இறக்கையே இல்லையே காருக்கு.''

''கழட்டி வீட்ல வச்சுட்டு வந்துட்டேன், போய் மாட்டிக்க லாம்.''

''இதையே ராஜகோபால்கிட்ட சொன்னா மன்னிப்புக் கேளுன்னுவாரு.''

''அவரு அதிகாரி. நான் சாதாரணக் கிளார்க்கு.''

''அடி சக்கை. சி.பி.ஐ.ல. கிளார்க்குக்கு டுப்பாக்கி தராங் களா?''

''என் பொண்ணு வச்சிக்கிட்டு இருந்தது சார். சும்மா பயமுறுத்தறதுக்கு.''

பரங்கிமலை மைதானத்தில் கார் நின்றது.

''வீட்டுக்குப் போணும்னே. வீடு எங்க மலை மேலையா?'' பரங்கிமலையைக் காட்டினான்.

''அது மாதா கோயில் சார். இறக்கை வரும்னாங்க.''

''ஹெலிகாப்டரா...?''

வடிவேலு கேட்டு முடித்த விநாடி. இடமாயக் கோண லாய்ச் சரிந்து தரை நோக்கி வந்த ராணுவ ஹெலிகாப்டர் தரைக்கு நோக்கிப் புல்லில் அழுந்தியது.

''அடட. வாடகை வண்டி.''

சுப்பிரமண்யம் ஹெலிகாப்டர் நெருங்கி கவர் தர, உள்ளே உடைத்துப் பார்த்தார்கள். வடிவேலுவை உற்று நோக்கினார்கள். கதவு திறந்தார்கள்.

வடிவேலுவும் சுப்பிரமணியனும் தாவி ஏறினார்கள். உள்ளே வராண்டா மாதிரி இடம். நாலு பேர் ஏற்கனவே அமர்ந்திருந் தார்கள். கதவு சாத்த, உள்ளே ரேடியோ பேச, வாசற்படி போல் எதிரும் புதிரும் உள்ள இரும்புப் பலகையில் உட்காரு முன் அது கோணலாய் இடது பக்கமாய் கிளம்பியது. உயரம் எடுத்தது. மாலை வெயிலில் தெற்கு நோக்கி வண்டிகள் விரைந்து கொண் டிருந்தன.

'யார் இவர்கள்?' அருகில் உள்ளவர்களைப் பற்றி வடிவேலு சுப்ரமண்யனிடம் சைகையில் விசாரித்தான்.

''தெரியாது'' என்று பதில் வந்தது.

வெளி இரைச்சல் உள்ளே தாக்கியது. சூரியன் ஆரஞ்சு பழமாய்ச் சரசரவென்று வெகு தூரத்தில் கீழிறங்கியது. இரண்டு மணி நேரத்தில் ஒரு மலை உச்சி சமதளத்தில் இறங்கியது.

உள்ளே இருந்த ஆறு பேரும் கீழிறங்கினார்கள். ஹெலி காப்டர் மேலெழும்பியது. சிவப்பு விளக்கு மின்னி மின்னி மலை விளிம்பில் மறைந்தது.

''அப்ப வந்துட்டம்....''

''ஆமாம்''

''பசங்க யாரு?''

''உங்களுக்குத் துணையா இருக்கும்.''

''அப்படியா, சீட்டுக்கட்டு இருக்கா கேட்கலாமா?''

''கேளுங்க.''

வடிவேலு அவர்களை நோக்கித் திரும்பினான். 'இனி இரவு' என்று வாகனத்தின் மெல்லிய சிவப்புப் பார்த்துச் சொன்னான்.

நால்வரும் ஒரே குரலில். ''எழுந்திரு'' என்றார்கள்.

அவர்களை நோக்கி அம்பாஸடர் கார்கள் இரண்டு வந்தன. காரில் வண்டியோட்டி மட்டும் இருந்தார்.

நான்கு பேரில் ஒருவன் முதலில் இருந்த ஒயர்லெஸ் கரகரத்தது.

கால் ஃப்ரம் மெட்ராஸ் டு துரோணா.... கால் ஃப்ரம் மெட் ராஸ் டு துரோணா... ஓவர்!''

வடிவேலு தாவி ரிசீவர் எடுத்தான்.

''துரோணா ராஜர்! ஐ யம் ஹியரிங் யூ மெட்ராஸ். ஓவர்.''

''மேஜர் வடிவேல்... இது ராஜகோபால், இரண்டு அம்பாஸ டர் கார் உங்களை நல்ல இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும். தங்குமிடம் போனதும் மீண்டும் தொடர்பு கொள்ளலாம். ஓவர்.''

''ராஜா'', வடிவேலு ரிசீவர் மாட்டினான். காரில் பிரிந்து ஏறி னார்கள்.

பெரிய பங்களாவுக்குள் கார்கள் நுழைந்தன.

''இங்க இறக்கிவுட்டுப் போயிடச் சொன்னாங்க சார்.''

''போய்டு.''

கொடைக்கானல் ஜெகஜோதியாய்ச் சற்றுத் தள்ளித் தெரிந்தது. பெரிய காம்பவுண்ட் சுவர். சுவர் அருகே விதவித வண்ணத்தில் போகன்வில்லா புல் தரை. சோடியம் விளக்கு. நாலைந்து நாற்காலிகள் சுவருக்கு மறுபக்கம் புல்தரை. சற்றுப் போய்ச் சரிவு உடையவிழ்த்து விட்டுக் குளித்தான். நாலாவது செம்பின்போது கதவு தட்டுவது கேட்டது.

''மேஜர் சார்.''

''என்ன சுப்ரமண்யம்? குளிச்சிட்டிருக்கேன்.''

''என் ரூமுக்கு வாங்க. சீக்கிரம்.''

குழாய் நிறுத்தி டவல் சுற்றிக் கொண்டான். கதவு திறந் தான். லுங்கியில் சுப்ரமண்யம் வெறும் மார்போடு நின்றார்.

''என்ன?''

''ஆள் நடமாடறாங்க.''

நேர் எதிர் அறையில் புகுந்தார்கள்.

மூன்று பெண்கள் இளம் வயதினர். நேப்பாள முகங்கள், ஸ்வெட்டர் பின்னியபடி பாதையோரப் பாறைச்சுவரில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.''

''அகதிகள். இதுவா சந்தேகம்?''

''ஒரு பொண்ணு காணாம். கறுப்புக் கோட்டுப் பொண்ணு, லைட் போடறதுக்கு முன்ன பார்த்தேன். இங்கியே பார்த்துக் கிட்டு இருந்தாங்க. லைட் போட்டுட்டுப் பார்த்தேன். லைட் எரிஞ்சதும் துள்ளி எழுந்து மரம் தாண்டி ஓடிருச்சு.''

''கவனி. குளிச்சுட்டு வரேன்.''

மறுபடி குளியலறை போனான். குழாய் திறந்தான். பாத்ரூம் வழியே எட்டிப் பார்த்தான்.

யாரோ ஒரு ஆள் த்ரி ஓ த்ரி மாதிரி துப்பாக்கியை தோளில்

இருந்து எடுப்பது தெரிந்தது. எட்டிப் பார்த்த இடத்தை குறி வைப்பது புரிந்தது.

சட்டென்று குனிந்தான்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து - ஆறாவது எண்ணும்போது 'சிலீர்' என்று பாத்ரூம் கண்ணாடி தெரித்தது. ஈயக்குண்டு சுவர் தாக்கி, எதிர்ச் சுவர் மோதி பக்கெட்டில் அடி பட்டது. வேண்டுமென்றே ''ஐயோ'' என்று வடிவேலு அலறி னான். பக்கெட் உதைத்தான்.

கதவு திறந்து டவல் சுற்றி அறைக்குள் உள்ள திரைச் சீலையை மெல்ல விலக்கிச் சுவரோடு ஒட்டியபடி வெளியே பார்த்தான்.

அந்த ஆள் ஓடுவது தெரிந்தது. அது வடக்கு.

20

வாசல் கதவு தடக்கென்று திறந்தது. சுப்ரமண்யம், ''என்னாங்க ஆச்சு?'' என்று கூவியபடியே குத்திட்டு உட்கார்ந்த படியே அறைக்குள் வந்தார். உட்கார்ந்தபடி வரும் வாத்து நடை யில் சுப்ரமண்யம் பயிற்சி உள்ளவர்போலும். விரைவு இருந்தது.

''சுடறான்.'

''நம்மளைப் பத்தித் தெரிஞ்சிட்ச்சா?''

''தினம் சாயங்காலம் தினத்தந்திக்கு சி.பி.ஐ. நியூஸ் கொடுத்துடறீங்க. தெரியாத இருக்குமா?''

''சும்மா இருங்க, வடிவேலு. எங்க டிபார்ட்மெண்ட் ஆளுக்குக் கூட இந்த மூவ்மெண்ட் தெரியாது.''

சுப்ரமண்யம் குண்டு எடுத்துப் பார்த்துக் கவலையாவது தெரிந்தது. முகம் இருண்டு, பயத்தின் சாயல் படர்வது உணர முடிந்தது. தன் தலையைத் துளைத்திருந்தால் என்கிற கலவரமும் மனைவியும் குழந்தைகளும் மனதில் வந்திருக்க வேண்டும். வடிவேலுவுக்குப் பாவமாய் இருந்தது. இப்போது ஆறுதல் சொல்லுவது சுப்ரமண்யத்தை அவமானத்திற்குள்ளாக்கும். அதே சமயம் இவரை முன்னேற விடுவதும் தடுமாற்றத்திற்கு உள்ளாக்கும். சுப்ரமணி ஸ்பை துப்பறிபவர் யுத்தம் செய்ய

இயலாது. நாலு நாள் பிச்சைக்காரன் போல் விளக்குக் கம்பத்துக் குக் கீழேயே இருந்து, வர ஆள் போற ஆளைக் கவனி என்றால் முடியும். கண்ணிவெடி வயலைக் கடந்து போ என்கிற கட்டளைக் குப் பயம்.''

''சரி... நீங்க குளிங்க, சுப்ரமண்யம். உடுத்தி எதுனா சாப்பிட்டுப் போலாம்.''

''நான் கிச்சன் செக் பண்ணிட்டேன். சமையலுக்கு ஸ்பெஷலா நம்மாளு வந்திருக்கான். வீட்டுக்கு செக்யூரிடி ரிசர்வ் போலீஸ் ஒண்ணு உதைக்குது.''

''என்ன?''

''ஒரு மூட்டை அரிசி வாங்கிப் போட்டிருக்காங்க. ஏன்? நாலு கிலோ வனஸ்பதி. நாப்பது ப்ரட். அதான் புரியலை.''

''ஆளுங்க வரும். தபதபன்னு குவியும்.''

''அப்போ விரல் வச்சுட்டாங்க. இடம் தெரிஞ்சு போச்சுன்னு அர்த்தம் ஆவுது.''

''மேப்புல விரல் வச்சு இன்னாண்ட நாப்பது கிலோ மீட்டர், அன்னாண்ட நாப்பது கிலோ மீட்டர் காடு. கோம்பிங் ஆப்பரேஷன் நடக்கலாம். நாப்பது கிலோ மீட்டர் சதுரத்துக்குக் கோம்பிங்னா நூறு பேர் வேணாம்?''

சுப்ரமணி தலை குனிந்து யோசித்தார். கவலையானார்.

''என்னங்க, வீட்டு ஞாபகமா? கதை எழுதற மனைவி ஞாபகமா? உயிரே, உயிரின் உயிரே எதுனா கவிதை ஓடுதா உள்ள?''

''உங்களுக்கு அப்படி யாரும் இல்லையா, மேஜர்?''

''ஏன், கமாண்டோன்னா கல்லுல செதுக்கி அனுப்பி யிருப்பாங்கன்னு நினைப்பா...? பொண்டாட்டி தான் உயிரா சுப்ரமணி...? தங்கச்சி அப்பத் தோணாதா? பத்துப் பசங்க த்ரீ ஒத்ரிய வச்சிக்கிட்டு டாங் காட்டறான். சின்னப் பொண்ணு மேல ஆஸிட் ஊத்தறான். இவனுங்களை வுட்டா காட்டு தர்பார் ஆயிடும். உடுத்திக்கிட்டுவாங்க சுப்ரமணி. அடிக்கிற அடியில அவனைப் பெத்தவ கர்ப்பப்பை கழண்டு விழணும். இன்னி ராத்திரி நான், இல்லை... அவன் யாருன்னா ஒருத்தன் தான் உயிரோட இருக்கணும்.''

கீழே உடுத்தி இறங்க, கூட வந்த ராணுவ வீரர்கள் தடதடவென்று கிச்சனைச் சோதனை செய்தார்கள். சமையலுக்குச் சோதனை பழக்கம் போலும். ஒதுங்கி நின்றான். பூனைக்கு உணவு போடப்பட்டது. பிறகு உண்டார்கள். தண்ணீரும் ரொட்டித் துண்டும் எடுத்துக் கொண்டார்கள். மிகச் சக்தி வாய்ந்த பாட்டரி விளக்குகள், கயிறுகள், கொக்கிகள், ஆணிகள், சம்மட்டி, க்ரனேட் பாக்ஸ், உபரி மேகஸின், வயர்லெஸ் செட், ஏ.கே. நாற்பத்தியேழு, ஸ்டென் கன், வெட்டுக்கத்தி, ஓவர்கோட் ஏற்றப்பட்டன. ஒரு கெட்டில் கூட ஒருவன் முதுகில் ஆடியது.

வயர்லெஸில் தயார் நிலை சொல்லப்பட்டது.

''மிகக் கவனமாய் ஒற்றை வரிசையாய்க் காட்டுக்குள் ஊடுருவ வேண்டும். கனமான வயர்லெஸ் சிக்னல்கள் வருமிடம் என்று மூன்று இடங்கள் உள்ளன.''

மேப் பிரிக்கப்பட்டது. ''உங்கள் கட்டட வாசலை மையமாகக் கொண்டால் நேர் பின்னே அதாவது மேற்கே அறுபது டிகிரி இடப்பக்கக் கோணத்தில் பதினாலு கிலோ மீட்டர் தொலைவில் தடம் தெரிகிறது.''

''மரம், காட்டெருமைகள், மான்கள், பொதுமக்கள், இவர்களுக்குத் தொந்தரவு தர வேண்டாம்.''

''பெஸ்ட் ஆஃப் லக், இப்போது மணி ஒன்பது நாற்பது... செக். பத்து நாற்பதுக்கு தொடர்பு கொள்றேன். மேஜர் வடிவேல் ஸ்குவாட் லீடர் ரிபீட் மேஜர் வடிவேல் ஸ்குவாட் லீடர்.''

''அகெய்ன் பெஸ்ட் ஆஃப் லக் ஓவர்.''

சுப்ரமணி பிஸ்டலும் கயிறு வளையமும் தூக்கி நிற்க முதல் ஆளாய் ஒரு ராணுவ வீரன் போனான். பிறகு இன்னொருவன், பிறகு இன்னொருவன். பிறகு சுப்ரமணி, கடைசியாய் வடிவேல்.

தார் ரோடு வலது பக்கம் பிரிந்தது. தயங்கி, காம்பஸ் பார்த்து இடது பக்கம் உள்ள ஒற்றையடிப் பாதையில் நடந்தார்கள். காடு அவர்களைக் கௌவிக் கொண்டது.

வானத்தில் நீலம்தான் வெளிச்சம். இலைகளுக்கு இடையே உள்ள இருட்டு வேறு விதம். வெவ்வேறு கருமை. ஆள் நிற்க அவுட்லைன் தெரியும். வானம் பின்புலமாய் இருத்தல் வேண்டும். மரத்தில் மறைந்து சுடலாம், சுட்ட வெளிச்சம்தான் கடைசியில் தரிசனம். உடம்பு தரையில் விழும் ஒலிதான் கடைசி ஒலி. சுடலாம். எப்போதும் யாரும் எங்கிருந்தும் சுடலாம்.

''ஹால்ட்.'' முதல் ஆள் மெல்லக் கூவினான். ஒற்றை வரிசை உறைந்து நின்றது. அப்படியே உட்கார்ந்தது.

''க்யா ஹுவா?''

''வொய்ல்ட் பம்பலோஸ்.''

நறுக் நறுக்கென்று புற்கள் கடிபடுவது கேட்டது. ஹூங்கார மூச்சுக்கள் கேட்டன. ஏதோ ஒன்று ஓடியது.

''தொலைவு என்ன?''

''நாற்பதடி.''

''இடம்?''

''உங்கள் முஷ்டியின் முதல் வளைவு என் தலையென்றால், மூன்றாவது வளைவுக்கும் நான்காவது வளைவுக்கும் நடுவே.''

''எத்தனை?''

''சுமாராய் இருபது. அதிகமும் இருக்கலாம்.''

வடிவேலு எழுந்து முதல் ஆளிடம் போனான். பத்தடி நீளம். தலை உயர்த்த, எட்டடி உயரம் வெள்ளை முன் மண்டை பளீரென்று தெரிந்தது. இருபதுக்கும் மேற்பட்ட காட்டெருமைகள் அலைந்து கொண்டிருந்தன. குட்டிகள் சில இருந்தன. ஓர் இடி. குடல் வாய்க்கு வந்துவிடும் ஒரு சிலுப்பு. கொம்பு பட்ட இடம் நொறுங்கும். காட்டெருமைகள் ஓடக் கூடியவை. வெகு வேகமாய் உடம்புச் சுமைதாங்கி மூர்க்கமாய் ஓடக்கூடியவை. தாக்க ஆரம்பித்தால் மரணம்தான்.

''வழித்தடம் மாற்று.''

''எவ்விதம்?''

''இன்னும் இடது பக்கம் போ. பத்து டிகிரி பதுங்கிப் பதுங்கிச் சப்தமெழாது போ.'' முதல் ஆளை அனுப்பினார். சுள்ளி உடைய, நாலைந்து எருமைகள் சப்தம் கேட்டு நிமிர்ந்தன. வயிறு சில்லென்றது.

வடிவேலு ஸ்டென் மெல்லத் திறந்து தயாரானான். அடுத்த ஆள் போகலாம். இந்த முறையும் சருகு ஓசை கேட்டது. எருமைகள் பயத்துடன் அலைந்தன.

''சுப்பிரமணி, நீ போ.''

''முட்டுமா மேஜர்?''

''உன்னை நோக்கி ஒன்று வந்தாலும் சுட்டுருவேன். பயப்படாத போ. நான் உன்னைக் கவர் பண்றேன். சுப்ரமணி சாதாரணமாய் நடந்து போ. எருமையைப் பார்க்காத.''

''மேஜர்.''

''நத்திங் வில் ஹாப்பன். கோ.''

சுப்ரமணி விறுவிறுவென்று பத்து டிகிரி கோணத்தில் செடிகளை விலக்கி நடந்தார்.

எருமைகள் ஆள் பார்த்துவிட்டன. ஹூங்காரம் இட்டன. குளம்பைக் காலால் கீறி ஹூக்கும் என்று இரண்டடி சுப்ரமணியைப் பார்த்து முட்டுவது போல் பயமுறுத்தின. குட்டிகள் வலது பக்கம் ஓடின. சுப்ரமணி மேடேறிப் பாதுகாப்பான இடம் போனார்.

''நௌ யூ கோ.''

அடுத்த ஆள் ஒயர்லெஸ் செட் ஆள். அவன் நகர ஆண்டெனா ஆடியது. அவன் ஸ்டென் கன்னைத் தோளில் மாட்டிப் பிஸ்டலை உள்ளங்கையில் வைத்துக் கொண்டான்.

சாதாரணமாய்ப் பாதி தூரம் கடந்தான். காட்டெருமைகள் தவித்தன. பெண் எருமைகள் இப்போது வலது பக்கம் அடைந்தன. கடாக்களை வியகம் வகுத்துக் கூட்டத்தை மறைத்துக் கொண்டே போனவன் திரும்பி வியூகம் பார்த்தான். இடதுபக்க கடா திடீரென்று கிளம்பி அவனை நோக்கி ஓடியது.

''ரன்... ரன் யூ இடியட்...'' வடிவேலு எழுந்து கத்தினான்.

எருமைகள் திசை திரும்பின. நடுவிலுள்ள பெரிய கடா வடிவேலுவை நோக்கிச் சீறியது. குளம்பு வெகுவேகமாய்த் தேய்த்துத் தூசி கிளப்பியது. இருட்டில் தூசி நிழலுருவத்தையும் மறைத்தது. அந்த ஆள் ஓடி மேடேறினான். வடிவேலுவை நோக்கி இரண்டு எருமைகள் நின்றன.

எருமைக்கூட்டம் சரசரவென்று வலது பக்கம் காடுகளுக்கிடையே நகர்ந்தது. நகர்தலில் கிளைகள் ஓடியும் சப்தம் கேட்டது. பூமி நரநரத்தது. தடுங் தடுங் என்று சப்தம் கேட்டது.

வடிவேலு ட்ரிக்கரில் கை வைத்து அசையாது நின்றான். ஸ்டென் கன் தாக்குப் பிடிக்குமா... மண்டையில் குண்டு தைக்குமா... கவலைப்பட்டான். அசையாது எருமைகளைப் பார்த்து

நின்றான். இரண்டு கடாக்கள் தொடர்ந்தன. கை விளக்கை டக்கென்று ஒருமுறை போட்டு அணைத்தான். எருமைக் கண் நீலம் காட்டியது. எதிர் மேட்டில் சுப்பிரமணி பிஸ்டல் உயர்த்தி நிற்பது தெரிந்தது.

எருமைகள் அசையாது காது வடிவேல் பக்கம் மடித்து காத்திருந்தன. எருமைக் கும்பல் நடந்து போவது வெகு தொலைவே சடசடத்துக் கேட்டது.

ஆளைத் தாக்கிய எருமை தலையை உலுக்கிக் காட்டுக்குள் மற்ற எருமைகள் போன வழியே நடந்தது. இது தலைவன் போலும். அசையாது பார்த்துக் கொண்டிருந்தது, இரண்டடி முன்னே நகர்ந்தது, வடிவேலு துப்பாக்கியை வயிற்றில் இறுக்கிய வண்ணம் பின்னடைந்தான். எருமைக்கும், அவனுக்கும் முப்பதடி தொலைவு இருந்தது. குளம்புகள் இடதும் வலதும் மண் கீறின.

சார்ஜ் செய்யுமோ? இடதும் வலதும் பார்த்துக் கொண்டான்.

ஹூங்காரம் நீண்டதாய்க் கோபமாய் இருந்தது. போதும் என்பது போல் பின்னடைந்தது.

வடிவேலு நிமிர்ந்தான்.

சட்டென்று எருமை வேகத்தில் அவனை நோக்கி ஓடி வந்தது. வடிவேலு ஓவென்று கத்திக் கொண்டே சுப்ரமணி நடந்த இடத்தில் எருமைக்குப் பத்து டிகிரி விலகி வெகுவேகமாய் ஓடினான். முட்கள் அறுந்தன. எருமையும் வடிவேலுவும் நாலடி இடைவெளியில் கடந்தார்கள். எருமை நிற்க முடியாது. நேரே ஓடியது. மேடேறினான். எருமை கிளைகளை உடைத்துக்கொண்டு திரும்பியது. குலுங்கலாய் ஓடி வந்து திரும்பியது. தலைதூக்கி வடிவேலுவைப் பார்த்தது. வடிவேலு ஓடிய வேகத்தில் மேடு கடந்தான். சுப்ரமணியும், ஒரு ராணுவ வீரனும் அவனை அணைத்துக் கொள்ள திரும்பினான்.

எருமை அவன் ஓடிய பாதையில் ஓடி வந்தது. மேடேற அது பின்னடைய வேண்டும். வடிவேலு மூச்சிரைக்க அதன் கண்களில் மறுபடி விளக்கடித்தான்.

'லெட் அஸ் ரன்.'

எருமை அங்கேயே நிற்க, அவர்கள் ஓடினார்கள். ஒற்றை வரிசையாய் செடிகொடிகளை மிதித்துக் கொண்டு ஓடினார்கள்.

வடிவேலு திரும்பித் திரும்பிப் பார்த்தபடி ஓடினான். ஒரு கிலோ மீட்டர் ஓடிய பிறகு மெல்ல, ''ஹால்ட்'', என்றான்.

அவர்கள் வட்டமாய் உட்கார்ந்து கொண்டார்கள். மூச்சிரைத்தார்கள். சுப்ரமணி அடிக்குரலில் மெல்ல முணுமுணுப்பது கேட்டது.

வடிவேலு அருகில் உட்கார்ந்து அவர் தோளில் கை வைத்தான். சுப்ரமணி அசையவில்லை. மெல்லப் பாடுவதை நிறுத்தவுமில்லை.

''பாதி மதி நதி மதி போது மணிசடை
நாதனருளிய குமரேசா
பாகு கனி மொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காதுமொரு விழி காக்க முறவருள்
மாயனரி திரு மருகோனே
காலன் எனைஅணு காமல் உளதிரு
காலில் வழிபட அருள்வாயே...''

சுப்ரமண்யம் பாட்டைப் பாதியில் நிறுத்தி உதடு கடித்தார். முகம் தூக்கினார். அங்கே எல்லாருக்கும் அது ப்ரேயர் என்பது புரிந்தது. ஆடாமல் அசையாமல், வெட்டவெளி பார்த்து உட்கார்ந்திருந்தார்கள்.

மரணத்தை விடவும், மரண பயம் கொடியது.

எருமை இவர்களை எழுபதடி தொலைவில் இருந்து வேடிக்கை பார்த்தது.

21

எல்லா மந்தைக்கும் உண்டான இயல்பே காட்டெருமைகளுக்கும் இருந்தது. ஒரு மந்தைக்கு ஒரு தலைவன்தான். இன்னொரு தலைவன் வரச் சண்டைதான். தலைவனுக்கு எதிரே தன் பலம் காட்டி, உன்னை விட நான் உயர்வு என்று நிரூபிக்கக் கடும் முயற்சிகள் செய்ய வேண்டியிருக்கும். அந்த எருமை முடிந்த போதெல்லாம் அந்த முயற்சிகள் செய்தது. மந்தையை விட்டு விலகி, அதே நேரம் மந்தைக்கு மிக அருகிலேயே காவலாய் இருந்த அந்தக் காட்டெருமை மனிதர்களைக் கண்டதும் கோப திசை மாற்றியது. மேடு சிரமப்பட்டு ஏறி மனித வாசனையை முகர்ந்து முகர்ந்து அவர்களைத் தொடர்ந்தது.

மேஜர் வடிவேலுக்கு இளைப்பாறலில் விருப்பமே இல்லை. நடக்க முடியாது என்று தசைகள் கெஞ்சுவதற்கு பிறகு ஒரு

மணி நேரம் நடப்பது என்பது நல்லது. அதில் ஓய்வு பூரணமாகும். இன்னும் இதைவிடத் தொலைதூரம் போக முடியும் என்கிற நம்பிக்கை வரும். நடப்பதே சுகம் என்று மனசு மாறும். இடை இடையே அரை மணிக்கு ஒருமுறை ஓய்வென்பது தசைகளைச் சோர்வடையச் செய்யும். மனசு ஓய்வோடு ஒட்டி வாடும். ஆனால் சுப்ரமணியம் இந்த வேகம் தாங்க முடியாத ஆள். இவரோடு போவது நல்லதா? தெரியவில்லை. எங்கே இவரை விட்டு விட்டுப் போவது? புரியவில்லை. கொஞ்சம் விரட்டிப் பார்ப்போம் என்றுதான் தோன்றியது. அதுதவிர, ரகசிய சங்கேதம் பரிமாறிக் கொண்ட நாலுபேர் எந்த அமைப்பு, எவரால் அனுப்பப் பட்டார்கள் என்பது தெரியவில்லை. இந்திய ராணுவம் என்பது பேச்சில் நடவடிக்கையில் புரிகிறது. ஆனால் நம்ப முடியாது. யாரையும் நம்ப முடியாத இடம் இது. சுப்ரமணியம் கூடத் தனக்கு வேவு பார்க்கும் ஆளாய் அமர்த்தப்பட்டிருக்கலாம். ஆனால் இப்போது டீம் விட்டுப் போவது நல்லதில்லை.

''சுப்ரமணியம் எழுந்திருங்கள்'', கட்டளையிட்டான். கால்கள் உதறச் சொன்னான். முதல் ராணுவ வீரனுக்குப் பிறகு அவரை அனுப்பினான். பிறகு மற்ற இரண்டு பேரை அனுப்பி, தான் கடைசியாய்த் தொடர்ந்தான். மனசுக்கு அடியில் புத்தியின் ஏதோ ஓர் இடத்தில் தான் யாராலோ கவனிக்கப்படுவதாய்த் தோன்றியது. தோன்றிய நேரத்தில் கிளைகள் முறிந்தன. நேர் பின்னால் தடதடவென்று சத்தம் கேட்டது. சட்டென்று திரும்பி ஸ்டென் கன் சேஃப்டி கேட்சைத் தளரவிட்டான். எருமை மூர்க்கமாய் உயரமான செடிகளூடே ஓடி வந்து கொண்டிருந்தது. பத்து விநாடி ஓட்டத்தில் அவனை நெருங்கிவிடும் எருமையை மிக அருகில் சுட்டுக் கொல்வதே உசிதம். ஐந்து வினாடி தொலைவு இருக்கும்போது ட்ரிக்கரின் முதல் கிளிக் மூன்று விநாடி தொலைவு இருக்கும்போது டியூங்... டியூங்... என்று இரண்டு குண்டுகள் சீறி எருமையைத் துளைத்தன. எருமை எகிறி முன்கால் தூக்கித் தடேரென்று இடது பக்கம் சரிந்தது. துள்ளி எழுந்தது. டியூங்... இன்னொரு குண்டு... அது பக்கவாட்டில் நகர, கழுத்தருகே பாய்ந்தது.

மறுபடி சரிந்து சுழன்றது. தள்ளாடி எழுந்தது. நாலடி முன் வைத்து முழங்கால் உடைந்தாற்போல் நின்றது. எருமைக்கும் அவனுக்கும் நாற்பதடி தொலைவு. எருமை நின்ற விதம் விசித்திரமாய் இருந்தது. முன் முழங்கால்கள் மடித்து, குட்டைப் பின் கால்கள் அலையத் திண்டாடியது. கால்கள் உடைந்துவிட்டனவா?

டார்ச் அடித்தான். எருமை எங்கோ சிக்கிக் கொண்டிருப்பதாய்த் தெரிந்தது. ரத்தம் ஒழுக அசைந்தது. ஹுங்காரம் கொடுத்தது.

''க்யா ஹுவா...'' ஒரு ராணுவ வீரன் அருகே வந்தான். எருமையைப் பார்த்துப் பயந்தான். ''இன்னமும் பலது இருக்குமோ?'' துப்பாக்கியை சரியாக்கினான்.

''இல்லை. இது மட்டுமே - வேறு சப்தம் இல்லை. இது வேறு எருமையா? அதே கூட்டமா?''

''அதே எருமை... உங்களைத் தாக்கியதுதான்.''

''இருக்கலாம். ஏன் அப்படி நிற்கிறது?''

மறுபடி டார்ச் அடிக்க எருமையின் முன் முழங்கால்கள் எங்கோ இருந்தன.

''பள்ளத்தில் சிக்கியிருக்கிறது.'' ராணுவ வீரன் மெல்லிய குரலில் பேசினான்.

வலது காலிலிருந்து கத்தி உருவி, எருமை நோக்கி நடந்தார்கள்.

ஒரு மரத்தடிக்கு அருகே போய் ''என்னைக் கவர் செய்,'' என்று வடிவேலு உத்தரவிட்டான். முன்னே நகர்ந்தான்.

அவனை அங்கேயே நிற்க வைத்து, தன்னை எவர் தாக்கினாலும் சுடும்படியான உத்தரவுதான் கவர் செய்வது. ராணுவ வீரன் மண்டியிட்டுத் தயாராக வடிவேலு எருமையை நெருங்கினான். எருமை திமிறியது. எகிற முற்பட்டது. தூசி கிளப்பியது. பெரிய ஹுங்காரம் செய்தது. விநாடி நேரத்தில் எருமையை நெருங்கிச் சரக்கென்று கழுத்துக்கடியில் கத்தியைப் பாய்ச்சினான். ரத்தம் கைகளில் பீய்ச்சியது. உருவினான். எருமை பெரிதாய்க் கத்தியது. தலையாட்டித் துவண்டது. மெல்லப் பின்னடைந்தான். சடக்கென்று இடது கால் எங்கோ பள்ளத்தில் இறங்கியது. தடுமாற வலது காலும் இறங்கியது. விநாடி நேரத்தில் இடுப்பு ஆழம் போய் உள்ளே கால்கள் அந்தரத்தில் ஆடின. வலதுக் கையில் கத்தியும், முதுகில் உள்ள மூட்டையும் அவனைத் தாங்கின. அதல பாதாளமாய்... உடம்பு அதிர்ச்சியில் ஆடியது. இரண்டு கைகளையும் பூமியில் ஊன்றி எழும்போது இடுப்பு எங்கோ சிக்கியது. என்னவிதப் பள்ளம் இது என்று புரியவில்லை.

''சிப்பாய் வெளிச்சம் போடு...'' ஹிந்தியில் கத்தினான். இரண்டு அடி அகலத்தில் நீளமாய் நீர்ப்பாதை போல சருகுகளால் மூடப்பட்ட பள்ளம் என்பது வெளிச்சத்தில் புரிந்தது.

எருமை அதில்தான் சிக்கியிருந்தது. வளைந்து வளைந்து போன பள்ளம். மேலே முற்றிலும் சத்தை சருகுகளால் மூடப்பட்ட பள்ளம். ஆழம் எவ்வளவு இருக்கும்? கை ஊன்றியபடியே கத்தியால் கல் ஒன்று தட்டினான். பள்ளத்தில் கல் விழுந்தது. சப்தமே கேட்கவில்லை. சத்தையில் விழுகிறதோ கல் அல்லது வெகு ஆழமா? பன்னிரண்டு எண்ணும்போது கல் டொப் என்று விழும் ஓசை கேட்டது. அப்படியானால் அதல பாதாளமா? கைகள் நடுங்கின. 'சிப்பாய், கயிறு கட்டு என் இடுப்பில்.''

''வேண்டாம் மேஜர், கை தாருங்கள்.''

கை தர வழுக்கினால் பன்னிரண்டு சொடக்கு நேரம் ஆகும் தரை தொட. முட்டாள், புரியாது பேசுகிறான்.

''கயிறு கட்டு என் இடுப்பில்...'' பல் கடித்துக் கத்தினான்.

சிப்பாய் கயிறு கட்டிவிட்டு மேலே ஏறினான். சிப்பாய்க்குக் கல் தள்ளி ஆழம் காட்டினான். இரண்டு மலைகள் பிளந்த இடமா இது? சிப்பாய் வியக்க, வடிவேலுவுக்கு லேசாய்த் தலை சுற்றியது. உதறி நிமிர்ந்து நின்றான். ஆக, இந்தத் தடம் இப்படிப்பட்ட ஆழங்கள் நிறைந்தது. எருமைக்கு நன்றி. அந்தப் பிளவு இடம் வெகுதூரம் நீண்டு போயிற்று. எல்லா இடத்திலும் இரண்டடி. ஒரு அடி, மூன்றடி என்கிற அகலம்தான். ஆழம் வெகு அதிகம். மேலே சத்தை, குப்பை கால் வைக்க மரணம் நிச்சயம். பை காப்பாற்றியது தடுத்து நிறுத்தியது. எப்படிச் செத்துப் போனான் என்று தெரியாத மரணமாக இருந்திருக்கும். அத்தனை ஆழம் இருக்குமெனில் இது என்ன இடம்? மலை உச்சி? மலைப் பாறை பிளந்து இடையே ஏற்பட்ட இடைவெளி? இனி இப்படி வேகமாய்ப் போக முடியாது. குழுவுக்குத் தனக்கு நேர்ந்த ஆபத்தை விளக்கினான். உறுதியான சத்தை, குச்சித் தட்டலுக்கு அசையவில்லை. ஆள் கால் வைக்க இடம்விட்டது. மூன்று குண்டுகள் பட்ட எருமையை அதுதான் மடக்கி நிறுத்தியது. இல்லையெனில் எருமை தாக்கியிருக்கும். கத்திக் குத்தில் இருதயம் துளைக்கப்பட்டுச் செத்துப் போயிருக்கிறது. இனி என்ன செய்வது? நடக்க வேண்டும். முன்னிலும் அதிகக் கவனமாய், அதிக இடைவெளி விடாது நெருக்கமாய் நடக்க வேண்டும்.

''நட...'' கட்டளையிட்டான்.

''மூணு தடவை சுட்டுட்டீங்க. தப்போன்னு தோணுது'' முன்னால் சுப்ரமணியம் பேசினார். ஆனால் வேறு வழியே இல்லை என்பது எல்லாருக்கும் புரிந்தது.

கையில் எருமை ரத்தம் ஒட்டி ஒட்டிப் பிரிய வடிவேலு யோசனையுடன் நடந்தான்.

பள்ளத்தாக்கில் அவர்கள் அனைவரும் எழுப்பப்பட்டார்கள்.

''என்ன?''

''ஆட்கள் நடமாடுகிறார்கள்.''

''துப்பாக்கிச் சத்தம் கேட்டது.''

''எருமையைச் சுட்டிருக்கலாம். ஹூங்காரம் கேட்டது. கடைசியில் பெரிய கத்தல், வெட்டிக் கொன்றிருக்க வேண்டும்.''

''தோல் வேட்டைக்காரர்களாய் இருக்கலாமோ?''

''எவராக இருப்பினும் எச்சரிக்கை முக்கியம்.''

''திசை எது?''

''எதிரொலி அதிகம். குழப்பமாய் இருக்கிறது.''

''ஒன்று செய். ஆறு பேரைத் தவிர மற்ற அனைவரும் குகைகளில் போய் அமர்ந்து கொள்ள வேண்டும் என்று கட்டளையிடு. ரேடியோ இயக்க வேண்டாம் என்று சொல். ஆறு பேர் இரண்டாகப் பிரிந்து இரண்டு பக்க மலைச் சரிவுக்குப் போகச் சொல். ஆள் பார்த்தால் சுட வேண்டாம். உடனே திரும்பி வரச் சொல்.''

''குகைக்குள் போக வெளிச்சம் வேண்டும். மெழுகுவர்த்தி போதும். தீமூட்ட வேண்டாம். முழு வேகத்தில் இயங்கச் சொல்.'' நூற்று நாற்பது பேர் வெட்ட கூடம் சரசரவென்று கலைந்தது. வெளியில் போர்வை போர்த்துத் தூங்கியவர்கள் எழுந்து கலைந்தார்கள். சிறிய மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் ஒருவன் தோளை ஒருவர் பிடித்து உள்ளே போனார்கள்.

''அந்தக் கல்லுவைத் தனியே வைத்திருக்கிறோம் நினைவிருக்கிறதா?''

''நம்மைத் தாண்டித்தானே இருக்கிறான். நம்மைக் கடந்து தானே போக வேண்டும்.''

''எந்தத் திசையில் எதிரி என்று புரியவில்லை.''

''கொடைக்கானல் பக்கமாய் வர வேண்டும்.''

''சரி, வேறு புரட்சிப் படை கல்லுவைத் தாண்டி மலைப் பள்ளத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தகவல் வர வேண்டுமா?''

''தேவையில்லை, அங்கு காயம் பட்டவர்கள் அதிகம். உறங்கட்டும்.''

''ஐயா, என்னை மரத்திலிருந்து ஒயர்லெஸ் தொடர்பு கேட்கிறான். பேசட்டுமா?''

அந்தத் தலைவன் யோசித்தான்.

''வேண்டாம். எவர் வரினும் நாம் எதிர் கொள்வோம். நாம் பதில் தராது போனால் அவனே நேரில் வருவான்.''

திபேத்திய குடிமக்கள் போல் உள்ள அஸ்ஸாம் போராளிகள் பதுங்க, அவர்களைத் தாண்டி மலைமீது உள்ள கல்லு துப்பாக்கிச் சப்தம் கேட்டு விழித்துக் கொண்டான். தென் திசையில் வெளிச்சம் இடைவிட்டுத் தெரிந்தது. காட்டெருமை ஓசை கேட்டது. எகிறி, மறுபக்கம் பள்ளத்தில் பார்த்தான். அங்கே உள்ள வேறு புரட்சிப் படை விழித்துக் கொண்டார்கள் என்பது நடமாட்டத்தில் புரிந்தது. அவர்கள் ஒயர்லெஸ்ஸில் ஏதோ கேட்கிறார்கள். ஓவர், ஓவர் என்கிறார்கள்.

என்ன நடக்கிறது இங்கே... நான்கு ஐந்து நாட்கள் சோம்பலாய்க் கிடப்பது கடினமாய் இருக்கிறது. யார் வருகிறார்கள்? ஒருவேளை சின்ன முதலாளியாய் இருக்குமோ? எருமைக் கூட்டம் பார்த்து ஆசை தாங்காமல் சுட்டிருப்பாரோ?

''சோட்டா சாப்... கல்லுவின் வந்தனம். வருக. கொடைக்கானல் காட்டிற்கு'' என்று முகமன் கூறலாமா? தப்பு செய்துவிட்டேன்; அப்பாவின் கோபத்திலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சலாமா? கொடைக்கானல் பெயர் கூடக் கசந்து விட்டது. பம்பாய் வருகிறேன் என்று கேட்கலாமா?''

மறுபடி வெளிச்சம் அசைந்தது. இரண்டு டார்ச்சுகள் நாலைந்து மனிதர்கள். நடந்து போகலாமா? இல்லை. புரண்டு, பதுங்கிப் போகலாம். எதற்கும் அது நல்லது.

மலையின் அடுத்த பக்கம் ஒரு படை. அதற்கு நேர் எதிர்ப் பக்கம் இன்னொரு புரட்சிப் படை. இவர்களிடம் மாட்டாது சுற்றி வளைத்து வெளிச்சம் தொடலாமா? படுக்கையிலிருந்து கல்லு உருண்டு புதர்ப் பக்கம் போய் உட்கார்ந்தபடியே தடவித் தடவி இறங்கினான். குளிர் அதிகமாயிற்று.''

கல்லு உட்கார்ந்த மலைக்கு அந்தப் பக்கம் அதிகக் காயங்களோடு இருந்தவர்கள் தமிழ் பேசினார்கள். ரேடியோவில் அஸ்ஸாமி இளைஞன் அழைத்தது மறித்துக் கேட்டார்கள்.

அஸ்ஸாமி இளைஞன் பதில் தர மறுத்து விட்டான். தொடர்ந்து அஸ்ஸாம் குழுவின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். அஸ்ஸாமி புரியவில்லை. ஆபத்து என்பது புரிகிறது.

என்ன செய்வது? அலெர்ட்... வெட்ட வெளியிலிருந்து நீங்கிக் குகைகளுக்கு உள்ளே போனார்கள். ஆரோக்கியமாய் உள்ள இருவர் காவல் காத்தார்கள். காத்திருந்தார்கள்.

மரத்திலிருந்து தன் படைக்குத் தகவல் அனுப்பியவன் சரசரவென்று இறங்கினான். இப்படித் தூங்கினால் அஸ்ஸாம் புரட்சி ஜெயிக்கப் போவதில்லை என்று அடித்தான்.

மெல்ல சப்தமெழாமல் மலை ஏறித் தன் படை நோக்கிப் போனான். எதிரே வேறு சப்தம் கேட்டது. சட்டென்று உட்கார்ந்து கொண்டான்.

''ஏய்...'' குரல் எழும்ப அடக்கிக் கொண்டான். சுட்டு விடலாமா என்று யோசித்தான். கல்லு சறுக்கிச் சறுக்கி வெளிச்சம் நோக்கிப் போவது தெரிந்தது. அவன் மறைந்த பின் எழுந்து வேகமாய் நடந்தான். தீத்தான் குருவி போல மலை உச்சி அடைந்து குரல் கொடுத்தான், எதிர்க்குரல் கேட்டது, ஓடினான்.

''என்ன, யார் அது... நில்!''

பதில் சொன்னான்.

வரச் சொன்னார்கள்.

தலைவனிடம் அழைத்துப் போனார்கள்.

22

''என்ன''

''ஸ்டென் கன், பவர்ஃபுல் டார்ச், ராணுவத் தொப்பி, ஐந்து அல்லது ஆறு பேர் காட்டெருமை துரத்திச் சுட்டார்கள், மூன்று குண்டுகள் சிங்கிள் ஷாட். ஆயினும் அது ஸ்டென் கன்.''

''இரவில் காட்டெருமையை எவரும் வேட்டையாடுவ தில்லை. மேலும் அவர்களிடம் கயிறுகள் உள்ளன. எல்லாரிடமும். அது தவிர இன்று வெள்ளை பங்களாவில் எட்டு, பத்து பேர் வந்து தங்கிப் போனதாய்ப் பெண்கள் பகுதி தகவல் சொல்லியது.''

''ஐயா... வேறு யாரோ கூப்பிடுகிறார்களாம்.''

''என்ன?''

''வியாபாரிகள் கூப்பிடுகிறார்கள். நாளைக் காலை வரு கிறார்களாம். தகவல் எடுக்கட்டுமா?''

''வேண்டாம். ஏதோ நடக்கப் போகிறது என்று உள்மனம் சொல்கிறது.''

''அது தவிர....'' வந்தவன் மூச்சிரைக்கப் பேசினான்.

''அது தவிர கல்லு எதிரிகளை நோக்கி வேகமாய்ப் போகிறான்.''

''ஐயா...''

''சுட உத்தரவில்லை. அதனால் சும்மா இருந்துவிட்டேன்.''

''யார் கல்லுவைக் கண்காணிப்பது?''

''இருவர். மரக்கிளை மீது படுத்திருக்கிறார்கள்.''

''தொடர்பு கொள்... வேண்டாம். ஆறு பேர் தயார் செய்யச் சொன்னேனே...''

''போ. ஒரே திசையில் போ. தகவல் சொல். பதில் உத்தரவு வராது. எதிரியெனில் சுடு. வியாபாரி எனில் துரத்து. புரியாத சந்தேகம் எனினும் சுட்டுவிடு. இன்று நல்லபொழுது இல்லை. பொஸிஷன் எடுக்கச் சொல் எல்லோரையும். மெழுகுவர்த்தி அணைக்கச் சொல்.''

அசிரத்தையுடன் பொஸிஷன் எடுத்துக் கொண்டார்கள்.

கல்லு சரசரவென்று சறுக்கினான்.

வடிவேலு முன்னே போனவன் முதுகு தொட, அவன் அவனுக்கு முன் போனவன் முதுகு தொட, எல்லோரும் சமிக்ஞை கிடைத்துச் சட்டென்று உட்கார்ந்தார்கள்.

''சோட்டா சாப்...'' கல்லு மெல்லக் கூப்பிட்டான்.

''சோட்டா சாப்'', மறுபடி கூப்பிட்டபடி அருகே வந்தான்.

''கோன் ஹை...''

''கல்லு சாப். நமஸ்தே''

சட்டென்று முன் வீரன் அவனை முழங்காலில் அடித்து வீழ்த்த, கல்லு அலறும் முன் வாய் பொத்தப்பட்டான்.

இது அதிருஷ்டம்.

ஆனால் அதிர்ஷ்டம் மட்டும் போதாது. வெற்றி பெற உழைப்பு வேண்டும்.

கடும் உழைப்பு எதிரே கருநீல மலையாய்க் காத்திருந்தது.

கல்லு தரையில் வீழ்ந்த கணமே வாயைப் பொத்திவிட்டார்கள். தொண்டையில் கயிறு போட்டு இறுக்கிவிட்டார்கள். பின் கைக்கட்டிச் சரமாரியாய் அடித்தார்கள்.

''அவனைப் பேசவிடுங்க, வடிவேல்'' சுப்ரமணியம் அமைதியற்ற குரலில் கத்தினார். வடிவேலு அவரைத் திரும்பி முறைத்தான்.''

''பெயர் என்ன?''

''த்தூ...'' கல்லுவின் எச்சில் வடிவேலுவின் முகத்தைத் தாக்கியது. சரக்கென்று மூக்கில் வடிவேலு குத்தினான்.

''சொல். பெயர் என்ன?''

''கல்லு. ஹரி கல்யாண்தான்.''

''மேலே யார் இருக்கிறார்கள்.''

''புரட்சிப் படை. அஸாம் புரட்சிப்படை.''

''பொய் சொல்லாதே.''

''உண்மை திபேத்திய அகதிகள். அஸாம் புரட்சிப் படை. மேலும்.....''

''மேலும்...''

''வேறு யாரோ சில புரட்சி இளைஞர்கள் மலைக்கு அந்தப் பக்கம். தமிழ் பேசுகிறார்கள்.''

''நீ இருந்த இடம் போ.''

சறுக்கிக் கல்லு கீழிறங்க ஐந்து நிமிடம் ஆயிற்று. அவன் இடத்துக்குச் சகலரும் போக அரை மணி ஆயிற்று.

மலையின் பல பகுதிகள் அங்கிருந்து தெளிவாய்த் தெரிந்தன. அது மலையின் ஒரு உச்சி. இந்த உச்சி தாண்டியும் உயரமான மலைகள் பல தொலைவில் இருந்தன.

''எங்கே படைகள்?''

''பதுங்கியிருக்கலாம்.'' கல்லு பதில் சொன்னான்.

''நாங்கள் வருவது தெரிந்ததா?''

''உங்கள் வருகை தெரிந்துதானே நானே வந்தேன்.''

''நல்லது உட்கார்.'' வடிவேலு யோசித்தான். மலையின் உச்சி என்பது ஒருநாளும் பாதுகாப்பான விஷயமில்லை. இரண்டு பக்கமும் தீவிரவாதிகள் குழு இருக்க இங்கே வந்து அமர்ந்தது

சரியில்லை. கூர்ந்து கவனிக்க ஆள் நடமாட்டம் போல் ஏதோ சப்தம் கேட்டது. இது தாக்குதலுக்கான நேரமும் இல்லை. இனி தடம் தெரிந்து கொள்ளுதலுக்கான ஊர்வலமோ செய்வதற்கில்லை. தகவல் தரலாம். தகவல் தருவதில் ஒரு சிரமம் உண்டு. மறித்துக் கேட்கப்படும். கிட்டத்தட்ட தகவல் தரும் இடம் தெரியும். நேரே பேச்சாய்த் தகவல் தராது. வேறுவிதமாய்க் குழப்ப வேண்டும்.

இடம் தெரிந்து விட்டது என்று சொல்லிய பிறகு என்ன செய்வார்கள்? மெல்ல பாட்டரிகளை நிமிண்டி ஒயர் லெஸ்ஸை உயிர்ப்பித்தான்.

''ஹலோ, நான் நாட்டராயன் பேசறேங்க. ஒரே காட்டெருமைக் கூட்டமுங்க. இங்கன அஞ்சு பத்து குட்டியோட மலைக்கு ரெண்டு பக்கமும் நிறைய மேயுதுங்க. மேற்கொண்டு சுடவா?.... ஒண்ணு போதுங்களா?'' ஒரு ஹாம் ரேடியோ மாதிரி கோட் நம்பர் சொல்லிப் பேசினான்.

''இது தமிழ். அந்தப் பெண்ணைக் கூப்பிடு. என்ன பேசுகிறார்கள் என்று சொல்?'' அஸாம் பக்கம் அவன் பேச்சு இடை மறித்துக் கேட்கப்பட்டது.

மலைக்கு அடுத்த பக்கம் இருந்த இன்னொரு புரட்சிப் படையும் கேட்டது.

''ஹலோ, நான் நாட்டராயன் பேசறேனுங்க. ஒரே எருமைக் கூட்டமுங்க'' மறுபடி அதே பேசினான். காத்திருந்தான்.

''எங்கேயிருக்கீங்க?'' ராஜகோபாலன் குரல்.

''இருளோன்னு கிடக்குங்க. இடம் தெரியலை.''

''லாரி கொண்டாரம். அங்கினியே இரு.''

''ஐயா...''

''லாரில கட்டைங்க கொண்டாரம். அங்கினியே இரு.''

என்ன அர்த்தம் எடுத்துக் கொள்வது? தெரியவில்லை. லாரி முழுவதும் படை வரும் என்று கொள்ளலாமா? புரியவில்லை. இதற்கு மேல் பேசுவதும் சரியில்லை.

''வழில பள்ளம் மேடு பாத்து வாங்க. பத்து ஆள் பள்ளமிருக்குதுங்க.''

''சரி.'' ஒயர்லெஸ் துண்டுபட்டது.

''சுப்பிரமணி.''

''சார்...''

''நான் கீழே போகிறேன். லாரியை எதிர்கொள்ளப் போகிறேன். நீங்கள் இங்கே இருங்கள்.''

''சரி...''

''சிப்பாய், கல்லு தப்பிக்க முயன்றால் குத்திக் கொல். இல்லை சுட்டுக் கொல். இவன் முக்கியமில்லை.''

''டீக் ஹை சாப்.''

வடிவேலு சரிவில் இறங்கினான். அஸாம் படைப்பிரிவிலிருந்து கிளம்பிய ஆறுபேர் அவன் கல்லுவை மடக்கிய இடத்தில் இருந்தார்கள். அதே நேரம் மலையின் அடுத்த பக்கம் காயப்பட்ட தீவிரவாதிகளிலிருந்து மூன்று பேர் மலை உச்சிக்கு ஏறினார்கள்.

ஆட்கள் ஏறி வந்ததைச் சிப்பாய் கவனித்தான். சுப்பிரமணியனிடம் சொன்னான். சரசரவென்று அங்கிருந்து அவர்களும் சரிவில் இறங்கி அமர்ந்து கொண்டார்கள். உச்சிக்கும், சரிவில் நின்ற இடத்துக்கும் நூறு கஜம் தொலைவு. வடிவேலு இன்னொரு நூறு கஜம் தொலைவில் அடிவாரத்தில் இருந்தான். அவன் அமர்ந்த இடத்திலிருந்து ஐம்பது கஜத் தொலைவில் அஸாமியர் அறுவர் குழு இருட்டில் அலைந்து கொண்டிருந்தது.

மதுரை கலெக்டர் உலுக்கப்பட்டார். கொடைக்கானல் போக உத்தரவிடப்பட்டார். இரண்டு பென்ஸ் லாரிகள் முழு வேகத்தில் முப்பது முப்பது ராணுவ வீரர்களோடு மலையேறின. டேவிட் அவர்களோடு இருந்தான்.

கூட்டத்தில் இருந்த காட்டெருமைகள் காற்றில் வரும் வேறு எருமையின் இரத்த வாசனை அறிந்தன. வாசனை வரும் இடம் நோக்கி நகர்ந்தன. இன்னும் ஆழமாய் முகர மனித வாசனைகள் தெரிந்தன. அவை கோபமாயின. குட்டிகளைக் கூட்டத்துக்கு நடுவே விட்டு முன்னே சிலவும் பின்னே சிலவும் பாதுகாப்பாய் நகர்ந்தன.

செடிகள் உடைபடும் ஓசை கேட்டு அஸாமிய சிப்பாய் மரக்கிளை ஏறினான்.

''வொய்ட் பம்பேலோஸ்...'' என்று கத்தினான். அவர்கள் சரசரவென்று பின்வாங்கினார்கள். வடிவேலுவுக்கு மிகச் சமீபமாய்ச் சுடும் ரேஞ்ஜில் ஓர் ஆள் மலையேறினான்.

''ஒண்ணுக்குப் போக வேண்டும்,'' கல்லு இந்தியில் பேசினான்.

''அப்படியே போ.''

''என்னை உட்கார வை. என் பேண்ட் ஸிப் அவிழ்த்துவிடு.''

''அப்படியே போ.''

''வராது. அவிழ்த்து விடு.''

ஸிப் நீக்கப்பட்டது. நிமிர்த்தி வைக்கப்பட்டான்.

''பிரயோஜனமில்லை. கைக்கட்டு அவிழ்த்து விடு.''

கைக்கட்டு அவிழ்த்துவிட்டு அவன் முதுகு நேரே துப்பாக்கிப் பிடித்தபடி ஒரு சிப்பாய் நிற்க, கல்லு அமைதியாய்ச் சிறுநீர் கழித்தான். ஸிப் போட்டான். கைவிரித்து சுவாசம் செய்தான்.

''கட்டிவிடலாம்,'' என்று கைகளைப் பின்னுக்குக் கோத்துக் கொண்டான்.

உருவிப் போட்ட கயிறு குனிந்து சிப்பாய் இருட்டில் தேட கல்லு சட்டென்று சரிவில் இறங்கினான். ஓடத் துவங்கினான்.

''மிலிட்ரி போலீஸ் வருகிறது நண்பர்களே. மிலிட்ரி போலீஸ் வருகிறது.'' இந்தியில் கத்தியபடி ஓடினான். சரிந்து கீழே விழுந்தான். சறுக்கிச் சறுக்கி இறங்கினான். புரண்டு, புரண்டு மலையில் தேய்ந்தான்.

மலைக்கு உச்சிக்கு வந்தவர்கள் அவன் இந்தி பேச்சைப் புரிந்து கொள்ளவில்லை. சட்டென்று துப்பாக்கி தூக்கிச் சப்தம் வந்த திசை நோக்கிச் சுட்டார்கள். கல்லுவின் விலாவில் குண்டு தைத்து, அவன் உருண்டு விழ, வடிவேலு காலால் அவனை நிறுத்தினான்.

''நாயே,'' என்று நெஞ்சில் உதைத்தான்.

சுட்டது தன் சிப்பாய் என்பது வடிவேலுவின் நினைப்பு.

குண்டுபட்ட இடத்திலிருந்து இரத்தம் கசியத் துவங்கியது. கல்லு பெரிதாய் அழுதான். மயக்கமானான். முகத்தில் வடிவேலு தெளித்த தண்ணீர் பட விழித்தான்.

''சோட்டா.. சாப்.. சோட்டா சாப்...''

''யார் சோட்டா சாப்?''

''என்னைக் கொல்லாதே. தயவு செய்து என்னைக் கொல்லாதே.''

''யார் சோட்டா சாப்?''

''என் முதலாளி, எப்படியும் என்னைக் காப்பாற்ற வருவார். என்னை உயிரோடு விடு. உன் காலைப் பிடித்துக் கதறுகிறேன். என்னைக் காப்பாற்று. உன்னிடம் மருந்து உண்டா? என்னைக் காப்பாற்று. ஐயோ, வலி உயிர் போகிறதே...''

''பவுடர் வியாபாரம்தானே?''

''ஆமாம் பவுடர்தான். எல்லாப் பழியும் என் மீதுதான், ஊற்றச் சொன்னது யாரோ... நான் தப்பு செய்துவிட்டேன்.''

''என்ன ஊற்றச் சொன்னார்கள்?''

''ஆஸிட்?''

''ஆஸிட்டா?''

''பாவம், சின்னப் பெண் பல் உதிர்ந்து ஓவென்று அழுதது. நான் தவறு செய்துவிட்டேன். வலி உயிர் போகிறது. நான் தவறு செய்துவிட்டேன். மன்னிப்புக் கேட்கிறேன். சோட்டா சாப்பிடம் என்னைச் சேர்த்துவிடு.''

வடிவேலு உடம்பு உஷ்ணமாக்கியது. ''நீயா... நீதானா...'' அவன் முகத்தை வெளிச்சத்தில் பார்க்க ஆசை வந்தது. டார்ச் எடுத்து முகத்தில் அழுத்தி ஓவர் கோட்டைச் சுற்றிப் போட்டு சற்று விலக்கிப் பார்க்க கல்லு கண் செருகிக் கிடப்பது தெரிந்தது.

பின்பக்க கிளைகள் உடைபட்டன. திடுக்கிட்டு நிமிர எருமைகள் செடிகளூடே வருவது தெரிந்தது. வடிவேலு அவனை இழுத்துக் கொண்டு உயர ஏறினான்.

எருமைகள் தொடர்ந்தன. ஒன்று, இரண்டு, மூன்று..., ஏழு, பத்து.... இருபது எருமைகள். ஹூங்காரம் இட்டன. சாண நெடி அடித்தது. அவர்கள் திசை நோக்கி ஒன்று திரும்பியது. தலை உலுக்கி ஹூங்காரம் செய்தது.

இரத்தம் ஒழுகப் புரண்ட கல்லுவை வடிவேலு இழுத்துக் கொண்டு இன்னும் மேலே ஏறினான். ஏறுவது கடினமாய் இருந்தது. இன்னும் இழுத்து ஏற, கல்லு துவண்டு கிடப்பது உணர முடிந்தது. அதிக ரத்தப் போக்கு மரணம் தரலாம். கட்டுப் போட வேண்டும். எருமை துரத்துகிறதே.

ஓர் எருமை சரசரவென்று திமில் அசைய மேலே ஏறியது. மனிதர்களை விட வெகு எளிதாய் மலை சரிவில் ஏறியது. வடிவேலு சுடலாமா என்று யோசித்தான். இரண்டு எருமைகள் முதல் எருமையைக் கடந்து நின்றன. மூன்றையும் இடித்துக் கொண்டு ஒன்று மேலேறியது.

நான்கும் சரசரவென்று ஏற, வடிவேலு கல்லுவைக் கைவிட்டான். மின்னலைப் போல் தாவித் தாவி மலை ஏறினான்.

எருமைகள் அதைவிட வேகத்தில் ஏறின. கல்லுவை முகர்ந்து கொம்பில் குத்தித் தூக்கிப்போட்டன. அவன் தரையில் விழுவதற்குள் இன்னொன்று தாக்கியது. கும்பலாய் மிதித்தன.

கல்லுவின் கதறல் கானகமெங்கும் ஒலித்தது. இடி, இடி, இடி, இடி கொம்பில் தூக்கிக் கல்லுவின் உடலை மரத்தோடு ஆத்திர மாய்த் தேய்த்தன.

உச்சி நோக்கிப் போகும்போது, வலதுப் பக்கப் புதரிலிருந்து ''துரோணா துரோணா,'' குரல் கேட்டது.

''சுப்ரமண்யம்.''

''வலது பக்கம் பதுங்கிப் பாருங்கள். உச்சியில் ஆட்கள் வந்து விட்டார்கள்.''

''தெரிந்து விட்டதா?''

''இல்லை.''

பத்தடி நகர சுப்ரமணியத்தைக் காண முடிந்தது. பாதை மாறிய நாலு வீரர்களும் நின்றிருந்தார்கள்.

''கல்லு எங்கே?''

''எருமை துரத்தி மிதித்து விட்டது.''

''இங்கே வருமா?''

''வரலாம்.''

எருமைகள் கல்லுவை மிதித்து, விட்டுச் சரசரவென்று கீழே இறங்கின. கூட்டமாய் திரும்பின. அவை போவது காடுகளின் சருகுகளூடே தெரிந்தது.

''கல்லு இறந்துவிட்டானா?''

''கூழ்''

''முக்கிய தொடர்பில்லையா?''

''ஆமாம். ஆனால் எதிரிகள் அதிகம்.''

''லாரி எப்போது வரும்?''

''தெரியாது.''

லாரியில் அந்தப் படைகள் தடம் பார்த்து ஆறு வரிசையாய் காட்டுக்குள் ஊர்ந்தன. ஹெலிகாப்டர் கொடைக்கானலிலிருந்து கிளம்பி, மலை உச்சியில் விளக்கு வீசித் தேட ஆரம்பித்தது.

அஸாமியத் தலைவன், கவலைப்பட்டான். ஹெலிகாப்டர் தேடுவது பார்த்துப் பயந்தான். பதினாறு பேர் தவிர மற்றவர்கள் எப்படியாவது தனித்தனியாய்ப் பிரிந்து போய்விடச் சொன்னான்.

மலை உச்சியில் உள்ளவர்கள் ஹெலிகாப்டர் நோக்கிச் சுடத் துவங்கினார்கள்.

வடிவேலு ஒயர்லெஸ்ஸில் தான் இருக்கும் இடத்தின் டிகிரி யைச் சொன்னான். பிரிந்து கலைந்த படையினரின் ஒரு பகுதி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வந்தது. இனி தாக்குவது தவிர வேறு வழியில்லை. பாறையைத் தடுப்பாய்க் கொண்டு அவர்கள் பொஸிஷன் எடுத்தார்கள்.

23

இவ்வளவு பீர் ஒரே நாளில் குடித்திருக்கக் கூடாது. காரிலி ருந்து இறங்க, ஃபெரோவுக்கு லேசாய்த் தள்ளியது. ஒரு கிறக்கம். தூக்கம் போலவும் இருந்தது. காரை விட்டுத் தள்ளி ஒற்றையடிப் பாதைக்குப் போக, தொட்டாற்சிணுங்கிகள் நனைந்தன. நீர் பட, சுருங்கின.

அப்பா, என்ன பச்சை! க்யூபாவும் பச்சைதான். அடர்த்தியான கரும்புத் தோட்டங்கள்தான். வழியில் எங்கோ கரும்பு போட்டிருந் தார்கள். கனமில்லை. தழைகளிலும் மலர்ச்சியில்லை. கொஞ்சம் முயன்றால் இந்தியா சொர்க்க பூமியாகிவிடும். முயற்சி இல்லை. ஷெய்குவாரா, ஃபெடரல் காஸ்ட்ரோ போன்றவர் இல்லை.

'இது என் தேசம், என் பூமி, என் கரும்பு. அமெரிக்க ஏகாதி பத்தியமே, இதை வாங்க நீ வருவாய் என்று தெரியும். ஆனால் கரும்பு வாங்குவதன் மூலம் என்னை நீ வாங்க முடியாது. கொக்கோ கோலாவுக்குக் கரும்பு தர இயலாது. துப்பாக்கி கொடு. மறுத்தால் விற்கவும் வாங்கவும் எனக்கு இடங்கள் உண்டு. அவன் தலைவர்களின் உறுமல் காதில் கேட்டது.

ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குள் கார் நுழைந்தது. வரவேற் றார்கள். அறைக்குள்ளேயே உணவு முடித்துக் கொண்டான். கார் ஓட்டி வந்தவன் முதலாளியின் இந்தியத் தொடர்பு ஆள். 'பெண் ஏற்பாடு செய்யட்டுமா, இரவுக்கு?' என்று கண் சிமிட்டினான் வெளியே போனான்.

தேவையில்லை. இருந்தாலும் பாதகமில்லை. இரவு நெருங்க, குளிர் அதிகரித்தது. டெலிபோன் ஒலித்தது. ரிசப்ஷ னிலிருந்து பேசினார்கள்.

''விஸிட்டர் எதிர்பார்க்கிறீர்களா?''

''ஏன்?''

''ஒரு பெண் வந்திருக்கிறாள். உங்கள் பெயர் சொல்கிறாள். இரவு தங்குவார்களா? நீங்கள் அழைத்தீர்களா?''

''ஆமாம்.''

''ஒருவேளை தொந்தரவு ஏதும் இருப்பின் உங்கள் விஸிட்டர் வெளியேற வேண்டியிருக்கும். இந்த நிபந்தனைக்கு உட்பட்டு...'

அறை வாசலில் அழைப்பு மணி அடித்தது. துவாரக் கண்ணாடி வழியே பார்க்க, இந்திய முகம் தெரிந்தது.

'அட, இவளா. மலேசியன் கான்டாக்ட்.' இவள் பின்னே ஹோட்டல் பேரர். இவன் இல்லை என்றால் கையோடு அழைத்துப் போய் வாசலில் விட்டு விடுவார்கள் போலும்.

கதவு திறந்தான்.

''ஃபெரோ... ஃபெரோ டார்லிங்.'' அவள் கை விரித்துப் பாய்ந்து தழுவிக் கொண்டாள். மெல்ல அவனை உள்ளே தள்ளினாள். காலால் கதவு சாத்தினாள். சத்தமெழ முத்தமிட் டாள். மறுபடி கதவு திறந்தாள். வாசலில் பேரர் அசையாது நின்றிருந்தான்.

''பேரர், இரண்டு பியர்... பெரோ, உன்னிடம் காசு இருக்கிறதா? இவனுக்கு டிப்ஸ் தர வேண்டும்.'' மேஜையி லிருந்து அவன் பர்ஸ் எடுத்து ஐம்பது ரூபாய்த் தாள் உருவி னாள். பேரரிடம் நீட்டினாள். அவன் வாங்கித் தலைகுனிந்து வணங்கி நடந்தான். கதவு சாத்தினாள். காது வைத்துச் சப்தம் கேட்டாள். திரும்பினாள்.

''ரிமெம்பர் மி?'' மரகதம் கைகுலுக்கினாள்.

''யெஸ். என்ன விஷயம்?''

''உனக்குப் படைக்கலப் பயிற்சி உண்டா?''

''முட்டாள்தனமான கேள்வி.''

''மோட்டார் சைக்கிள் ஓட்டுவாயா?''

''வேலையைச் சொல்.''

''கேரியர்களிடம் சரக்கு சேர்க்க வேண்டும் பணம் வாங்க வேண்டும்.''

''நீ படுக்க வரவில்லையா?''

''அது பிறகு.''

''எப்போது கிளம்புகிறோம்?''

''உடனே''

''ஆயுதங்கள் கேட்டது யார்?''

''கேரியர்கள்.''

''புரட்சிப் படை என்கிறார்களே?''

''சரக்கு சுமந்து இந்தியா முழுவதும் விநியோகிப்பது அவர்களே. அதில் வரும் காசு புரட்சிக்கு.''

''இடைத்தரகரா?''

''கிட்டத்தட்ட அப்படித்தான்.''

''காசு தரப் பொருள். இதில் ஆயுதம் பற்றி நாமெதற்குப் பேச வேண்டும்?''

''இது இன்னொரு வியாபாரம். இதில் பல நன்மைகள் உண்டு. புரட்சி தோற்றால் இவர்கள் நமது பெரிய வலையின் ஒரு பகுதி ஆவார்கள். அது தவிர தேசக் குழப்பம் செய்வது இவர்களுக்கு எளிது, குழம்பிய குட்டையில்...'' அவள் தயங்க -

''நாம் மீன் பிடிப்பது எளிது.'' ஃபெரோ முடித்தான்.

''உண்மை.''

''அஸாம் புரட்சியா?''

''தேசத்தின் நாலா பக்கமும் புரட்சிதான். நாம் போவது அஸாம் குழு. ஆறு கிலோ சரக்கு. பேரம் முடிந்து விட்டது. கரன்ஸியைப் பார்த்துவிட்டேன். சட்டென்று மாற்றி வர வேண்டும். அவ்வளவே.''

''ஆயுதங்கள்?''

''என்னிடமுண்டு. எம்.எம்.ஜி. லைட் மெஷின் கன்.''

''போதும். போகலாம் வா.''

இருட்டில் அவள் நடக்க, அவன் தொடர, புதர் மறைவிலிருந்து மோட்டார் சைக்கிள் எடுத்தாள். வழியே பெட்ரோல் போட்டாள். டயரில் காற்றடிக்க நின்றாள். யாரோ மோட்டார் சைக்கிளில் பை வைத்துவிட்டுப் போனார்கள்.

''சரக்கா?''

''ம்... ம்...''

''நமது ஆளா?''

''என் தம்பி''

''உனக்கு எந்த ஊர்?''

''காசு சம்பாதிக்க எங்கே முடிகிறதோ அதுவே என் ஊர்.''

''பிறந்தது, வளர்ந்தது?'

''பிறந்தது இங்கிருந்து சற்றுத் தொலைவில் உள்ள ஊர் மதுரை. வளர்ந்தது மலேசியா. இந்தப் பண்டமாற்று சரியானால் எனக்கு ஒரு சதவிகிதம் கிடைக்கும். கொள்ளைக் காசு. நேரே கனடா போவேன். அங்கே குடியேறுவேன்.''

''ஏன் கனடா?''

''அங்கே என் காதலன் இருக்கிறான். ஒரு குழந்தை உண்டு.''

''உன் குழந்தையா?''

''இல்லை. என் தமக்கை.''

''தமக்கை எங்கே மலேசியாவிலா?''

''சொர்க்கத்தில்.''

''ஏன்?''

''சயனைட் தின்று செத்தாள்.''

''ஏன்?''

''அவள் காதலன் சிலோனைச் சேர்ந்தவன். அவனைத் தேட இவளைப் பிடித்து அடித்தார்கள். தப்பித்து ஓடினாள். காதலனின் ரகசிய இடம் தெரிந்து உள்ளே போனாள். அவன் கடிதம் எழுதி ஒரு குப்பி வைத்திருந்தான். 'உன்னை அவர்கள் தப்பிக்க விட்டது. இடத்தைக் கண்டுபிடிக்கவே அது முடியாது. நாம் அடுத்தப் பிறவியில் சந்திப்போம். குழந்தையை மரகதத் திடம் தந்துவிட்டேன். வாழ்க புரட்சி'' என்று எழுதியிருந்தான். எனக்கு என் தமக்கை நீண்ட கடிதம் எழுதி அங்கிருந்து போஸ்ட் செய்துவிட்டு, காட்டுக்குள் அவள் ஓளிய, மடக்கி விட்டார்கள். பளிச்சென்று குப்பி கடித்து விட்டாள். செத்தவளைச் சுட்டார் களாம்.''

''எங்கே இது?''

''சிலோனில்.''

''என்ன நடக்கிறது அங்கே? புரட்சியா?''

''ஆமாம்.''

''புரட்சிக்குக் காரணம்?''

''தன்மானம்.''

''ஷெய்குவாரா கேள்விப்பட்டிருக்கிறாயா?''

''படித்திருக்கிறேன்''

''என் மடியில் தலை வைத்துத் தூங்கியிருக்கிறார்.''

''கடும் ஆஸ்துமா நோயாளியாமே?

''ஆமாம். ஆனால் நெஞ்சுரம் அதிகம்.''

''மோசமான சாவு இல்லை?

''எதிரிகள் சுட்டுக்கொன்று தண்டனை நிறைவேற்றினார்கள். புரட்சி சோர்வடைவதை விரும்பாதவர்.''

''எல்லாப் புரட்சியும் சோர்வடைகின்றன.

''காரணம் மரணம். மரணம் இரண்டு செயல்கள் செய்யும் ஒன்று வெளியேற்றும். இல்லை பயமுறுத்தும். வெளியேற்றியவர் சதவிகிதம் அதிகமாக வெற்றி. பயந்தவர்கள் சதவிகிதம் அதிகமாக சறுக்கல்.''

''உனக்கு மரண பயமில்லையா, ஃபெரோ?''

''இல்லை நான் க்யூபாவை விட்டு வெளியேறுயதுமே இறந்துவிட்டேன். இனி ஏதும் நேர்ந்தால் இரண்டாம் முறையில் பயமில்லை. இன்னும் எவ்வளவு தொலைவு?

''பதினாறு கிலோ மீட்டர் இரு, எஞ்சின் அணை,''

''என்ன?''

''எருமைகள் ஏன் தவிக்கின்றன? அவைகளுக்குள் ஏதும் சண்டையா. சரி, வண்டியை ஓரம் போட்டு நடக்கலாம்.'' அவளே சரக்கைத் தூக்கிக் கொண்டாள். மோட்டார் சைக்கிளிலிருந்து டார்ச், ஆயுதங்கள் எடுத்தாள்.

''ஒரு மேகஸின் ரவைகள் போதுமா?'' ஃபெரோ கேட்டான்.

''இது பாதுகாப்புக்குத்தான் வா. மேடேற வேண்டும்'' வழியே ஓர் எருமை பள்ளத்தில் கால் மாட்டிக் கதறிக் குத்துப்பட்டு நிலைகுலைந்து கிடந்தது தலையை ஆராய்ந்தாள். காலடிகள் அதிகம் தெரிந்தன. கவலைப்பட்டாள்.

மௌனமாய் நடந்தார்கள். மூச்சிரைத்தது. தொடைகள் வலித்தன. உச்சியில் அஸாம் கூட்டம் அலைந்து கொண்டிருந்தது.

மரகதம் குறிப்பிட்ட இடம் வந்து டார்ச் போட்டுப் போட்டு அணைத்தாள். எதிர்ப்பக்கம் சைகை இல்லை. தொலைவே வெகு கீழே லாரிகள் வரும் சத்தம் கேட்டது. சற்று முன்னேறினாள். மறுபடி டார்ச் போட்டாள். எதிர்ப்பக்கம் விளக்கு எரிந்து அணைந்தது. மலையின் விளிம்பில் தட்டுத் தடுமாறி நடக்க வேண்டியிருந்தது. மரத்திலிருந்து தொப்பென்று யாரோ குதித்தார்கள். ''ஹால்ட்'' என்றார்கள். மரகதம் கைதூக்கி நின்றாள். தோள்சுமையைத் தூக்கி அவன் முன் போட்டாள்.

குதித்த அஸாமியன் எடுத்து முகர்ந்தான். ''இங்கேயே இரு'' என்றான்.

''ஏன்?''

''ஒரு ஸ்குவாட் ராணுவம் வேவு பார்க்க வந்திருக்கிறது. நாங்கள் காலி செய்கிறோம்''

''சரக்கு?''

''இரு சொல்கிறேன்'' அங்கேயே மூட்டையைப் போட்டுவிட்டு ஓடினான். மறுபடி வந்தான்.

''நிலைமை சரியில்லை சரக்கு வேண்டாம்'' கொச்சை ஆங்கிலத்தில் பேசினான்.

''இவ்வளவு தொலைவு வந்துவிட்டு உன் தலைவன் எங்கே?'' அவள் கோபமாய்க் கத்தினாள்.

''பொஸிஷன் எடுத்திருக்கிறார்கள். இப்போது அசைய முடியாது.''

''இடம் சொல்'' ஃபெரோ அதட்டினான். அவன் போன வழி முன்னேறினான். அஸாமியன் தடுக்க, நச்சென்று கையால் தாக்கி அவனை மயக்கமுற வைத்தான். அவன் துப்பாக்கியை மரகதம் எடுத்துக் கொண்டாள். மலை உச்சி விளிம்பில் நடந்தார்கள். ''மறுபடி ஹால்ட்'' சத்தம் கேட்டது. விளக்கு பேசியது.

''வராதே என்று சொன்னேனே?'' யாரோ சீறினார்கள். படுபடு என்று கத்தினார்கள். ஃபெரோ படுத்து இருட்டைத் துழாவினான்.

வடிவேலு பக்கம் வந்த குரூப் தயங்கி நின்றது. கிசுகிசுவென்று பேசியது. வடிவேலுக்குக் கிட்டத்தட்ட பாயிண்ட்

பளாங் ரேஞ்ச் அது. பத்துப் பேர்குழு பார்த்து விட்டால் தன் பக்கம் யாராவது மரணமடைய நேரிடும். இனி வேறு வழி யில்லை. சுடுவதைத் தவிர. வடிவேலு சேஃப்டி கேட்ச் திருப்பி னான். ஆடோமெடிக் பட்டன் அழுத்தினான். ட்ரிக்கரில் விரல் வைத்தான். எழுந்தான்.

மின்னல் வேகத்தில் ஸ்டென் கன் இயக்கிப் பத்துப் பேரை யும் சுட்டான். இடுப்புக்கு மேல் தலை, நெற்றி மார்பு என்று தோட்டாக்கள் பறந்தன.

டபடபவென்று சத்தம் மலை முழுவதும் எதிரொலித்தது. கத்தி எடுத்து உருவி ஓடினான். துடித்து எழுந்திருக்க முயன் றவன் நெஞ்சில் செருகினான். சட்டென்று டார்ச் அடித்து முகம் பார்த்தான். அஸாமியர்கள். சகலரும் ஆயுதம் ஏந்திகள். மறுபடி பதுங்குமிடத்துக்குச் சரிந்து சரிந்து வந்தான்.

ஃபெரோவுக்கு அந்த ஸ்டென் கன் சத்தம் சட்டென்று ஒரு கோபம் கொடுத்தது. ''யார் தாக்குவது?''

''இந்திய ராணுவம்.''

''எவ்வளவு தொலைவு?''

''வெகு அருகே இருநூறு கஜம் இருக்கலாம்''

''நான் போகட்டுமா?''

''நீ யார்?''

''ஒரு காலத்தில் உன்னைப் போல் புரட்சி வீரன். இன்று அடியாள்.''

''ஹாங்காங்கில் ஏது புரட்சி?''

''என் ஊர் கியூபா''

''ஃபெடரல் காஸ்ட்ரோ.''

''ஊம்... மகோன்னதமான ஃபெடரல் காஸ்ட்ரோ.''

ஃபெரோ ஊர்ந்து நூறு கஜம் தாண்டினான். கை எட்டும் தூரத்தில் நான்கு சடலங்கள் கிடந்தன. இரண்டு பேரின் துப்பாக்கி தோளிலேயே கிடந்தது. ஆம்புஷ். துப்பாக்கி தூக்கி இயக்க நேரம்கூடத் தராத ஆம்புஷ் - மறைந்து தாக்குதல். எதிரி வலுவான இடத்தில் இருக்க வேண்டும். மூச்சடக்கி ஊர்ந்த படியே முன்னேறினான். பாறைக்கு அப்பால் வயர்லெஸ் பேச்சுக் கேட்டது.

''துரோணா, துரோணா. ஆர் யூ ஹியரிங் மி?''

''லௌட் அண்ட் க்ளியர்.'' பதில் போயிற்று.

வெகு அருகில் ஐம்பது கெஜ தூரத்தில் எதிரி இருப்பது தெரிந்து விட்டது. அருகே போவது ஆபத்து. எதிரி நகரட்டும்.

ராணுவத்துக்கும் துப்பாக்கி சப்தம் கேட்டது சகலருக்கும் வடிவேலு இருக்கும் இடம் சொல்லப்பட்டது. நாலா திசையும் எதிரி திசை என்று அச்சுறுத்தப்பட்டது. அவர்கள் முன்னேறி னார்கள்.

''என்னாங்க, மலை மேல துப்பாக்கி சத்தம் கேட்குது.'' உலுக்கி எழுப்பப்பட்ட கலெக்டரிடம் தானே எழுந்து வந்து சேர்ந்து கொண்ட எம். எல். ஏ. கேட்டார். போலீஸ் அவருக்கு ஏதோ நடக்கப்போகிறது என்று தெரிவித்தது.

''நான் அப்பவே தாசில்தார்கிட்ட முட்டிக்கிட்டேன் மலை மேலே ஒரு மாசத்துக்கு ஒரு தடவை காம்ப் போடுங்கய் யான்னு. குளிருக்குப் பயந்து போனதா சொல்லிப் பழிவாங்கிட் டாங்க. இப்ப பாருங்க, தலைவேதனையை,'' கலெக்டர் நொந்து கொண்டார்.

ஓர் எல்லை வரை பார்த்து விட்டு ஏற்றம் அதிகம் என்று தெரிந்தவுடன் ராணுவம் தன் வரிசை மாற்றியது. முதல் ஆளாய் பஸூக்கா அனுப்பப்பட்டது. உச்சி நல்ல பொஸிஷன். அங்கிருந்து தாக்குதல் வர மிஷின்கன் போதாது, பஸூக்கா தூக்கிப்போன உயரமான சர்தாஜியைக் குறிபார்த்து அஸாமியர் கள் சுட்டார்கள். ப்ஜிய்ங்... முதல் குண்டு அவரை வீழ்த்தியது. பஸூக்கா தரை உருண்டது. அடுத்தவன் மண்டியிட்டான். மற்றொரு குண்டு பறந்து வந்தது மரம் துளைத்தது. இரண்டு மூன்று தொலைவிலே சுடர்போல் மின்னியது.

உத்தரவு கொடுக்க பஸூக்கா இயக்கினான். சீறிய குண்டு கள் மலை உச்சியைப் போய் தாக்கிச் சிதறடித்தன. பாறைகள் சிதறின.

ராணுவ அதிகாரி, 'பரவு பரவு' என்றார்: ஒரு ஜவான் நீண்ட நெடிய இலைகள் மூடிய பள்ளத்தில் கால் வைத்தான். ஓவென்று அலறினான். அருகே உள்ள ஜவான் காலர் பற்றித் தூக்கினான். டார்ச் அடித்துப் பள்ளம் பார்த்தார்கள். அவர்களை நோக்கியும் சுடப்பட்டது.

வடிவேலு தவித்தான். அந்த இடம் முழுவதும் கிளை கிளையாய் நரம்பு மாதிரி இலை மூடிய பள்ளங்கள் ராணுவம் என்ன ஆகும்? பயந்தான்.

''சுப்ரமணி, 'ஐ' யம் கோயிங்.'' கத்தினான்.

ஃபெரோவுக்கு வடிவேலுவின் தலைதெரிந்தது. மலை உச்சியிலிருந்து மெல்லப் பாதி மலை இறங்கிய குழுவை வழியில் மடக்கி வேறு வழியின்றிக் கொன்றாயிற்று. இவர்களைப் போகவிட்டிருந்தால் எதிரி கீழேயும் எதிரி மேலேயும் என்று கிடுக்கிப் பிடியில் மாட்டியிருக்க வேண்டும் 'ஹாண்ட்ஸ் அப்' என்று மடக்குகிற காரியம் எடுபடாது. சாவு பற்றிக் கவலையே படாது உருவிச் சுடுவான். சாவு தன் குழுவில் நேரும். இப்படி சுட்டதும் ஆபத்து. இருப்பிடம் தெரிந்துவிட்டது மெல்லப் பின்னடையலாம். கல்லுவை அடித்தவரை போகலாம். எருமைகள் வந்தால் குண்டுகள் அவற்றை நோக்கி விரயமாக்க வேண்டியிருக்கும். அதற்குக் கீழே இலை நரம்பு மாதிரி ஒரு அடி அகலத்துக்கு நீளமான பள்ளங்கள். படுபாதாள பள்ளங்கள். அங்கே ஐந்து பேர் கொண்ட அறுபதோ, நூறோ ஆட்கள் வருவார்கள். இதுபற்றித் தெரியாமல் வருவார்கள். வயர்லெஸ்ஸில் செய்தி அனுப்ப ராணுவம் வருவது தெரிந்து, கண்ணிவெடிகளை ரிமோட் கண்ட்ரோலில் அஸாமியர்கள் இயக்க ஆரம்பிக்கலாம். சேதம் அதிகமாகும். ராணுவம் வருவது தெரியக் கூடாது. நாமே பேசி காட்டிவிடக் கூடாது.

'என்ன செய்ய?' இறங்கி ராணுவத்தை எதிர்கொள்வது நல்லது. வேறு வழியே இல்லை. எதிர் சுட்டால்? சுடுவான். ரிஸ்க் எடுத்துக் கொண்டு போக வேண்டும்.

'சுப்ரமணி, ஐயம் கோயிங். சிப்பாய், டேக் கேர்.'

சறுக்கி சறுக்கி இறங்கினான்.

ஃபெரோ துப்பாக்கி உயர்த்தினான். நீலப்பின்னணியில் ஆள் ஓடுவது இருட்டில் தெளிவாயத் தெரிந்தது. கட்டுமஸ்தான ஆள் துப்பாக்கியின் இரண்டாவது வளையத்தின் வழியே நுனியில் அமைந்த கோடு பார்த்து அக்கோட்டை உருவத்தின் மீது பதித்து ஓடும் வேகம் தூரம் கணக்கிட்டு அழுத்தினான். துப்பாக்கிச் சீறியது. ரவை நச்சென்று வடிவேலுவைத் தாக்கியது. வடிவேலு எகிறி விழுந்தான். அவன் தலைக்கு மேல் குண்டுகள் பறந்தன.

கீழே உள்ள ராணுவம் பஸூக்கா தூக்கியது. வடிவேலுவை நோக்கிக் குறி வைத்தது. முதல் பஸூக்கா சீறிப் பறந்து இருபது கஜ தூரத்தில் வெடித்தது. ஃபெரோ பஸூ வந்த இடம் நோக்கிச் சுட்டான். ஃபெரோ இருந்த இடம் நோக்கி ராணுவம் மிக வேகமாய்ச் சுடத் துவங்கியது.

மேஜர் வடிவேலு கமாண்டோ ட்ரெயினர் நடுவே கிடந்தான். இதற்கு க்ராஸ் பயர் என்று பெயர். இது எதிரிக்கும் தன் ஆட்களுக்கும் நடுவே விவரமில்லாது மாட்டிய பரிதாபம். மரணம் நிச்சயம்.

24

இடது பக்க இடுப்பு பெல்ட்டின் பௌச்சைத் துளைத்து அதன் பின்பக்கப் பித்தளைப் பட்டையை உடைத்துச் சதையைத் தாக்கிக் குண்டு நின்றது, பெல்ட்டைப் படுத்தபடியே அவிழ்த்து விரலால் குண்டு பிடுங்கிப் போட்டான். வலது பக்கச்சராயில் முழங்கால் அருகே ஒரு பை. பட்டன் அவிழ்த்துப் பஞ்சு தேடினான். சப்பட்டைப் பிளாஸ்டிக் குப்பியில் டிஞ்சர் அயோடின் இருந்தது. எடுத்து வேறு பஞ்சில் வைத்து ரத்தப் பெருக்கில் சட்டென்று வைத்து அழுத்தினான், வலி எரிச்சல் உயிர்க்குலையை உலுக்கி ஆட்டியது. இடுப்பில் நெருப்புத் திணித்ததுபோல் எரிந்தது.

அசிங்கமாகத் திட்டினான். தரையில் வலி தாளாது ஓங்கியடித்து வெட்ட வெளியை மல்லாக்கப் பார்த்தபடி கத்தினான்.

உள்ளே வெறி பொங்கியது. வலி முறுக்கியது. இரண்டு நிமிடம் வலி மெல்லத் தணிய மீண்டும் வெற்றுப் பஞ்சு வைத்து அழுத்தி மேலே பெல்ட் மறுபடி போட்டு இறுக்கினான். குத்திட்டு உட்கார்ந்தான். தசைகள் நகர வலி குடைந்து சற்று ரத்தம் இழந்ததில் லேசாய்த் தலை சுற்றியது. இருட்டைக் கூர்ந்து கவனிக்க முடியாமல் கண்கள் சிரமப்பட்டன. மலைகள் மேலும் கீழும் அமைதியாய் இருந்தது. யார் முதலில் சுடத் துவங்குவது என்கிறது போல் காத்திருந்தார்கள்.

தன்னுடைய நகர்வை யாரோ உன்னிப்பாய்க் கவனிக்கிறார்கள் என்று தோன்றியது. கவனிப்பது ஓர் ஆளா, குழுவா தெரியவில்லை. முன்னைப்போல் வேகமாக ஓட முடியுமா? தெரியவில்லை. ஓடியாக வேண்டும். கீழே இந்திய ராணுவம்.

அதை நோக்கி ஓடியாக வேண்டும். அவர்கள் வெகு நிச்சயமாய் மலைப் பள்ளத்தில் இருக்கிறார்கள். விரிசல் விரிசலாய் இருக்கும். நீள நீளமாய் இருக்கும் மலை இடுக்குகளுக்கு அருகே இருக்கிறார்கள். எதிரி சுட நகர்ந்து தாவிப் பதுங்க முயற்சிக்கும்போது நிச்சயம் படை இந்தப் பள்ளங்கள் முன்னேறத் தடை செய்யும். ஐயோ என்று கத்தியபடி முன்னே போகும் சிப்பாய் சந்தில் விழ அடுத்தவனும் கால் வைத்து உள்ளே போக, படை மெரோல் பாதிக்கும். அந்தத் தவிப்பில் எதிரி சரமாரியாய்ச் சுட, சேதம் அதிகமாகும். முன்னேறிய இந்திய படை அத்தனையும் செத்துப் போகலாம். பாதுகாப்பான வழியில் படை வருவது முக்கியம்.

கீழேயிருந்து மறுபடியும் பஸுக்கா வந்தது. வெகு உயரம் எழும்பி மலைக்கு அந்தப் பக்கம் போயிற்று. பஸுக்கா நெருப்புக் கக்கிய இடத்தை நோக்கி, மெஷின் கன் இயங்கியது மறுபடி அமைதியாயிற்று.

ரெடி...ரெடி... தன் மனசுக்குள் வடிவேல் கத்தினான். ஓடி முன்னே போக இந்தியப் படையே என்னை, யார் என்று தெரியாமல் சுடும். சுடட்டும். படை முக்கியம். தனியொருவனை விட பட்டாலியன் முக்கியம். எதிரி வாட்டமான பொஸிஷனில் இருக்கும்போது படை முன்னேறுவது மிகக் கடினமான காரியம். ரெடி... ரெடி.. வடிவேல் மறுபடி உள்ளே கத்தினான். சரசரவென்று சரிந்து உட்கார்ந்தபடியே உடம்பு வளைத்துக் குனிந்த படியே இந்தியப்படை நோக்கி ஓடினான்.

அவன் அசைவுக்கு இரண்டு பக்கமும் விழித்துக் கொண்டார்கள். அசைவு நோக்கிச் சுட்டார்கள். ''துரோணா... துரோணா ஹியர்'' பெரும் குரலில் கத்தினான். முதுகு உரசி ரவைகள் பறந்தன. மண் பட்டுக் கிளறிக் கற்களை முகத்தில் அடித்தன. சட்டென்று படுத்துக் கொண்டான். இடைவிடாது சுடல் நடந்தது. வெகு அருகே ஒன்று பட்டுத் தெறித்தது. முதுகில் சுள்ளென்று பட்டது இன்னும் இருபது கெஜம்.

''துரோணா.. துரோணா ஹியர்.' மறுபடி கத்தினான். துப்பாக்கி இரைச்சல்களூடே அவன் பேச்சுத் தெளிவு அவனுக்கே கேட்கவில்லை. கற்றாழைச் செடி போல உள்ள இடத்தில் சுருண்டு கிடந்தான். இடுப்பு ரத்தம் கசிவது தெரிந்தது.

''ஸ்டாப் ஃபயரிங் ஸ்டாப் ஃபயரிங்.'' கீழே கத்துவது கேட்டது.

''துரோணா... துரோணா ஹியர்.'' மறுபடி கத்தினான்.

''மேஜர் வடிவேல்....''

''யெஸ் ஸார். ஐயம் கமிங்.''

''மேஜர் வடிவேல்.''

''யெஸ் சார், ஐயம் கமிங்.''

மறுபடி எழுந்து ஓடினான். இம்முறை அவன் குரல் திசையும், நகர்வும் மேலே உள்ளவர்கள் தெளிவாய் அறிந்தனர். குறி பிசகாமல் சுட்டனர். முதல் அடி வலது கால் இரண்டாவது அடி வலது தொடை மூன்றாவது அடி தோள். பிறகு இடுப்பு விலா எலும்பு. மேல் எலும்பு முழங்கை. மடமடவென்று குண்டுகள் வைத்தன. உடம்பு என்னுடையது இல்லை என்று தூக்கிப் போட்டான். உருண்டான். பஸுக்கா ஏந்திய சர்தார்ஜி காலில் வந்து விழுந்தான்.

''கோன் ஹே தும்....?''

''துரோணா..இனி இரவு... மேஜர் வடிவேல், கமாண்டோ.''

''டாக்டர் சாப், இதர் ஆவ்.''

வலி பின்னியது. குருதி பொங்கிச் சூடாய் வழிவது தெரிந்தது. சர்தார்ஜி அவனைத் தரையோடு இழுத்துக் கொண்டு பின்னே போனார். அவன் வலியில் பேய் மாதிரிக் கத்தினான். தொடர்ந்து மேலே சுடத் துவங்கினார்கள். சர்தார் அவனோடு பெரிய மரத்தின் பின்னே பதுங்கினார். டாக்டர் டார்ச் எடுத்துக் காயம் பார்த்தார். ஸெவன் ஷாட்ஸ். அப்படியே பஞ்சுப்பொதி பிய்த்துப் பிய்த்து அனுப்பினார். கட்டுப்போட்டுச் சுற்றுச் சுற்றி இறுக்கினார்.

''மேஜர், என்ன முட்டாள்தனம்... ஏன் கிராஸ் ஃபயரில் மாட்டினீர்கள்?'' அதிகாரி கத்தினார்.

''இந்த இடம் மோசம். ஏகப்பட்ட விரிசல். பெரும் பள்ளம் கால் வைத்தால் நூறு அடிப்பள்ளம். செத்தை என்று கால் வைக்கவே முடியாது.''

''புரிகிறது மலை பிளந்த இடங்கள். ஒரு சிப்பாய் அடிபட்டு விட்டார், வேறு வழி?''

''இடது பக்கம் இங்கிருந்து அறுபது டிகிரி ஐம்பது கஜ தூரம். பிறகு மேலேறலாம். செங்குத்து. சி.பி.ஐ. சுப்ரமணி, வித் பெட்ரோல் குரூப்'' அவன் குழறிக்குழறிப் பேசினான்,

டாக்டர் ஊசி போட்டார்.

''கமாண்டோ ஆம்புலன்ஸுக்குப் போகட்டும்.''

''நோ.''

''மேஜர் வடிவேல்....''

''செங்குத்து வரை நான் வருகிறேன், ஒவ்வொரு அடியும் கவனம் வேணும். நாம் எப்படி பொஸிஷன் எடுத்திருக்கிறோம்?''

''பரவலாய். மலை சுற்றி''

''தவறு ஒருவர் பின் ஒருவராய் ஏற வேண்டும் பரவல் முடியாது. அம்மா...'' கத்தினான்.

''லீவ் இட் டு மி.''

''நோ. நானும் வருவேன்.''

''முடியாது, மேஜர்.''

''முடியும். பெல்ட் அருகே ஒரு கட்டுப் போடுங்கள் டாக்டர்.''

இன்னொரு கட்டுப் போடப்பட்டது.

அவன் வலியோடு எழுந்தான். தடுமாறினான்.

''திஸ் வே,'' என்றான்.

சுற்றிய படை பின்னடைந்தன. ஒன்றாயின. ஒருவர் பின் ஒருவராய் வரக் கட்டளை பெற்றன.

''க்ராலிங் மார்ச் ஈஸ் பெட்டர்.'' ஊர்ந்து முதலில் அவன் ஏறினான். சறுக்கிய இடம் வழியே செங்குத்துப் பாதை வரை ஏறினான்

தான் உருண்டு பின்னால் வரும் ஜவானை முன்னே அனுப்பினான். பெரிய பாறை வரும். அதைச் சுற்றிப் போனால் எதிரியின் பக்கவாட்டில் தாக்கலாம்.

எதிரிப் பக்கமிருந்து தூமகேது மாதிரி வெளிச்ச வானம் எகிறியது. இடம் முழுவதும் வெளிச்சமாயிற்று. அப்படியே அது அணையும் வரை சகலரும் படுத்துக் கொண்டார்கள்.

''மூவ் அப்வேர்ட்ஸ்''

பஸுக்கா முதலில் போயிற்று.

வெளிச்சத்தில் மரகதம் தலை தூக்கிப் பார்த்தாள். ஏகப் பட்ட உருவங்கள் தெரிந்தன. சூழப்பட்டிருப்பது புரிந்து கொண் டாள்.

''ஃபெரோ...'' கத்தினாள்.

ஃபெரோவும் பார்த்தான்.

பாறை நோக்கிப் பட்டாளம் சிங்கிள் லைனில் நகர்கிறது. வா.... வா... என் சுடுதலைக் கவனி. இடைவிடாது சுட்டான். பஸுக்கா சர்தார்ஜி அடி வாங்கினார். மறு ஆள் பஸுக்கா தூக்கி னான். தடதடவென்று பாறை நோக்கி ஓடினான்.

''ஹால்ட்...'' பாறைக்கடியில் சுப்ரமணியுடன் இருந்த சிப்பாய் குரல் கொடுத்தார்.

''இனி இரவு...''

''எழுந்திரு'' சங்கேதம் பரிமாறப்பட்டது.

''கியா ஹுவா...?''

''பட்டாளம் சிங்கிள் லைனில் வருகிறது. எதிரி எங்கே..?''

''பாறைக்குப் பின்புறம்.'' சிப்பாய் ஊர்ந்து பாறை ஒட்டிப் பாம்பு மாதிரிப் போனான். இப்போது கீழே இருந்து வாணம் விடப்பட்டது. பல பேர் படுத்திருப்பது தெரிந்தது.

முதல் பஸுக்காவை இயக்கினான். குறி தவறாமல் அவர்களைச் சிதறடித்தது. அவர்கள் திரும்பினார்கள். பொஸிஷன் எடுத்துச் சுட்டார்கள்.

மரகதம் உருண்டு ஓடினாள். பாறைக்கு எதிர்ப்புறம் இறங் கினாள். பாதை பார்த்தாள். திரும்பி ஃபெரோ என்று கத்தினாள்.

இந்தியப் படைக்கு ஃபெரோவின் பொஸிஷன் தெரிய வில்லை. விடாமல் அங்கிருந்து சுடப்பட்டது. ஃபெரோ அருகே அஸாமியத் தலைவன் வந்து சறுக்கிப் படுத்தான்.

''தெரிந்து சுடுகிறாயா... தெரியாமல் சுடுகிறாயா?'' கேட்டான்.

''பாறைக்குப் பின்னே சிங்கிள் லைன் வருகிறது.''

''எத்தனை பேர்?''

''நூறு இருநூறு.''

''கடவுளே...''

''க்ரேனேட் வைத்திருக்கிறாயா?''

அவனிடம் க்ரேனேட் வாங்கிப் பாறைக்கு அப்பால் போட்டான். வெடித்துச் சிதற, சுப்ரமணி இடது முழங்கை அடி வாங்கியது. ஒரு சிப்பாய் பாறையோடு சரிந்து விழுந்தது.

''இன்னொரு க்ரேனேட் கொடு.''

''இல்லை.''

''போ. போய் எடுத்து வா. அத்தனை பேரையும் ஒழிக்கலாம். இருபது எடுத்து வா.''

அஸாமி தலைவன் பின்னடைய, அவன் நகர்வு சிப்பாய்க்குத் தெரிந்தது. முதல் குண்டின் தலை சிதறியது.

க்ரேனேட் வருகையைக் குறித்துக் கொண்டார்கள். நெட்ட நெடுக பஸுக்கா உயர்த்தி அடித்தார்கள். பஸுக்கா உயரக் கிளம்பியது. பாறைக்கு மறுபுறம் விழுந்தது. சிதறியது. ஃபெரோ இரண்டாய்க் கிழிக்கப் பட்டான். இன்னொரு பஸுக்கா... இடை இடையே மெஷின் கன் முனகல்.

அஸாமி படை கலையத் துவங்கியது.

மரகதம் ஓடினாள். செடிகளை விலக்கி மோட்டார் சைக்கிள் நிமிர்த்தினாள்.

''ஹால்ட்.'' குரல் தொலைவே கேட்டது. மோட்டார் சைக்கிள் நிமிர்த்தினாள்.

''ஹால்ட்.'' மறுபடி குரல் கேட்டது. உதைத்தாள்.

துப்பாக்கி சுடும் சப்தம் கேட்டது. ரவைகளைச் செடிகள் மறித்துக் கொண்டன. அறுபட்டு எகிறின. மண் தரையில் சறுக்கி மோட்டார் சைக்கிள் இயக்கினாள். தரை தொட்டாள். முழு வேகத்தில் ஓட்டினாள் காணாமல் போனாள்.

சிங்கிள் லைன் அப்படியே மலை முகட்டைச் சுற்றிக் கொண்டது. மெல்ல மெல்ல ஊர்ந்து ஏறியது. உச்சி நெருங்கும் போது நாலு அஸாமி இளைஞர்கள் வெள்ளைக் கொடி காட்டித் தூக்கினார்கள். பதினேழு சடலங்கள் கிடந்தன.

மேகம் மலைமுகட்டைச் சூழ்ந்து கொண்டது. மழை பெய்தது. டார்ச்சுக்கள் போடப்பட்டன.

''போலோ... போலோ, கோன் ஹை தும்?'' யாரோ அடி வாங்கினார்கள். மிதிக்கப்பட்டார்கள். அழுகுரல் கேட்டது. ஸீஸ் ஃபயர்'' கத்தினார்கள்.

சுப்ரமணி கீழே இறங்கி ஓடி வந்தார். ''மேஜர் வடிவேல்... மேஜர் வடிவேல்...'' தேடினார்.

வடிவேலுக்கு மூச்சிரைப்பு அதிகமாயிற்று. திணறியது.

''சுப்ரமணி, ஆர் யூ ஹர்ட்?''

''லேசா முழங்கைல காயம். நீங்க...?'' வடிவேல் உடம்பு தடவினார்.

''செத்துட்டிருக்கேன்.''

''ஐயோ! டாக்டர்...டாக்டர் இல்லையா?'' மழை அடித்துப் பெய்தது. ஸ்ட்ரெச்சருக்குக் குரல் கொடுத்தார்கள்.

''மேஜர்... நிறையக் கட்டுப் போட்டிருக்கு...?'' டார்ச்சில் உடம்பு காயத்தைச் சுப்ரமணி தேடினார்.

''க்ராஸ். பயர் சுப்ரமணி எல்லாரையும் புடிச்சுட்டாங்களா?''

''யெஸ்.. நிறையச் சாவு.''

''நம்ம பக்கம்?''

''நாலஞ்சு பேர் இருக்கலாம். தெரியவில்லை. ஸ்ட்ரெச்சர் ப்ளீஸ்''

''சுப்ரமணி...''

''சொல்லுங்க வடிவேல்....''

''அது என்ன பாட்டு...?''

''எது?''

''காலன் எனை அணுகாமல் அனுதினம்...அது பாடுங்க நான் சாவக் கூடாது, சுப்ரமணி, என் தங்கைக்கு முன்னால நான் சாவக்கூடாது. அவளை அனாதையா விட்டுட்டுப் போவக்கூடாது. நாம் ஜெயிச்சுட்டோம் இல்ல சுப்ரமணி?''

''ஆமா சார். சிதறிட்டாங்க. கோம்பிங் பண்ணணும். அலசி அலசித் தேடணும். அது மிலிட்ரி பார்த்துக்கும். வாங்க போகலாம். சிப்பாய், இவரைத் தூக்கு.''

''வேணாம். முடியலை. அந்தப் பாட்டு...''

சிப்பாய்கள் மண்ணில் சறுக்கித் தடுமாறினார்கள். ஸ்டிரெச்சரைச் சிரமப்பட்டுத் தூக்கி வந்தார்கள். மேஜர் வடிவேலுவைப் புரட்டிப் போட்டார்கள்.

''சுப்ரமணி என் கூட வாங்க... ராஜகோபால் கிட்ட ஜெயிச்சுட்டம்னு சொல்லுங்க. அந்தக் கல்லுவ எருமை மாடு இடிச்சுச் சாவடிச்சுதுன்னு சொல்லுங்க சுப்ரமணி''

''யெஸ் வடிவேல் சாப்.''

''ஐயம் டையிங்.''

''இல்லை, சரியாயிடும்.''

''ஆவாது...சுப்ரமணி வலது பக்கம் முழுசும் பிஞ்ச போச்சு ஐயம் டையிங். மை சிஸ்டர்... சுப்ரமணி. நான் சாவக்கூடாது. நான் செத்துருவேனா... எங்கப்பாவக் கொல்லணும். என் அப்பா தலை மயிரைப் பிடிச்சு அடிச்சு... நான் சாவக் கூடாது. ராஜகோபால் எங்க சுப்ரமணி?''

''பாதி நதி மதி போது மணி சடை
நாதனருளிய குமரேசா
பாகு கனி மொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா...
காதுமொரு விழி காக முறவருள்
மாயனரி திரு மருகோனே
காலன் எனை அணுகாமல் உனதிரு
காலில் வழிபட அருள்வாயே.''

- ஸ்ட்ரெச்சர் போக, கூடவே போன சுப்ரமணி உரத்த குரலில் பாடினார்.

மேஜர் வடிவேலுக்கு நினைவு தப்பியது.

மிலிட்ரி ஆம்புலன்ஸில் ஸ்ட்ரெச்சர் வைக்கப்பட்டது. குளுக்கோஸ் தரப்பட்டது. கழுத்துச் செயினில் கட்டிய தகட்டில் ப்ளட் க்ரூப் அறியப்பட்டது. தேடிச் செருகப் பட்டது. கொடைக் கானல் நோக்கிப் பேரிரைச்சலுடன் போயிற்று.

''துரோணா.. துரோணா.. ஆர் யூ ஹியரிங் மி.''

அருகே உள்ள ஒயர்லெஸ்ஸில் ராஜகோபால் குரல் கேட்டது.

''லௌட் அண்ட் க்ளியர். ராஜர்.'' சுப்ரமணி பேசினார்.

''மேஜர் வடிவேல்.''

'சுப்ரமணி சார்.''

''மேஜர் எங்கே?''

''வலது பக்கம் முழுக்க புல்லட் அட்டாக் சார். கொடைக் கானல் வராரு. க்ராஸ் ஃபயர்ல மாட்டிக்கிட்டாரு.

'உயிரோட இருக்காரா?''

''இருக்கணும் சார்.'' சுப்ரமணிக்குத் தொண்டை அடைத்தது. அழுகை நிறுத்த மூக்கு உறிஞ்ச வேண்டியதாயிற்று. மழைமேகம் விலக, வெகு தொலைவே விடியல் தெரிந்தது.

''ஆதி அயனொடு தேவ அசுரர்
உலகாளும் வகையுறு சிறைமீளா
ஆடுமயிலினில் ஏறி அமரர்கள்
சூழவர வரும் இளையோனே
சூதமிக வளர் சோலை மருவு
சுவாமிமலைதனில் உறைவோனே
சூரனுடலற வாரி அலறிட
வேலைவிடவல பெருமாளே''

மீதிப்பாட்டும் பாடும்போது சுப்ரமணியின் கண்ணில் நீர் தளும்பி மெல்லக் கன்னம் வழிந்தது. மனைவி முகமும் குழந்தை கள் முகமும் மனசுள் தோன்றின. மரணத்துக்கு அருகே போய் வந்த உணர்வால் குடும்பம் மிக இனியது என்று தோன்றியது.

25

மேஜர் வடிவேலுவை இருட்டு சூழ்ந்து கொண்டது. இருட்டு எனில் மலை விளிம்பும் மர விளிம்பும் தெரிகிற நீல இருட்டு இல்லை. கரும் இருட்டு, எதுவுமே தெரியாத இருட்டு. காதுகளின் முன்பக்கம் உள்ள குறுமடல்கள் மூடிக் கொண்டன. ஹூம் என்று ஒரு சப்தம் நிரந்தமாய் கேட்டது. நெஞ்சுக் கூட்டில் வெடித்துவிடும் போல் ஒரு வலி திருகல். பூமியை விட்டு பிருஷ்டபாகம் அந்தரத்தில் எழுவதுபோல் தோன்றியது. லேசாகி யது. முதுகு எழும்பியது. கை கால் தொடைகள் மேலெழுந் தன. தலை உடன் வந்தது. படுக்கை வாட்டிலேயே நடக்க முடிந்தது. புரள முடிந்தது. நேராக முடிந்தது. நேரான பின்பு வெளிச்சம் தோன்றியது. அட... இது ஆகாய விமானம். சென்னை நோக்கிப் போகிற விமானம், அதோ சென்னை.. இதோ மதுரை... இது விமானம் இது பைலட். இது டாக்டர். இது... இது... இது.. நான்..... நான்..... ஐயோ நான்.....

பயம் வந்தது, எட்டி எட்டி உடம்பு நோக்கி ஓட உடம்புக்கும் அவனுக்கும் உள்ள தூரம் குறையவே இல்லை.

எட்ட இருந்தபோதே காற்று தெரிந்தது. நுரையீரல் தடுமாறல் தெரிந்தது. உடம்பு வலி... ஒட்டைகளில் ஏற்பட்ட வலி தெரிந்தது. ''காப்டன் ஹவ்லாங் இட்வில் டேக்? மேஜர் வடிவேல் ஈஸ் ஸிக்கிங்.'' டாக்டர் பேசுவது கேட்டது.

ஸிக்கிங் மூழ்கினான். மூழ்கிக் கொண்டேயிருந்தான். காற்று சூடாகியது. கொதித்தது. நடக்க நடக்க வெப்பம் அதிகரித்தது. காலுக்குக் கீழே சற்று இடைவெளி விட்டு நீர்போல் சூடாய் ஏதோ ஓடிற்று. இது நதியா? அட வைதரணி நதி. செத்த பிறகு கடக்க வேண்டிய வெந்நீர் ஆறு.

செத்துவிட்டேனா... உயிரோடு இருக்கிறேனா? செத்து விட்டேன். டெட். ஐயோ எவ்வளவு லேசு... எவ்வளவு சுகம். என்ன அது? என்ன வெளிச்சம்? கீழே ஆறு... தூரே வெளிச்சம். எனக்கு வெளிச்சத்துக்குப் போக வேண்டும். என் அப்பா.. அது என் அப்பா. வெளிச்சம்... அது என் அப்பா.. அப்பா என்றால் ஆள் இல்லை. உண்மையான அப்பா. எல்லாருக்கும் அப்பா. பரம சுகமான அப்பா. ஈடு இணை இல்லாத அப்பா. அப்பா... அப்பா எங்கிருந்தாய்: இத்தனை நாள் ஏன் தள்ளினாய்? அப்பா.. எனக்கு வேண்டும். நீ வேண்டுமே வெளிச்சமாய் வேண்டுமே, உன்னிலிருந்தல்லவா நான் வந்தேன், உன்னுள் புகவேண்டும். அப்பா.... வரணுமே உன்னிடம், உன் நெஞ்சு அருகே உன் நெருப்பருகே... அப்பா, அம்மா. அம்மா அப்பா, அம்மையே அப்பா. ஒப்பில்லாமணியே அன்பினில் விளைந்த ஆரமுதே. பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும் புழுத்தலை புலையனேன் எனக்கு செம்மையே ஆய சிவபத மளித்த செல்வமே... அப்பா.. ஓடினான். வைதாணி சூடு பறந்தது. சூட்டுக் கொப்பளம் மேலே பறந்தது தாக்கியது.

''நூத்தி நாலு டெம்ப்பரேச்சர், ஊசி போட்டும் குறையலை. ஹவ் லாங் இட் வில் டேக் டு லாண்ட்,''

''ட்வென்டி மினிட்ஸ் மோர் டாக்டர்.''

திரும்பி உடம்பு பார்த்தான். சிரித்தான். பய மாடு மாதிரி படுத்துக் கிடக்கான். மறுபடி சிரித்தான். நரம்பெல்லாம் ஓட்டை. தசையெல்லாம் ஓட்டை. பஞ்சு வச்சு அடைச்சிருக்குது. வலது பக்கம் வரலை. வராது செத்துப் போச்சு நவத்துவராமும் சுருங்குது ஆசனவாய் குளிர்ச்சி மரணமே சத்தியம். நித்தமும் மரணம். உலகத்தின் தினம் மரணம். உடம்பிலும் தினம் மரணம். உலகமும், உடம்பும் ஒன்றே. உலகால் ஆன உடம்பு உடம்பால் நிறைந்த உலகம்.

இதென்ன... இது எங்கு பயணப்படுகிறது, எது நோக்கி இது நடக்கிறது, வைதரணி நதி காணோம் குளிர். இருட்டுக் குளிர். மணி சப்தம் கேட்கிறது. தொலைவில் வெகு தொலைவில் விளக்கு வேண்டுமே, விளக்கு பயம் போக்குமே. வெளிச்சம் எங்கே.. வெளிச்சத்தின் போது இது யோசித்தது என்ன?

''பி ஃபோர் லாண்டிங், ஐ வுட் லைக் டு கிவ் ஹிம் அனதர் ஷாட்'' மறுபடி உடம்பில் ஊசி சொருகப் பட்டது. டாக்டர் ஊசி போட்ட நாற்பது விநாடியில் நாடித்துடிப்பு குறைந்து வந்தது. இருதயத் துடிப்பில் இடைவெளி அதிகமாயிற்று.

''மேஜர் மேஜர்'' டாக்டர் உலுக்கினார். நெஞ்சில் குத்தினார். மேஜர், உயிரோடிருக்க முயற்சி செய்யுங்கள். மேஜர், விட்டுக் கொடுக்காதீர்கள். மேஜர்.. மேஜர் ப்ளீஸ்.. டோண்ட் டை.''

கையில் விளக்கோடு நடந்தான், இருட்டு சிறிது விலகியது. மணி சப்தம் தொடர்ந்து கேட்டது. நாக்கு வரண்டது, தாகம்.. தாகம்... உடம்பு முழுவதும் தாகம் அப்பா எங்கே நீ..... அம்மையப்பா எங்கே நீ ..... அழுதான். தனிமை..... குளிர்..... இருட்டு..... தாகம் நடக்கும் சோர்வு..... ஒரு சேர அனுபவித்தான். அப்பா, என் அப்பா, என் உயிர் அப்பா..... எங்கே நீ..... விம்மி, விம்மி அழுதான். தளர்ந்தான்.

பாதி நதி மதி போது மணிசடை
நாதனருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா

உள்ளே குமுறியது. உருகியது. அது மொத்தமும் ஒன்றாகிப் பாட்டுப் பாடியது. அலறி, அலறி இறைஞ்சியது.

காது மொரு விழி காகமுர அருள்
மாயனரி திரி மருகோனே...
காலன் எனை அணுகாமல் அனுதினம்
காலில் வழிபட அருள்வாயே....

ஒளிவேண்டி இறைஞ்சியது. இருட்டு போக வேண்டியது. இதம் வேண்டி கெஞ்சியது. குளிர் போக அழுதது. ஒலி தேடி அலைந்தது. ஒன்றாய்த் தவித்தது.

எதிரே ஒளி திகல வட்ட நிலவு பெரும்சுடர். சிரிப்பாய் நெருப்பு, என்னதென்று சொல்ல முடியா ஒளி வெள்ளம்.

கூப்பி தொழுதான். அழுதான். அப்பா..... அப்பா.... அரற்றினான். ஆனந்தபரவசமாய் அலறினான்.

''ஆதி அயனொரு தேவர்சுரர்
உலகாளும் வகையுறு சிறைமீளா
ஆடும் மயிலினி ஏறி அமரர்கள்
சூழ வர வரும் இளையோனே''

கும்பிட்டான். கொண்டாடினான். பணிந்தான்.
சூத மிக வளர் சோலை மருவு சுவாமி
மலை தனில் உறைவோன
சூரன் உடல் அற வாரி சுவரிட
வேலை விடவல பெருமாளே...''

சடக்கென்று நொடிப் பொழுதுக்கும் - குறைப்பொழுதில் அவன் உடம்பசைந்தது.

''கடவுளே... கடவுளே.. உமக்கு நன்றி'' டாக்டர் கத்தினார். ''மேஜர், பத்து நிமிடம் பொறு. உன் ஓட்டை அத்தனையும் நான் சரி செய்கிறேன். தாக்குப்பிடி மேஜர். பத்து நிமிடம். மறுபடி அதே நேரத்தில் டக்கர் கமாண்டோவா பண்றேன். இரும்பு மாதிரி உடம்பு மாத்தறேன். மேஜர் ஹெல்ப் மீடு ஹெல்ப் யூ.''

விமானம் தட்டென்று தரை கிளம்பியது. அவன் உடம்பு குலுங்கியது. கண் விழித்தான். விமானக் கூரை தெரிந்தது. கூரைக்கு அப்பாலும் தெரிந்தது. இதுவும், அதுவும் ஒன்றே. வெளியே இருக்கிற வெளியும், பானைக்குள் இருக்கிற வெளியும் ஒன்றே எங்கும் நிரம்பியதே என்னுள்ளும் நிரப்பி இருக்கிறது. எல்லாவற்றிலும் நிரம்பி இருக்கிறது. எல்லாம் ஒன்றே எதுவும் புதிரல்ல. எதுவும் பகையல்ல. எதுவும் அன்னியமல்ல. அது இது எதுவும் நான் - நானே அது. அதுவே நான் சிரித்தான்.

''இரண்டாவது இஞ்ஜெக்ஷன் வேலை செய்யுது.'' வெளியே சைரனுடன் ராணுவ ஆம்புலன்ஸ் விமானம் நோக்கி ஓடி வந்தது. விடிந்தது.

விடிய கிளை கிளையான பள்ளங்கள் பார்த்து ராணுவ வீரர்கள் பயந்தார்கள். எங்கு முன்னேற இருந்தோமோ அந்த இடம் பெரிய வலை போல் சந்து சந்தாய், பாறை பாதளங்கள் இலை சத்தைகள் மூடி இருக்கக் கண்டார்கள்.

மேஜர் வடிவேலு இல்லையெனில் செமையடி பட்டிருக்கும். எதிரிக்கு அட்வாண்ட்டேஜ் ஆகி படுநாசம் விளைந்திருக்கும். ஓரிரு பள்ளங்கள் இருக்கும். இத்தனையா... என்ன இயற்கை பயங்கரம் இது. மிகக் கவனமாய் நடந்தார்கள். சரியான லாரிப் பாதை கண்டு பிடித்து மரங்கள் சில செதுக்கி காம்ப் அமைத்துக் கொண்டு வேலி போட்டுக் கொண்டார்கள். குகை குகைகயாய் தேடினார்கள். குகையில் இருநூறு பேர் இரண்டு மாதம் சாப்பிடும் ரேஷன் பார்த்து வியந்தார்கள் துப்பாக்கி அடுக்குகளை போட்டோ எடுத்துக் கொண்டார்கள் இஸ்ரேல் தயாரித்த ஏகே ஃபார்ட்டி ஸெவன் கொடைக்கானல் மலைக்கு எப்படி வந்தது என்று அதிச

மித்தார்கள் ஒயர்லெஸ் பறந்தது. காடுகளுடே புகுந்து விரட்டினார்கள், ஏகப்பட்ட பேரை கைது செய்தார்கள் அகதி எதிரி என்று வர்ஜா வர்ஜமின்றி பிடித்து மடக்கி அடித்தார்கள். மலைக்கு வேறுபக்கம் தமிழ் பிரசுரங்கள் இருந்தன. சோற்றுப்பானை இருந்தது. மத்திய அரசுக்கு அந்த செய்தியும் போயிற்று.

பிற்பகலில் தமிழக அரசின் தலையில் விடிந்தது. தோட்டா டப்பா பிரிக்கப் பிரிக்கப் மாளவில்லை. ஒரு டப்பா விசேஷ மாய் இருந்தது. கண்ணி வெடியா... இல்லை என்று கம்ப்யூட்டர் கருவி சொன்னது. உடைக்க மாவு கொட்டியது. முகர நொடி மண்டை பிளந்தது பாஸ்டர்ஸ்ட். ப்ரவுன் ஷுகர். நை... இது நல்ல ஷுகர். ஹீராயின். எது..எது என்று எல்லாரும் பார்ததார்கள். டெல்லிக்கு செய்தி போய் இப்போது சி.பி.ஐ. மீது சீற்றம் விழுந்தது.

''யாரோ பெண் ஓடினாள். மோட்டார் சைக்கிளில்'' ராணுவம் செல்ல போலீஸ் துணையோடு மோட்டார் சைக்கிள் ஓட்டும் பெண்ணுக்கு வலை விரிக்கப்பட்டது.

பம்பாயிலிருந்து சென்னை வந்த வியாபாரி எங்கே... விசாரிக்கப்பட்டது. கொடைக்கானல் என்று தெரியவந்தது. போ... போய் புடிச்சு மடக்கி வாய் மேலேயே குத்து புரட்சி ஆள் வளரக் காரணம் இந்த ராஸ்கல்ஸ்தான்.

''இறந்தோரில் ஒரு அந்நியன் போன்று ஒருவன் உடம்பு இருக்கிறது. அடையாளம் காண்க.''

''போரோன்னு இறங்கினான் சார். கப்பல் வுட்டு, அப்பால என்ன ஆனான்...'' தெரியாது.

''யார் ஃபெரோ, கப்பலைக் குடை. சோதனை போடு. வியாபாரி எங்கே. ஏன் கண்டுபிடிக்கவில்லை?'' கொடைக்கான லில் ஹோட்டல் ஹோட்டலாய் உதைத்தார்கள். ஐ ஜிக்கள் பலருக்கு தூக்கம் இல்லை. ''புரட்சி ஆளுங்களைக் கண்டிச்சு அறிக்கைவுடலைன்னா மாட்டிக்குவம்.''

மறுநாள் பேப்பரில் முதல்வர் அறிக்கை வந்தது. தமிழ் பேசும் அந்நியர் சிலர் தவறான தேச விரோத செயலில் ஈடுபடு வதாக அறிகிறேன். இது வருந்தத்தக்கது. கண்டனத்துக்குரியது.

நோ... இந்த அறிக்கை சரியில்லை. மேலோட்டமா இருக்கு. உள்துறை அமைச்சகம் பேச வேண்டும். அவர்களிடம் எத்தனை எம்.பி. ஆறா ஏழா.. இழுத்து கீழே தள்ளிவிடலாமா... உடனே சொல்லவும்.

சலும்பரா கைது செய்யப்பட்டான். ஜட்டியோடு புல்வெளியில் நிறுத்தப்பட்டான். அறையைக் குடைய நாலுகத்தை கரன்ஸி கிடைத்தது ஹோட்டல் பம்பாய்க்கு தகவல் சொல்ல அவர் இந்தியாவில் மிகப் பெரிய வக்கீலிடம் பேச அவர் சென்னை வக்கீலைத் தொடர்பு கொள்ள சென்னை வக்கீல் கொடைக்கானல் வக்கீலை உசுப்ப ஒரு ஆளை ஜாமீன்ல எடுக்க எத்தனை ஃபீஸ் வாங்குவீர்.. அது மாதிரி பத்து மடங்கு தரேன். புள்ளை மெட்ராஸுக்கு வரணும்.

ரத்தன் சந்த் சலும்பராவை ஜாமீனில் எடுத்தார்கள். வழக்கை சென்னை கோர்ட்டுக்கு மாற்றினார்கள். சென்னையிலிருந்த அவனை பம்பாய்க்கு பத்திரமாய் அனுப்பினார்கள்.

சலும்பரா அப்பாவிடம் பேசினான். ''மகனே இனி வாரா வாரம் சென்னை போக வேண்டியிருக்கும். எனவே இனி நீ ரியல் எஸ்டேட் நெருப்புப் பெட்டி வியாபாரம் செய். போதும். உனக்கு அதிர்ஷ்டமில்லை. கடவுள் அருளும் இல்லை. என்ன செய்வது... நான் அடுத்த பிள்ளையைத் தான் நம்ப வேண்டும். நூறு ஆயிரம் என்று கணக்கு போடு லட்சம் உனக்கு இப்போதைக்கு இல்லை'' நொந்து கொண்டார்.

கடவுளைச் சரிவர கும்பிடாதது தன் தப்போ என்று சலும்பராவுக்குத் தோன்றியது.

''பகவானே.. பேப்பர்ல என்னவோ படிச்சேனே.. நீங்க அங்க இருந்தீங்களா...'' சுப்பிரமணியம் மனைவி கூவினாள். இதென்ன முழங்கைல.''

''காயம்.''

''எப்படி?''

''குண்டு வெடிச்சு''

''குண்டா? எப்படி?''

''உனக்குத் தெரியவேண்டாம். என்ன சமையல்?''

''பீன்ஸ் பொரியல், எலுமிச்சம்பழ ரஸம் - வெங்காய சாம்பார்.''

''பாயஸம் பண்ணேன். கடலைப்பருப்பு பாயஸம்'' சுப்பிரமணியம் அவளை திசை மாற்றினார்.

சி.பி.ஐ. ராஜகோபால் வீடு வர அறைக்குள் தாழிட்டு பேசினார்.

''வடிவேலு சார்... அவர் மட்டும் இல்லேன்னா செத்துட்டிருப்பேன்-கிராஸ்ஃபையர்னு தெரிஞ்சு ஓடினார். பேய் மாதிரி

ஓடினார் சார். நின்னா மூவாக கட்டை வரைக்கும் உயரம். எருமை வருது பொசுக்குன்னு அது எதிர்க்க நின்னார். ச்சே.. வீரன் சார். ப்ரேவரின்னா என்ன அர்த்தம்னு அவரை அன்னிக்குப் பார்த்து தெரிஞ்சுக்கிட்டேன்.''

''அவன் ட்ரெயிண்ட் கமாண்டோ.''

''நானும்தான். சார் அவர போய் பார்க்கலாமா? இப்ப. ஒருவாய் சாப்பிட்டுட்டு வந்துடறேன்.''

''வேணாம்.''

''ஏன்?''

''ஒரு பிரச்சினை.''

''என்ன சார்?''

''அவரு தங்கச்சி செத்துருச்சு.''

''ஐயோ.. எப்ப?''

''நேத்து.. நேத்து விடிகாத்தால. அவரு அதே ஹாஸ்பிடல்ல அதே இன்டன்ஸிவ் கேர்ல இருக்காரு.''

''கடவுளே... தெரிஞ்சா செத்துருவாரு சார்.''

''மாட்டான், சாவு பார்த்தவன் தான் சாவ மாட்டான். சாவு வரபோது கவலைப்படமாட்டான்.''

''பொழைச்சுக்குவாரா?''

''யெஸ். ஆனா கமாண்டோவா... தெரியலை.''

''ஏன்?''

''வலப்பக்கம் சரியில்லை. இனி குதிக்க முடியும். ஓட முடியும்னு தோணலை.''

''சார் தமிழ்நாடு கவர்மெண்ட் என்ன ஆவும்?''

''கஷ்டம்தான்''

''சார் எனக்கு வடிவேலுவ பார்க்கணுமே.''

நமக்கு தேவையில்லாத விஷயம் சுப்ரமணி அவரு கோபப்பட்டாரு. அவரு கோபத்தை கவர்மெண்ட் யூஸ் பண்ணிக்கிச்சு. உபயோகம் முடிஞ்சதும் ஓரமா போட்டுரும். அப்ப பாருங்க. இப்ப வேணாம். இப்ப போனா நீ யாரு... என்னா... ஏன் பேசணும். என்ன பேசணும்னு கேள்வி வரும் - விட்டுருங்க.''

''ரொம்ப நல்ல மாதிரி சார். என்னைக் கட்டிப் பிடிச்சு நானிருக்கேன் சுப்பிரமணின்ற மாதிரி...''

''மேடம்... பாயஸம் வாசனை வருதே... ரெடியா?'' ராஜகோபால் கத்தினார்.

''ஒரு நிமிஷம்'' வெளியே சுப்ரமணி மனைவி குரல் கேட்டது.

''உன் கவலை இதான் சுப்ரமணி. இதுக்குத்தான் சி.பி.ஐ. வேலை செய்யற காசு வாங்கற. பொண்டாட்டி பொண்ணு, பாயஸம், பூஜை, தீபாவளி... இதுக்குத்தான். அது ஒழுங்கா செய். யார் எப்படி போனா உனக்கு என்ன?''

''அஸாமி புரட்சி என்ன ஆவும் சார்?''

''பதினேழு பேர் செத்தான். பத்தொம்பது பேர் மாட்டிருக்கான் மீதி பறந்துட்டான், இனி என்ன ஆவுமோ அது ஆவும். அதிகமாகவும், எங்கேயாவது வெறுப்புல சுடுவான். மார்க்கெட்ல வெடி வைப்பான் பத்து நூறு பேர் சாவாங்க. இன்னிக்கு ரெஸ்ட் எடு. நாளைக்கு வந்து மொத்தமும் எழுதிக் கொடு'' அமைதியாய் இருந்தார்.

''பாயஸம் நல்லாருக்கும்மா. நான் வரேன், சுப்ரமணி தாங்ஸ். என்னால முடிஞ்ச அளவு உனக்கு ப்ரமோஷன் ரெகமண்ட் பண்றேன்.''

''சுப்பிரமணி, ரெண்டு ப்ரமோஷனா... ராஜகோபால் உன் ஜாதியா, என்னை அனுப்பினா நான் கொடைக்கானல் போயிருக்க மாட்டேனா?'' ஆறு மாசம் பொறுத்து கேட்டார்கள்.

''கவர்னர் ஆட்சி வந்ததுல சி.பி.ஐக்கு மதிப்பு அதிகம். சந்தடி சாக்குல ராஜகோபால நுழைச்சுட்டாரு'' பொறாமைப்பட்டார்கள்.

தமிழ்நாட்டு மக்கள் அரசியல் மாற்றம் பற்றி கவலைப் படவேயில்லை. மல்லாக்கொட்டை பயிரிட்டார்கள் பாமாயிலுக்கு அலைந்தார்கள். தண்ணீர் கொடு என்று ஊர்வலம் போனார்கள் ரேஷன் அரிசி அளவு குறைக்காதே என்று கோஷம் போட்டார்கள். அமுதும் தேனும் எதற்கு... சித்ரமாலாவில் பாட்டு கேட்டார்கள். சீர்காழி சீர்காழிதான்... பழைய பாட்டு மாதிரி வருமா என்று அனுபவித்தார்கள்.

ஃபெரோவை இன்டர்போல் அடையாளம் காட்டியது. மயிலாப்பூர் கத்தோலிக்க சுடுகாட்டில் அவன் பெயர் எழுதிய மரப்பலகை மக்கத் துவங்கியிருந்தது. சீக்கிரம் மக்கி உதிரும், மறைந்து போகும். க்யூபாவின் மிகப் பெரிய புரட்சியில் பங்கு கொண்டவன் என்று யாருக்கும் தெரியாது போகும்.

மரகதம் இந்தியன் வங்கியில் கணக்கு ஒன்று ஆரம்பித்து கொஞ்சம் காசு போட்டாள். கனடாவுக்கு எந்த இடைஞ்சலுமின்றி பறந்தாள். மர வீடு வாங்கி மைக்கேல் ஜாக்ஸன் பாட்டுக்கு முதல் வரிசையில் ஆடினாள். அத்தனை காசு கையில் இருக்கும் போது காதல் தேவையில்லை என்று வெட்டிவிட்டாள். அக்கா குழந்தைகளை ஹாஸ்டலில் சேர்த்தாள்.

''அழகே தமிழே அழகிய மொழியே எனதுயிரே'' பாட்டு போட்டு அழுதாள். மறந்தாள். அவளைக் கடைசிவரை கண்டு பிடிக்க முடியவில்லை. இந்த மாதிரி பெண்கள் காசு கரைய மறுபடி பவுடர் வியாபாரத்துக்கு வரும். அப்போது பார்க்கலாம் என்று இன்டர்போல் காத்துக்கொண்டிருந்தது.

சுப்பிரமணி ராணுவ ஆஸ்பத்திரியில் வடிவேல் விலாசம் விசாரித்து மனைவியோடும், குழந்தைகளோடும் நுங்கம் பாக்கத்துக்கு ஜீப்பில் போனார்கள். இப்போது அவர் ஜீப்பை சொந்தத்துக்கும் உபயோகப்படுத்தலாம். கேட்க மாட்டார்கள்.

வாசலில் வாழ்க வளமுடன் என்று எழுதி ஓம் என்று பெரிதாய் போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது சமையல்காரன் போல ஒருவன் விசாரித்து உள்ளே கூட்டிக் கொண்டு போனான். ஹால், சோபா இல்லாது படுக்கை விரிக்கப்பட்டிருந்தது. உட்கார, உள்ளே வரச் சொல் என்று மறுபடி கட்டளை கிடைத்தது. உள்ளே போனார்கள். பெரிய செய்கை அறை. நேர் எதிரே ஒரு மரமண்டபம். உள்ளே மகாமேரு. பஞ்சலோகங்களால் செய்யப் பட்ட மகாமேரு. கீழே ஊதுபத்தி குங்குமம். பூக்கள். பக்கத்து அறையிலிருந்து கதவு திறந்தது. தாடியும், மீசையும், நீண்ட சிகையுமாய் காலி துணி போர்த்தியபடி காவிவேட்டி கட்டியபடி வெளியே வந்தார். கை குவித்தார். வடிவேலு... மேஜர் வடிவேலு, கமாண்டோ ட்ரெயினர் வடிவேலு.

''மேஜர்...'' சுப்பிரமணி ஏழ கையமர்த்தினார்.

''இல்லை''

''என்ன இது?''

''மரணம்''

''சர்வீஸ் இல்லையா...''

''எங்குமிருக்கிறேன்''

''கமாண்டோவா இல்லையா?''

''மனுஷனா இருக்கேன்.''

''உடம்பு.''

''இருக்கிறது. இவர்கள்.''

''வொய். ப், குழந்தைகள். அம்மாடி... இது மேஜர் வடிவேல். கொடைக்கானல்ல. நான் சொல்லிருக்கேனே.''

''சந்தோஷம். வடிவேல் கைகூப்பினார். குழந்தைகளை அருகே அழைத்து ஆப்பிள் தந்தார். தலை தடவினார். பணிவு... பணிவு... பணிவு... உச்சியிலிருந்து கால் விரல் நுனி வரை பணிவு.

''தங்கச்சி போயிட்டாங்கன்னு...''

''இருக்கிறாள் உள்ளே...'' நெஞ்சில் கை வைத்து பதில் சொன்னார். ''சுப்பிரமணி, நலமா?''

''ப்ரமோஷன் கிடைச்சிருக்கு ஜீப் தந்துருக்காங்க.''

''அப்பா... அப்பா...''

''இப்படி மாறுவீங்கன்னு நான் எதிர்பார்க்கவேயில்லை வடிவேலு.''

''நெருப்பு படற வரைக்கும் தான் பஞ்சு. நெருப்பு பட்டுருச்சு... பஞ்சு காணாத போயிடும்.''

''ஏன் சர்வீஸ்ல இல்லை வடிவேலு சார்.''

''சாம்பலை வைத்து என்ன செய்ய முடியும்?''

''நெத்திக்கு இட்டுக்கலாம்.'' சுப்பிரமணியின் பெண் குழந்தை வடிவேலுக்கு பதில் சொல்லியது.

''மிகச் சரி.வா. இட்டு விடுகிறேன். வா அப்பா.'' வடிவேலு அருகே அழைத்தார். திருநீறு குழந்தைக்கு இட்டார்.

மந்திரமாவதும் நீறு வானவர் மேலதும் நீறு

சுந்தரமாவதும் நீறு துதிக்கப் படுவதும் நீறு

வடிவேலு மெல்லிய குரலில் பாட சுப்பிரமணிக்கு குபுக் கென்று அழுகை வந்தது. குழந்தைக்கு விபூதியிட வடிவேலு கை தூக்கியதால் வலப்புறம் நூற்றுக்கணக்கான தையல்கள் தெரிந்தன.

தந்திரமாவது நீறு, சமயத்தில் உள்ளது நீறு செந்தூர் வாய் உமைப்பங்கன் திரு ஆலவாயான் திருநீறே...

வேறு அர்த்தம்... வேறு அர்த்தம்... சுப்பிரமணிக்குப் புரிந்தது.

முற்றிற்று